# අල් ෆික්හුල් ඉස්ලාම්

(ඉස්ලාමීය නීති පද්ධතිය)

**ඉස්ලාම් ආගමික (අහදිය්යා අල්කුර්ආන් පාසල්)**
**අවසන් සහතික පත්‍ර විභාගය සඳහා පෙළ පොත්**

# அல் பிக்ஹுல் இஸ்லாமி

(இஸ்லாமியச் சட்டநெறி)

**இஸ்லாமிய சன்மார்க்க (அஹதிய்யா, அல்குர்ஆன்)**
**பாடசாலை இறுதிச் சான்றிதழ் பரீட்சைக்குரிய பாடப்புத்தகம்**

# Al Fiqhul Islam

**(Islamic Law)**

**Text Books for**
**Final Certificate Examination of Islamic Studies**
**(*Ahadhiyyah, Al Quran Schools)***

# الفقه الإسلامي

**الكتاب المقرر لشهادة الإمتحانات النهائية**
**للمدارس القرآنية والأحدية الإسلامية**


إصدار: إدارة الشؤون الإسلامية
كولومبو-سريلانكا

***Published by :***
***Department of Muslim Religious and Cultural Affairs***
***180, T. B. Jayah Mawatha,***
***Colombo - 10,***
***Sri Lanka.***




2-CM 14793


بسم الله الرحمن الرحيم

| | | |
|---|---|---|
| **ஆலோசனையும் வழிகாட்டலும்** | : | கலாநிதி எம். ஏ. எம். சுக்ரி<br>பணிப்பாளர்<br>ஜாமிஆ நளீமிய்யா கலாபீடம் |
| | | அஷ்ஷெய்க் ஏ. சி. அகார் முஹம்மத் (நளீமி)<br>பிரதிப் பணிப்பாளர்,<br>ஜாமிஆ நளீமிய்யா கலாபீடம்,<br>துணைத் தலைவர்,<br>அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா சபை |
| | | அஷ்ஷெய்க் வை. எல். எம். நவவி (நளீமி)<br>முன்னாள் பணிப்பாளர்<br>முஸ்லிம் சமய, பண்பாட்டலுவல்கள் திணைக்களம் |
| | | அஷ்ஷெய்க் எம். எச். எம். ஸமீல் (நளீமி)<br>பணிப்பாளர்,<br>முஸ்லிம் சமய, பண்பாட்டலுவல்கள் திணைக்களம் |
| **எழுத்தாளர் குழு அங்கத்தவர்கள்** | : | அஷ்ஷெய்க் எம். எம். ஏ. முபாரக் B.A. (மதனி)<br>செயலாளர்,<br>அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா சபை |
| | | அஷ்ஷெய்க் எம். எச். எம். புகாரி B.A.(Hons)PGDE<br>முன்னாள் பிரதம செயற்திட்ட அதிகாரி<br>தேசிய கல்வி நிறுவகம், மஹரகம |
| | | அஷ்ஷெய்க் எம். எஸ். எம். அனஸ் (நளீமி) B.A. PGDE<br>முஸ்லிம் மகளிர் தேசிய பாடசாலை<br>தர்கா நகர் |
| **செம்மையாக்கக் குழு** | : | அல்ஹாஜ் எஸ். எச். எம் ஜெமீல் M.A.<br>முன்னாள் செயலாளர்<br>முஸ்லிம் விவகார இராஜாங்க அமைச்சு |

**செம்மையாக்கக் குழு**
***(தொடர்ச்சி)***

: அல்ஹாஜ் எம். ஐ. எம். அமீன் (M. A.)
முன்னாள் சிரேஷ்ட விரிவுரையாளர்
பேராதனை பல்கலைக்கழகம்

கலாநிதி மௌலவி எம். எஸ். எம். ஜலால்தீன் (கபூரி)
முன்னாள் பீடாதிபதி, சிரேஷ்ட விரிவுரையாளர்
தென்கிழக்கு பல்கலைக்கழகம்

அஷ்ஷெய்க் ஏ. எல். றிழா (ஹஸனி) B. A.(CEY)
அதிபர்
ஹஸனிய்யா அரபுக் கல்லூரி திஹாரி

அல்ஹாஜ் எம். எச் எம். நாளிர் B. A. (Hons)
வளவாளர்,
தேசிய கல்வி நிறுவகம், மஹரகம

அல்ஹாஜ் எம். எம். எம். ஸாபீர் M. A.
சிரேஷ்ட விரிவுரையாளர்,
கொழும்பு பல்கலைக்கழகம்

**இணைப்பாக்கம்**

: மௌலவி அல்ஹாஜ் எம். எச். எம். லாபீர் (கபூரி) B. A. PGDE
மத்திய அஹதிய்யா சம்மேளனப் பாடத்திட்டக்
குழுத்தலைவர்

மௌலவி அல்ஹாஜ் எம். எச். நூறுல் அமீன் (நத்வி) BA (Cey)
உதவிப் பணிப்பாளர்,
முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களம்

| | | |
|---|---|---|
| **தலைப்பு** | **:** | **அல் பிக்ஹுல் இஸ்லாமி**<br>**(இஸ்லாமியச் சட்டநெறி)**<br><br>இஸ்லாமிய சன்மார்க்க (அஹதிய்யா, அல்குர்ஆன்)<br>பாடசாலை இறுதிச் சான்றிதழ் பரீட்சைக்குரியது |
| **பதிப்பாசிரியர்** | : | மௌலவி அல்ஹாஜ் எம். எச். நூறுல் அமீன் (நத்வி) BA (Cey)<br>உதவிப் பணிப்பாளர்<br>முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களம் |
| **வெளியீடு** | : | முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களம்<br>180, T. B. ஜாயா மாவத்தை<br>கொழும்பு -10. |
| **பதிப்பு** | : | அரசாங்க அச்சகத் திணைக்களம்<br>டாக்டர் டெனிஸ்டர் டீ சில்வா மாவத்தை,<br>கொழும்பு - 08. |
| **முதற்பதிப்பு** | : | 2014 |
| | | |
|---|---|---|
| **பதிப்புரிமை** | : | முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களம் |

# மாண்புமிகு பிரதமர், புத்த சாசன மற்றும் மத அலுவல்கள் அமைச்சர் அவர்களது ஆசிச் செய்தி

இலங்கை சமயங்களுக்கும் கலாசாரங்களுக்கும் முக்கியத்துவம் வழங்கும் ஒரு தேசமாகும். சிறுபிராயம் முதல் பிள்ளைகளிடையே கலாசாரம், சகவாழ்வு, மானிடத்துவம் பற்றிய மனப்பாங்கை வளர்ப்பதன் ஊடாகவே தேசத்தையும் சமூகத்தையும் மதிக்கின்ற, சமய கலாசாரத்தை கௌரவிக்கின்ற, மனிதமாண்பை புரிந்து கொண்ட சமூகமொன்றை உருவாக்க முடியும். பரீட்சையை மையப்படுத்திய கல்வித் திட்டத்தின் மூலம் சிலவேளை தார்மீக பண்பாட்டு ரீதியான கல்வியை வழங்குவது கடினமாகலாம். இதனால் இலங்கையில் ஞாயிறு சமய பாடசாலைக் கல்வித்திட்டம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. பௌத்தம், இந்து, இஸ்லாம், கிறிஸ்தவ சமய பிள்ளைகள் தத்தமது சமய ஸ்தலங்களுக்கு அல்லது பாடசாலைகளுக்கு சென்று சமயக் கல்வியைப்பெற ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

சமயக் கல்விப் போதனைகளுக்குத் தேவையான ஆசிரியர்களை வளப்படுத்துவதற்கான பயிற்சித் திட்டங்கள், சீருடை வழங்கல் மட்டுமன்றி ஆசிரியர்களுக்கான ஆசிரியர் கைந்நூல், மாணவர்களுக்கான பாடநூல் என்பனவும் இலவசமாக வழங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன. பௌத்த சமய பிள்ளைகளுக்கு வழங்கப்பட்டுள்ள சகல வசதிகளும் ஏனைய சமயம் சார்ந்த பிள்ளைகளுக்கும் வழங்கப்பட வேண்டும் என்பது அரசின் கொள்கையாகும். அஹதிய்யா என்ற பெயரில் செயற்படும் இஸ்லாமிய சமய பாடசாலைகளுக்கு அவசியமான பாடத்திட்டத்தை தயார் செய்யும் வேலைத்திட்டத்தினை சிறப்பாக நிறைவு செய்துள்ள முஸ்லிம் சமய, பண்பாட்டலுவல்கள் திணைக்களம் இதே பிரகாரம் பாடநூல் தொகுதியொன்றை வெளியிட மேற்கொண்டிருக்கும் நடவடிக்கை பாராட்டுக்குரியது.

சமயக் கல்விப் போதனையின் இலக்கை அடைவதில் ஆசிரியர் களுக்கான வழிகாட்டல்களை வழங்குவது இன்றியமையாததாகும். மிக விரைவில் இது விடயமாக உரிய நடவடிக்கை மேற்கொள்ளும் என நம்புகிறேன்.

எந்தவொரு மட்டத்திலாயினும் கற்றல், கற்பித்தல் செயற்பாடு வெற்றியளிப்பதற்கு உரிய பாடநூல்கள் அவசியம் என்பதை யாவரும் ஏற்றுக் கொள்வர். இவ்வவசியத் தேவையை சரியாகப் புரிந்து கொண்டுள்ள முஸ்லிம் சமய, பண்பாட்டலுவல்கள் திணைக்களம் தேசிய பாடத்திட்டத்திற்கமைவாக இரு பரீட்சைகளுக்குமான பாடநூல்களை வெளியிட ஏற்பாடு செய்திருப்பது காலத்தின் தேவையாகும். சமய விவகாரங்களுக்குப் பொறுப்பான அமைச்சர் என்ற வகையில் நான் இதையிட்டு மிகவும் மகிழ்ச்சியடைகிறேன். இதை செய்து முடிப்பதற்கு பங்களிப்புச் செய்த முஸ்லிம் சமய, பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் சகலருக்கும் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

**தி. மு. ஜயரத்ன**
இலங்கைச் சனநாயக சோசலிசக்
குடியரசின் பிரதமரும்
புத்த சாசனம் மற்றும்
மத அலுவல்கள் அமைச்சரும்

புத்த சாசனம் மற்றும் மத அலுவல்கள் அமைச்சு,
இல. 135, தர்மபால மாவத்தை,
கொழும்பு - 07.

# கௌரவ புத்த சாசன மற்றும் மத அலுவல்கள் பிரதியமைச்சரின் ஆசிச் செய்தி

பல்லின சமய, கலாசார விழுமியங்களைக் கொண்ட இலங்கைத் திருநாட்டு மக்கள் மத்தியில், தார்மீக சமூகமொன்றைக் கட்டியெழுப்பும் நோக்கில் இலங்கையில் வதியும் பிரதான நான்கு சமயத்தவர்களும் தத்தமது பங்களிப்பை வழங்கிக் கொண்டிருக்கும் இவ்வேளையில் முஸ்லிம் சமய, பண்பாட்டலுவல்கள் திணைக்களம் மூலம் முதன் முறையாக இஸ்லாமிய சமய (அஹதிய்யா) பாடசாலை மாணவர்களுக் கான பாடத்திட்டத்தினையும் அப்பாடத்திட்டத்திற்கமைவாக பாடநூல் களையும் வெளியிடும் இச்சிறப்பான வேளையில் வாழ்த்துச் செய்தி யொன்றை வெளியிடக் கிடைத்தமையினை பெரும் நற்பேறாகக் கருதுகிறேன்.

நீண்டகாலமாக நிலவிவந்த குறைபாட்டை நிவர்த்தி செய்வதற்கு எமது அமைச்சின் ஊடாக பங்களிப்புச் செய்வது எமது கடமை என்பதோடு பல தசாப்தங்களாக இயங்கிவரும் அஹதிய்யா சமய பாடசாலை மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் தமது சமய கல்விப்பணிகளை முன்கொண்டு செல்வதற்கு இது பேருதவியாக அமையும் என நம்புகிறேன்.

ஒரு நாட்டின் அபிவிருத்தி நிலைத்திருப்பது அரசியல் பொருளாதார அபிவிருத்தியுடன் சமய, சமூக மட்டத்திலான அபிவிருத்தியும் இணைந்து தான் என உறுதியுடன் நம்பிக்கை பூண்டுள்ளேன். குறிப்பாக சமூக மட்டத்திலான ஒழுக்க விழுமியங்களைப் பேணுவதாயின் சமய, கலாசார துறைசார் நலன்கள் பாதுகாக்கப்பட வேண்டும். மேற்படி சமய, சமூக கலாசார விழுமியங்களைப் பாதுகாப்பதில் அஹதிய்யா முதலான சமயப் பாடசாலைகள் ஆற்றும் பணி விலைமதிக்க முடியாததாகும்.

சிறு பராயம் முதல் பிள்ளைகளை சமய பின்னணியில் வாழப் பயிற்றுவிப்பதுபோல் அதற்கான பயிற்சிகளை வழங்குவதன் மூலம் ஒழுக்க விழுமியங்களால் போஷிக்கப்பட்ட இளைய தலைமுறையொன்று உருவாகுவதை எதிர்பார்க்க முடியும்.

எங்களைப் போல் பல்லின சமய, கலாசார சமூகமொன்று வாழும் நாட்டில் பௌத்த, இந்து, இஸ்லாமிய, கத்தோலிக்க மக்கள் தமது பிள்ளைகளுக்கு அவரவர்களது சமய அறிவையும் விளக்கத்தையும் வழங்குவதற்கு இதுபோன்ற சமய பாடசாலைகள் ஊடாக மேற்கொள்ளும் அறப்பணி மகத்தானதாகும்.

இம்மகத்தான பணியைச் செய்வதில் ஈடுபட்டுள்ள முஸ்லிம் சமய, பண்பாட்டலுவல்கள் திணைக்களம் மற்றும் இதற்கு பங்களிப்புச் செய்த அனைவருக்கும் எமது அமைச்சின் நன்றியறிதலை சமர்ப்பிக்க விரும்புகிறேன்.

**எம். கே. ஏ. டீ. எஸ். குணவர்தன,**
பிரதியமைச்சர்,
புத்த சாசன மற்றும் மத அலுவல்கள்
அமைச்சு.

புத்த சாசனம் மற்றும் மத அலுவல்கள் அமைச்சு,
இல. 135, தர்மபால மாவத்தை,
கொழும்பு - 07.

# புத்த சாசன மற்றும் மத அலுவல்கள் அமைச்சின் செயலாளரது ஆசிச் செய்தி

தார்மீக சமுதாயமொன்றை தோற்றுவிப்பதில் சமயக் கல்வி அதிமுக்கிய பங்காற்றுகிறது. பாலர் பருவம் முதல் பிள்ளைகளிடையே சமய விழுமியச் சிந்தனையை ஏற்படுத்த முடியுமாயின் நாட்டின் சமூக சூழலை நல்ல நிலைக்கு மாற்றுவது கஷ்டமாயிராது. யாவரிடத்திலும் நல்ல மனப்பாங்கு ஏற்படுவது அனுபவங்கள் ஊடேயாகும். சமயக் கல்வி பயனுள்ள அனுபவங்களை வழங்குவதற்கான சிறந்த ஊடகமாகும். பரீட்சையை மையப்படுத்திய பொதுக்கல்வியுடன் மாத்திரம் சமய அறிவைப் புகட்டுவது சிரமமான காரியமாகும். இதற்கு மாற்றீடாக இலங்கையில் ஞாயிறு தினங்களில் நடாத்தப்படும் சமய பாடசாலைகள் முறை இத்துறையில் பெருமளவு வெற்றியை ஈட்டித்தந்துள்ளது.

பௌத்த, இந்து, இஸ்லாமிய, கிறிஸ்தவ பிள்ளைகளிடையே சமய சூழலும் சமய அறிவும் விருத்தி செய்யப்படும் வகையில் ஒவ்வொரு சமயம் சார் பிள்ளைகளுக்குமாக வெவ்வேறான சமயப் பாடசாலைகள் நடைபெறுகின்றன. சமய பாடசாலைகளுக்கான பாடத்திட்டம், பாடநூல் என்பன தற்போதைக்கு வெளியிடப்பட்டுள்ளன. ஆசிரியர்களுக்கு அவசியப்படும் பயிற்சித்திட்டங்கள் மற்றும் ஆசிரியர் சீருடை என்பன வழங்கப்பட்டு வருகின்றன. இங்கு முக்கிய குறைபாடாக விளங்கி வந்த பாடநூல்களை வழங்க ஏற்பாடு செய்கின்றமை முக்கிய அம்சமாகும். சகல சமய குழந்தைகளுக்கும் ஒரே விதமான வசதிகளை செய்து கொடுப்பது அரசின் கொள்கையாகும். இஸ்லாமிய சமய பாடசாலைகள் விடயத்தில், முஸ்லிம் சமய, பண்பாட்டலுவல்கள் திணைக்களம் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

பாடத்திட்டத்தை தயாரித்து சிறப்பாக வெளியிட்டு வைத்த இத்திணைக்களம், தேவையான பாடநூல்களை வெளியிட ஏற்பாடு செய்தமை சமய கல்வித்துறையில் ஒரு திருப்பு முனையாகும். எந்தவொரு கல்வி மட்டத்திலும் பாடத்திட்டத்தின் உரிய பலாபலன்களை அடைவதில் பாடநூல்கள் முக்கிய பங்கு வகிப்பதை மறுக்க முடியாது. இவ்வவசியத் தேவையினை சரிவரப்புரிந்து கொண்டுள்ள முஸ்லிம் சமய, பண்பாட்டலுவல்கள் திணைக்களம் ஆரம்ப நடவடிக்கையாக அஹதிய்யா (தஹம்) இறுதிச் சான்றிதழ் பரீட்சைக்குரிய பாடநூல்

களையும், தீனிய்யாத் (தர்மாச்சார்ய) சான்றிதழ் பரீட்சைக்குரிய பாடநூல்களுடன் மொத்தம் 10 நூல்களை வெளியிட எடுத்துள்ள நடவடிக்கையினையிட்டு இத்திணைக்களத்துக்குப் பொறுப்பான அமைச்சின் செயலாளர் என்ற வகையில் நான் பெருமிதம் அடைகின்றேன்.

மேற்படி அறப்பணியில் ஈடுபட்டிருக்கும் திணைக்கள ஊழியர்கள், வளவாளர்கள், நூலாக்கக்குழுவினர் ஆகிய அனைவருக்கும் எனது நன்றிகளை சமர்ப்பிக்க ஆசைப்படுகிறேன்.

**எம். கே. பீ. திசாநாயக்க,**
செயலாளர்,
புத்த சாசன மற்றும் மத அலுவல்கள்
அமைச்சு.

புத்த சாசனம் மற்றும் மத அலுவல்கள் அமைச்சு,
இல. 135, தர்மபால மாவத்தை,
கொழும்பு - 07.

## முஸ்லிம் சமய, பண்பாட்டு அலுவல்கள் திணைக்களப் பணிப்பாளரின் ஆசிச் செய்தி

இன்றைய உலகு பயங்கர ஆன்மீக வறுமையிலும் வெறுமையிலும் வாடிக் கொண்டிருக்கிறது. உண்மையாக இன்றைய உலகின் சகல பிரச்சினைகளுக்கும் அடிப்படைக் காரணமாக இருப்பது ஆன்மீக வீழ்ச்சியும் அதனடியாகப் பிறந்துள்ள பண்பாட்டு வீழ்ச்சியுமாகும் எனக் குறிப்பிட்டால் அது மிகையாகாது.

சமய சார்பற்ற சிந்தனை, சடவாதம், உலகாயதம் முதலான மதவிரோத கொள்கைகளின் செல்வாக்கின் காரணமாகவே ஆன்மீக, தார்மீக, ஒழுக்க பண்பாட்டுத் துறைகளில் பயங்கர பின்னடைவை இன்று நாம் கண்டு வருகிறோம். அறிவைப் பூஜிக்கின்ற சமூகம் ஆன்மீகத்தைப் புறக்கணிக்கிறது. உடலைக் கவனிக்கின்ற சமூகம் உள்ளத்தை மறந்துவிடுகின்றது. இம்மையை நேசிக்கின்ற சமூகம் மறுமையை நிராகரிக்கின்றது.

சமகால உலகின் இத்தகைய சமய விரோத சவால்களுக்கு முகங்கொடுத்து மனித சமூகத்தை சன்மார்க்க அடிப்படையில், ஆன்மீகப் பாதையில் வழிநடாத்த வல்ல அறிவையும், புலமையையும், ஆளுமையையும் உருவாக்குகின்ற பயிற்சிப் பாசறைகளான அரபுக் கல்லூரிகளோடு இணைந்து அஹதிய்யா பாடசாலைகளும் இயங்கிவருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

அஹதிய்யா பாடசாலைகள் இலங்கையில் 50 வருடங்களுக்கும் மேலாக இயங்கிவருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும். அஹதிய்யா பாடசாலைகளை சிறந்த முறையில் வழிநடத்துவதற்காக திணைக்களம் அதற்கான முழுமையான பாடத்திட்டத்தை வெளியிட்டு வழிநடாத்தி வந்துள்ளமை அனைவரும் அறிந்ததே.

இந்த வகையில் இப்பாடத்திட்டங்கள் மூலம் பூரண பயனைப் பெற முடியாது என்பதை அறிந்த திணைக்களம், முதற்கட்டமாக இப்பாடத்திட்டங்களுக்கு அமைவாக இஸ்லாமிய சன்மார்க்க (அஹதிய்யா, அல்குர்ஆன்) பாடசாலை இறுதிச்சான்றிதழ் பரீட்சை மற்றும் இஸ்லாமிய தீனிய்யாத் (தர்மாச்சார்ய) சான்றிதழ் பரீட்சை களுக்குத் தேவையான பாடப் புத்தகங்களை வெளியிடுவதையிட்டு மகிழ்ச்சியடைகின்றேன். இந்த பணியை சிறப்பாக மேற்கொண்ட புத்தக

ஆக்கக்குழுவுக்கும் தொகுப்பாசிரியர் குழு மற்றும் இப்பணியில் மும்முரமாக ஈடுபட்ட எமது திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளர் அஷ்ஷெய்க் எம். எச். நூறுல் அமீன் அவர்களுக்கும் மற்றும் இப்பணியில் இணைந்து பணியாற்றிய அனைவருக்கும் நன்றியை தெரிவிப்பதோடு, இப்பணியில் ஈடுபட்டவர்களது உழைப்பையும், அவர்களது முயற்சி யையும் அல்லாஹ் அங்கீகரித்துச் சிறந்த நற்கூலிகளை வழங்க வேண்டும் என வல்ல அல்லாஹ்வைப் பிரார்த்திக்கின்றேன்.

**அஷ்ஷெய்க் எம். எச். எம். ஸமீல்,**
பணிப்பாளர்,
முஸ்லிம் சமய, பண்பாட்டலுவல்கள்
திணைக்களம்.

முஸ்லிம் சமய, பண்பாட்டலுவல்கள் திணைக்களம்,
180, T. B. ஜாயா மாவத்தை,
கொழும்பு - 10.

# உயர் கல்வி அமைச்சின் சிரேஷ்ட உதவிச் செயலாளரின் (முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் முன்னாள் பணிப்பாளர்) ஆசிச் செய்தி

இஸ்லாம் ஒரு வாழ்க்கை நெறியாகும். முஸ்லிமாக வாழ்வதாயின் அல்குர்ஆன், அல்ஹதீஸ் தொடர்பான தெளிவான அறிவைப் பெறுவது அவசியமாகும். "அறிவைத்தேடுவது முஸ்லிமான ஆண், பெண் இரு பாலார் மீதும் கடமையாகும்." என்ற கருத்தில் வரும் நபிமொழியும் "அல்குர்ஆனைக் கற்று மற்றவர்களுக்கும் கற்றுக்கொடுப்பவரே உங்களில் சிறந்தவர்" என்ற கருத்தில் வரும் நபிமொழியும் இதனை வலியுறுத்துகின்றன. இலங்கையில் இஸ்லாத்தை பாடசாலைப் பருவத்தில் கற்றுக்கொள்வதற்கான ஒரு சிறந்த ஊடகமாக அஹதிய்யா பாடசாலைகள் காணப்படுகின்றன. முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களம் அஹதிய்யா பாடசாலைகளின் வளர்ச்சியில் போற்றத்தக்க சேவைகளை வழங்கி வருகின்றமை யாவரும் அறிந்ததாகும். முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களம் அஹதிய்யா பாடசாலைகளுக்கு வருடாந்தம் வழங்கி வரும் சேவைகள் அஹதிய்யாவின் வளர்ச்சிக்கு பெரும் உறுதுணையாக அமைகின்றன.

பாலர் கல்வி முதல் பல்கலைக்கழகம் வரையான 14 வருடங்களுக்குரிய தேசிய அஹதிய்யாப் பாடத்திட்டம் தயாரித்தமை இலங்கை அரசாங்க பரீட்சை திணைக்களம் மூலம் அஹதிய்யா இறுதி சான்றிதழ் பரீட்சை, இஸ்லாமிய தீனிய்யாத் (தர்மாச்சாரிய) சான்றிதழ் பரீட்சை ஆகிய இரு பரீட்சைகளையும் நடாத்த ஏற்பாடு செய்தமை, மாவட்ட ரீதியாக நடாத்தியமை அஹதிய்யா ஆசிரியர்களுக்கான செயலமர்வுகளும் கருத்தரங்குகளும் அஹதிய்யா ஆசிரியர்களுக்கான வருடாந்த நூல் கொள்வனவுக் கொடுப்பனவு வழங்கியமையும், வருடாந்தம் ஆசிரியர்களுக்கான சீருடை வழங்கியமையும் அப்பணிகளில் சிலவாகும்.

இவற்றில் அஹதிய்யா பாடசாலைகளது வரலாற்றில் தேசிய பாடத்திட்டத்திற்கு அமைவாக பாடநூல்கள் வெளியிடப்படுவது முக்கியதொரு மைல்கல்லாகும். அஹதிய்யா சமூகத்தின் ஏகோபித்த



3-CM 14793

கோரிக்கையின் முதற்கட்டம் இன்று நிறைவேறுவதையிட்டு உளப் பூரிப்படைகிறேன். முதற் கட்டமாக, அஹதிய்யா இறுதிச் சான்றிதழ் பரீட்சை வகுப்புகளுக்குரிய அகீதா, மஸாதிருஷ்ஷரீஆ, பிக்குஹுல் இஸ்லாம், ஸீரா வத்தாரீக், அஹ்லாக் ஆகிய நான்கு பாடங்களுக்கும் தீனிய்யாத் பரீட்சைக்குரிய மேற்படி நான்கு பாடங்களுடன் அரபு மொழியும் இஸ்லாமிய இலக்கியமும் ஆகிய ஆறு பாடங்களுக்குமாக பத்து பாட நூல்கள் வெளிவருகின்றமை சிறப்பித்துக் கூறவேண்டிய தொன்றாகும். புதிய பணிப்பாளர் தலைமையில் இப்பணிகள் யாவும் தொடரும் என்பது எனது அசையாத நம்பிக்கையாகும்.

மேற்படி பணிகளை முன்கொண்டு செல்வதில் ஆரம்பம் முதல் இன்றுவரை அயராது உழைத்துவரும் உதவிப் பணிப்பாளர் அஷ்ஷெய்க் எம். எச். நூறுல் அமீன் மற்றும் திணைக்கள அதிகாரிகள் மற்றும் எழுத்தாளர் குழு அங்கத்தவர்கள், தொகுப்பாசிரியர்கள் ஆகியோர் என்றும் நன்றிக்குரியவர்களாவர். அல்லாஹ் அவர்களது முயற்சிகளை அங்கீகரித்துக் கொள்வானாக. இப்பணியில் இவர்களுடன் சேர்ந்து ஈடுபடுவதற்கு கிடைத்தமையை அல்லாஹ் எனக்கு வழங்கிய ஒரு மகத்தான சந்தர்ப்பமாகவே கருதுகின்றேன்.

இதற்காக என்னால் ஆன பணிகளைச் செய்யக் காத்திருக்கின்றேன்.

அல்லாஹ்வின் அருள் வேண்டி அனைவருக்கும் பிரார்த்திக்கிறேன்.

ஆமீன் !

**அஷ்ஷெய்க் Y. L. M. நவவி**,
உயர் கல்வியமைச்சின்
சிரேஷ்ட உதவிச் செயலாளர்,
(முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள்
திணைக்களத்தின் முன்னாள் பணிப்பாளர்)

உயர் கல்வியமைச்சு,
இல. 18, வோட் பிளேஸ்,
கொழும்பு - 07.

# மத்திய அஹதிய்யா சம்மேளன பாடத்திட்டக் குழுத் தலைவரின் ஆசிச் செய்தி

**பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர் ரஹீம்**

அஹதிய்யாப் பாடசாலைகள் மூலம் கடந்த ஆறு தசாப்தங்களுக்கு மேலாக முஸ்லிம் சமூகம் பல நன்மைகளையடைந்து வந்துள்ளது. இருப்பினும் எதிர்பார்க்கப்படும் முறையான பயனை சமூகம் அடைவதற்கு முக்கிய சில தடைகள் இருந்து வந்துள்ளன. அவற்றுள் ஒன்று பாடநூல் இல்லாமை மற்றையது தேவையான ஆசிரிய வளம் கிடைக்காமை எனலாம்.

பெரும்பாலும் அஹதிய்யாப் பாடசாலைகளில் க.பொ.த. (சாதாரண தரம்) அல்லது க.பொத. (உயர் தரம்) வரை கற்றவர்களே கற்பித்தல் பணியில் ஈடுபட்டுள்ளனர். ஒரு சில இடங்களிலேயே உலமாக்களும் பயிற்றப்பட்ட அல்லது பட்டதாரி ஆசிரியர்களும் கற்பித்தற் செயற்பாட்டில் ஈடுபட்டுள்ளனர்.

அஹதிய்யா பாடசாலைகளில் போதிக்கும் ஆசிரியர்களது அறிவு மட்டத்தை மேம்படுத்தும் வகையிலேயே இஸ்லாமிய தீனிய்யாத் (தர்மாச்சார்ய) பாடத்திட்டம் வகுக்கப்பட்டுள்ளது. இப்பாடநெறியைக் கற்றுத் தேர்வதன் மூலம் அவர்கள் சன்மார்க்க போதனாசிரியர்களுக்கான தராதரத்தைப் பெறுகின்றனர். இச்சான்றிதழ் உடையவர்களை சமய ஆசிரியர்களாக நியமிக்கும் திட்டத்தினை அரசு முன்கொண்டுள்ளது. எனவே இப்பாடத்திட்டம் முறையாக கற்பிக்கப்படுவதன் மூலம் அஹதிய்யாக்கள் எதிர்நோக்கும் ஆசிரியர் பற்றாக்குறையை நிவர்த்திக்க முடியும். அத்தோடு ஆசிரியர்களது கல்வித்தரத்தை மேம்படுத்தவும் முடியும். மேலும் இவர்களிடம் கற்கும் மாணவர்களது அறிவுமட்டம் உயர்வடையும் என்றும் எதிர்பார்க்கலாம்.

இது விடயத்தில் முஸ்லிம் சமய, பண்பாட்டலுவல்கள் திணைக்களம் கரிசனை கொண்டு நடவடிக்கை மேற்கொண்டு செயற்பட்டுவருகின்றமை பாராட்டுக்குரியது. இதற்கு முன்னோடியாக விளங்கிய முன்னாள் பணிப்பாளர் அஷ்ஷெய்க் Y. L. M. நவவி அவர்களது பங்களிப்பு மெச்சத்தக்கதாகும். அவரது வழிகாட்டல்களும் ஆலோசனைகளும் இதற்கு உறுதுணையாக விளங்கின. அவருக்கு பக்கபலமாக விளங்கிய முஸ்லிம் சமய, பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளர் அஷ்ஷெய்க் M. H. நூறுல் அமீன் அவர்களது அயராத

முயற்சியும் ஈடுபாடும் இங்கு குறிப்பிடத்தக்கவை. அஹதிய்யாப் பாடசாலைகள் மத்திய சம்மேளனம் முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் இந்தப் பங்களிப்பினை நன்றியுணர்வோடு நோக்குகிறது.

இச்சந்தர்ப்பத்தில் இலங்கை பூராவும் எமது இளைய தலை முறையினரான பாடசாலை பிள்ளைகளுக்கு இஸ்லாமிய அறிவையும் உணர்வையும் ஊட்டி, தூய இஸ்லாமிய ஷரிஆவின் வழியில் நடாத்தும் பொறுப்பையேற்று செயற்பட்டு வரும் அஹதிய்யாவின் முன்னோடிகள், அதன் தொண்டர்கள், அதிபர்கள், ஆசிரியர்கள் ஆகிய அனைவரும் அல்லாஹ்வின் அருளுக்குரியவர்கள் என்பதை கூறவிரும்புகிறோம்.

அஹதிய்யாவின் ஸ்தாபகத்தலைவர் மர்ஹூம் எம்.எச்.அப்துல் அஸீஸ் அவர்களைத் தொடர்ந்து எம்மோடு பணியாற்றுகின்ற தலைவர்கள், நிருவாகிகள் யாவருக்கும் இவ்விஸ்தாபனத்தை வழிநடாத்திச் செல்வதற்கான மனோபலத்தையும் உடற்சுகத்தையும் நல்க வேண்டுமென பிரார்த்திக்கின்றோம்.

மத்திய அஹதிய்யா சம்மேளனம் 1988 ஆம் ஆண்டு பொதுப்பாடத்திட்டத்தை வகுத்தது. இதனை தொடர்ந்து முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களம் தேசிய ரீதியாக பொது பாடத்திட்டத்தினை 2003 ஆம் ஆண்டு அறிமுகஞ் செய்தது. 2005 முதல் தேசிய மட்டத்தில் அஹதிய்யா இறுதிச் சான்றிதழ் பரீட்சைகள் இடம் பெற்றாலும் பரீட்சைகளுக்கான பாடநூல்கள் எதுவும் இல்லாதிருந்தமை பெரும் குறைபாடாக இருந்தது. இதனால் இப்பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களது எண்ணிக்கையிலும் விண்ணப்பித்தோருள் தோற்றா மலிருப்போரின் எண்ணிக்கையிலும் கணிசமாயிருந்தது.

மேற்படி குறைபாட்டை முன்னால் முஸ்லிம் சமய, பண்பாட்டலு வல்கள் திணைக்களப் பணிப்பாளர் அஷ்ஷெய்க் வை. எல். எம். நவவி அவர்களிடம் எடுத்துக்கூறியபோது அவர் தேவையான நூல்களைத் தயாரித்து வெளியிட முன்வந்தார். அவர் விட்ட இடத்திலிருந்து இப்பணியை சிறப்பாக தொடங்குகின்ற பணிப்பாளர் அஷ்ஷெய்க் எம். எச். எம். ஸமீல் அவர்களது பங்களிப்பும் பாராட்டத்தக்கதாகும்.

இப்பணியில் ஒத்துழைத்த அனைவருக்கும் அல்லாஹ் அருள் புரிவானாக. அவர்களின் பணியை அங்கீகரிப்பானாக.

**மௌலவி எம். எச். எம். லாபீர்,**
மத்திய அஹதிய்யா சம்மேளன,
பாடத்திட்டக்குழுத் தலைவர்.

# பதிப்புரை

## பிஸ்மில்லாஹிர்ரஹ்மானிர் ரஹீம்

சர்வ புகழும் எல்லாம் வல்ல அல்லாஹ் ஒருவனுக்கே உரித்தாகட்டும்! அல்ஹம்துலில்லாஹ் !

"(எனக்கு வழிப்பட்டு என்னை) வணங்குவதற்கன்றி ஜின்களையும் மனிதர்களையும் நான் சிருஷ்டிக்கவில்லை."(அல்குர்ஆன் - 51 : 56)

இவ்வுலகில் மானிட வர்க்கம் படைக்கப்பட்டதன் நோக்கம் அல்லாஹ்வின் கட்டளைகளை ஏற்று, நபி (ஸல்) அவர்களின் வாழ்க்கை அடிச்சுவடுகளை முறையாக பின்பற்றி முஸ்லிமாக வாழ்ந்து மரணிப்பதே யாகும். அல்லாஹ்வின் அடியார்கள் என்ற வகையில் ஒவ்வொரு முஸ்லிமும் ஆத்மீக சிந்தனையுடன் தனது வாழ்வை இபாதத்துடன் இணைத்துக் கொள்வது இன்றியமையாததாகும்.

நபி (ஸல்) அவர்களின் அருள்வாக்கு பின்வருமாறு சான்று பகர்கின்றது : "இவ்வுலகத்தில் அல்லாஹ் ஒருவனுக்கு நன்மையை நாடினால் அவனுக்கு மார்க்கத்தில் தெளிவான விளக்கத்தை வழங்குகிறான்." (அல்ஹதீஸ்)

மேற்படி இறைவசனத்திற்கும் நபி (ஸல்) அவர்களின் போதனைக்கும் ஏற்ப மார்க்கத்துடன் தொடர்புடையவனாக வாழ்வது கட்டாயக் கடமையாகும். இவ்வாறாக ஒரு முஸ்லிம் இறையச்சம், பொறுமை, சகிப்புத்தன்மை, நல்லொழுக்கம், நற்பண்புகளுடன் வாழ்வதற்கு இஸ்லாமிய சன்மார்க்கக் கல்வியை பெற்றுக் கொள்வது இன்றியமையாத தாகும். மார்க்கக் கல்வியை பெறுவது உண்மையான மு.ஃ.மினாக வாழ்வதற்கு வழி வகுக்கும் என்பதில் சந்தேகமில்லை. இவ்வாறான நல்லொழுக்கமுடைய ஒரு சமூகத்தை கட்டியெழுப்புவதற்கு இன்று நாடளாவியரீதியில் பல இஸ்லாமிய ஷரீஆ கல்வி நிறுவனங்களும், தனியார் அமைப்புகளும் தங்களாலான பங்களிப்புகளைச் செய்து வருவது உண்மையில் போற்றத்தக்கதாகும்.

மேற்படி நோக்கத்தை மையமாகக் கொண்டு சுமார் ஆறு தசாப்தங்களுக்கு மேல் அஹதிய்யா கல்வியை மேம்படுத்துவதற்காக திட்டங்களை வகுத்து செயற்பட்டுக் கொண்டிருக்கும் மத்திய அஹதிய்யா சம்மேளன தலைவர் மற்றும் நிர்வாக உறுப்பினர்களின் பணி என்றும் பாராட்டத்தக்கதாகும்.

அத்துடன் இந்நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டு முஸ்லிம் சமய, பண்பாட்டலுவல்கள் திணைக்களம் பல ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதும் இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

குறிப்பாக அரபுக் கல்லூரிகள், அஹதிய்யா பாடசாலைகள், குர்ஆன் மத்ரஸாக்கள் போன்ற இஸ்லாமிய கல்வி நிறுவனங்களின் கல்வித் தரத்தினை மேம்படுத்துவதிலும், பௌதிக வளங்களை விரிவுபடுத்துவதிலும் இத்திணைக்களம் அதிக அக்கறையுடன் செயற்பட்டு வருகின்றது. இவற்றுள் அஹதிய்யா பாடசாலை மாணவர்களின் நலன் கருதி பல திட்டங்களை வகுத்து செயல்பட்டு வந்துள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கதாகும். இந்த வகையில் முதல் பணியாக அஹதிய்யா மற்றும் குர்ஆன் மத்ரஸாக்களுக்கான பாடத்திட்டத்தினை 2003 ஆம் ஆண்டு வெளியிட்டு வைத்தமையும் இப்பாடத்திட்டத்திற்கமைவாக 2005 ஆம் ஆண்டு அஹதிய்யா இறுதிச் சான்றிதழ் பரீட்சையை நடாத்துவதற்கு இத்திணைக்களம் நிதியுதவி வழங்கி தேவையான ஒழுங்குகளை மேற்கொண்டமையும் குறிப்பிடத்தக்கதாகும். அத்துடன் 2008 ஆம் ஆண்டு இஸ்லாமிய தீனிய்யாத் தர்மாச்சார்ய பரீட்சையையும் பரீட்சைத்திணக்களத்தின் மூலமாக நடாத்துவதற்கு சகல நடவடிக்கை களையும் இத்திணைக்களம் மேற்கொண்டது. மேலும் 2008 ஆம் ஆண்டு அஹதிய்யா பாலர் வகுப்பு முதல் இஸ்லாமிய தீனிய்யாத் தர்மாச்சார்ய பரீட்சை வரைக்குமான பாடத்திட்டங்களை வகுத்து தமிழ், சிங்களம், ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளிலும் வெளியிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

மேலும் இத்திணைக்களம் வருடந்தோறும் அஹதிய்யா ஆசிரிய ஆசிரியைகளுக்கான சீருடை மற்றும் புத்தகக் கொடுப்பனவு வழங்குதல்; கருத்தரங்குகளை ஏற்பாடு செய்தல் போன்றவற்றையும் நடை முறைப்படுத்தி வருகின்றது.

குறிப்பாக அஹதிய்யா இறுதிச் சான்றிதழ் மற்றும் இஸ்லாமிய தீனிய்யாத் (தர்மாச்சார்ய) பரீட்சைகளுக்கு தோற்றுபவர்கள் பாடப் புத்தகங்கள் இல்லாததன் காரணமாக பரீட்சைக்கு தோற்றுவதில் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர். இதனை கருத்திற்கொண்டு பரீட்சைகளுக்கு ஏற்றவிதமாக பாடப்புத்தகங்களை உருவாக்கும் பணியை எமது திணைக்களம் மேற்கொண்டது.

மேற்படி நூல்களை வெளியிடுவதற்கும் மற்றும் செயற்திட்டங்களை அமுல்படுத்துவதற்கும் முன்னோடியாக விளங்கி, ஆலோசனைகளையும் வழிகாட்டல்களையும் வழங்கிய முன்னாள் பணிப்பாளர்களான அஷ்ஷெய்க் Y. L. M. நவவி அவர்களுக்கும் அஷ்ஷெய்க் M. I. அமீர் அவர்களுக்கும் இந்நூல் எவ்வித தங்கு தடையுமின்றி துரிதமாக வெளிவர காரணமாக இருந்த தற்போதைய பணிப்பாளர் அஷ்ஷெய்க் M. H. M. ஸமீல் அவர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றிகள் உரித்தாகட்டும்.

இப்பாடப் புத்தகத்தை வடிவமைத்து பிரசுரிப்பதற்கு எல்லா வகையிலும் ஆலோசனைகளையும், வழிகாட்டல்களையும் வழங்கிய ஜாமிஆ நளீமிய்யா கலாபீடப் பணிப்பாளர் கலாநிதி எம். ஏ. எம். சுக்ரி மற்றும் பிரதிப்பணிப்பாளர் அஷ்ஷெய்க் ஏ. சீ. அகார் முஹம்மத் அவர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்வதுடன் இப்பணியை செவ்வனே முடிப்பதற்கு ஒத்துழைப்பும் அர்ப்பணிப்பும் வழங்கியவர்களையும் நன்றியுடன் ஞாபகப்படுத்திக் கொள்கின்றேன்.

இப்புத்தகம் நூலுருவில் வெளியாவதற்கு பல சிரமங்களுக்கு மத்தியில் பாடவிதானங்களுக்கேற்ப பாடங்களை எழுதி வடிவமைத்து தந்த எழுத்தாளர் குழு அங்கத்தவர்களான அகில இலங்கை ஜெம்மியத்துல் உலமா சபையின் செயலாளர் அஷ்ஷெய்க் எம். எம். ஏ. முபாரக் B. A. (மதனி), மகரகம தேசிய கல்வி நிறுவகத்தின் முன்னாள் பிரதம செயற்றிட்ட அதிகாரியான அஷ்ஷெய்க் எம். எச். எம். புஹாரி (நளீமி) மற்றும் தர்கா நகர் முஸ்லிம மகளிர் கல்லூரியின் ஆசிரியர் அஷ்ஷெய்க் எம். எஸ். எம். அனஸ் ஆகியோர்களுக்கும் எமது திணைக்களத்தின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

அத்துடன் இப்புத்தகத்தினை செம்மைப்படுத்தி, வடிவமைத்து தந்தவர்களான முஸ்லிம் சமய, பண்பாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சின் முன்னாள் செயலாளர் அல்ஹாஜ் எஸ். எச். எம். ஜெமீல், பேராதனை பல்கலைக்கழக முன்னாள் சிரேஷ்ட விரிவுரையாளர் அல்ஹாஜ் எம். ஐ. எம். அமீன், தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் முன்னாள் பீடாதிபதி சிரேஷ்ட விரிவுரையாளருமான கலாநிதி மௌலவி எம். எஸ். எம். ஜலால்டீன் (கபூரி), திஹாரி ஹஸனிய்யா அரபுக்கல்லூரியின் அதிபர் அஷ்ஷெய்க் ஏ. எல். றிழா, தேசிய கல்வி நிறுவகத்தின் வளவாளர் அல்ஹாஜ் எம். எச். எம் நாளிர், கொழும்பு பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட விரிவுரையாளர் ஜனாப் எம். எம். எம். சாபீர், மகரகம தேசிய கல்வி நிறுவகத்தின் முன்னாள் திட்டமிடல் அதிகாரியான அஷ்ஷெய்க் எம். எச். எம். புகாரி ஆகியோருக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மேலும் இப்புத்தகத்தை நூலாக்குவதற்கு ஆரம்பம் முதல் இன்று வரை என்னுடன் இணைப்பாளராக செயலாற்றிய மௌலவி எம். எச். எம். லாபீர் (கபூரி) மற்றும் அல்முபாரக் தேசிய பாடசாலை சிரேஷ்ட ஆசிரியை திருமதி எம். டீ. எஸ். றுவைதா அவர்களுக்கும் இப்புத்தகம் நூல் வடிவில் வெளிவருவதற்கு பல வகைகளிலும் ஒத்துழைப்பு வழங்கிய அஷ்ஷெய்க் எம். எச். எம். ஸப்கான், அஷ்ஷெய்க் எம். ஜே. எம். அறபாத் கரீம் அவர்களுக்கும் மேலும் ஒத்துழைப்பு நல்கிய எமது திணைக்கள அதிகாரிகளான அஷ்ஷெய்க் எம். ஐ. முனீர் (நளீமி), திருமதி எம். ஐ. ரஸீனா, அல்ஹாஜ் ஏ. ஏ. எம். அஸ்ரின், திருமதி எம். வை. எப். இன்சிபா, மற்றும் இப்பணிக்கு ஒத்துழைப்பு நல்கிய திணைக்கள அனைத்து அதிகாரிகளுக்கும், சிற்றூழியர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மேலும் இப்புத்தகத்தை கனிணி வடிவமைத்துத் தந்த திருமதி எம். எப். ஷாமிலா, திருமதி எம். எச். எஸ். பாத்திமா மஹ்ஸனி, திருமதி எம். எச். எப். ரிஸானா ஆகியோருக்கும் மற்றும் இப்புத்தகத்தின் அட்டைப்படத்தை வடிவமைத்துத் தந்த ஜனாப் அஸார் வஸீர் அவர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். மற்றும்

அரசாங்க அச்சகத் திணைக்களத்தின் கனிணி பிரிவில் கடமையாற்றும் திருமதி ஏ. என். ஹிதாயா அவர்களுக்கும் எமது திணைக்களத்தின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இப்பாடநூல் சம்பந்தமாக ஏதேனும் ஆலோசனைகளும் கருத்துக் களும் இருப்பின் மறுபதிப்பில் பிரசுரிப்பதற்கு ஏதுவாக முஸ்லிம் சமய கலாசார திணைக்களத்திற்கு அனுப்பி வைக்குமாறு அன்புடன் வேண்டிக் கொள்கிறேன். எனவே இப்பணியில் ஈடுபட்ட சகலரது முயற்சியையும் எல்லாம் வல்ல அல்லாஹ் பொருந்திக் கொள்வதுடன் உரிய பயனை அடைவதற்கு நம் அனைவருக்கும் அல்லாஹ் நல்லருள் பாலிப்பானாக!

ஆமீன் !!

**மௌலவி எம். எச்.நூறுல் அமீன்,**
உதவிப்பணிப்பாளர்,
முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள்
திணைக்களம்.

முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களம்,
180 T. B. ஜாயா மாவத்தை,
கொழும்பு - 10.

# உள்ளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| 01. | இபாதத் | 1 |
| 02. | அத்தஹாரத் | 5 |
| 03. | தொழுகை | 13 |
| 04. | ஸகாத் | 38 |
| 05. | அஸ்-ஸவ்ம் | 52 |
| 06. | ஹஜ் | 58 |
| 07. | உணவு, உடை, உறையுள் | 68 |
| 08. | முஆமலாத் | 83 |
| 09. | முனாகஹாத் | 92 |
| 10. | ஜினாயத் | 114 |

# அல் பிக்ஹுல் இஸ்லாம்
# (இஸ்லாமியச் சட்டநெறி)

## நூல் அறிமுகம்

இப் பாடநூல் இலங்கையின் அஹதிய்யாப் பாடசாலைகளின் புதிய பாடத்திட்டத்திலுள்ள பிக்ஹுல் இஸ்லாமி - இஸ்லாமியச் சட்டநெறி என்ற பாடத்திற்கேற்ப தயாரிக்கப்பட்டுள்ளது. இஸ்லாத்தைக் கற்பவர் அதனை அன்றாட வாழ்வில் எடுத்து நடப்பதிலேயே யதார்த்தமான வெற்றி தங்கியுள்ளது. அந்த வகையில் ஒரு முஸ்லிம் தன்னுடைய வாழ்வின் ஆன்மீக, தார்மீக தேவைகளை நிறைவு செய்து கொள்வதற் கேற்ற வழிகாட்டல் இந்நூலில் வழங்கப்பட்டுள்ளது.

வேகமாக மாறிவரும் உலகின் சவால்களுக்கு முன்னால் மனிதனின் சமய ரீதியான ஆளுமைப் பண்புகள் தளர்ந்து விடாமல் காப்பாற்று வதற்கான ஒரு வழிமுறையாகவே அஹதிய்யாப் பாடசாலைகளின் போதனைகள் அமைந்து காணப்படுகின்றன. அந்த வகையில் இந்தப் பாடநூல் மிகக் கவர்ச்சிகரமான முறையில் கற்பிக்கப்பட வேண்டும். மாணவர்களை சிந்தனைச் சிக்கலுக்குள்ளாக்காமல் அவர்கள் இஸ்லாத்தை எளிதாகப் புரிந்து கொள்ளவும் அதன் மீது ஆழ்ந்த பற்றுக்கொண்டு அதனை பின்பற்றியொழுகவும் வழிப்படுத்துவதாக இப்பாடபோதனை அமைய வேண்டும். நூலின் உள்ளடக்கத்தோடு மாத்திரம் ஆசிரியர் தன் போதனைகளை சுருக்கிக் கொள்ளாமல் மாணவரது விருப்புக்களையும் பிரச்சினைகளையும் இனங்கண்டு அவர்களைச் செயற்பாடுகளில் ஈடுபடுத்திச் சுயமாகத் தேடிக் கற்க வழிநடாத்துவதன் மூலம் கல்விச் செயன்முறையில் மாணவரது ஈடுபாட்டை இரட்டிப்பாக்க வழி செய்வது ஆசிரியரின் பொறுப்பாகும்.

மாணவர்களுடன் நெருக்கமான தொடர்பு கொள்பவர்கள் என்ற வகையில் ஆசிரியர்கள் இதய சுத்தியோடு இந்த நூலை சிறப்புறப் போதித்து நல்லதொரு சந்ததியை இஸ்லாத்தின் நிழலில் வார்த்தெடுக்க உதவுவார்கள் என்று நம்புகிறோம்.

இப்பாடநூலை எழுத வழிகாட்டிய முஸ்லிம் சமய, பண்பாட்டலுவல்கள் திணைக்களத்திற்கும் நூலை எழுத உதவிபுரிந்த ஆலோசனை சபையினருக்கும் நூலாக்க குழுவினருக்கும் பரிசீலனை செய்தோர் அனைவருக்கும் எமது நன்றிகள்.

நூலாக்கக் குழுவின் சார்பாக

**அஷ்ஷெய்க் எம். எச். எம். புஹாரி**,
முன்னாள் பிரதம செயற்திட்ட அதிகாரி.
தேசிய கல்வி நிறுவகம்,
மஹரகம.

# இபாதத்

## அல் இபாதத்

இபாதத் எனும் சொல்லுக்கு வணக்கம், அடிபணிதல், அடிமையாதல், வழிபடுதல் என்றெல்லாம் பொருள் கொள்ளப்படுகின்றது. அல்லாஹ்வின் அடியானாகிய மனிதன், தனது வாழ்க்கையின் சகல விவகாரங்களையும் அல்லாஹ்வின் போதனைகளுக்கும் முஹம்மத் (ஸல்) அவர்களின் வழிகாட்டல்களுக்கும் ஏற்ப அமைத்துக்கொள்வது இபாதத் ஆகும். அல்லாஹ் ஒருவன்; அவனே அனைத்தையும் படைத்தவன்; பரிபாலிப்பவன். அனைத்தையும் ஆக்கவும் அழிக்கவும் வல்லவன். சிருஷ்டிகள் யாவும் அவன் விதித்த நியதிப்படியே இயங்கிக் கொண்டிருக்கின்றன. இவற்றையெல்லாம் படைத்த வல்ல அல்லாஹ், மனிதனைப் படைத்ததன் நோக்கத்தை பின்வருமாறு கூறுகின்றான்.

"மனிதர்களையும், ஜின்களையும் என்னை வணங்குவதற்காகவன்றிப் படைக்கவில்லை" (57:16). மனிதன் அல்லாஹ்வுக்கு அடிமைப்பட்டு அவனது கட்டளைகளுக்கு மதிப்பளித்து, அவன் எஜமான், தான் அடிமை என்ற உணர்வுடன், இபாதத் செய்து வாழ்வதற்காகவே படைக்கப்பட்டிருக்கின்றான். ஆகவே ஒவ்வொரு முஸ்லிமும் தனது பிறப்பிலிருந்து இறப்பு வரை அவனது அன்றாட வாழ்க்கையின் செயற்பாடுகள் அனைத்தையும் இபாதத் ஆக மாற்றிக்கொள்ள கடமைப்பட்டுள் ளான்.

அல்லாஹ்வை வணங்குவதற்குரிய வழிமுறைகளை மனிதன் தானாகவே உருவாக்கிக் கொள்ள முடியாது. அல்லாஹ்வும் றஸூலும் காட்டித் தந்துள்ள முறையிலேயே அவை நிறைவேற்றப்பட வேண்டும்.

இபாதத்தை இரு பெரும் பிரிவுகளாகப் பிரித்து நோக்கலாம்.

1. **வணக்க வழிபாடுகள்** : தொழுகை, ஸகாத், நோன்பு, ஹஜ், திக்ர், திலாவதுல் குர்ஆன் போன்றன இவற்றில் அடங்கும். இவை அடிப்படையிலேயே இபாதத்களாகும்.

2. **அன்றாட நடவடிக்கைகள்** : உண்ணல், உறங்குதல், ஆடை அணிதல், தொழில் புரிதல், கல்வி கற்றல், கற்றுக் கொடுத்தல், குடும்பவாழ்வில் ஈடுபடுதல், சமூக உறவுகள், முதலான சகல நடவடிக்கைகளையும் "இபாதத்" ஆக அமைத்துக்கொள்ள முடியும். அவ்விதம் இபாதத் ஆக அமைத்துக்கொள்வதில் பேணப்பட வேண்டிய நிபந்தனைகளை இஸ்லாமிய அறிஞர்கள் வகுத்தளித்துள்ளனர். அவையாவன.

1. எண்ணம் தூய்மையாக இருத்தல்
2. இஸ்லாத்தில் அனுமதிக்கப்பட்டதாயிருத்தல்.
3. ஷரீஆவின் வரையறைகளை மீறாதிருத்தல்.
4. நேர்த்தியாக நிறைவேற்றல்.
5. அடிப்படை வணக்கங்களுக்குத் தடையாக அமையாதிருத்தல்.

## இபாதத்தின் பிரிவுகள்

1. பர்ளு : கட்டாயம் நிறைவேற்ற வேண்டியவை.
2. ஸுன்னத் : கட்டாயமானது என்று வலியுறுத்தப்படாவிட்டாலும், நிறைவேற்றுவதன் மூலம் நற்கூலி கிடைப்பவை.

**பர்ளான இபாதத்களை இரண்டு பிரிவுகளாக வகுக்கலாம்.**

**பர்ளு ஐன் :**

ஒவ்வொரு தனி மனிதனுக்குமான கட்டாய கடமைகள் இப்பிரிவில் அடங்கும். உதாரணமாக. தொழுகை, ஸகாத், நோன்பு, பெற்றோருக்குக் கீழ்ப்படிதல், குடும்பத்தைப் பராமரித்தல் போன்றவற்றைக் குறிப்பிடலாம். இவற்றை ஒவ்வொரு தனிமனிதனும் நிறைவேற்ற வேண்டும். நிறைவேற்றுபவருக்கு நன்மை கிடைக்கும். இஸ்லாமிய ஷரீஅத்தில் குறிப்பிடப்பட்டுள்ள காரணங்களுக்காகவன்றி இக்கடமையை விடுபவன் தண்டனைக்குரிய குற்றவாளியாவான்.

**பர்ளு கிபாயா :**

இது சமூகத்தின் மீதான கடமையாகும். எனினும் சமூகத்தில் எவரேனும் அதனை நிறைவேற்றிவைத்தால் மற்றைய அனைவரினதும் பொறுப்பு நீங்கி விடுகின்றது. ஆனால் அதனை நிறைவேற்றுபவருக்கு மட்டுமே நன்மை கிடைக்கும். அவ்வாறு எவரும் நிறைவேற்றாதுவிட்டால் அனைவரும் குற்றவாளிகளாகக் கணிக்கப்படுவதுடன் தண்டனைக்கும் ஆளாகுவர். இவ்வகைக் கடமைகளுக்கு உதாரணமாக, ஜனாஸாவுடன் தொடர்பான; குளிப்பாட்டல், கபனிடல், தொழுதல், அடக்கம் செய்தல். ஓர் ஊரில் மார்க்க அறிஞர்கள், வைத்தியர்கள், தாதியர் முதலானோரை உருவாக்குதல் போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

**ஸுன்னத்**

பர்ளுகளில் அடங்காத வணக்க வழிபாடுகள் இப்பிரிவைச் சாரும். இவை பர்ளுகளுக்கு புறம்பாக நிறைவேற்றப்படுகின்ற இபாதத்களாகும். இவற்றை ஒவ்வொரு முஸ்லிமும் நிறைவேற்றுவதன் மூலம் அதிக நன்மைகளை ஈட்டிக் கொள்ளலாம். உதாரணம் : ஸுன்னத்தான தொழுகைகள், ஸுன்னத்தான நோன்புகள், ஸதகா கொடுத்தல், திக்ர் செய்தல் போன்றன.

ஸுன்னத்தான இபாதத்துக்களுள் சிலவற்றை இஸ்லாமிய அறிஞர்கள் ஸுன்னா முஅக்கதா, ஸுன்னா கைரு முஅக்கதா என வகைப்படுத்தி உள்ளனர். முஅக்கதாவுக்கு உதாரணமாக, ஸுப்ஹுக்கு முன் இரண்டு, லுஹருக்கு முன் இரண்டு, பின் இரண்டு, ம.ஃரிபுக்கு பின் இரண்டு, இஷாவுக்குப் பின் இரண்டு ஆகிய 10 ரக்கஅத்துக்களைத் தொழுவது, உழ்ஹிய்யா, அகீகா கொடுப்பது போன்றனவற்றைக் குறிப்பிடலாம்.

### உடலாலும் உள்ளத்தாலும் செய்யும் இபாதத்துக்கள்

மனிதன் நிறைவேற்றுகின்ற ஒவ்வொரு வணக்கமும் மூன்று வழிகளில் அவனுடன் தொடர்புபடுகின்றன.

1. உடல்
2. உள்ளம்
3. பொருள்

எல்லா வணக்கங்களிலும் உள்ளம் கட்டாயமாக தொடர்புபட்டிருக்கும். உள்ளம் தொடர்புபடாத எந்தவொரு வணக்கமும் பலன் தரமாட்டாது என்பதே உண்மையாகும். தொழுகை, நோன்பு போன்றவற்றில் உடலும் உள்ளமும் ஒன்றிணைகின்றன. ஸகாத், உழ்ஹிய்யா என்பவற்றில் உள்ளமும் பொருளும் ஒன்றிணைகின்றன. ஹஜ் போன்றவற்றில் உள்ளம், உடல், பொருள் ஆகிய மூன்றும் ஒன்றிணைகின்றன.

பர்ளான ஸுன்னத்தான இபாதத்துக்களை நிறைவேற்றுவதற்கு ஷர்த்துகள், பர்ளுகள், ஸுன்னத்துகள் எனும் விதிகள் காணப்படுகின்றன. அவற்றை அனுசரிக்காது நிறைவேற்றப்படும் இபாதத்கள் செல்லுபடியாவதில்லை.

இவை தவிர, இபாதத்துக்களை முறிக்கின்ற "முப்திலாத்துக்கள்" எனப்படும் அம்சங்களும் காணப்படுகின்றன. உதாரணமாக தொழும் போது வுழு முறிதல், நோன்பு நோற்றுக்கொண்டு வேண்டுமென்றே நீரருந்துதல் என்பவற்றைக் குறிப்பிடலாம். இவ்வம்சங்கள் யாவும் குறித்த ஓர் இபாதத் செல்லுபடியாகாமல் போவதற்குரிய புறச்செயற்பாடுகளாகும். இவற்றோடு இபாதத்களை நிறைவேற்றும்போது பேணவேண்டிய அகச்செயற்பாடுகள் சிலவும் காணப்படு கின்றன. இ.ஃலாஸ், வர.ஃ, தக்வா, குஷுஉ, குமு.ஃ போன்றன அகச்செயற் பாடுகளாகும். இபாதத்துக்களின் முழுமையான பயனை பெற்றுக் கொள்வதற்கு அகச்செயற்பாடுகளே அடிப்படையாக அமைகின்றன.

### இபாதத் மூலம் ஏற்படும் நல்விளைவுகள் :

இபாதத்துக்கள் யாவும் அடியானிடம் நடத்தை மாற்றங்களைத் ஏற்படுத்துகின்றன. அவற்றை ஒவ்வொரு கடமையுடனும் தொடர்புபடுத்தி நோக்குவோம்.

**தொழுகை** : தீமையிலிருந்து பாதுகாப்பு - "நிச்சயமாகத் தொழுகை மானக்கேடான, வெறுக்கத்தக்க கருமங்களிருந்து மனிதனைப் பாதுகாக்கும்." (29:45).

**ஸகாத்** : உள்ளமும் பொருளும் தூய்மையடைதல் - "நபியே! அவர்களுடைய செல்வத்திலிருந்து தர்மத்திற்குரியதை எடுத்துக் கொண்டு, அவர்களை உள்ளும் புறமும் தூய்மையாக்குவீராக"! (9:103).

**நோன்பு** : இறையச்சம் சுயகட்டுப்பாடு - "நோன்பு ஒரு கேடயம். நோன்பு நோற்பவர் தீயன பேசவோ, தீயன செய்யவோ வேண்டாம். எவரும் சண்டைக்கோ வசைபாடவோ வந்தால் நான் நோன்பாளியா யிருக்கின்றேன் என்று கூறிவிடட்டும். (புஹாரி).

**ஹஜ்** : தீமைகளைக் களைந்து தூய்மையடைதல் - "எவரேனும் (இஹ்ராம் அணிந்து) ஹஜ்ஜை தன் மீது கடமையாக்கிக் கொண்டால், ஹஜ்ஜின் காலத்தில் வீடு கூடுதல், கெட்ட வார்த்தை பேசுதல், சச்சரவுசெய்து கொள்ளல் கூடாது". (2 : 197).

**அன்றாடவாழ்வில்**

* குடும்ப உறவுகளைப் பேணுவதற்கு வழிவகுக்கிறது.
* சமூக கடமைகளையும், உறவுகளையும் பேணுவதற்கு வழி வகுக்கிறது.
* ஒழுக்க மாண்புகளைக் கடைப்பிடிக்க உதவுகிறது.
* அரசியல், பொருளாதார நடவடிக்கைகளை ஒழுங்குபடுத்துகின்றது.

உடலின் ஆரோக்கியம், அதன் அழகு, தூய்மை போன்றவற்றிற்கு இஸ்லாம் அதி முக்கியத்துவம் வழங்கியிருக்கின்றது. உடல், உடை, சுற்றாடலை தூய்மையாகவும், நேர்த்தியாகவும் வைத்துக் கொள்வதை இஸ்லாம் விரும்புகின்றது. ஷரீஅத் விதித்துள்ள தொழுகை போன்ற அடிப்படையான கடமைகளை நிறைவேற்றுவதற்கு சுத்தம் ஓர் அடிப்படை அம்சமாக வலியுறுத்தப்பட்டிருக்கின்றது. இஸ்லாம் போதிக்கும் சுத்தத்திற்கான அணுகு முறைகள் மனித இயல்புக்கும் இயற்கைக்கும் ஏற்றதாகவே அமைந்துள்ளன.

இறைத் தூதர்(ஸல்) அவர்கள் சொன்னார்கள் "ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் குளிப்பதும், மிஸ்வாக் செய்து கொள்வதும், வாசனைப் பொருட்களைப் பயன்படுத்துவதும் ஒவ்வொரு முஸ்லிமின் மீதும் கடமையாகும்." (முஸ்லிம்)

நபி(ஸல்) அவர்கள் வாயையும் பற்களையும் சுத்தமாக வைத்துக் கொள்வதை வலியுறுத்தியுள்ளார்கள். "மிஸ்வாக் கொண்டு உங்களுடைய பற்களை தூய்மை செய்து கொள்ளுங்கள். ஏனெனில் அது அல்லாஹ்வின் திருப்தியைப் பெற்றுத் தருவதும், வாயைச் சுத்தம் செய்வதுமாகும்." (இப்னுமாஜா)

இக்கடமைகள் அனைத்தின் மூலமும் மேற்கூறப்பட்டன போன்ற பல்வேறு நல்விளைவுகள் கிடைக்கின்றன.

# அத்தஹாரத்

## முக்கியத்துவம்

இஸ்லாம் சுத்தத்தை அடிப்படையாகக் கொண்ட மார்க்கமாகும். "சுத்தமாக இருப்போரை அல்லாஹ் விரும்புகிறான்" (9:108) என அல் குர்ஆன் குறிப்பிடுகின்றது. நபி (ஸல்) அவர்களும், "இஸ்லாம் தூய்மையானது. எனவே நீங்களும் தூய்மையைக் கடைப்பிடியுங்கள்" என சுத்தத்தை வலியுறுத்தியுள்ளார்கள்.

முஸ்லிம்கள் உள்ளும், புறமும் பரிசுத்தமானவர்களாக இருக்க வேண்டும். பொறாமை, வஞ்சகம்,பெருமை,அகங்காரம், கபடம் போன்றவற்றிலிருந்து உள்ளத்தை தூய்மைப்படுத்திக் கொள்ள வேண்டும். உடல், உடை, வீடு, சுற்றாடல் முதலியவற்றை எல்லா அசுத்தங்களிலிருந்தும் பாதுகாத்துக்கொள்ள வேண்டும்.

சுத்தம் பேணும் முறையை இஸ்லாம் மிக நுணுக்கமாக வகுத்துத் தந்துள்ளது. இமாம்கள் அதை மூன்று பிரிவுகளாக வகுத்து நோக்குவர். அவை

1. நஜிஸிலிருந்து சுத்தமாதல்.
2. பெருந்தொடக்கிலிருந்து நீங்குதல்.
3. சிறு தொடக்கிலிருந்து நீங்குதல்.

இஸ்லாத்தின் கண்ணோட்டத்தில் சுத்தம் பேணுவது ஓர் இபாதத் ஆகும். அதற்காக அல்லாஹ் நற்கூலி வழங்குகின்றான்.

## அந்நஜிஸ்

இஸ்லாமிய வழக்கில் அசுத்தமானவை நஜிஸ் எனும் பெயரில் வழங்கப்படுகின்றன. உதாரணமாக மலம், சிறுநீர், சீழ், வாந்தி, நாய், பன்றி என்பவற்றைக் குறிப்பிடலாம். இவற்றை சுத்தம் செய்து பயன்படுத்துவதற்கு வழியில்லை. நாய், பன்றி அல்லாத ஏனைய செத்த பிராணிகளின் தோல் பதனிடுவதன் மூலம் சுத்தமாகும். வெளிச் சேர்வை எதுவுமின்றி "கள்ளு" வினாக்கிரியாக மாற்றமடையுமானால் அது சுத்தமாகும்.

சுத்தமான பொருளில் நஜிஸ் படிந்திருப்பின் அதனைச் சுத்தம் செய்ய முடியும். எனினும் பால், நெய் போன்ற திரவப் பொருள்களில் நஜிஸ் விழுந்தால் அவற்றைச் சுத்தம் செய்ய முடியாது. என்றாலும் அவை உறைந்து கட்டியாக இருப்பின் நஜிஸ் பட்ட பகுதியை அகற்றுவதன் மூலம் எஞ்சிய பகுதி சுத்தமாகும்.

## நஜிஸின் வகைகள்

சுத்தம் செய்யும் முறைக்கேற்ப நஜிஸை மூன்று வகையாகப் பிரிப்பர்.




## சாதாரண நஜிஸ்

சாதாரண நஜிஸுக்கு உதாரணமாகப் பின்வருவனவற்றை குறிப்பிடலாம்.

* மலம்
* சிறுநீர்
* இரத்தம்
* சீழ்
* வாந்தி
* மதி (பாலுணர்வினால் வெளியாகும் (இன்ப) நீர்)
* வதி (சிறுநீர் கழித்த பின் வெளியாகும் வெண்ணிறமான வழுவழுப்பான நீர்)
* மதுபானம்
* தூக்கத்தின் போது வாயிலிருந்து தொடர்ச்சியாக வடிந்து கொண்டிருக்கும் வீணீர்.
* சாப்பிட அனுமதிக்கப்படாத பிராணிகளின் பால்.
* பிராணிகளின் இறந்த உடல்.
* உயிருள்ள பிராணிகளிலிருந்து பிரிந்த பகுதிகள்.

மேலே குறிப்பிடப்பட்டவற்றில் இறுதியாகவுள்ள மூன்றில் இருந்தும் முறையே பின்வருவன விதி விலக்குப் பெறுகின்றன.

* தாய்ப்பால்
* மீன், வெட்டுக்கிளி, மனிதன்
* உண்ண அனுமதிக்கப்பட்ட உயிர்ப்பிராணிகளிலிருந்து பிரிந்த உரோமம், இறகு, மனித உடற்பகுதிகள்.

## சுத்தம் செய்யும் முறை

### சாதாரண நஜிஸ் :

நஜிஸைச் சுத்தம் செய்யும் போது முதலில், குறித்த நஜிஸை உரிய இடத்திலிருந்து அகற்றுதல் வேண்டும். பின்னர் நஜிஸின் சுவை, நிறம், மணம் ஆகிய மூன்றும் நீங்கக் கூடியதாக கழுவ வேண்டும். தண்ணீரைக் கொண்டு மட்டும் நஜிஸை நீக்க முடியாவிடின், சவர்க்காரம், எலுமிச்சை முதலிய துணைப்பொருள்களை உபயோகிக்கலாம். சுத்தம் செய்த பின்னர் நிறம் அல்லது மணம் ஆகிய இரண்டில் ஏதாவதொன்று எஞ்சியிருந்தால் சுத்தமானதாக ஏற்றுக் கொள்ளப்படும். எனினும் இவை இரண்டுமோ அல்லது சுவை மட்டுமோ எஞ்சியிருப்பின் அந்த நஜிஸ் சுத்தமாகமாட்டாது.

மேற்கண்ட மூவகைப் பண்புகளும் புலன்களுக்கு எட்டாதவாறு நஜிஸ் உலர்ந்திருந்தாலும் அது படிந்த பொருளை நீரால் சுத்தம் செய்தல் வேண்டும். இன்றேல் அது சுத்தமாக மாட்டாது.

### கடுமையான நஜிஸ் :

நாய், பன்றி என்பன இவ்வகையைச் சாரும். இவற்றின் மலம், சலம், உமிழ் நீர், வியர்வை, இரத்தம் போன்ற அனைத்தும் கடுமையான நஜிஸாகவே கொள்ளப் படும்.

இந்நஜிஸைச் சுத்தம் செய்யும் போது முன்னர் கூறப்பட்ட முறைகளைக் கடைப்பிடிப்பது அவசியமாகும். இவற்றுக்கு மேலதிகமாக மண் கரைசலை உபயோகித்தல், ஏழு தடவை நீரூற்றிக் கழுவுதல் கடமையாகும். முதல் தடவையிலோ அல்லது இடையிலோ மண் கரைசலை உபயோகித்தல் வேண்டும். கடுமையான நஜிஸ் படிந்துள்ள இடத்தில் நஜிஸின் மூவகைப் பண்புகளும் புலப்படாவிட்டாலும் கூட ஏழு தடவை கழுவுதல் வேண்டும்.

பரந்த (கடல், குளம், போன்ற) நீர் நிலைகளில் சுத்தம் செய்யும் போதும் (ஆறு போன்ற) ஓடும் நீரில் சுத்தம் செய்யும் போதும் நீரை மண் சேருமளவு சிறிது கலக்கி அந்நீரில் அமிழ்த்திய பின்னர் ஆறு தடவை நீரினுள் அசைத்தெடுத்தல் போதுமானது.

**இலகுவான நஜீஸ் :-**

தாய்ப்பால் மட்டும் குடித்து வளரும் இரண்டு வயதுக்குட்பட்ட ஆண் குழந்தையின் சிறுநீர் மாத்திரம் இலகுவான நஜிஸில் சேரும். இதனைச் சுத்தம் செய்யும் போது குறித்த நஜிஸை பிழிந்து அகற்றிய பின்னர் இவ்விடத்தின் மீது நீரைத் தெளித்து விடுவது போதுமானது. இந்நஜிஸ் படிந்த பின்னர் அது உலர்ந்திருப்பினும் நீர் தெளித்தல் அவசியமாகும்.

**நீர்**

சுத்தம் செய்வதற்கு நீரே பயன்படுத்தப்படுகின்றது. நீர் அல்லாஹ்வின் அருட்கொடையாகும். ஆதலால் அதனைக் கவனமாகவும், சிக்கனமாகவும் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

சட்ட அறிஞர்கள் நீரை மூன்று பிரிவுகளாக வகுத்துக் கூறியுள்ளனர்.




## மிகச் சுத்தமான நீர்

இதனை "அல் மாஉத் தஹூர்" என்பர். இயற்கைத் தன்மையிலிருந்து மாற்றம் பெறாத நீர் இவ்வாறு அழைக்கப்படுகிறது. இது மழை, கடல், ஆறு, ஊற்று போன்றவற்றிலிருந்து பெறப்படுவதாகும். கந்தகப் படிவு காணப்படும் நிலத்தின் நீர், பாசிபடர்ந்த நீர், சேற்று நீர் என்பனவும் இப்பிரிவில் அடங்கும். தேங்கி இருந்ததால் நீரின் நிறம் அல்லது சுவை மாற்றமடைந்தாலும் அதுவும் இப்பிரிவையே சேரும்.

அசுத்தங்களை நீக்குவதற்கும் சன்மார்க்கக் கடமைகளை நிறைவேற்றுவதற்கும் இவ்வகையான தஹுூரான நீரையே பயன்படுத்த வேண்டும். எனவே, நஜிஸ் நீக்குதல், வுழூச் செய்தல், குளித்தல், ஜனாஸாவைக் குளிப்பாட்டுதல், போன்றவற்றுக்கு தஹுூரான நீரை மட்டுமே பயன்படுத்தல் வேண்டும்.

தஹுூரான நீரை அதிக நீர், சொற்பநீர் என்று இரண்டாக வகுத்து அவற்றுக்குத் தனிப்பட்ட சட்ட விதிகளும் வழங்கப்பட்டுள்ளன. இவ்வாறு சட்ட அறிஞர்கள் வகைப்படுத்தியமைக்கு பின்வரும் ஹதீஸ் ஆதாரமாகக் கொள்ளப்படுகின்றது.

பாலைவன விலங்குகள் அங்குள்ள பசுந்தரை நீரைப்பருகுவது பற்றி நபி (ஸல்) அவர்களிடம் வினவப்பட்ட போது, "நீர் இரு குல்லத் (குல்லதைன்) அளவை அடைந்து விட்டால் அது நஜிஸாக மாட்டாது" என்று விடையளித்தார்கள். (அபூதாவூத் - திர்மிதி)

## 1. அதிக நீர்

இது மாஉன் முத்லக் என குறிக்கப்படுகின்றது. இது குல்லதைன் அளவிலும் கூடுதலாக இருக்கும். குல்லதைன் என்பது 210 லீற்றர் அல்லது அதிலும் கூடிய நீர் ஆகும்.

நஜிஸான பொருள்கள் சேர்வதால் மாத்திரம் இவ்வகை நீர் நஜிஸாவதில்லை. நஜிஸ் சேர்ந்து நீரின் மணம், நிறம், சுவை ஆகிய மூன்றில் ஏதாவதொன்றில் மாற்றம் எற்பட்டால் மட்டுமே நஜிஸ் ஆகும். சில காலம் சென்றதன் பின்னர் அல்லது மேலதிக நீரைச் சேர்ப்பதன் மூலம் அந்நீரில் ஏற்பட்டிருந்த மாற்றம் நீங்கிவிடுமானால் அது அப்போது தஹுூராக மாறிவிடும். இந்நிலையில் மீண்டும் இதனை மார்க்கக் கடமைகளுக்காகப் பயன்படுத்தலாம்.

## 2. சொற்ப நீர்

சொற்ப நீர் என்பது, மேலே குறிப்பிட்ட அளவைவிடக் குறைவான நீர் ஆகும். குல்லதைனுக்கு குறைந்த நீரில் நஜிஸ் சேர்வதால் அது நஜிஸான நீராகி விடுகின்றது. நஜிஸ் சேர்வதால் நீரின் நிறம், மணம், சுவை ஆகியவற்றுள் ஏதாவது ஒரு மாற்றம் ஏற்படாவிட்டாலும் கூட அது நஜிஸாகிவிடும். எனினும், பல்லி, இரத்தோட்டமில்லாத ஈ, எறும்பு போன்ற உயிர்ப்பிராணிகள் செத்து விழுவதால் நீர் நஜிஸாவதில்லை.

நஜிஸ் விழுந்த அசுத்தமான இவ்வகை நீரை மீண்டும் பயன்படுத்துவதற்கு ஒரு வழியுண்டு. அதாவது, சொற்ப நீரில் மேலதிகமாக நீரை ஊற்றி அதனைக் குல்லதைனின் அளவுக்குக் கொண்டு வந்த பின்னர், அதன் நிறம், மணம், அல்லது சுவை என்பவற்றில் மாற்றம் காணப்படாவிட்டால்

அது தஹூரான நீராக மாறும். இந்நிலையில் அந்நீரைப் பயன்படுத்தலாம். இக்காலத்தில் புழக்கத்தில் உள்ள சலவை இயந்திரம் (washing machines) அநேகமாக, குல்லதைனைவிடக் குறைந்த அளவு நீரையே கொண்டிருக் கின்றன. எனவே, இவற்றுள் நஜிஸான ஆடைகளை உட்செலுத்தினால் சலவை இயந்திரமும் ஏனைய ஆடைகளும் கூட நஜிஸாகிவிடும். எனவே, நஜிஸை நீக்கிய பின்னர் ஆடைகளைப் இயந்திரத்தினுள் இடுதல் வேண்டும்.

**பயன்படுத்தப்பட்ட நீர் :**

குல்லதைனுக்கு குறைந்த நீரை, குளித்தல் அல்லது வுழூச் செய்தல் போன்ற பர்ளான கடமைகளில் பயன்படுத்தினால் அந்நீர் முஸ்த.்.மலான நீர் எனப்படுகின்றது. ஒரு பர்ளுக்காகப் பயன்படுத்தப்பட்ட நீரை மற்றொரு பர்ளுக்காகப் பயன்படுத்த முடியாது. அவ்வாறு பயன்படுத்தப்பட்டால் அது செல்லுபடியாகாது. இந்நீரில் மேலதிக நீரைச் சேர்த்து “முத்லக்” ஆக மாற்றுவதன் மூலம் இது “முஸ்த.்.மல்” என்ற நிலையிலிருந்து நீங்கிவிடுகிறது. அப்போது அதனை மீண்டும் பயன்படுத்தலாம்.

**சுத்த நீர் :**

இதனை “அல் மாஉத் தாஹிர்” என்பர். சுத்தமான பிறபொருட்களின் சேர்க்கையால் மாற்றம் பெற்றிருக்கும் தேநீர், பன்னீர், மென்பானங்கள், பழச்சாறு முதலியனவும் இளநீர் போன்று இயல்பால் நீரின் இயற்கைத் தன்மையிலிருந்து மாற்றம் பெற்றவை போன்றனவும் இவ்வகையைச் சேர்ந்தனவாகும்.

இவ்வகை நீர் சுத்தமாக இருப்பினும் பிறபொருள்களைச் சுத்தம் செய்வதற்கு தகுதியற்றதாகும். எனவே, சன்மார்க்கக் கடமைகளை நிறைவேற்றுவதற்கு இவ்வகை நீரை பயன்படுத்துவது கூடாது. அவ்வாறு பயன்படுத்தினால் குறித்த கடமையும் நிறைவேறமாட்டாது. எனினும் இவை உணவாகவும் மருந்தாகவும் பயன்படுத்தப்படலாம்.

**அசுத்தநீர்**

இதனை “அல்மாஉல் முதநஜ்ஜிஸ்” என்பர். இயல்பில் நஜிஸான நீரும், நஜிஸான பொருள்கள் கலந்த நீரும் இவ்வினத்தைச் சாரும். உதாரணமாக சிறுநீர், மதுபானம், சாக்கடைநீர் போன்றவற்றைக் குறிப்பிடலாம். குல்லதைனுக்குக் குறைந்த நீரும், கூடிய நீரும் நஜிஸாவது தொடர்பான இரு வேறுபட்ட விதிகளை முன்னர் தெரிந்து கொண்டீர்கள்.

நஜிஸை அகற்றுவதற்கோ அல்லது வேறு மார்க்கக் கடமைகளை நிறைவேற்றுவதற்கோ நஜிஸான நீரை உபயோகிப்பது கூடாது. இந்நீரைப்

பயன்படுத்தினால் கடமை நிறைவேறாமல் இருப்பதுடன் அந்நீரால் நனைந்த இடம், பொருள் என்பனவும் நஜிஸாகிவிடும்.

### தொடக்கு நீக்குதல்

தொடக்கிலிருந்து நீங்குவதும் சுத்தத்துடன் தொடர்புடையது என்பதை ஏற்கனவே கண்டோம். தொழுவதற்கும், ஏனைய சில இபாதத்துக்களை நிறைவேற்றுவதற்கும் தொடக்கிலிருந்து நீங்கியிருக்க வேண்டும். தொடக்கு பெருந்தொடக்கு, சிறு தொடக்கு என இரு வகைப்படும். இவற்றிலிருந்து நீங்குவதற்கு முறையே குளிப்பதும் வுழூ செய்வதும் கடமையாகும்.

பெருந்தொடக்கை (ஜனாபத்தை) நீக்குவதற்காக குளிக்கின்ற முறை, அதன் ஷர்த்துக்கள், பர்ளுகள் பற்றி நீங்கள் அறிந்துள்ளீர்கள். இவ்வாறே வுழூவின் ஷர்த்துக்கள், பர்ளுகள், ஸுன்னத்துகள், முப்திலாத்துகள், மக்றூஹ்கள் பற்றியும் நீங்கள் முன்னரே அறிந்து வைத்துள்ளீர்கள். ஜனாபத்தை நீக்குவதற்காகக் குளிப்பதும், வுழூச் செய்வதும் வெவ்வேறான இரு இபாதத்துகள் ஆகும். இவற்றை நிறைவேற்றுவதற்காக நற்கூலியுண்டு.

### தயம்மும்

வுழூச் செய்வதற்காக நீர் இல்லாத போது அல்லது நீரை உபயோகிக்க முடியாத போது தயம்மும் செய்து கொள்வதற்கான சலுகை வழங்கப்பட்டுள்ளது. இவ்வாறான சந்தர்ப்பங்களில் பெருந்தொடக்கிலிருந்து நீங்குவதற்காகவும் சிறு தொடக்கிலிருந்து நீங்குவதற்காகவும் தயம்மும் செய்து கொள்ள அனுமதியுண்டு. இவ்விரு சந்தர்ப்பங்களிலும் தயம்மும் ஒரே அமைப்பில் தான் செய்யப்படும். பெருந்தொடக்கு என்பது குளிப்பதைக் கட்டாயப்படுத்தும் நிலையாகும். உதாரணமாக விந்து வெளியாதல், ஹைழ் வெளியாதல் போன்றவை. சிறுதொடக்கு என்பது வுழூச் செய்வதைக் கட்டாயப்படுத்தும் நிலையாகும். உதாரணமாக தொழுகையில் காற்று பறிந்து வுழு முறிதல்.

தயம்மும் செய்வதற்கு பரிசுத்தமான மண்ணையே பயன்படுத்த வேண்டும். முதலில் இரு உட்கைகளையும் மண்ணில் பதித்தெடுத்து, புறங்கைகள் இரண்டையும் சேர்த்துத் தட்டிய பின்னர் முகம் முழுவதையும் ஒரு முறை தடவிக்கொள்ள வேண்டும். பின்னர் இரு உட்கைகளையும் மீண்டும் ஒரு முறை மண்ணில் பதித்து முன்னர் போல் புறங்கைகளை சேர்த்துத் தட்டிய பின் இடது கையால் வலது கையையும் வலது கையால் இடது கையையும் முழங்கையுட்பட தடவிக்கொள்ள வேண்டும். தயம்மும் செய்ய ஆரம்பிக்கும் போதே தான் வுழுவுக்குப் பகரமாகவா அல்லது குளிப்புக்குப் பகரமாகவா தயம்மும் செய்கிறேன் என்பதை மனதால் (நினைத்து) நிய்யத் வைத்துக்கொள்ள வேண்டும்.

உடம்பில் காயங்களேற்பட்டு அவற்றுக்குக் கட்டுப்போடப்பட்டால் அவ்வுறுப்பை கழுவ முடியாது. இவ்வாறு காயங்களுக்குப் போடப்படும் (பிளாஸ்டர் போன்ற) கட்டு, அறபி மொழியில் ஜபீரத் என வழங்கப்படும். தேவையின் போது ஜபீரத் மறைத்துள்ள பகுதிக்காக தயம்மும் செய்ய அனுமதியளிக்கப்பட்டுள்ளது.

ஜபீரத் (கட்டு) போடுவதற்குச் சட்ட அறிஞர்கள் இரு வரையறைகளை விதித்துள்ளனர்.

1. வுழூவுடன் ஜபீரத் போடுதல்.
2. அத்தியாவசியமான பகுதிக்கு மட்டும் ஜபீரத் இடல்.

இந்நிபந்தனைகள் பூர்த்தியாக்கப்படாத பட்சத்தில் தொழுகைக்காக அதனைக் கழற்றிவிட்டு வுழூச் செய்தல் அவசியமாகும். கழற்றினால் ஆபத்து ஏற்படும் என ஜபீறத் இட்டுள்ளவர் அஞ்சினால் அல்லது வைத்தியர் கூறினால், தயம்மும் செய்து தொழுகையை நிறைவேற்றுதல் வேண்டும். எனினும் பின்னர் இத்தொழுகையை மீட்டித் தொழ வேண்டும் என்பது இமாம்களின் கருத்தாகும்.

எனவே இஸ்லாம் வழங்கியுள்ள தயம்மும் முதலான சலுகைகளைத் தேவையான சந்தர்ப்பத்தில் பயன்படுத்தி இபாதத்துகளைத் தவறாமலும் சரியாகவும் நிறைவேற்றி வருவோம்.

# தொழுகை

"அஸ்ஸலாத்" எனும் அரபுப் பதத்திற்கு பிரார்த்தனை செய்தல், புகழுதல், கௌரவித்தல், கருணை காட்டுதல், மன்னித்தல், வணக்கம் புரிதல் போன்ற பல கருத்துக்கள் உள்ளன. இஸ்லாமிய சட்ட வல்லுனர்களான புகஹாக்களின் வரைவிலக்கணத்தின்படி "அல்லாஹ்வை மனதில் கொண்டு "அல்லாஹு அக்பர்" என்ற தக்பீருடன் ஆரம்பித்து ஸலாம் சொல்லும் வரை புலன்களை அடக்கி, அல்லாஹ்வின் பால் சிந்தனையை ஒருமுகப்படுத்தி குறிப்பிட்ட ஓதல்களை ஓதி உரிய முறையில் நிறைவேற்றப்படும் கிரியையே "ஸலாத்" - தொழுகை எனப்படும்.

## தொழுகை தொடர்பான குர்ஆன் ஸுன்னா ஆதாரங்கள்

“........ இன்னும் தொழுகையை நிலைநிறுத்துவீராக. நிச்சயமாக தொழுகை மானக்கேடானவற்றை விட்டும் வெறுக்கத்தக்கவற்றை விட்டும் தடுத்துவிடும்....” (29 : 45)

நபி (ஸல்) அவர்கள் தொழுகையின் முக்கியத்துவத்தை பல்வேறு வகையில் எடுத்துக் காட்டியுள்ளார்கள்.

* "ஈமானுக்கும் குப்ருக்கும் இடையிலான வேறுபாடு தொழுகையை விடுவதாகும்." (முஸ்லிம்)

* "மறுமை நாளில் அடியான் முதலில் தொழுகை பற்றியே விசாரிக்கப்படுவான். அது சீராகிவிட்டால் அவனது ஏனைய அமல்கள் யாவும் சீராகிவிடும். அது சீர்கெட்டு விட்டால் அவனது ஏனைய கிரியைகள் சீர்கெட்டுவிடும் (தபரானி):

* "நிச்சயமாக தொழுகை மார்க்கத்தின் தூணாகும். எவர் அதை நிலை நிறுத்தினாரோ, அவர் மார்க்கத்தை நிலை நிறுத்தியவராவார். எவர் அதை விட்டுவிட்டாரோ அவர் மார்க்கத்தை இடித்தவராவார். (அஹ்மத்)

தொழுகை ஈமானின் அடையாளச் சின்னம். மறுமையில் முதல் விசாரணைக் குட்படுத்தப்படும் விடயம், மார்க்கத்தின் தூண் என்ற கருத்துக்களை மேலுள்ள ஹதீஸ்கள் உணர்த்துகின்றன. இவை போன்ற வேறு பல ஹதீஸ்களும் தொழுகையின் முக்கியத்துவத்தை எடுத்தியம்புகின்றன. தொழுகை இஸ்லாத்தின் கடமைகளுள் பிரதானமானதாகும். தொழுகை தவிர்ந்த கடமைகள் நாம் வாழும் பூமியில் வைத்தே கடமையாக்கப்பட்டன. ஆனால் தொழுகையோ முஹம்மத் (ஸல்) அவர்களது மிஃராஜின் போது விண்ணுலகில் வைத்து அல்லாஹ்வினால் விதியாக்கப்பட்டது. அந்த வகையிலும் ஏனைய கடமைகளை விட இது வித்தியாசப்பட்டும் முக்கியத்துவம் பெற்றும் விளங்குகின்றது.

பருவ வயதை அடைந்த ஒவ்வொரு முஸ்லிமும் வாழ்நாள் முழுவதும் தவறாமல் நிறைவேற்ற வேண்டிய ஒரு கடமை என்ற வகையிலும் தொழுகை முக்கியத்துவம் பெறுகின்றது. நோயுற்ற வேளைகளிலும். பிரயாணங்களில் ஈடுபட்டிருக்கின்ற சந்தர்ப்பங்களிலும், நீரைப் பெற்றுக் கொள்ள இயலாத சூழ்நிலையிலும் களத்தில் யுத்தம் நடைபெறும் வேளையிலும் இக்கடமையை நிறைவேற்றியே ஆக வேண்டும் என்பதற்காக இக்கடமைக்கு அல்லாஹ் பல்வேறு சலுகைகளை வழங்கியிருக்கின்றான்.

## தொழுகையை விடுவதால் ஏற்படும் தீங்குகள்

தொழுகையை விடுவதால் இம்மையிலும், கப்ரிலும், கியாமத்திலும் ஏற்படும் விபரீதங்களை அல்குர்ஆனும் ஸுன்னாவும் விளக்கியுள்ளன. அவை இக்கடமையின் முக்கியத்துவத்திற்கு மேலும் வலு சேர்க்கின்றன.

- "ஒருவருக்கு ஒரு நேரத் தொழுகை தவறிவிடுமாயின் அது அவரது சொத்துக்களும் குடும்பமும் பறிக்கப்பட்டது போன்றதாகும்". (அஹ்மத்)
- சுவனவாசிகள் நரகவாசிகளிடம் நீங்கள் நரகத்தை அடைந்ததற்கான காரணம் என்ன எனக் கேட்பார்கள். அதற்கு நரகவாசிகள் "நாம் தொழக்கூடியவர்களாக இருக்கவில்லை," என்று பதிலுரைப்பார்கள். இதனை அல்குர்ஆனின் 74 : 42-43 வசனங்கள் எடுத்துக்காட்டுகின்றன.
- "தொழுகையைப் பேணித் தொழாதவர்கள், மறுமை நாளில் பிர்அவ்ன், ஹாமான், காரூன், உபை இப்னு கலப் போன்ற காபிர்களுடன் தான் இருப்பார்கள்". (அஹ்மத்)
- "கடமையாக்கப்பட்ட எந்தத் தொழுகையையும் நீங்கள் தெரிந்து கொண்டே விட்டுவிடாதீர்கள். கடமையான ஒரு நேரத் தொழுகையை யார் விடுகின்றாரோ அவரை விட்டும் அல்லாஹ்வின் பொறுப்பு நீங்கி விடுகின்றது". (அஹ்மத்)

மேலும் தொழுகையை அலட்சியம் செய்வோர் இவ்வுலகிலும், கப்றிலும் மறுமையிலும் கொடிய தண்டனைக்குள்ளாவர் என்பதைப் பல ஹதீஸ்கள் எச்சரிக்கின்றன. அவற்றைத் தொகுத்து நோக்கலாம்.

i. உலக வாழ்க்கையில் அவர்களுக்கு அபிவிருத்தி ஏற்படமாட்டாது.

ii. அவர்களின் முகத்தில் ஈமானின் பிரகாசம் ஒளிப்பதில்லை.

iii. அவர்கள் மரணிக்கும்போதும் கடும் பசியுடனும் தாகத்துடனும் இழிவான நிலையிலும் மரணிப்பர்.

iv. கப்ரில் கொடிய வேதனைகளை அனுபவிப்பர்.

v. மறுமையில் கடுமையான விசாரணைக்குட்படுவர்.

vi. அல்லாஹ்வின் கோபத்துக்குட்படுவர்.

vii. நரகில் மிகக் கடுமையாகத் தண்டிக்கப்படுவர்.

ஆகவே, தொழுகையை விடுவது எல்லா வழிகளிலும் பாதிப்பை ஏற்படுத்திவிடும்

தொழுகையை நிறைவேற்றுவதற்கு சில விதிமுறைகள் இருக்கின்றன. அவற்றை ஷர்த்து, பர்ளு, ஸுன்னத், முப்திலாத் என சட்ட அறிஞர்கள் வகைப்படுத்திக் காட்டுகின்றனர். அவற்றை அனுசரித்தே தொழுகையை நிறைவேற்ற வேண்டும்.

தொழுகையை நிறைவேற்றுவதற்கு ஷர்த்துக்கள் உண்டு, "ஷர்த்" என்ற அரபுச் சொல்லின் கருத்து "நிபந்தனை" என்பதாகும். ஒருவர் தனது தொழுகையை ஆரம்பிக்க முன்னர் அவற்றைப் பேணிக்கொள்ள வேண்டும்.

## தொழுகையின் ஷர்த்துக்கள்

1. முஸ்லிமாயிருத்தல்.
2. நல்லவைகளையும் கெட்டவைகளையும் பிரித்து விளங்கிக் கொள்ளும் பருவத்தை அடைந்திருத்தல். இதனை அரபியில் "தம்யீஸ்" என வழங்குவர். மயக்க நிலையிலிருப்போர் சித்த சுவாதீனமற்றோர், சிறு பிள்ளைகள் என்போர் தம்யீஸ் அற்றவர்கள் ஆவர்.
3. பர்ளான தொழுகையை பர்ள் என்று அறிதல்.
4. பர்ளையும் சுன்னத்தையும் பிரித்து அறிதல்.
5. தொழுகையை நிறைவேற்றும் முறையினை அறிந்திருத்தல்.
6. உடல், உடை தொழுமிடம் என்பன நஜீஸ் அல்லாத நிலையில் இருத்தல்.
7. தொடக்குகளை விட்டும் நீங்கியிருத்தல்.
8. அவ்ரத்தை மறைத்தல். - ஒருவர் தனது உடலுறுப்புக்களில் - கட்டாயமாக மறைத்துக் கொள்ள வேண்டிய பகுதிகளையே இச்சொல் குறிக்கின்றது. ஆண்கள் தொப்புளுக்கும் முழங்காலுக்கும் இடைப்பட்ட பகுதிகளை மறைத்துக்கொள்வது கடமையாகும். மேலதிகமாக மறைப்பது ஸுன்னத்தாகும். பெண்கள் தொழுகையின் போது தனது முகம்

மணிக்கட்டு வரையிலான முன்னங்கைகளைத் தவிர்ந்த ஏனைய சகல உறுப்புக்களையும் கட்டாயம் மறைத்துக்கொள்ள வேண்டும்.

9. தொழுகைக்கு நேரமாகி விட்டதை அறிதல்.

10. கிப்லாவை முன்னோக்கித் தொழுதல்.

## தொழுகையின் பர்ளுகள்

இஸ்லாத்தில் கட்டாயமாக நிறைவேற்ற வேண்டிய விடயங்கள் "பர்ளு" எனப்படுகின்றன. தொழுகை ஆரம்பிக்கு முன்னர் கவனிக்க வேண்டியவை "ஷர்த்து" எனப்படுவது போல தொழுகையின் போது கட்டாயம் பேணி நிறைவேற்ற வேண்டியவை பர்ளு எனப்படுகின்றன. அவற்றை முறையாக நிறைவேற்றும் போதே தொழுகை செல்லுபடியாகும். அவை வருமாறு:-

1. **நிய்யத்து** : நினைத்தல், நிர்ணயித்தல் என்பது அதன் கருத்தாகும். தொழுகையை ஆரம்பிப்பவர் அத்தொழுகையை நிறைவேற்ற முனைவதாக மனதில் இருத்துதல் அல்லது நிர்ணயித்தல் நிய்யத் எனப்படும். இது தேவையானதும் கடமையானதுமாகும். "செயல்கள் அனைத்தும் எண்ணங்களைப் பொறுத்தே அமைகின்றன" (புகாரி)

2. **ஆரம்பத் தக்பீர் சொல்லல்** : இதற்கு அரபியில் தக்பீரதுல் இஹ்ராம் என்பர். நிய்யத்துடன் அல்லாஹு அக்பர் என்று சொல்வது தொழுகையின் பர்ளாகும். "தொழுகையின் திறவுகோல் சுத்தம் ஆகும். அதன் ஆரம்பம் தக்பீரும், இறுதி ஸலாமும் ஆகும்". ( அஹ்மத் )

3. **நிற்றல் :** இதற்கு அரபியில் ‘கியாம்’ என்பர், தொழுகையில் நிற்க வேண்டிய கட்டங்களில் நின்று தொழுவதை இது குறிக்கின்றது. நிற்க சக்தியற்றவர் இருந்தோ, சாய்ந்தோ, உட்கார்ந்தோ அதற்கும் இயலாதோர் படுத்த வண்ணமோ தொழ வேண்டும். "நீங்கள் நின்று கொண்டு தொழுங்கள். முடியாவிட்டால் உட்கார்ந்து தொழுங்கள். முடியாவிட்டால் சாய்ந்து கொண்டு தொழுங்கள்" (புகாரி)

4. **ஸூரதுல் பாத்திஹாவை ஓதல்** : தனித்து/ ஜமாஅத்தாக தொழும் ஒவ்வொரு ரக்அத்திலும் சூரா பாத்திஹாவை ஓத வேண்டும். "சூரா பாத்திஹாவை ஓதாதவருக்கு தொழுகையில்லை" (முஸ்லிம்) என நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள்.

5. **றுகூஉ செய்தல்** : தலை, கழுத்து, முதுகு ஆகிய அனைத்தும் ஒரே மட்டத்துக்கு வருகின்ற அளவு குனிந்து இரு உள்ளங் கைகளையும் முட்டுக் கால்களின் மேல் வைத்துக் கொள்ள வேண்டும்.

6. **றுகூஉவில் தாமதித்தல்** : றுகூஉ செய்ததும் உடனே நிமிர்ந்த நிலைக்கு வராமல் சற்று நேரம் றுகூஉவில் தாமதித்தலையே இது குறிக்கும்.

7. **இ∴திதால் நிலைக்கு வருதல்** : றுகூஉவின் நிலையிலிருந்து நிமிர்ந்து நேராக நிற்றலையே இது குறிக்கும்.

8. **இ∴திதாலில் தாமதித்தல்** : இந்நிலையில் சற்று நேரம் தாமதித்தலையே இவ்வாறு குறிப்பிடப்படுகின்றது.

9. **முதலாவது ஸுஜூது செய்தல்** : ஒருவர் தனது நெற்றி, இரு உள்ளங்கைகள், இரு முழங்கால்கள், கால்களின் விரல்களின் உற்பாகம் என்பவற்றை நிலத்தில் வைத்த நிலையே ஸுஜூத் எனப்படுகின்றது. ஒரு ரக்அத்தில் இருமுறை ஸுஜூத் செய்ய வேண்டும். எனவே தான் முதலாவது ஸுஜூத் எனப்படுகிறது.

10. முதலாவது ஸுஜூதில் தாமதித்தல்.

11. நடு இருப்பில் இருத்தல் : முதலாவது ஸுஜூதில் இருந்து மீண்டு உட்கார்ந்திருப்பதையே இது குறிக்கின்றது.

12. நடு இருப்பில் தாமதித்தல்.

13. இரண்டாவது ஸுஜூத் செய்தல்.

14. இரண்டாவது ஸுஜூதில் தாமதித்தல்.

15. தொழுகையின் கடைசியில் அத்தஹிய்யாத் ஓத இருத்தல்.

16. அத்தஹிய்யாத் ஓதுதல்.

17. நபி முஹம்மத் (ஸல்) அவர்கள் மீது ஸலவாத் ஓதுதல்.

18. முதலாவது ஸலாம் கூறல்.

19. மேலே கூறப்பட்ட 18 பர்ளுகளையும் கூறப்பட்ட ஒழுங்கு முறையின் படி நிறைவேற்றுதல்.

## தொழுகையை முறிப்பன

1. வுழு முறிதல்

2. தொழுகையை நிறைவேற்றிக் கொண்டிருக்கும் போது அதனை விடுவோமா அல்லது தொடர்ந்து நிறைவேற்றுவோமா என்று இரண்டு நிலைக்கு உள்ளாகுதல்.

3. பேசுதல் : பொருளுள்ள ஓரெழுத்துச் சொல்லையோ பொருளற்ற பல எழுத்துக்களையோ மொழிதல்.

4. சிரித்தல், அழுதல், முனங்குதல், ஊதுதல் போன்றன.

5. தொழுகையோடு சம்பந்தமில்லாத செயல்களைச் செய்தல். (கண் இமைத்தல், விரல் அசைத்தல் போன்றன தொழுகையை முறிக்காது)

6. செயல் சார்ந்த பர்ளுகளில் ஒன்றை அதிகப்படுத்துதல்.

7. தொழுகையின் ஷர்த்துக்களில் ஒன்றை இழந்து விடுதல்.

8. தொழுகையின் பர்ளுகளில் ஒன்றை விட்டு விடுதல்.

9. நோன்பை முறிக்கும் காரியங்களில் ஒன்றைச் செய்தல். (உ - ம் : உண்ணல், பருகுதல்.)

## தொழுகையின் வகைகளும் அவற்றை நிறைவேற்றும் முறைகளும்



## தொழுகை இரண்டு வகைப்படும்

1. பர்ளான தொழுகை :- கட்டாயம் நிறைவேற்ற வேண்டியவை.

2. ஸுன்னத்தான தொழுகை :- கட்டாயமென வலியுறுத்தப்படாவிட்டாலும் நிறைவேற்றுவதன் மூலம் நற்கூலி கிடைப்பவை

## பர்ளான தொழுகைகள் இரண்டு வகைப்படும்

பர்ளு ஐன் :- இது ஒவ்வொரு முஸ்லிம் மீதும் கடமையானது. ஐங்காலத் தொழுகைகள், ஜும்ஆத் தொழுகை போன்றன.

பர்ளு கிபாயா :- இது ஒவ்வொரு முஸ்லிம் மீதும் கடமையாக இருந்த போதிலும் சிலர் அதை நிறைவேற்றினால் ஏனையோரின் கடமை நீங்கிவிடும். ஆயினும் அதனை நிறைவேற்றியோருக்கு மட்டும் நன்மை கிடைக்கும். அதை எவரேனும் நிறைவேற்றாவிட்டால் சகலரும் குற்றவாளிகளாகிவிடுவர். ஜனாஸாத் தொழுகை இவ்வகையைச் சார்ந்ததாகும்.

3. ஸுன்னத்தான தொழுகை இரண்டு வகைப்படும்.

1. **ஸுன்னா முஅக்கதா :-**

இது நபி (ஸல்) அவர்களும் ஸஹாபாக்களும் பர்ளான வணக்கங்களுக்கு அடுத்த நிலையில் வைத்து பேணி வழக்கமாகத் தொழுது வந்த பர்ளு அல்லாதவற்றைக் குறிக்கும். இதனை நபி (ஸல்) அவர்கள் ஊரில் தங்கியிருக்கும் போதும் பிரயாணத்தின் போதும் தவறாது நிறைவேற்றி வந்துள்ளார்கள். வித்ர், தஹஜ்ஜுத், பெருநாள் தொழுகை, கிரகணத் தொழுகை, மழை வேண்டித் தொழும் தொழுகை போன்றன இதற்கு உதாரணங்களாகும்.

2. **ஸுன்னா கைரு முஅக்கதா :-**

நபி (ஸல்) அவர்களால் தொடர்ந்தேர்ச்சியாகவன்றி நிறைவேற்றி வந்த ஸுன்னத்தான தொழுகைகளை இது குறிக்கும். தஹிய்யதுல் மஸ்ஜித், வுழுவைத் தொடர்ந்து தொழும் தொழுகை, ஸலாதுல் லுஹா போன்றன இதற்கு உதாரணங்களாகும்.

**ஜமாஅத் ஸுன்னத்தான தொழுகைகள்.**

1. பெருநாள் தொழுகை.
2. சூரிய, சந்திர கிரகணத் தொழுகை.
3. மழை வேண்டித் தொழும் தொழுகை.
4. தராவீஹ் தொழுகை.
5. றமழான் மாத இரவில் வித்ர் தொழுகை.

**தனித்துத் தொழப்படும் ஸுன்னத்தான தொழுகைகள்.**

1. ஐங்கால பர்ளு தொழுகைகளுக்கு முன்பும் பின்பும் தொழுபவை. அவையாவன :-

   - ஸுப்ஹுக்கு முன் இரண்டு ரக்அத்துகள்.
   - லுஹருக்கு முன் நான்கு ரக்அத்துகள்.
   - லுஹருக்குப் பின் நான்கு ரக்அத்துகள்.
   - அஸருக்குப் முன் நான்கு ரக்அத்துகள்.
   - ம.ஃ.ரிபுக்கு முன் இரண்டு ரக்அத்துகள்.
   - ம.ஃ.ரிபுக்கு பின் இரண்டு ரக்அத்துகள்.
   - இஷாவுக்கு முன் இரண்டு ரக்அத்துகள்.
   - இஷாவுக்கு பின் இரண்டு ரக்அத்துகள்.
   - இவற்றுள் சுப்ஹுக்கு முன் இரு ரக்அத்துகள் லுஹருக்கு முன் இரண்டு ரக்கஅத்துக்கள் பின் இரு ரக்அத்துகள் ம.ஃ.ரிபுக்குப் பின் இரு ரக்அத்துகள் இஷாவுக்கு பின் இரு ரக்அத்துகள் என மொத்தம் 10 ரக்அத்துக்கள் ஸுன்னத் முஅக்கதாவில் அடங்கும்.

2. ளுஹாத் தொழுகை.
3. தஹிய்யதுல் மஸ்ஜித் தொழுகை.
4. வித்றுத் தொழுகை.
5. தஹஜ்ஜுத் தொழுகை.
6. இஸ்திகாராத் தொழுகை.
7. தஸ்பீஹ் தொழுகை.
8. ஹஜ், உம்ராவுக்கு இஹ்ராம் கட்ட முன் தொழும் தொழுகை

9. க.்.பாவை தவாப் செய்து முடிந்ததும் தொழும் தொழுகை.

10. வுழு செய்தவுடன் தொழும் தொழுகை.

இனி நாம் ஒவ்வொரு தொழுகை பற்றியும் விரிவாக நோக்குவோம்.

## ஐங்காலத் தொழுகை

".... நிச்சயமாக தொழுகையோ, குறிப்பிட்ட நேரத்தில் (தவறாது) நம்பிக்கையாளர் களால் நிறைவேற்ற வேண்டிய கடமையாகவே இருக்கிறது" (4:103)

தொழுகை விதியான அனைவரும்,தினமொன்றிற்கு ஐவேளை தொழுவது கடமையாகும். அக்கடமை அதன் பர்ளுகளைச் சரியாக பூரணப்படுத்தும் போதே நிறைவேறும். மாறாக ஒன்றேனும் தவறுமாயின் தொழுகை முறிந்து விடும். தொழுகையின் ஷர்த்துகளையும் பர்ளுகளையும் பேணுகின்ற அதே நேரத்தில் அதன் ஸுன்னத்துக்களையும் நிறைவேற்றுவது நிறைவான நன்மையைத் தரும்.

தொழுகை கடமையாக்கப்பட்டபோது அதனை நிறைவேற்ற வேண்டிய முறையை ஜிப்ரீல் (அலை) அவர்கள் நபி (ஸல்) அவர்களுக்குக் கற்றுக் கொடுத்தார்கள். அம்முறைமையே அன்று முதல் இன்று வரை முஸ்லிம்களால் கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றது. அவை:

### நிலையில் நிற்றல்

தொழுகையை நிறைவேற்ற முற்படுபவர், ஆண்களாயின் இரு கால்களுக்குமிடையே சுமார் ஒரு சாண் இடைவெளி விட்டும், பெண்களாயின் இரு கால்களையும் நெருக்கமாக வைத்தும் கிப்லாவை முன்னோக்கியவாறு நேராக நிமிர்ந்து நிற்றல் வேண்டும்.

பின்னர் "பர்ளான அல்லது ஸுன்னத்தான குறித்த (தொழுகையின் பெயரைக் குறிப்பிட்டு) தொழுகையைத் தொழுகிறேன்" என நிய்யத்து வைத்து "அல்லாஹு அக்பர்" என தொழுகையின் ஆரம்பத் தக்பீரைக் கூற வேண்டும். அவ்வாறு தக்பீர்கூற ஆரம்பிக்கும் போது , உள்ளங்கைகளிரண்டையும், விரல்களைவிரித்து அவை மிக நெருக்கமாகவோ, இடைவெளிவிட்டோ அல்லாமல் இருக்கத்தக்கதாக கிப்லாவை முன்னோக்கியவாறு வைத்திருத்தல் வேண்டும். அப்போது பெருவிரலின் நுனி, காதின் கீழ்ப்பகுதிக்கு நேராகும் வரை இரு கைகளையும் மேலே உயர்த்துதல் வேண்டும். தக்பீர் சொல்லி முடிக்கும் போது இரு கைகளையும் மெதுவாகத் தாழ்த்தி தொப்புழுக்கும் நெஞ்சுக்குமிடையில் கைகளைக் கட்டுதல் வேண்டும். அப்போது இடது கை மணிக்கட்டை வலது உள்ளங்கையால் பற்றிக் கொள்ளல் வேண்டும். தக்பீரின் போது ஆண்கள் தங்கள் முழங்கைகளை இரு விலாப் புறங்களிலுமிருந்து தூரமாக்கியும் பெண்கள் இரு முழங்கைகளையும் விலாவோடு சேர்த்தும் வைத்துக் கொள்ளல் வேண்டும்.

நிய்யத்து என்பதன் குறைந்த அளவு (உதாரணமாக) 'ளுஹருடைய பர்ளைத் தொழுகிறேன்' என்பதாகும். இதில் மூன்று அம்சங்கள் உள்ளன. அதன் அதிகபட்ச அளவு, லுஹருடைய பர்ளான நான்கு ரக்அத்துகளையும் அதாவாக, சிறப்பான க.்.பாவை முன்னோக்கி அல்லாஹ்வுக்காகத் தொழுகிறேன் என்பதாகும். கூட்டாகத் தொழும்போது இமாமாயின், 'இமாமன்' என்ற வார்த்தையையும் ம.்.மூமாயின், 'ம.்.மூமன்' என்ற வார்த்தையையும் நிய்யத்தில் சேர்த்துக் கொள்ள வேண்டும்.

தக்பீர் தஹ்ரீமா எனும் ஆரம்பத் தக்பீரைச் சொல்லிக் கைகளைக் கட்டியவுடன் 'துஆஉல் இப்திதாஹ்' என்னும் ஆரம்ப துஆவை ஓதிக் கொள்ளல் வேண்டும். நபி (ஸல்) அவர்கள் பல்வேறு சந்தர்ப்பங்களில் பல்வேறு துஆக்களை ஓதியுள்ளார்கள். **உதாரணமாக**

اَلْحَمْدُ لِلّٰهِ حَمْدًا طَيِّبًا مُبَارَكًا فِيْهِ

பொலிவும், மணமும் பொருந்திய புகழனைத்தும் அல்லாஹ்வுக்கே உரித்தாகும் என்ற துஆவைக் குறிப்பிடலாம். நாம் வஜ்ஜஹ்தையே வழக்கமாக ஓதி வருகிறோம். இதுவும் அங்கீகரிக்கப்பட்டதாகும். பின்னர் பிஸ்மிலுடன் ஸுறத்துல் பாத்திஹாவைப் பிழையின்றி ஓதிக் கொள்ள வேண்டும். அடுத்து முதலாம், இரண்டாம் ரகஅத்துகளில் மாத்திரம் ஸுறதுல் பாத்திஹாவுக்குப் பின்னர் வேறு ஸுறாக்களை அல்லது சில ஆயத்துக்களை ஓத வேண்டும்.

**றுகூஉ செய்தல்**

அதன் பிறகு இரு கைகளையும் ஆரம்ப தக்பீரின் போது உயர்த்தியவாறு மீண்டும் உயர்த்தி தக்பீர் சொல்லியவாறு றுகூஉக்காகக் குனிதல் வேண்டும். தலை, கழுத்து,முதுகு அனைத்தும் ஒரே கிடை மட்டத்துக்கு வருகின்ற வரை குனிந்து இரு உள்ளங்கைகளையும் முழங்கால்களின் மேல் வைத்துக் கொள்ளல் வேண்டும். றுகூஉடைய நிலையிலும் ஆண்கள் தமது முழங்கைகளை விலாவிலிருந்து அப்புறப்படுத்தியும், பெண்கள் தமது விலாவோடு சேர்த்தும் வைத்துக் கொள்ளல் வேண்டும். இந்நிலையில் எல்லா உறுப்புக்களும் அமைதி பெறும் வரை தரித்து,

سُبْحَانَ رَبِّيَ الْعَظِيْمِ وَبِحَمْدِهِ

(மகத்தான எனது இரட்சகனை தூய்மைப்படுத்துவதோடு அவனைப் புகழ்கிறேன்) என்று மூன்று தடவை ஓதிக் கொள்ளல் வேண்டும்.

**இஃதிதாலுக்கு வருதல்**

மீண்டும் இரு கைகளையும் ஆரம்ப தக்பீரின் போது உயர்த்தியது போன்று உயர்த்தி

سَمِعَ اللهُ لِمَنْ حَمِدَهُ

(அல்லாஹ் தன்னைப் புகழ்பவனின் புகழைச் செவிமடுக்கிறான்) எனக் கூறிக் கொண்டு இ.ஃதிதால் என்னும் நிமிர்ந்த நிலைக்கு வரவேண்டும். அங்கு கைகளை தொங்கவிட்டு அசையாது வைத்துக் கொள்ளல் வேண்டும். அசைவற்ற நிலையில் அங்கு தரித்து நிற்கின்ற போது

رَبَّنَا لَكَ الْحَمْدُ مِلأَ السَّمَاوَات وَمِلأَ الْاَرْضِ
وَمِلأَ مَا شِئْتَ مِنْ شَيْئٍ بَعْدُ

(நாயனே வானங்கள் நிரம்பிய, பூமி நிரம்பிய, அதன் பின்னர் அவற்றில் நீ நாடிய அனைத்தும் நிரம்பிய புகழ் யாவும் உனக்கே உரியன) எனச் சொல்லிக் கொள்ள வேண்டும்.

**ஸுஜுது செய்தல்**

இ.ஃதிதாலை நிறைவு செய்து கொண்ட பின்னர் கைகளை உயர்த்தாமல் தக்பீர் சொல்லியவாறே ஸுஜுதுக்குச் செல்ல வேண்டும். அதற்காகக் குனிந்து செல்கின்றபோது முதலில் இரு முழங்கால்களையும் அடுத்து இரு உள்ளங்கைகளையும் இறுதியாக நெற்றியையும், மூக்கையும் தரையில் பதிய வைக்க வேண்டும்.

கைவிரல்கள் கிப்லாவை முன்னோக்கி நீண்டிருக்க வேண்டும். இரு முன்கைகளும் காதுக்கும் தோளுக்கும் நேராக இருக்குமாறு வைக்கப்படல் வேண்டும்.

ஆண்கள் தமது இரு முழங்கைகளையும் விலாவிலிருந்தும் வயிற்றைத் தொடைப் பகுதியிலிருந்தும் அகற்றி வைத்தல் வேண்டும். ஆனால் பெண்கள் முழங்கைகளை விலாவோடும், வயிற்றைத் தொடைப்பகுதியோடும் சேர்த்துக் கொள்ளல் வேண்டும்.

ஒவ்வொரு ஸுஜூதிலும் ஏழு உறுப்புக்கள் கட்டாயமாகத் தரையில் பதிந்திருந்தல் வேண்டும். இரு கால்களினதும் விரல்களின் அடிப்பாகத்தின் சிறு பகுதி, இரு முட்டுக்கால்கள், இரு உள்ளங்கைகள் , திறந்த நெற்றி என்பனவே அவ்வுறுப்புக்களாகும். ஸுஜூதின்போது மூக்கு நிலத்தில் படுவது ஸுன்னத் ஆகும். ஸுஜூதில்

سُبْحَانَ رَبِّيَ الأَعْلَى وَبِحَمْدِهِ

(உயர்வான எனது இரட்சகனைத் தூய்மைப்படுத்துவதோடு அவனைப் புகழ்கிறேன்.) என மூன்று தடவை அறபியில் ஓதிக் கொள்ள வேண்டும். ஸுஜூதுடைய நிலையில் தமக்குத் தேவையான துஆக்களை அறபி மொழியில் மேலதிகமாக ஓதிக் கொள்ளலாம்.

## நடுஇருப்பில்

எல்லா அவயவங்களும் ஓய்வடைகின்ற வரை ஸுஜூதில் தாமதித்த பின், கைகளை உயர்த்தாது தக்பீர் சொல்லியவாறு நடு இருப்பில் உட்கார வேண்டும். கை விரல்கள் கிப்லாவை நோக்கியிருக்குமாறு முழங்கால்களுக்கு நேராக இரு கைகளையும் தொடைகள் மீது வைத்திருத்தல் வேண்டும். அசைவற்ற நிலையில் குறிப்பிட்ட நேரம் வரை இவ்வாறு அமர்ந்திருக்கும் பொழுது,

رَبِّ اغْفِرْ لِي وَارْحَمْنِي، وَاجْبُرْنِي وَارْزُقْنِي، وَاهْدِنِي، وَعَافِنِي،

(நாயனே, எனக்கு மன்னிப்பு வழங்கி அருள் புரிவாயாக. என் குறைகளை நிவர்த்திப்பாயாக. என்னை உயர்வுபடுத்தி பாக்கியங்களை அளிப்பாயாக. என்னை நேர்வழியில் செலுத்துவாயாக, எனக்குச் சுகமளிப்பாயாக) என ஓதிக் கொள்ள வேண்டும்.

## இரண்டாவது ஸுஜூதில்

நடு இருப்பிலிருந்து தக்பீர் சொல்லியவாறு இரண்டாம் ஸுஜூதுக்குச் செல்ல வேண்டும்.

குறிப்பிட்ட நேரம் அசைவற்ற நிலையில் தாமதித்திருந்து ஸஜ்தாவுடைய நிலைக்குரிய தஸ்பீஹையும் அதில் ஓதிக் கொள்ளல் வேண்டும். அங்கிருந்து

தக்பீரைக் கூறியவாறு தலையை உயர்த்தி இஸ்திராஹத்தின் இருப்பில் சற்று அமர்ந்து தக்பீரை நீட்டிக் கொண்டே இரண்டாவது ரக்அத்துக்காக எழுந்து நிற்க வேண்டும்.

இரண்டாம் ரக்அத்தில் மீண்டும் கையைக் கட்டிக் கொண்டு நிலையில் ஓதக்கூடிய ஓதல்களை ஓதி எஞ்சிய ரக்அத்துக்களைத் தொழுது கொள்ள வேண்டும்.

## குனூத்தில்

ஸுப்ஹுத் தொழுகையின் இரண்டாவது ரக்அத்தின் இஃதிதாலில் அதற்குரிய திக்ருகளை ஓதி முடித்த பின்னர், இரு உள்ளங்கைகளையும் திறந்த நிலையில் தோள் மட்டத்தினளவுக்கு உயர்த்தி, மேல் நோக்கி முகத்திற்கு முன்பாக வைத்து குனூத் ஓதிக் கொள்வது ஸுன்னத் ஆகும். குனூத்தை நீங்கள் ஏற்கனவே படித்திருப்பீர்கள்.

## அத்தஹிய்யாத்தில்

இரண்டு அல்லது இரண்டுக்கு மேற்பட்ட ரக்அத்துகளைக் கொண்ட தொழுகைகளின் இரண்டாம் ரக்அத்தின் இரண்டாம் ஸுஜுதுக்குப் பின்னரும் இரண்டுக்கு மேற்பட்ட ரக்அத்துகளைக் கொண்ட தொழுகைகளின் கடைசி ரக்அத்தின் இரண்டாம் ஸுஜுதுக்குப் பின்னரும் அத்தஹிய்யாத்துக்காக உட்கார்ந்து அதில் அத்தஹிய்யாத் ஓதிக் கொள்ளல் வேண்டும்.

இரண்டுக்கு மேற்பட்ட ரக்அத்துக்களைக் கொண்ட தொழுகைகளில் முதல் அத்தஹிய்யாத்துக்காக அமரும் போது வலக்காலின் விரல் நுனிகள் கிப்லாவை முன்னோக்கியவாறு இருக்கத்தக்கதாக அதன் பாதத்தை நிலைக்குத்தாகவும், இடக்கால் பாதத்தின் மீது அமரத்தக்கதாகவும் கால்களை மடித்து உட்கார வேண்டும். இது ‘இப்திறாஷ் இருப்பு’ என அழைக்கப்படுகின்றது.

கடைசி அத்தஹிய்யாத்துக்கு இருக்கும்போது, வலக்கால் மேலே குறிப்பிட்டவாறும், இடக்கால் பாதம் வலது கணுக்காலுக்குக் கீழாக வருமாறும் கால்களை மடித்து தரையில் உட்கார்ந்து கொள்ள வேண்டும். இது ‘தவர்ருக்’ இருப்பு என அழைக்கப்படுகிறது.

இவ்விரு இருப்புகளிலும் நடு இருப்பில் போன்று கையை வைத்துக் கொள்ள வேண்டும். வலது கையின் சுட்டுவிரலைச் சற்று உட்புறமாக வளைத்து அதன் நுனியைத் தாழ்த்தியும் விரலின் அடிப்பாகத்தைப் பெருவிரலின் நுனிப் பகுதியை அழுத்தியும் வைத்தல் வேண்டும். ஏனைய மூன்று விரல்களையும் முழுமையாக உட்புறம் மடித்து வலக்காலின் மீது வைத்துக் கொள்ளல் வேண்டும்.

அத்தஹிய்யாத்தில் இடம்பெற்றுள்ள ‘அஷ்ஹது அன்லா இலாஹ இல்லல்லாஹ்’ என்னும் வார்த்தையை ஓதும்போது வலக்கையின் வளைந்திருந்த சுட்டுவிரலை முழுமையாக நீட்டிக் கொள்ள வேண்டும்.

மூன்றாம் ரக்அத்திற்காக எழும்பும் வரை அல்லது இறுதி ரக்அத்தாயின் ஸலாம் கூறும் வரை நீட்டிய அந்த சுட்டு விரலைப் பார்த்தவாறு இருப்பதும், ஏனைய சந்தர்ப்பங்களில் ஸுஜூதின் தலத்தைப் பார்த்திருப்பதும் ஸுன்னத்தாகும்.

கடைசி அத்தஹிய்யாத் இருப்பைத் தவிர தொழுகையின் ஏனைய எல்லா இருப்புக்களும் ‘இப்திறாஷ்’ முறையில் அமைவது ஸுன்னத் ஆகும்.

முதல் அத்தஹிய்யாத் ஓதி முடித்து மூன்றாவது ரக்அத்துக்காக எழும்புவதாயின் இரு கைகளையும் முன் பக்கமாக நிலத்தில் வைத்து ஊன்றி எழும்ப வேண்டும். எழும்பிய பின் இரு கைகளையும், ஆரம்ப தக்பீருக்காக உயர்த்துவது போன்று இரு காதுகளுக்கும் நேராகத் உயர்த்திப் பின்னர் கட்டிக் கொள்ள வேண்டும்.

ஸலாம் கூறுவதற்கு முன்னர் அத்தஹிய்யாத்தில் தனக்குத் தேவையான துஆக்களை அறபி மொழியில் ஓதிக் கொள்ளலாம். எனினும் நபி (ஸல்) அவர்கள் ஓதி வந்த துஆக்களை ஓதிக் கொள்வதே நன்மை தரத்தக்கதும் பொருத்தமானதுமாகும்.

கடைசி அத்தஹிய்யாத் ஓதி முடிந்த பின்னர்.

اَلسَّلاَمُ عَلَيْكُمْ وَرَحْمَةُ اللهِ

எனக் கூறியவாறு முதலில் வலது பக்கத்தையும் தொடர்ந்து ஸலாம் கூறியவாறு இடது பக்கத்தையும் திரும்பிப் பார்க்க வேண்டும்.

**ஸலாம் கூறிய பின்**

இத்தோடு தொழுகை நிறைவு பெறுகிறது. ஸுப்ஹு, ம.்.ரிப் தொழுகைகள் முடிந்த பின் கலிமதுத் தவ்ஹீதை பத்து தடவை ஓத வேண்டும். இது தவிர ஏனைய எல்லா நேரத் தொழுகைகளிலும் ஸலாம் கூறியதை அடுத்து

أَسْتَغْفِرُ اللهِ

என்று மூன்று தடவை மௌனமாக ஓத வேண்டும். அதன் பின்

اَللّٰهُمَّ اَنْتَ السَّلَامُ وَمِنْكَ السَّلَامُ

تَبَارَكْتَ يَاذَا الْجَلَالِ وَالْاِكْرَامِ

போன்ற தஸ்பீஹ்களையும் துஆக்களையும் ஓதிக் கொள்ள வேண்டும்.

தொழுகையின் பின்னர் கேட்கப்படுகின்ற துஆக்களை அல்லாஹ் அங்கீகரிக்கிறான். ஆதலால் ஹம்து, ஸலவாத்துடன் துஆக்களை ஆரம்பித்து ஹம்து ஸலவாத்துடனேயே அவற்றை முடித்துக் கொள்ள வேண்டும்.

இம்முறைகளை அனுசரித்து எமது தொழுகைகளை ஒழுங்காக நிறைவேற்றுவோம்.

**ஜமாஅத் தொழுகை**

ஒரு முஸ்லிம் நிறைவேற்ற வேண்டிய பிரதான இபாதத் ஐவேளைத் தொழுகையாகும். பருவ வயதை அடைந்த ஒருவர் தனது கடைசி மூச்சுவரை அதனை நிறைவேற்றுவது பர்ள் ஐன் ஆகும். ஐங்காலத் தொழுகையை ஜமாஅத்துடன் தொழுவது பர்ளு கிபாயாவாகும். இதுபற்றி குர்ஆனும் ஸுன்னாவும் கூறியிருகின்றன.

1. "நீங்கள் தொழுகையை நிலைநாட்டி ஸகாத்தையும் கொடுத்து, குனிந்து ருகூஉ செய்பவர்களுடன் நீங்களும் ருகூஉ செய்யுங்கள்" (2 : 43)
2. "தனித்துத் தொழுவதை விட கூட்டாகத் தொழுவது இருபத்தேழு மடங்கு நன்மையளிக்கக் கூடியது" (புகாரி)

3. "மூன்று பேர் உள்ள ஓரிடத்தில் தொழுகையை ஜமாஅத்தாக நிறைவேற்றாவிட்டால் அவர்கள் மீது ஷைத்தானின் ஆதிக்கம் ஏற்பட்டே தீரும். எனவே ஜமாஅத்தைக் கைக்கொள்ளுங்கள். ஏனெனில் தனித்திருக்கும் ஆட்டைத்தான் ஓநாய் பிடிக்கும்". (அபூதாவுத்)

4. பள்ளி சென்று ஜமாஅத்துடன் தொழும் நோக்கில் வுழு செய்து வீட்டிலிருந்து வெளியேறி எடுத்து வைக்கும் ஒவ்வோர் எட்டுக்கும் ஒரு பாவம் மன்னிக்கப்படுகின்றது. ஒரு அந்தஸ்து உயர்த்தப்படுகின்றது. அத்துடன், அவர் பள்ளிக்குள் நுழைந்து தொழுது முடிந்து வெளிவரும்வரை மலக்குகள் அவருக்காக பிழை பொறுக்கத் தேடுகின்றார்கள்." (திர்மிதி)

5. "ஒருவர் தனித்து நின்று நிறைவேற்றும் தொழுகையை விட மற்றொருவருடன் சேர்ந்து நிறைவேற்றும் தொழுகை ஈமானை வளப்படுத்திக் கொள்ள காரணமாகின்றது. அதிகமானோருடன் தொழுகையை நிறைவேற்றுவது அல்லாஹ்விடத்தில் மிக விருப்பத்துக்குரியது". (அபூதாவூத்)

மேலுள்ள குர்ஆன் வசனங்களும், நபி மொழிகளும் ஜமாஅத் தொழுகையின் முக்கியத்துவத்தை உணர்த்துகின்றன.

ஜமாஅத் தொழுகையை முன்னின்று நடத்துபவர் "இமாம்" எனவும் அவரைத் பின்பற்றித் தொழுபவர் "மஃமூம்" எனவும் அழைக்கப்படுகின்றனர். ஜமாஅத் தொழுகையை நிறைவேற்றுவதற்கு குறைந்தது ஓர் இமாமும் ஒரு மஃமூமும் இருத்தல் வேண்டும்.

இமாம், தான் இமாமாகத் தொழுவதென்றும் மஃமூம்கள், தாம் மஃமூமாகத் தொழுவதென்றும் தொழுகையின் ஆரம்பத்தில் "நிய்யத்" செய்து கொள்ள வேண்டும்.

இமாம் கிப்லாவை நோக்கி எல்லோருக்கும் முன்னே நிற்பார். மஃமூம்கள் இமாமுக்குப் பின்னால் வரிசை வரிசையாக நிற்பர். இமாமின் பாதத்தை விட மஃமூமின் பாதம் முந்தாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். ஓர் இமாம், ஒரு மஃமூம் மட்டும் தொழுவதாயின் மஃமூம் இமாமின் வலப்பக்கமாக சற்றுப் பின்னால் நிற்க வேண்டும். ஜமாஅத் தொழுகையில் முதல் வரிசையில் இமாமுக்கு வலப்பக்கமாக நின்று தொழுவது அதிக நன்மையைத் தரும்.

இமாமை விட மஃமூம் எச்செயலிலும் முந்த முடியாது. அவரைப் பின் தொடர்ந்தே அனைத்தையும் செய்தல் வேண்டும். பிந்திவரும் ஒருவர் தொழுகையின் எந்த நிலையிலும் இமாமுடன் சேர்ந்து கொள்ளலாம். ஆனால் குறித்ததொரு ரக்கஅத்தில் இமாம் ருகூஉவிலிருந்து தலையை உயர்த்த முன்னர் இமாமுடன் ருகூஉவில் சேர்ந்து சிறிது நேரம் தரித்தால் மாத்திரமே குறித்த ரக்அத்தை

அவர் இமாமுடன் தொழுததாக கணிக்கப்படும். தொழுகையின் மீதியுள்ள ரக்அத்துக்களை இமாம் ஸலாம் கொடுத்த பின்னர் அவர் தனியாக எழுந்து தொழ வேண்டும்.

தொழுகை நடத்தும் இமாம் மார்க்க அறிஞராக, அல்லது குர்ஆனை அழகுற ஓதும் காரியாக அல்லது அதிக இறையச்சம் உள்ளவராக அல்லது வயதில் கூடியவராக இருத்தல் வேண்டும்.

## ஜும்ஆத் தொழுகை

"ஜும்ஆ" என்ற அரபுச் சொல், ஒன்று கூடுதல் என்ற பொருளைத்தரும். முஸ்லிம்கள் வாழ்கின்ற கிராமங்களிலும், நகரங்களிலும், ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் அவ்வூரில் உள்ள முஸ்லிம் ஆண்கள் அனைவரும் மஸ்ஜிதில் ஒன்று கூடி நடாத்தும் விசேட தொழுகை "ஸலாதுல் ஜும்ஆ" எனப்படுகின்றது. இக்கூட்டுத் தொழுகை வெள்ளிக்கிழமை ளுஹர் நேரத்தில் ஒருவர் குத்பா ஓத, பின் அவரும் குத்பாவைக் கேட்டுக் கொண்டிருந்த மக்களும் சேர்ந்து இரண்டு ரக்அத்துக்கள் ஜமாஅத்தாக தொழுவதாகும். ஜும்ஆ தொழுகை பற்றி அல்குர்ஆன் பின்வருமாறு குறிப்பிடுகின்றது.

"விசுவாசிகளே ! ஜும்ஆ நாளில் தொழுகைக்காக (அதான் சொல்லி) அழைக்கப்பட்டால் அல்லாஹ்வை தியானிப்பதற்கு (விரைந்து) செல்லுங்கள். (தொழில்) வியாபாரங்களை விட்டு விடுங்கள். நீங்கள் அறிவுடையோராயின் அது உங்களுக்குச் சிறந்ததாகும். (62 : 9)

ஜும்ஆ தினம் விசேடமான ஒரு தினமாகும். அதில் பல சிறப்புக்கள் காணப்படுகின்றன. அதிலே நிறைவேற்றப்பட வேண்டிய பல சிறப்பான அம்சங்களை நபி (ஸல்) அவர்கள் காட்டித் தந்துள்ளார்கள்.

``ஜும்ஆ" தொழுகைக்கே உரிய ஷர்த்துகள், பர்ளுகள் காணப்படுகின்றன. அவற்றை புகஹாக்கள் வகுத்துத் தந்துள்ளனர்.

### "ஜும்ஆ" நிறைவேற்றுவதற்குரிய நிபந்தனைகள் (ஷர்த்துக்கள்)

1. ஜும்ஆ தொழுகை ஜமாஅத்தாக இடம் பெறல் வேண்டும்.

2. ஜும்ஆ தினத்தில் ஊரிலுள்ள ஆண்களில் நாற்பது பேராவது ஒன்று கூடி குத்பாவின் ஆரம்பம் முதல் தொழுகை முடியும் வரை அதில் பங்கு கொள்ள வேண்டும்.

3. ஊரின் எல்லைக்குள் ஜும்ஆ நடைபெற வேண்டும்.

4. ஜும்ஆ குத்பாவும் தொழுகையும் " ளுஹர்" நேரத்தில் இடம் பெறுதல் வேண்டும்.

5. ஓர் ஊரில் ஒரு ஜும்ஆ மாத்திரம் நடைபெற வேண்டும். ஒரே இடத்தில் எல்லோரும் ஒன்றுசேர முடியாவிட்டால் தேவைக்கேற்ப அதிகரிக்கலாம்.

6. இரண்டு குத்பாக்களின் பின்னர் ஜும்ஆ தொழுகை நடை பெறல் வேண்டும்.

**குத்பாவின் பர்ளுகள் :-**

1. அல்லாஹ்வைப் புகழ்தல்.
2. நபி (ஸல்) அவர்கள் மீது ஸலவாத் சொல்லுதல்.
3. அல்லாஹ்வை அஞ்சி நடக்கும்படி உபதேசம் செய்தல்.
4. அல்குர்ஆன் ஆயத் ஒன்றை ஓதல்.
5. இரண்டாம் குத்பாவில் மு.்.மீன்களுக்காக துஆ இறைஞ்சுதல்.

" ஜும்ஆ" தொழுகை விதியாவதற்குரிய நிபந்தனைகளையும் இஸ்லாம் விதித்துள்ளது.

1. முஸ்லிமாயிருத்தல்.
2. சுதந்திரமானவராயிருத்தல்.
3. பருவ வயதை அடைந்தவராயிருத்தல்.
4. ஊரில் தங்கியுள்ளவராகவும் ஜும்ஆவிற்கு செல்வதற்கு சக்தியுடைய வராகவும் இருத்தல்.

மேற்சொன்ன நிபந்தனைகளைப் பேணி வெள்ளிக்கிழமையன்று ளுஹர் நேரத்தில் இரண்டு ரக்கஅத்துக்களை கூட்டாக நிறைவேற்ற வேண்டும். இது முஸ்லிமான ஒவ்வொருவரினதும் கடமையாகும்.

## ஜனாஸாத் தொழுகை

ஒரு முஸ்லிம் மரணித்து விட்டால் அவருக்கு நிறைவேற்ற வேண்டிய கடமைகள் நான்கு உள்ளன. அவை.

1. ஜனாஸாவைக் குளிப்பாட்டல்.
2. கபனிடல்.
3. தொழுவித்தல்.
4. நல்லடக்கம் செய்தல்.

இங்கு ஜனாஸாத் தொழுகை பற்றி நோக்குவோம்.

ஜனாஸாவுக்கு நிறைவேற்ற வேண்டிய கடமைகளுள் மூன்றாவது தொழுகையாகும். அது பர்ளு கிபாயாவாகும். இது ஏனைய தொழுகைகளிலிருந்து சற்று வித்தியாசமானதாகவே காணப்படுகின்றது. இத்தொழுகையில் ருகூஉகளோ ஸுஜுதுகளோ இல்லை. நின்ற நிலையில் நான்கு தக்பீர்கள் சொல்லி நிறைவேற்றப்படுகின்றது. அதற்குரிய பர்ளுகளை அனுசரித்தே அதனை நிறைவேற்ற வேண்டும்.

* **நிய்யத் வைத்தல்** : இந்த ஜனாஸாவுக்குரிய என் மீது பர்ளான நான்கு தக்பீர்களையும் அல்லாஹ்வுக்காக (ம.்.மூமாகத்) தொழுகிறேன்" என்று நிய்யத் வைக்க வேண்டும்.

* **நின்று தொழுதல் :** நியாயமான காரணங்களுக்காக மாத்திரம் இருந்து தொழ அனுமதிக்கப்படுகின்றது.

* நான்கு தக்பீர்கள் சொல்லுதல். முதல் தக்பீரில் நிய்யத்துடன் கையை உயர்த்திக் கட்டிக் கொள்ளல்.

* முதலாம் தக்பீருக்குப் பின், சூறா பாத்திஹா ஓதுதல்.

* இரண்டாம் தக்பீருக்குப் பின், நபி (ஸல்) அவர்கள் மீது ஸலவாத்துச் சொல்லுதல். அத்தஹிய்யாத்தில் வந்துள்ள ஸலவாத்துல் இப்றாஹிமியாவை ஓதுவதே சிறந்தது.

* மூன்றாம், தக்பீருக்குப் பின் மையித்துக்காக துஆக் கேட்டல்.

நபி (ஸல்) அவர்கள் ஓதிய பல பிரார்த்தனைகள் காணப்படுகின்றன. அவற்றை ஓதுவது ஸுன்னத்தாகும்.

**மூன்றாம் தக்பீருக்குப் பின் :-**

اَللّٰهُمَّ إِغْفِرْلَهُ وَارْحَمْهُ وَعَافِهِ وَاعْفُ عَنْهُ
وَأَكْرِمْ نُزُلَهُ وَوَسِّعْ مَدْخَلَهُ وَاغْسِلْهُ بِالْمَاءِ
وَالثَّلْجِ وَالْبَرَدِ وَنَقِّهِ مِنَ الْخَطَايَا كَمَا نَقَّيْتَ
الثَّوْبَ الأَبْيَضَ مِنَ الدَّنَسِ وَابْدِلْهُ دَارًا خَيْرًا
مِنْ دَارِهِ وَأَهْلاً خَيْرًا مِنْ أَهْلِهِ وَزَوْجًا
خَيْرًا مِنْ زَوْجِهِ وَادْخِلْهُ الْجَنَّةَ وَأَعِذْهُ
مِنْ عَذَابِ الْقَبْرِ وَعَذَابِ النَّارِ

நான்காம் தக்பீருக்குப் பின் ஸலாம் கொடுத்தல் அதற்கு முன்

اَللّٰهُمَّ لاَ تَحْرِمْنَا أَجْرَهُ وَلاَ تَفْتِنَّا بَعْدَهُ وَاغْفِرْلَنَا وَلَهُ

என்று ஓதிக் கொள்ளலாம்.

ஜனாஸாத் தொழுகையில் மையித் வைக்கப்பட்டுள்ள ஸன்தூக் கிடையாக வைக்கப்படும். இமாமாக நிற்பவர், ஆண் மையித்தாயின் தலைக்கு நேராகவும் பெண் மையித்தாயின் அதன் நடுப்பகுதிக்கு நேராகவும் நிற்பார்.

பல ஜனாஸாக்களை ஒரே நேரத்தில் தொழுவிப்பதாயின் மிஹ்ராபுக்கும் இமாமுக்கும் இடையில் ஜனாஸாக்களை ஒன்றன்பின் ஒன்றாக வைக்க வேண்டும். முதலில் ஆண் ஜனாஸாக்களையும் அடுத்து பெண் ஜனாஸாக்களையும் வைக்க வேண்டும்.

ஜனாஸாத் தொழுகையில் அதிகமானோர் கலந்து கொள்வது சிறப்பானதாகும். கலந்து கொள்ளும் மு..மீன்கள் மூன்று அணிகளாக நிற்பதை நபி (ஸல்) அவர்கள் தூண்டியுள்ளார்கள். குறைந்த எண்ணிக்கை கொண்ட மு..மீன்களாக இருந்தாலும் அவர்கள் மூன்று அணிகளாக நிற்பதே முஸ்தஹப் ஆகும். ஜனாஸா தொழுகையை ஆண்கள் நிறைவேற்ற வேண்டும்.

ஜனாஸாத் தொழுகைக்கு இமாமத் செய்யத் தகுதியானோரை சட்ட அறிஞர்கள் வரிசைப்படுத்தி குறிப்பிட்டுள்ளனர். எனினும் அவர்கள் தொழுகை தொடர்பான சட்டதிட்டங்களைத் தெரிந்தவராக இருக்க வேண்டும்.

1. ஜனாஸாவினால் வஸிய்யத் சொல்லப்பட்டவர்.
2. ஜனாஸாவின் தந்தை தந்தையின் தந்தை என்றவாறு மேலுயர்ந்து செல்வோர்.
3. ஜனாஸாவின் மகன், மகனின் மகன் என்றவாறு கீழிறங்கிச் செல்வோர்.
4. ஜனாஸாவின் சகோதரன்.
5. ஜனாஸாவின் உறவினர்கள்.

ஜனாஸாத் தொழுகையை நிறைவேற்றியதன் பின் ஜனாஸாவை நல்லடக்கம் செய்வது அதற்குரிய இறுதியான கடமையாகும்.

## பெருநாள் தொழுகை

ஸுன்னத்தான தொழுகைகளுள் ஈதுல் பித்ர், ஈதுல் அழ்ஹா ஆகிய இரு பெருநாள் தொழுகைகளும் சுன்னா முஅக்கதாவாகும். ரமழானை அடுத்து வருகின்ற ஷவ்வால், தலைப்பிறையில் ஈதுல் பித்ர் பெருநாளும். துல்ஹஜ் பிறை பத்தில் ஈதுல் அழ்ஹா பெருநாளும் கொண்டாடப்படுகின்றன.

இரு பெருநாள்களிலும் பின்பற்றப்பட வேண்டிய சில ஒழுங்குகள் உள்ளன.

* **குளித்தல், மணம் பூசுதல், அழகிய ஆடை அணிதல் :** "இரு பெருநாள் களிலும் உங்களிடம் உள்ள மிகச் சிறந்த ஆடைகளை அணியுமாறும் மிகச் சிறந்த நறுமணங்களை பூசிக் கொள்ளுமாறும், மிகச் சிறந்தவற்றை தியாகம் செய்யுமாறும் நபி (ஸல்) அவர்கள் எங்களுக்குக் கட்டளை யிட்டுள்ளார்கள்." என ஹஸன் (றழி) அவர்கள் அறிவிக்கின்றார்கள். (ஹாக்கிம்)

* **காலையில் சாப்பிடுதல்** : நோன்புப் பெருநாளில் தொழுகைக்குச் செல்லு முன் சாப்பிட்டுச் செல்வதும், ஹஜ்ஜுப் பெருநாளில் தொழுது விட்டு வந்து சாப்பிடுவதும் சுன்னத்தாகும்.

* **தொழுமிடத்துக்குச் செல்லல்** : பெருநாள் தொழுகையை மஸ்ஜிதில் நிறைவேற்றுவது நல்லது. திறந்த வெளியிலும் நிறைவேற்றலாம்.

* **தொழுகைக்கு ஒரு வழியால் சென்று மற்றொரு வழியால் திரும்பி வருதல் :** "முஹம்மது (ஸல்) அவர்கள் பெருநாள் தொழுகைக்கு ஒரு வழியால் சென்று மற்றொரு வழியால் திரும்பி வருவார்கள்." (முஸ்லிம்)

* **வாழ்த்துக்கூறல் :** ஒருவரை ஒருவர் சந்தித்தால் “தகப்பலல்லாஹு மின்னா வமின்க” என்று கூறி பெருநாள் தின வாழ்த்தை தெரிவிப்பது.

* **பெருநாள் தொழுகையை நிறைவேற்றும் முறை** :- ஈதுல் பித்ர் பெருநாளன்று காலையில் சூரியன் இரண்டு ஈட்டிகள் அளவு உயர்ந்ததும் பெருநாள் தொழுகைக்குரிய நேரம் ஆரம்பமாகின்றது. ஈதுல் அழ்ஹா பெருநாள் தொழுகையானது சூரியன் ஓர் ஈட்டி அளவு உயர்ந்ததும் (சுமார் 20 நிமிடங்கள் வரை) பிந்திக் கொள்வது நல்லது. ஒரு ஈட்டி என்பது சுமார் மூன்று மீட்டர் அளவைக்குறிக்கும்.

ஏனைய தொழுகையைப் போன்றே பெருநாள் தொழுகையிலும் ஷர்த், பர்ளு, ஸுன்னத்துக்களைப் பேண வேண்டும். பெருநாள் தொழுகைக்காக இரண்டு

ரக்அத்துக்களையும் கிப்லாவை முன்னோக்கி அல்லாஹ்வுக்காக (ம.்.மூமாக) தொழுகிறேன் என்று நிய்யத் வைத்துக் கொள்ள வேண்டும். முதலாம் ரக்அத்தில் தக்பீரதுல் இஹ்ராம் தவிர ஏழு தக்பீர்கள் கூற வேண்டும். ஒவ்வொரு தக்பீருக்குமிடையில்,

سُبْحَانَ اللهِ وَالْحَمْدُ للهِ وَلاَ الٰهَ إلاَّ اللهُ وَاللهُ أَكْبَرُ

என்று ஓதிக் கொள்ள வேண்டும்.

பின் ஸூரா பாத்திஹா ஓத வேண்டும். தொடர்ந்து மற்றொரு ஸூராவையும் ஓதி ருகூஉ, ஸுஜூது செய்து முதலாம் ரக்அத்தை நிறைவு செய்ய வேண்டும். இரண்டாம் ரக்அத்தில் ஆரம்ப தக்பீர் தவிர மேலும் ஐந்து தக்பீர்கள் சொல்ல வேண்டும். ஒவ்வொரு தக்பீருக்குமிடையில் முதலாம் ரக்அத்தைப் போன்றே ஸுப்ஹான கலிமாவை ஓதி அடுத்து பாத்திஹாவும், மற்றுமொரு ஸூராவும் ஓதி ஏனைய தொழுகைகளைப் போன்று ஸலாமுடன் நிறைவு செய்ய வேண்டும். தொழுது முடிந்ததும் இமாம் இரண்டு குத்பாக்கள் ஓதுவார். குத்பாக்களில் தக்பீர் அதிகமாக இடம் பெறுவது வரவேற்கத்தக்கது.

பெருநாள் தொழுகையின் சட்ட திட்டங்களை விளங்கி அதனை முறையாக நிறைவேற்றி பயன் பெறுவோம்.

## மழை தேடித் தொழும் தொழுகை

இது “ஸலாதுல் இஸ்திஸ்காஉ” எனப்படுகின்றது. "இஸ்திஸ்காஉ" என்பது "மழை வேண்டல்" என்ற பொருளைத் தருகின்றது. இது ஒரு சுன்னத்தான தொழுகையாகும். கடும் வரட்சி ஏற்பட்டு மக்கள் நீருக்காக கஷ்டப்படுகின்ற சந்தர்ப்பத்தில் அல்லாஹ்விடத்தில் அதிகமாக கெஞ்சி துஆ இரைஞ்ச வேண்டும். ஐவேளை தொழுகைகளுக்குப் பின்னாலும் ஜும்ஆக்களிலும் அருள்மழை வேண்டி பிரார்த்திக்க முடியும்.

மழை வேண்டி அல்லாஹ்விடம் பிரார்த்திக்கும் வழிமுறைகளுள் ஒன்று ஸலாத்துல் இஸ்திஸ்காஉ தொழுது பிரார்த்திப்பதாகும்.

தலைவர், இஸ்லாமிய கிலாபத்தின் அல்லது இமாம் நான்கு நாட்களுக்கு நோன்பு நோற்குமாறும், பாவமன்னிப்புக் கோருமாறும், தானதர்மம் செய்து நற்காரியங்களில் ஈடுபடுமாறும் கட்டளையிடுவார். நான்காவது நாள் குளித்து வுழு செய்து கொண்டு சிறுவர்கள், பெரியோர்கள், ஆண்கள், பெண்கள் யாவரும் தங்களது கால்நடைகள், மிருகங்கள் சகிதம் ஒரு திறந்த வெளியில் ஒன்று கூடுவார்கள். அங்கு இரண்டு

ரக்அத்துக்கள் தொழுவிப்பார்கள். அதனைத் தொடர்ந்து இமாம் இரண்டு குத்பாக்கள் ஓதுவார். அதில் நபி (ஸல்) அவர்கள் ஓதிய துஆக்களை ஓதுவது ஸுன்னத்தாகும். இரண்டாம் குத்பாவில் மூன்றிலொரு பகுதி முடித்த பின் இமாம், கிப்லாவை நோக்கிக் கையை உயர்த்தி அதிகமாக துஆக் கேட்பார். இமாம் கிப்லாவின் பக்கம் திரும்பும் போது இமாமும் மக்களும் தமது மேல் போர்வைகளை மேல் கீழாகவும் இடம் வலமாகவும் மாற்றிக் கொள்வார்கள்.

இத்தொழுகையில் நபி (ஸல்) அவர்கள் ஓதிய பல்வேறு துஆக்களை ஸுன்னா எமக்குக் கற்றுத் தருகின்றது.

வரட்சி தோன்றி நீருக்காக மக்கள் இடர்படும் வேளைகளில் கூட்டாக நின்று ஸலாதுல் இஸ்திஸ்காவை நிறைவேற்றி நபி (ஸல்) கற்றுத்தந்த துஆக்களை ஓதி நன்மையடைவோமாக!

## கிரகணத் தொழுகை

கிரகணத் தொழுகை ஸுன்னா முஅக்கதாவாகும். இத்தொழுகையை ஆண்கள், பெண்கள் அனைவரும் கூட்டாக நிறைவேற்றுவதே சிறந்ததாகும். இரண்டு ரக்அத்துக்கள் கொண்ட கிரகணத் தொழுகை ஏனைய தொழுகைகளை விட சற்று வித்தியாசமானது. ஒவ்வொரு ரக்அத்தும் இவ்விரண்டு ருகூஉகளைக் கொண்டது. முதலாம் ரக்அத்தில் ஸூரா பாத்திஹா ஓதியதன் பின் ஸூரா பகராவை ஓதலாம். பின்னர் ருகூஉக்குச் சென்று நீண்ட நேரம் தஸ்பீஹ் செய்ய வேண்டும். பின் எழுந்து இரு கைகளையும் மீண்டும் கட்டிக் கொண்டு ஸூரா பாத்திஹா ஓதி, பின்னர் ஸூரா ஆல இம்ரானை ஓதலாம். பின் ருகூஉ செய்து முந்திய ருகூஉவை விட சற்றுக் குறைவாக தஸ்பீஹ் செய்து இ∴திதாலுக்கு வர வேண்டும். வழக்கமான துஆவை ஓதிவிட்டு பின்னர் ஸுஜூதுக்கு சென்று முந்திய ருகூஉவின் அளவு தஸ்பீஹ் செய்ய வேண்டும். பின் நடுஇருப்பிற்கு வந்து வழக்கமான துஆவை ஓத வேண்டும்.

இரண்டாம் ஸுஜூதிலும் இரண்டாம் ருகூஉவின் அளவு தஸ்பீஹ் செய்ய வேண்டும். அதன் பின், அடுத்த ரக்அத்துக்கு எழுந்து அங்கே ஸூரா பாத்திஹாவை ஓத வேண்டும். பின்னர் முதல் நிலையில் ஸூரா நிஸாஉவையும், இரண்டாவது நிலையில் ஸூரா மாஇதாவையும் ஓதுவது சிறப்பானது. தொடர்ந்து முதலாவது ரகஅத்தைப் போன்று செயல்பட்டு அத்தஹிய்யாத்துக்குப்பின் ஸலாம் கூறி தொழுகையை நிறைவு செய்ய வேண்டும்.

கிரகணம் தோன்றியது முதல் அது நிற்கும் வரையுள்ள நேரமே இத்தொழுகைக்கான நேரமாகும். கிரகணத்தின் போது தஸ்பீஹ் செய்தல், துஆ இரைஞ்சுதல், இஸ்தி.ஃபார் செய்தல், ஸதகா கொடுத்தல் என்பன முஸ்தஹப் ஆகும்.

## ஏனைய ஸுன்னத்தான தொழுகைகள்

மேலே குறிப்பிட்டவை தவிர இன்னும் பல ஸுன்னத்தான தொழுகைகள் காணப்படுகின்றன. அவற்றுள் மிக முக்கியமான சிலவற்றை இங்கு நோக்குவோம். ஏனையவை பற்றி கற்றோரிடம் கேட்டறிந்து கொள்வோம்.

## தஹஜ்ஜுத் தொழுகை

நடுநிசியில் நித்திரை, விட்டெழுந்து நிறைவேற்றப்படும் தொழுகையே தஹஜ்ஜுத் ஆகும். நல்லடியார்களின் விஷேடமான ஒரு பண்பே இரவு நேரத்தில் ஸுன்னத்தான தொழுகைகளை நிறைவேற்றி வருவதாகும். "அவர்கள் (இரவில்) படுக்கையில் இருந்து தங்கள் விலாக்களை உயர்த்தி, (எழுந்து அப்புறப்பட்டு) தங்கள் இறைவனிடம் நம்பிக்கை வைத்தும் பயந்தும் (அவனைத் தொழுது) பிரார்த்தனை செய்வார்கள். நாம் அவர்களுக்கு கொடுத்தவற்றில் இருந்து அவர்கள் (தானமாக) செலவு செய்வார்கள்." (32 : 16)

"மனிதர்களே ஸலாத்தைப் பரப்புங்கள் ; விருந்தோம்புங்கள், மனிதர்கள் உறங்கும் வேளையில் எழுந்து தொழுங்கள். அப்போது தடைகள் எதுவுமின்றி சுவனம் நுழைவீர்கள்." (திர்மிதி)

மேலே எடுத்துக்காட்டிய இரண்டு மேற்கோள்களும் தஹஜ்ஜுத் தொழுகையின் சிறப்பை உணர்த்துகின்றன.

இஷாத் தொழுத பின் தூங்கி எழுந்து நிறைவேற்றும் தஹஜ்ஜுத் தொழுகைக்காக வேண்டி எழுந்ததும் பல்துலக்கி வுழு செய்து கொண்டு ஸுறா ஆலஇம்ரானின் இறுதிப் பத்து வசனங்களையும் ஓதுவது ஸுன்னத்தாகும். தஹஜ்ஜத் தொழுகை குறைந்தபட்சம் இரண்டு ரக்கஅத்துக்களைக் கொண்டிருக்கும்.

**லுஹாத் தொழுகை**

சூரியன் உதித்து சுமார் 20 நிமிடங்கள் சென்றது முதல் சூரியன் உச்சியை அடையும் வரையுள்ள நேரத்தில் நிறைவேற்றப்படும் தொழுகையே லுஹாத் தொழுகையாகும். இது பல்வேறு சிறப்புக்களைக் கொண்டது. அது பற்றி நபி (ஸல்) அவர்கள் சிலாகித்துக் கூறியிருக்கிறார்கள். “தினமும் உங்கள் உடம்பின் ஒவ்வோர் மூட்டுக்கும் நீங்கள் ஒவ்வொரு தர்மம் செய்ய வேண்டியுள்ளது. ஒவ்வொரு தஸ்பீஹும் தர்மமாகும். ஒவ்வொரு தஹ்மீதும் தர்மமாகும். ஒவ்வொரு தஹ்லீலும் தர்மமாகும். ஒவ்வொரு தக்பீரும் தர்மமாகும். நன்மையை ஏவுவதும் தர்மமாகும். தீமையைத் தடுப்பதும் தர்மமாகும். எனினும் இரண்டு ரக்கஅத் லுஹாவானது இவை அனைத்திற்கும் ஈடாகிவிடும்” (அஹ்மத்)

லுஹாத் தொழுகைக்கு குறைந்தது இரண்டு ரக்கஅத் கூடியது எட்டு ரக்கஅத், மத்திமமாக நான்கு ரக்கஅத் தொழமுடியும்.

# ஸகாத்

## ஸகாத்தின் முக்கியத்துவம்

“ஸகாத்” என்ற அரபுச் சொல்லுக்கு தூய்மை, அபிவிருத்தி, வளர்ச்சி என்ற மொழிக் கருத்துக்கள் உள்ளன. ஷரீஆ கண்ணோட்டத்தில் ஸகாத் எனும் சொல் பின்வரும் கருத்தைத் தரும். " ஒரு முஸ்லிம், தனது செல்வத்திலிருந்து அவற்றுக்குரிய நிஸாபையும், காலத்தையும் அடைந்ததன் பின்னர், குறிக்கப்பட்ட வீதத்தில் அளவிட்டெடுத்து குர்ஆன் கூறும் எட்டுக்கூட்டத்தினருக்கு வழங்குவதை குறிக்கும். அல்குர்ஆன் ; ஸகாத் என்பதைக் குறிக்க "ஸதகா" "அல் இன்பாக்" எனும் சொற் பிரயோகங்களைக் கையாண்டுள்ளது. ஐம்பெரும் கடமைகளில் ஒன்றான ஸகாத், பல்வேறு வழிகளில் முக்கியம் பெறுகின்றது.

1. அடிப்படை வணக்கங்களில் ஒன்றாக இருப்பது அதன் முக்கியத்துவங்களில் ஒன்றாகும்.

2. ஸகாத் பற்றி அல்குர்ஆனும், ஸுன்னாவும் முன்வைக்கின்ற போதனைகள் அதன் முக்கியத்துவத்தைப் புரிந்து கொள்ள உதவுகின்றன.

"(நபியே) அவர்களது பொருள்களிலிருந்து (கடமையான) ஸகாத்தை எடுப்பதன் மூலம் (உள்ளும் புறமும்) அவர்களை பரிசுத்தமாக்கி வைத்து, அதைக் கொண்டு அவர்களைத் தூய்மைப்படுத்தி ஆசீர்வதிப்பீராக. உம்முடைய ஆசிர்வாதம் நிச்சயமாக அவர்களுக்கு ஆறுதலளிக்கும்.அல்லாஹ் செவியுறுவோனும் மிக்க அறிவுடையோனுமாக இருக்கின்றான். " (9 : 103)

"தங்கத்தையும் வெள்ளியையும் சேமித்து வைத்துக் கொண்டு அல்லாஹ்வின் பாதையில் செலவு செய்யாதவர்களுக்கு கடுமையான வேதனையுண்டு." என நபியே நற்செய்தி கூறுவீராக" (9:34)

"ஸகாத்தை கொடுக்காது வைத்துக் கொள்ளும் சமூகத்தினை அல்லாஹ் பஞ்சத்தைக் கொண்டு சோதிப்பான்." (தபராணி)

"செல்வத்திலிருந்து வேறாக்கப்படாத ஸகாத், குறித்த செல்வத்தை அழித்து விடும். (பைஹக்கி)

3. அல்குர்ஆன் பல்வேறு இடங்களில் தொழுகையுடன் இணைத்து ஸகாத்தையும் குறிப்பிட்டுள்ளமை தொழுகையைப் போன்றே ஸகாத்தும் முக்கியத்துவ முடையது என்பதைப் புலப்படுத்துகின்றது. உதாரணமாக : "இன்னும் தொழுகையை முறையாகக் கடைப் பிடித்தும், ஸகாத் கொடுத்தும் வாருங்கள். ஏனெனில் உங்களுக்காக எந்த நன்மையை முன்னதாகவே அனுப்பி வைக்கிறீர்களோ அதனை அல்லாஹ்விடம் பெற்றுக் கொள்வீர்கள்." (2:110)

4. " ஸகாத்’ முன்னைய சமுதாயத்தினருக்கும் விதியாக்கப்பட்டிருந்தது.

5. ஸகாத் கொடுக்காதவன் பெரும் பாவி, அதனைக் கொடுக்க மறுப்பவன் இஸ்லாத்தின் கண்ணோட்டத்தில் முர்தத்தாக உள்ளான்.

6. ஸகாத் கொடுக்க மறுப்பவர்களுக்கு எதிராக யுத்தம் செய்வதை இஸ்லாம் கடமையாக்கியுள்ளது.

7. ஸஹாபாக்கள், கலீபாக்கள், இமாம்கள் முதலானோர் ஸகாத்தை நடைமுறைப்படுத்துவதில் மிகுந்த ஈடுபாடு காட்டியுள்ளார்கள்.

8. ஸகாத் அல்லாஹ்வின் அருளைப் பெற்றுக் கொடுக்கும் கடமை என்ற வகையிலும் முக்கியத்துவம் பெறுகின்றது.

"என்னுடைய அருளானது எல்லாப் பொருள்களிலும் (விரிந்து, பரந்து) சூழ்ந்து நிற்கின்றது, எனினும் அதனைப் பயபக்தியுடன் (பேணி) நம்முடைய வசனங்களை நம்புகின்றவர்களுக்கும் நான் விரிவாக அருள் புரிவேன்" (7:156)

9. இஸ்லாமியப் பொருளாதாரக் கொள்கையின் அடிப்படைகளுள் ஒன்றாக ஸகாத் உள்ளது.

10. தனிமனித, சமூக பயன்பாடுகளைப் பெற்றுக் கொடுக்கும் இறை வணக்கம் என்ற வகையிலும் ஸகாத் முக்கியத்துவம் பெறுகின்றது.

### ஸகாத்தின் விதிமுறைகள்

ஸகாத் அதன் விதிமுறைகளை அனுசரித்தே நிறைவேற்றப்பட வேண்டும். இவ்விதி முறைகளை முஸ்லிம்கள் அறிந்திருப்பது அவசியமானதாகும். அப்போது தான் அல்லாஹ் விரும்பும் முறையில் அதனை நடை முறைப்படுத்தலாம்.

### ஸகாத் விதியாவதற்கான நிபந்தனைகள்

1. முஸ்லிமாக இருத்தல்
2. சுதந்திரமானவனாக இருத்தல்.
3. தனக்கு உரிமையான பொருளாக இருத்தல்.
4. பொருள் நிஸாபை அடைந்திருத்தல்.
5. பொருள் குறித்த கால அளவை அடைந்திருத்தல்.
6. பொருள் /சொத்து வளர்ச்சியடையக் கூடியதாக இருத்தல்.
7. அடிப்படைத் தேவைக்கு மேலதிகமாக இருத்தல்.

நிஸாப் என்பது, ஒரு பொருளுக்கு ஸகாத்தை விதியாக்கும் குறைந்த பட்ச அளவைக் குறிக்கும். இது பொருளுக்குப் பொருள் வித்தியாசப்படும். காலத்தை அடைதல் என்பது குறித்த பொருள் அல்லது சொத்து எவ்வளவு காலம் ஒருவனிடம் இருந்தால் ஸகாத் வாஜிபாகும் என்பதையே குறிக்கின்றது. சில பொருள்களுக்கு வருடம் பூர்த்தியாக வேண்டும். வருடம் என்பது சந்திர வருடத்தையே குறிக்கும். விவசாய பொருள்களுக்கு அறுவடையின் போதும், புதையலுக்கு அது கிடைத்தவுடனும் ஸகாத் வழங்கப்பட வேண்டும்.

ஸகாத்தை நிறைவேற்றுவதற்கு இரண்டு பர்ளுகள் உண்டு. அவை **நிய்யத்து வைத்தல். தகுதியுடையோருக்கு வழங்கல்** என்பனவாகும்.

### ஸகாத் விதியாகும் பொருள்கள்

அல்குர்ஆனும் சுன்னாவும் எவ்வகையான பொருட்களில் ஸகாத் பெறப்பட வேண்டுமென வரையறுத்துக் கூறாமல் "செல்வம்" என்ற சொல்லைப் பயன்படுத்தியிருக்கின்றது.

ஸகாத் மூலம் எதிர்பார்க்கப்படும் பயன்களில் ஸகாத் வழங்கப்படும் செல்வங்களும், அவற்றின் உரிமையாளர்களான செல்வந்தர்களும் தூய்மைப்பட வேண்டும் என்பது அதன் பிரதான நோக்கமாகும். காலத்துக்காலம் செல்வங்களின் பெறுமதியும், இயல்பும், அவற்றின் பயன்பாட்டு முறையும், விருத்தியுறும் போக்கும் வித்தியாசமாக அமையலாம். அவற்றுக்கேற்ப ஸகாத் விதியாகும் பொருட்களும் அவற்றிலிருந்து ஸகாத் பெறப்படும் ஒழுங்குகளும் ஸகாத்தின் அளவுகளும் வித்தியாசப்படுவதற்கான வாய்ப்புக்கள் உண்டு.

## ஸகாத் விதியாகும் பொருட்கள் பற்றிய அட்டவணை

## ஒரு வருடம் பூர்த்தியாக வேண்டுமென்ற நிபந்தனைக்குட்பட்ட பொருட்கள்

| பொருள் | நிஸாப் (இருக்க வேண்டிய ஆகக் குறைந்த அளவு) | கொடுக்க வேண்டிய அளவு |
|---|---|---|
| பணம் | 85 கிராம் தங்கத்தின் பணப் பெறுமானம் (10 ½ பவுன்) | 2½ % |
| தங்கம், தங்க நகைகள், தங்கப் பாத்திரங்கள் | 85 கிராம் தங்கத்தின் பணப் பெறுமானம் (10 ½ பவுன்) | 2½ % |
| வெள்ளி, வெள்ளி நகைகள், வெள்ளிப் பாத்திரங்கள் | 595 கிராம் வெள்ளி (56½ தோலா) இதன் பணப் பெறுமானம். | 2½ % |
| வியாபாரப் பொருட்கள் | 85 கிராம் தங்கத்தின் (10 ½ பவுன்) பணப்பெறுமானம். | 2½ % |

**ஒரு வருடம் பூர்த்தியாக வேண்டும் என்ற நிபந்தனைக்குட்படாத பொருட்கள்**

| பொருள் | நிஸாப் (இருக்க வேண்டிய ஆகக் குறைந்த அளவு) | கொடுக்க வேண்டிய அளவு |
|---|---|---|
| தானியங்கள் (அரிசி, கோதுமை, போன்றன) | 653 கிலோ | 5 % / 10 % |
| புதையல் | நிஸாப் கிடையாது | 20 % |

ஆடு, மாடு ஆகியன, மந்தை வளர்ப்பு என்ற சாதாரண நிலையில் காணப்படுமாயின் அவற்றுக்குரிய ஸகாத் வழங்கும் ஒழுங்கு.

| பொருள் | நிஸாப் (இருக்க வேண்டிய ஆகக் குறைந்த அளவு) | கொடுக்க வேண்டிய அளவு |
|---|---|---|
| மாடு | 30 மாடுகள் | ஒவ்வொரு 30க்கும் ஒரு வயதுக்கன்று ஒன்று. ஒவ்வொரு 40க்கும் இரு வயதுக்கன்று ஒன்று என்ற வகையில் அதிகரித்துச் செல்லும் தொகைக்கேற்ப கணக்குப் பார்த்து ஸகாத் வழங்க வேண்டும். |
| ஆடு | 40 ஆடுகள் | 40–120 ஆடுகளுக்கு ஓர் ஆடு. 121–200 ஆடுகளுக்கு இரண்டு ஆடுகள். 201–300 ஆடுகளுக்கு மூன்று ஆடுகள். இதற்கு மேலாக இருக்கும் ஒவ்வொரு நூறு ஆடுகளுக்கும் ஒவ்வொரு ஆட்டை ஸகாத் வழங்க வேண்டும். |

## ஸகாத்தின் பர்ளுகள்

1. **நிய்யத்து வைத்தல்:-** ஒரு முஸ்லிம் நிறைவேற்றுகின்ற அனைத்துச் செயற்பாடுகளுக்கும் நிய்யத்து மிகப் பிரதானமானதாகும். அதிலும் குறிப்பாக ஸகாத் அடிப்படை இபாதத்தாக இருப்பதனால் அதனைக் கொடுப்பவர் கட்டாயமாக நிய்யத்து வைக்க வேண்டும்.

2. **தகுதியுடையோருக்கு வழங்குதல்** :- இதனை குர்ஆனும், ஸுன்னாவும் விபரமாக விளக்கியுள்ளன.

## ஸகாத் பெறத் தகுதியானவர்கள்

ஸகாத் பெறத் தகுதியானவர்களை அல்குர்ஆன் மிகத் தெளிவான முறையில் சுட்டிக் காட்டுகின்றது. “(ஸகாத் என்னும்) தர்மங்கள் பக்கீர்களுக்கும், மிஸ்கீன்களுக்கும் அதனை சேகரித்து விநியோகிக்கின்ற பணியாளர்களுக்கும்,

இஸ்லாத்தின்பால் இணக்கமானோருக்கும் அடிமைகளை விடுதலை செய்வதற்கும், கடனில் மூழ்கியிருப்போருக்கும் அல்லாஹ்வுடைய பாதையில் போர்புரிபவர் களுக்கும், வழிப்போக்கர்களுக்கும் (உரித்தானதாக) அல்லாஹ் ஏற்படுத்தியதாகும். அல்லாஹ் (யாவற்றையும்) மிக்க அறிந்தோனும் ஞானமுடையோனுமாக இருக்கிறான்". (9 : 60)

(1) **பக்கீர் :-** இவர் தனக்கும் தனது பராமரிப்பில் உள்ளவர்களுக்குமான அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்வதற்கு **எவ்வித** வருமானமும் இல்லாதவர்.

(2) **மிஸ்கீன் :-** தனக்கும் தனது பராமரிப்பில் உள்ளவர்களுக்கும் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ளும் அளவுக்குப் **போதுமான** வருமானம் இல்லாதவர்.

(3) **ஆமில்கள் :-** ஸகாத்தை திரட்டுதல், களஞ்சியப்படுத்தல், பதிவு செய்தல், கணக்கிடுதல், பாதுகாத்தல், விநியோகித்தல் போன்ற பணிகளில் ஈடுபடுவோர்களுக்கு அவர்களது தகைமைகள், திறமைகள், பொறுப்புக் களுக்கு ஏற்ப ஸகாத்திலிருந்து வழங்கப்படும். அத்தொகை மொத்த ஸகாத்திலும் எட்டில் ஒரு பங்கை விட மேலதிகமாக அமைதல் கூடாது.

(4) **முஅல்லபதுல் குலூப் :-** இஸ்லாத்தின் பக்கம் இணக்கப்படுவோரை இது குறிக்கின்றது. இவர்களுள் புதிதாக இஸ்லாத்தை தழுவியவர்கள், அடங்குவர்.

(5) **பிர் ரிகாப் /முகாதப் :-** அடிமைகளை விடுதலை செய்வதற்காக ஸகாத்திலிருந்து வழங்கப்படும் பங்கை இது குறிக்கின்றது. இதனை உரிமைச் சீட்டு எழுதப்படாத அடிமைகளையும், அவர்களது எஜமான்களிட மிருந்து விலைக்கு வாங்கி விடுதலை செய்ய பயன்படுத்தலாம். நடை முறையில் அடிமைகள் இல்லாததால் எந்த நியாயமுமின்றி காபிர்களிடத்தில் சிறைப்பட்டிருப்போரை விடுதலை செய்ய இப்பங்கைப் பயன்படுத்த முடியுமென நவீன இஸ்லாமிய அறிஞர்கள் குறிப்பிடுகின்றார்கள்.

(6) **அல் - காரிமூன் :** தமக்காக அல்லது பிறருக்காக கடன்பட்டு அதனைச் செலுத்த முடியாதோர்.

(7) **பீஸபீலில்லாஹ் :** அல்லாஹ்வின் திருப்தியை நாடி மேற் கொள்ளப்படுகின்ற இஸ்லாமிய போராட்டங்களுக்காக ஸகாத்திலிருந்து வழங்கப்படு கின்ற பங்கை இது குறிக்கின்றது.

(8) **இப்னு ஸபீல் :-** ஆகுமான ஒரு பிரயாணத்தில் ஈடுபட்டு அப்பிரயாணத்தை முடித்துக் கொள்ள அல்லது பிரயாணத்திலிருந்து மீண்டுவர வசதியற்றிருப்ப வர்களை இது குறிக்கின்றது. இவர்கள் செல்வந்தர்களாக இருந்தாலும், சொந்த தேவைக்காக பிரயாணம் செய்தவர்களாக இருந்தாலும் சரியே. அது பாவமான காரியத்திற்கான பிரயாணமாக இல்லாதிருத்தல் வேண்டும்.

### ஸகாத் பெறத் தகுதியற்றவர்கள்

1. **செல்வந்தர்கள் :-** இவர்கள் தமக்கும் தமது பராமரிப்பில் உள்ளவர் களுக்குமான அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ளும் அளவுக்கு போதிய வருமானத்தைப் பெற்றவர்கள்.

2. **தொழில் செய்ய சக்தியுள்ளவர்கள் :-** தமது தகுதிக்கும், அந்தஸ்திற்கும் பொறுப்பான, ஷரீஅத் அனுமதித்த தொழில் வாய்ப்புக்களைப் பெற்று தமது சக்திக்கு மேல் சிரமப்படாது அதனை மேற்கொள்ள முடியுமானவர்கள் இதில் அடங்குவார்கள். அத்தொழில் அவர்களதும், அவர்களது பொறுப்பிலுள்ளவர்களினதும் தேவைகளை நிறைவேற்றிக் கொள்ள முடியுமான வருமானத்தை ஈட்டித்தரவேண்டும்.

3. **இஸ்லாத்தின் எதிரிகள் :-** நாஸ்திகர், மதம் மாறியோர், இஸ்லாத்தின் எதிரிகளாக இருக்கும் காபிர்கள் முதலானோர் இதில் அடங்குவர்.

4. **ஸகாத் கொடுப்பவரின் பெற்றோர், மனைவி, பிள்ளைகள் :-** மகனின் சொத்து பெற்றோரினதும் சொத்தாகக் கொள்ளப்படுகின்றன. அவ்வாறே தந்தையின் ஓர் அங்கமாகவே பிள்ளைகள் இருக்கின்றார்கள். மனைவி கணவனின் ஒரு பகுதியாகவே கருதப்படுகின்றாள்.

5. **நபி(ஸல்) அவர்களின் குடும்பத்தினர் :-** "முஹம்மத் நபி (ஸல்) அவர்களது குடும்பங்களுக்கு ஸக்காத்தில் பங்கில்லை" (அஹ்மத்)

### ஸகாத்தின் மூலம் கிடைக்கக் கூடிய பயன்கள்

ஸகாத் பல்வேறு நோக்கங்களை அடிப்படையாக வைத்து விதியாக்கப்பட்டுள்ள ஓர் இபாதத்தாகும். இவ்விபாதத்தினூடாக அடைய முடியுமான பயன்பாடுகளை மூன்று தலைப்புக்களின் கீழ் உள்ளடக்கலாம்.

**ஸகாத் வழங்குபவர்களுக்கு கிடைக்கக்கூடிய பயன்களாவன:**

(1) ஸகாத் வழங்குபவர் உள்ளமும் செல்வமும் தூய்மையடைந்த வராகிறார்.

(2) அல்லாஹ்வின் அருளுக்கும், அன்புக்கும் உரித்தானவராகின்றார்.

(3) சுயநலம் நீங்கி பொது நலம் பேணும் தன்மையைப் பெறுகின்றார்.

(4) தாராளத்தன்மையோடு நடந்து கொள்ளும் பண்பைப் பெறுகின்றார்.

(5) உலக ஆசை, சொத்தாசை போன்ற பேராசைகளை விட்டும் நீங்கி விடுகிறார்.

(6) ஏழைகளோடு கருணையோடு நடந்து கொள்வார்.

(7) நன்றியுணர்வோடு நடந்து கொள்வார்.

(8) அல்லாஹ்வின் குணத்தை அணிகலனாகப் பெறுகிறார்.

(9) செல்வம் விருத்தியடையும் நிலையை அடைகிறார்.

(10) மறுமையில் மகத்தான கூலியைப் பெறுவார்.

**ஸகாத் பெறுபவர்களுக்குக் கிடைக்கக்கூடிய பயன்களாவன:**

1. வறுமை நீங்கக் கூடிய வாய்ப்பு கிடைக்கும்.
2. வறுமையின் கொடுமையிலிருந்து பாதுகாப்புப் பெறுவான்.
3. வாழ்க்கைத் தரம் உயரும்.
4. பொருளாதார மேம்பாடு ஏற்படும்.
5. மோசமான பண்புகள், செயற்பாடுகள் நீங்கும்.
6. பிறரிடம் தேவையற்றிருக்கச் செய்யும்.
7. உளத்திருப்தியும், மனச்சாந்தியும் கிடைக்கும்.
8. வஞ்சகம், பொறாமை, அவதூறு முதலான உள நோய்களிலிருந்து பாதுகாப்புக் கிடைக்கும்.
9. ஆரோக்கியமான மனிதர்களை உருவாக்கும்.

**ஸகாத் மூலம் சமூகத்திற்குக் கிடைக்கும் பயன்களாவன :**

1. தனி மனித அபிவிருத்தி ஏற்பட்டு சமூகத்தின் பொருளாதாரம் அபிவிருத்தி அடையும்.
2. ஏழை செல்வந்தர்களுக்கிடையிலான பரஸ்பர தொடர்பும், ஒற்றுமையும், பிணைப்பும் ஏற்பட்டு சமூகம் வலிமை பெறும்.
3. சகோதரத்துவம், ஒற்றுமை உறுதி பெறும்.
4. போட்டி பொறாமை அகலும்.
5. சமூகத்தின் பெரும்பாலான குறைபாடுகள் நிவர்த்திக்கப்படும்.
6. சமூகத்தின் அனைத்து துறைகளும் அபிவிருத்தி அடையும்.
7. இஸ்லாமிய அகீதா பாதுகாக்கப்படும்.
8. பாதுகாப்பான சமூக சூழல் ஏற்படும்.
9. நற்பண்புகள் நிறைந்த சமூகம் உருவாகும்.
10. பொருளாதார ஏற்றத்தாழ்வு குறையும்.

## ஸகாத்தை கூட்டாக திரட்டி விநியோகிப்பதன் முக்கியத்துவமும் பயன்பாடும்

ஸகாத், தனி மனிதர்கள் மீது அல்லாஹ்வினால் விதியாக்கப்பட்ட சமூக ரீதியான ஒரு கடமையாகும். அது சமூகத்தின் பொருளாதார மேம்பாட்டுக்கு அடிப்படையாக அமைய வேண்டும் என்பது இஸ்லாத்தின் எதிர்பார்ப்பாகும். சமூக வாழ்வில், பொருளாதார வளர்ச்சிக்கும், அதனை மேலோங்கச் செய்வதற்குமான பணி எதுவாயினும் கூட்டமைப்பின்றி அவை செவ்வனே இடம்பெற முடியாது.

ஸகாத் பொருட்களைச் சேகரிக்கவும் அவற்றைப் பாதுகாக்கவும் அவற்றை விநியோகிப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்யவும் அவை மக்களுக்குப் பிரயோசன மாக அமையவும் வழிகாட்டுவதற்கு கூட்டமைப்பு இன்றியமையாதது. முஸ்லிம் சமூகம் கூட்டாக இக்கடமையை நிறை வேற்றுகின்ற போதுதான், இதன்மூலம் எதிர்பார்க்கின்ற பலாபலன்களையும் நன்மைகளையும் உச்சக் கட்டத்தில் பெற்றுக் கொள்ள முடியும்.

ஸகாத் நிறுவனமயப்படுத்தி கூட்டாகவே நிறைவேற்றப்பட வேண்டும் என்பதைப் அல்குர்ஆன் வசனங்கள் எடுத்துக்காட்டுகின்றன.

"(நபியே) அவர்களது பொருட்களிலிருந்து (கடமையான) ஸகாத்தை எடுப்பீராக" (9 : 103)

"நாம் அவர்களுக்குப் பூமியில் அதிகாரத்தைக் கொடுத்தால் அவர்கள் தொழுகையை நிலைநிறுத்தி ஸகாத்தை கொடுப்பார்கள்" (22 : 41)

அத்தோடு ஸகாத் சேகரிப்பு, விநியோகப் பணிகளில் ஈடுபடும் ஊழியர்களை குர்ஆன் "ஆமிலூன்" எனக் குறிப்பிடுவதும் அவர்களுக்கு ஸகாத்தில் பங்குண்டு எனக்கூறப்படுவதும், ஸகாத் கூட்டாக நிறைவேற்றப்பட வேண்டும் என்பதை வலியுறுத்துகின்றன. நபி (ஸல்) அவர்களும் குலபாஉர் ராஷிதீன்களும் ஸகாத்தை ஒழுங்காகத் திரட்டி விநியோகித்த வரலாறு அது கூட்டாக நிறைவேற்றப்பட வேண்டும் என்பதை உறுதிப்படுத்துகின்றது. எனினும் தனியாக வழங்குபவரின் ஸகாத் கடமை நிறைவேறும்.

## ஸகாத்தை கூட்டாக நிறைவேற்றுவதன் அவசியமும் அதனால் ஏற்படக் கூடிய நன்மைகளும்

(1) செல்வத்தின் மீதான மனிதனின் இயல்பான ஆசை தம்மீது கடமையான ஸகாத்தை முறையாக நிறைவேற்றுவதற்கு தடையாக அமையலாம். கூட்டாக நிறைவேற்றுவதன் மூலம் இதனைத் தவிர்க்க முடியும். இதனால் வறிய மக்கள் பாதிப்படைவதையும் தவிர்க்கலாம்.

(2) தனிநபர்கள், ஸகாத் பெறுவதற்கு தகுதியான மக்களை இனங் கண்டு உரிய முறையில் வழங்குவார்கள் என எதிர்பார்க்க முடியாது. கூட்டாக நிறைவேற்றும் போது அதனை தகுதியானவர்களுக்கு வழங்கி உரிய முறையில் நிறைவேற்ற முடியும்.

(3) சமூக பொருளாதார வளர்ச்சிக்கான பணிகள் கூட்டமைப்பின்றி ஒழுங்காக நடைபெறுவது சாத்தியமாக அமையாது.

(4) ஸகாத் பரந்த நோக்கத்தையும், உயரிய இலட்சியங்களையும் கொண்டுள்ள தால் அவற்றை அடைந்து கொள்ள கூட்டமைப்பும் திட்டமிடலும் அவசியமாகும்.

(5) ஸகாத் சேகரித்தல், களஞ்சியப்படுத்தல், பாதுகாத்தல், விநியோகித்தல் முதலிய பணிகளுக்கு கூட்டமைப்பே பொருத்தமானதாகும்.

(6) அல்குர்ஆன் பல இடங்களில் தொழுகையுடன் சேர்த்து ஸகாத்தை குறிப்பிட்டுள்ளமை தொழுகையைப் போன்று அதுவும் கூட்டாக நிறைவேற்றப்படுவதே சிறப்பானது என்பதை உணர்த்துகிறது.

(7) ஸகாத் தனியாக வழங்கப்படும் போது ஸகாத் பெறுபவர்கள் செல்வந்தர் களின் கெடுபிடிக்கு உட்பட வேண்டிய நிலை ஏற்படலாம்.

(8) எந்தப் பணியும் தனி மனிதனால் நிறைவேற்றப்படும் போது கிடைக்கின்ற சமூகப் பயன்பாடுகள், கூட்டாக நிறைவேற்றுவதை விட குறைவாகவே அமையும்.

(9) இஸ்லாம் மார்க்கமாகவும், சமூக அமைப்பாகவும் இருப்பதால் அதன் நிதி நிர்வாக ஒழுங்கிற்கு ஸகாத் கூட்டாக வழங்கப்படுவது உறுதுணையாக அமையும்.

(10) தனி மனிதர்கள் ஸகாத்தை வழங்கும்போது ஒழுங்கீனங்கள் ஏற்பட்டு, சிலருக்கு மேலதிகமாகவும் வேறு சிலருக்கு கிடைக்காமலும் போகக்கூடிய வாய்ப்புக்கள் ஏற்பட இடமுண்டு. கூட்டாக நிறைவேற்றுவதினூடாக இதனைத் தவிர்க்கலாம்.

(11) ஸகாத்தில் உடனடியாகத் தீர்க்கப்பட வேண்டிய பிரச்சினைகள் இனங்காணப்பட்டு அவற்றைத் தீர்த்து வைப்பதற்கு கூட்டாக வழங்குவது உதவியாக அமையும்.

(12) ஸகாத் சேகரித்தல், விநியோகித்தல் நடவடிக்கைகளை மிகச் சரியான முறையில் திட்டமிட்டு செயற்படுத்த ஸகாத்தை கூட்டாக நிறைவேற்றுவது உதவியாக அமையும்.

## ஸகாதுல் பித்ர்

ஸகாதுல் பித்ர், முஸ்லிம்கள் மீது விதியாக்கப்பட்டுள்ள ஒரு கடமையாகும். இது உடலுக்குரிய ஸகாத்தாகவும் குறிப்பிடப்படுகின்றது. ரமழான் மாதம் முடிவுற்று ஷவ்வால் மாதத்திற்கான தலைப்பிறை தோன்றும் போது இந்த ஸகாத் கடமையாகின்றது. எனவே றமழான் மாதம் கடைசி நாளன்று சூரியன் மறையும்போது உயிருடன் இருக்கின்ற, பெருநாளன்று உணவு, உடைச்செலவு போக மேலதிகமாக வசதியுள்ள முஸ்லிம்கள் மீது இது கடமையாகும். அதே போல் ஷவ்வால் பிறை தோன்றுவதற்கும் ஈதுல் பித்ர் தொழுகை முடிவடைவதற்கும் இடைப்பட்ட கால கட்டத்தில் பிறந்தவர்களுக்காகவும் ஸகாதுல் பித்ர் கொடுப்பது அவர்களுக்குப் பொறுப்பானவர்கள் மீது கடமையாகும்.

ஒவ்வொரு ஊரிலும் பிரதான உணவாக உட்கொள்ளப்படும் பொருளையே அந்த ஊரில் ஸகாதுல் பித்ராவாக வழங்க வேண்டும் என்பது ஒரு விதியாகும். அவ்வாறு பொருளைக் கொடுக்காமல் அதன் பெறுமதியைக் கொடுப்பதால் பித்ராவைப் பெறுவோருக்கு அதிகம் பயனுண்டு எனக் கண்டால் அவ்வாறு கொடுக்கலாம் என்று கூறுவோரும் உளர். பித்ரா கடமையான ஒவ்வொருவரும் தனக்காகவும் தனது பொறுப்பில், உள்ளவர்களுக்காகவும் தலைக்கு 2 ¼ கிலோ கிராம் வீதம் வழங்க வேண்டும்.

ஸகாதுல் பித்ர், ஷவ்வால் தலைப்பிறை பிறந்தது முதல் ஈதுல் பித்ர் நோன்புப்பெருநாள் தொழுகை முடியுமுன் கொடுப்பது ஸுன்னத்தாகும். நியாயமான காரணமின்றி அன்றைய நாளில் கொடுப்பதைப் பிற்படுத்துவது ஹராமாகும். இவ்வாறு கொடுக்கத் தவறியோர் அவர்கள் மீது கடமையான பித்ராவை பின்னரேனும் கழாவாகக் கொடுப்பது வாஜிபாகும். வசதி கருதி பெருநாள் தினத்திற்கு முன்னர் றமழான் மாதத்திலேயே பித்ராவைக் கொடுப்பதற்கும் அனுமதியுண்டு. ஸகாத் பெற தகுதியுடையவர்களுக்கே ஸகாத்துல் பித்ராவையும் வழங்க வேண்டும். இதன் மூலம் ஏழைகளும் பெருநாளை மகிழ்ச்சியாகக் கொண்டாடுவதற்கு உதவ முடிகின்றது. அது மட்டுமன்றி, அதன் மூலம் நோன்பு காலத்தில் நிகழ்ந்த சிறு பாவங்கள் மன்னிக்கப்படவும் வழி பிறக்கின்றது. இதனை அப்துல்லா இப்னு அப்பாஸ் (றழி) அவர்களின் கூற்று உறுதிப்படுத்துகின்றது.

"கேளிக்கைகள், வீண் பேச்சுக்கள், பொய் பேசுதல் என்பவற்றின் காரணமாக ஏற்படும் பாவங்களைவிட்டும் நோன்பாளிகளைத் தூய்மைப் படுத்தவும் ஏழைகளுக்கு உணவாக அமையவும் நபி (ஸல்) அவர்கள் ஸகாதுல் பித்ரை கடமையாக்கினார்கள். யார் அதனை பெருநாள் தொழுகைக்கு முன்னர் நிறைவேற்றுகிறாரோ அது ஸகாதுல் பித்ராவாக ஏற்றுக்கொள்ளப்படும். யார் அதனை பெருநாள் தொழுகையின் பின்னர் நிறைவேற்றுகிறாரோ அது ஸதகாவாக அமையும்." (அபூதாவூத்)

## ஸதகாக்களும் அதன் சிறப்புக்களும்

முஸ்லிம்களின் நற்குணங்களில் தாராளத் தன்மை மிக அடிப்படையானது. விருந்தோம்பல், ஒருவருக்கொருவர் உதவுதல், அனர்த்தங்களின் போது உதவுதல், விட்டுக் கொடுத்தல் போன்றன இஸ்லாமிய வாழ்க்கை நெறி முறைகளாகும். குறுகிய மனப்பான்மை, பேராசை, கஞ்சத்தனம் போன்ற எதிர்மறைப் பண்புகள் இஸ்லாத்தின் அடிப்படைப் பண்புகளையே தகர்த்து விடுவனவாகும். குர்ஆன் ஸதகாவைப்பற்றி பின்வருமாறு கூறுகின்றது.

> "(விசுவாசிகளே) எவர்கள் தங்கள் பொருட்களை ( தர்மத்திற்காக) இரவிலும், பகலிலும், இரகசியமாகவும் பரகசியமாகவும் செலவு செய்கின்றார்களோ; அவர்களுக்கு அவர்களுடைய கூலி அவர்களுடைய இறைவனிடத்தில் உண்டு. தவிர அவர்களுக்கு (மறுமையில்) யாதொரு பயமுமில்லை. அவர்கள் துக்கப்படவுமாட்டார்கள்." (2 : 274)

அல்லாஹ், தனக்காக அருளிய வளங்களில் அடுத்தவர்களும் பங்கெடுத்துக் கொள்வதற்கு அனுமதிக்க வேண்டும் என்பது இஸ்லாத்தின் உயர்ந்த கொள்கையாகும். அவன் தன்னுடைய செல்வத்தில் ஒரு பகுதியை, அடுத்தவர்களுக்கு உதவுவதற்காகவும் ஏழைகளின் தேவைகளுக்காக ஒதுக்கிக் கொள்ள வேண்டும். இது பற்றி நபி (ஸல்) அவர்கள் பின்வருமாறு



7-CM14793

கூறினார்கள். "ஆதமின் மக்களே ! உங்களுடைய செல்வத்தை அது உங்களுக்கு நன்மை பயக்குமென்றால் செலவு செய்யுங்கள். இன்னும் அதனைத் தடுத்துக் கொள்ளாதீர்கள். அது உங்களுக்கு மோசமாக அமையும். முதலில் உங்கள் குடும்பத்தார்களுக்காகவும், உங்களைச் சார்ந்து வாழ்பவர்களுக்காகவும் செலவு செய்யுங்கள். உயர்ந்திருக்கும் கரங்கள் தாழ்ந்திருக்கும் கரங்களைவிட எப்போதும் சிறந்ததாகவே இருக்கும்." (முஸ்லிம்)

கஞ்சத்தனத்தோடு நடந்து கொள்கின்றவர்களை பற்றி நபி (ஸல்) அவர்கள் பின்வருமாறு கூறினார்கள். "கஞ்சத்தனம் நிறைந்த தொழுகையாளியை விட கல்வியறிவற்ற ஒரு கொடை வள்ளலை அல்லாஹ் அதிகமாக விரும்புகின்றான்." (திர்மிதி)

# அஸ்ஸவ்ம்

"அஸ்ஸவ்ம்" எனும் அறபுச்சொல்லுக்கு, தவிர்த்தல், தடுத்துக்கொள்ளல், என்பது பொருளாகும். இஸ்லாமிய ஷரீஅத்தில், ஒரு முஸ்லிம் அல்லாஹ்வின் திருப்தியை நாடி 'நோன்பு நோற்கிறேன்' என்ற நிய்யத்தோடு வைகறை முதல் சூரியன் மறையும் வரை உணவு, பானம், பாலுறவு என்பவற்றிலிருந்து தவிர்ந்திருத்தலை "அஸ்ஸவ்ம்" என்பது குறிக்கும். இதனை நாங்கள் நோன்பு என வழங்குகிறோம்.

இஸ்லாத்தின் ஐம்பெருங்கடமைகளிலொன்றான நோன்பு, ஹிஜ்ரி இரண்டாம் ஆண்டு முஸ்லிம்கள் மீது கடமையாக்கப்பட்டது. பொதுவாக நோன்பை இரண்டு வகையாகப் பிரித்துக் கூறலாம்.

## நோன்பின் வகைகள்

1. பர்ளான நோன்பு
2. ஸுன்னத்தான நோன்பு

பர்ளான நோன்பை மேலும் இரண்டு வகையாகப் பிரித்துக் கூறலாம்.

1. ரமழான் மாத நோன்பு
2. நேர்ச்சை நோன்பு

## ரமழான் மாத நோன்பு

இஸ்லாமிய கலண்டரின் ஒன்பதாவது மாதமான ரமழான் மாத பிறை தென்பட்டது முதல், பத்தாவது மாதமான ஷவ்வால் மாத முதல் பிறை காணும் வரையிலான ஒரு மாத கால நோன்பை இது குறிக்கும். வயது வந்த முஸ்லிமான ஒவ்வொரு ஆணும் பெண்ணும் இந்த நோன்பை நோற்பது கடமையாகும். சில சந்தர்ப்பங்களில் மாத்திரம் இந்நோன்பை விட்டுவிட சிலருக்கு அனுமதியுண்டு. ஆயினும் அவற்றைக் கழாச் செய்ய வேண்டும்.

## நேர்ச்சை நோன்பு

"குறித்த ஒரு விடயம் நிறைவேறினால் அல்லாஹ்வுக்காக நான் நோன்பு நோற்பேன்" என்று ஒருவர் வாயால் மொழிந்து தானாக கடமையாக்கிக் கொள்ளும் நோன்பே நேர்ச்சை நோன்பு எனப்படும். குறிப்பிட்ட அவ்விடயம் நிறைவேறினால் அந்நோன்பை நோற்பது அவர் மீது கடமையாகும். குறிப்பிட்ட விடயம் நிறைவேறாவிட்டால் நோன்பு நோற்க வேண்டிய அவசியம் இல்லை.

கடமையான இவ்விரு வகையான நோன்புகளையும் தவிர குற்றப்பரிகார நோன்பான "ஸவ்முல் கப்பாரா" என்ற மற்றொரு வகையுமுண்டு. இது சில

இபாதத்துகளின் போது விடப்படுகின்ற தவறுகளுக்குக் குற்றப்பரிகாரமாக நோற்கப்படுகிறது. உதாரணமாக ஹஜ்ஜின் வாஜிபுகள் எவையேனும் விடுபட்டால் நோன்பு நோற்பது, சத்தியத்தை முறித்ததற்காக நோன்பு நோற்பது போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

## ஸுன்னத்தான நோன்புகள்

பல்வேறு சந்தர்ப்பங்களில் நபி (ஸல்) அவர்கள் நோற்ற பர்ளு அல்லாத நோன்புகள், ஸுன்னத்தான நோன்புகள் எனப்படும். இந்நோன்புகளை நோற்பதால் அல்லாஹ்விடமிருந்து அதிகமான நன்மைகள் கிடைக்கின்றன என்பதை ஹதீஸ்கள் உணர்த்துகின்றன. ஆதலால் இவ்வகை நோன்புகளை அறிந்து அவற்றை நோற்க முயற்சித்தல் வேண்டும்.

(அ) வாரந்தோறும் நோற்பன

1. திங்கட்கிழமை
2. வியாழக்கிழமை

(ஆ) மாதந்தோறும் நோற்பன

1. மாதத்தின் 13,14,15 ஆம் பிறைகளில் (அய்யாமுல் பீழ்)

(இ) வருடந்தோறும் நோற்பன

1. துல்ஹஜ் ஒன்பதாம் நாளில் (யவ்மு அறபா) (ஹஜ் கடமையை நிறைவேற்றிக் கொண்டிருப்பவர்களுக்கு இது ஸுன்னத் அல்ல)
2. துல் ஹஜ் முதல் எட்டு நாட்களில்
3. முஹர்ரம் மாதம் ஒன்பதாம், பத்தாம் நாட்களில் (தாஸுஆ, ஆசூரா)
4. ஷ.்.பான் மாதம் பெரும்பாலான நாட்களில்
5. ஷவ்வால் மாதம் ஆறு நாட்களில் (நோன்புப் பெருநாளை அடுத்து வரும் ஆறு நோன்பு)
6. துல்க.்.தா, துல்ஹஜ் (விலக்கப்பட்ட நாட்கள் தவிர) முஹர்ரம், ஆகிய சங்கையான மாதங்களில்.

## நோன்பின் விதிமுறைகள்

இனி நோன்புக்குரிய ஷர்த்துக்கள், பர்ளுகள், ஸுன்னத்துகள், முப்திலாத்துகள் பற்றி அவதானிப்போம்.

## நோன்பின் ஷர்த்துக்கள்

ஒரு காரியத்தை (இபாதத்தை) நிறைவேற்றுவதற்கு முன்பு அக்காரியத்தை நிறைவேற்றுபவரிடம் காணப்பட வேண்டிய அம்சங்களையே ஷர்த்துக்கள் என்கிறோம். நோன்பைப் பொறுத்த வரை நோன்பு நோற்போர் பின்வரும் நிபந்தனைகளைப் பூர்த்தி செய்தவராக இருத்தல் வேண்டும்.

1. முஸ்லிமாயிருத்தல்.
2. பருவமெய்தியிருத்தல் (மிகச்சிறியோர் பயிற்சி பெறுவதற்காக நோற்கலாம்)
3. சித்த சுவாதீனமுள்ளவராயிருத்தல்.
4. நோன்பு நோற்க சக்தியுள்ளவராக இருத்தல்.
5. பெண்கள் மாதவிலக்கு, பிரசவ ருது என்பவற்றிலிருந்து நீங்கியிருத்தல்.

## நோன்பின் பர்ளுகள்

1. **நோன்பு நோற்பதாக நிய்யத் வைத்தல்**.- இதனையே நிய்யத் என்கிறோம். அதாவது "நான் அல்லாஹ்வுக்காக நாளை நோன்பு நோற்பேன்" என்று நிய்யத் வைத்தல். பர்ளான நோன்பாயின் பர்ளு எனவும், ஸுன்னத்தான நோன்பாயின் ஸுன்னத் எனவும் நிய்யத்தில் சேர்த்துக்கொள்ள வேண்டும்.

2. வைகறை நேரத்திலிருந்து மாலையில் சூரியன் முழுமையாக மறையும் வரையிலான காலப்பகுதியில் நோன்பை முறிக்கும் எக்காரியத்தையும் செய்யாதிருத்தல்.

## நோன்பின் முப்திலாத்

நோன்பை முறிக்கும் காரியங்களைச் செய்யாதிருத்தலே நோன்பின் இரண்டாவது "பர்ள்" எனக் கண்டோம். இப்போது நோன்பை முறிக்கும் அக்காரியங்களைக் கவனிப்போம். அவை முப்திலாத்துகள் எனப்படுகின்றன. அவையாவன :-

1. உடலில் திறந்த துவாரங்களான வாய், மூக்கு, காது போன்ற உறுப்புக்களின் வழியாக உணவையோ, பானத்தையோ அல்லது வேறு பொருளையோ உட்செலுத்துதல்.
2. முனைந்து வாந்தி எடுத்தல். (தானாக வாந்தி வந்தால் நோன்பு முறியாது)
3. சித்தக் கோளாறு – பைத்தியம் உண்டாதல்.
4. நோன்பின் போது மயக்கம் ஏற்படல்.

5. பிரசவித்தல் அல்லது பிரசவ ருது, மாதாந்த ருது என்பன வெளிப்படல்.
6. உடலுறவு கொள்ளல்.
7. இந்திரியத்தை வெளிப்படுத்தல்.
8. இஸ்லாத்திலிருந்து வெளியேறல் - ரித்தத் ஏற்படல்.

உடலுறவு தவிர்ந்த ஏனைய செயல்கள் மூலம் நோன்பு முறிந்தால் அந்நோன்பை மற்றொரு நாளில் நோற்றல் வேண்டும். இதனையே கழா நோன்பு நோற்றல் என்கின்றோம். ஆனால், நோன்பு நோற்றுக் கொண்டு உடலுறவில் ஈடுபட்டால் அந்நோன்பை மற்றொரு நாளில் நோற்றால் மட்டும் போதாது. அவர் செய்த குற்றத்திற்கு தண்டனையாக ஓர் அடிமையை விடுதலை செய்ய வேண்டும். முடியாவிட்டால் இரண்டு மாதம் தொடர்ந்து நோன்பு நோற்றல் வேண்டும். முடியாவிட்டால் அறுபது ஏழைகளுக்கு உணவளிக்க வேண்டும். மறதியாகவோ, நிர்ப்பந்தமாகவோ, அறியாமலோ நிகழும் காரியங்களால் நோன்பு முறிவதில்லை.

## நோன்பின் ஸுன்னத்துக்கள்

நோன்பை உரிய முறையில் பக்குவமாக நோற்று. அல்லாஹ்விடம் அதிகமான நன்மைகளை பெற்றுக்கொள்ள விரும்பும் ஒருவர், நோன்பின் ஸுன்னத்துக்களை தெரிந்து அவற்றையும் கடைப்பிடித்து வரவேண்டும். அவை வருமாறு:-

1. ஸஹர் செய்தல் - அதாவது நடுநிசிக்குப் பிறகு உணவாகவோ, பானமாகவோ எதையாவது உட்கொள்ளல்.

2. சூரியன் மறைந்ததும் நோன்பு துறத்தல். பேரீத்தம் பழத்தை உண்டு நோன்பு துறத்தல் ஸுன்னத் ஆகும். அது கிடைக்காத போது நீர் அருந்தியும் நோன்பு துறக்கலாம்.

3. நோன்பு துறந்ததும் துஆக் கேட்டல் - துஆக்கள் அங்கீகரிக்கக் கூடிய சந்தர்ப்பமாக இது இருப்பதால் இந்நேரத்தை அதிகமாக பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

4. நோன்பு துறப்பதற்கு நோன்பாளிகளுக்கு உதவுதல்.

5. நாவைப் பேணல் - பொய், புறம், கோள், பரிகாசம், வீண்பேச்சு, திட்டல், தூற்றல் என்பவற்றை தவிர்த்தல்.

6. அல் குர்ஆனை அதிகமாக ஓதுதல் - அதனை விளங்குதல், திக்ருகளை ஓதுதல், அல்லாஹ்விடம் துஆக் கேட்டல்.

7. ரமழான் மாத இரவுகளில் தராவீஹ் போன்ற ஸுன்னத்தான தொழுகை களிலும் ஏனைய நற்செயல்களிலும் ஈடுபடல்.

8. அதிகமாக ஸதகாக்களை கொடுத்தல். பயனுள்ள நற்காரியங்களில் ஈடுபடல்.

9. இசை, நடனம், வேடிக்கைக்காட்சிகள் போன்றவற்றிலிருந்து கண்களையும், காதுகளையும் பாதுகாத்தல்.

10. மஸ்ஜித்களில் இ.:.திகாப் இருத்தல்.

## நோன்பு நோற்பதிலிருந்து விதிவிலக்கப்பட்டோர்

நோன்பு ஒரு தனித்துவமான இபாதத் ஆகும். அது இம்மையிலும் மறுமையிலும் நற்பயன் தருவதாகும். ஆதலால் தக்க காரணம் எதுவுமின்றி நோன்பை நோற்காதிருப்பது பெரும் பாவமாகும். எனினும் அல்லாஹ் சிலருக்கு நோன்பை நோற்காமல் விடுவதற்கு அனுமதியளித்துள்ளான். அத்தகையோர் :-

1. **நோயாளிகள் :-**
ரமழான் மாதத்தில் நோய்வாய்ப்பட்டிருப்போர், அம்மாதத்தில் நோன்பு நோற்க வேண்டியதில்லை. நோய் குணமானதும் வேறு நாட்களில் அதனைக் கழாச் செய்ய வேண்டும். தீராத நோயினால் பீடிக்கப்பட்டிருப்போரும், முதுமை காரணமாக நோன்பு நோற்கச் சக்தியற்றோரும் வேறு நாட்களில் கழாச்செய்ய வேண்டிய அவசியமில்லை. இத்தகையோர் தாம் நோற்கத் தவறிய ஒவ்வொரு நோன்புக்கும் பகரமாக பின்வருமாறு பரிகாரம் செய்யுமாறு குர்ஆன் குறிப்பிடுகிறது. "................ ஒரு ஏழைக்கு உணவளிப்பது கடமையாகும். எவரேனும் நன்மையை நாடி (பரிகாரத்துக்குரிய அளவை விட அதிகமாக) தானம் செய்தால் அது அவருக்கே நன்மை......." (2 : 184) இவ்வாறு வழங்குவது 'பித்யா' எனப்படும்.

2. **பிரயாணிகள் :-**
பிரயாணத்தில் ஈடுபட்டிருப்போர் நோன்பு நோற்க முடியாத போது நோன்பை விடலாம். அதற்குப் பகரமாக வேறொரு நாளில் அதனை நோற்க வேண்டும். இஸ்லாத்தில் அனுமதிக்கப்படாத பிரயாணத்தில் ஈடுபட்டிருப்போருக்கு இந்தச் சலுகை கிடையாது.

3. **பாலூட்டும் தாய்மார், கர்ப்பிணிகள் :-**
குழந்தைக்குப் பாலூட்டும் தாய்மார்களும், கர்ப்பிணிகளும், நோன்பு நோற்பதால் தமக்கோ, தமது குழந்தைகளுக்கோ பாதிப்பு ஏற்படும் எனப்

பயந்தால் அவர்கள் நோன்பை நோற்காது விடலாம். ஆனால் குறிப்பிட்ட அந்த நிலை மாறியதன் பின்னர் அவர்கள் தவறவிட்ட நோன்பைக் கழாச் செய்ய வேண்டும். தமது குழந்தைக்கு மாத்திரம் பாதிப்பு ஏற்படும் எனக் கருதி நோன்பை விட்ட தாய்மார் பின்னர் குறிப்பிட்ட நோன்புகளைக் கழாச் செய்வதோடு ஒவ்வொரு நோன்புக்காகவும் ஓர் ஏழைக்கு உணவளிக்க வேண்டும்.

நோன்பு பற்றிய விதிமுறைகளைக் கற்று கொண்ட நாம் அதன் பிரகாரம் நோன்பு நோற்று அல்லாஹ்வின் அருள் பெற முயற்சிப்போம்.

## நோன்பின் பயன்கள்

1. தக்வா - இறையச்சத்தைத் தருகின்றது.
2. உளத் தூய்மையை ஏற்படுத்துகின்றது.
3. பொறுமையைக் கட்டியெழுப்புகின்றது.
4. ஆன்மீக சூழல் ஏற்படுவதால் ஆன்மீக விமோசனத்திற்கான வழி வகைகளை செய்து கொள்ள முடிகின்றது.
5. ஆன்மீக சூழலில் அதிக நற்செயல்களில் ஈடுபட்டு அதிக நன்மைகளை ஈட்டிக்கொள்ள முடிகின்றது.
6. குர்ஆனோடு தொடர்பு கொண்டு ஆன்மாவை வெற்றிக்குரிய பாதையில் இட்டுச் செல்ல முடிகின்றது.
7. லைலதுல் கத்ர் எனும் இரவை அடைந்து கொள்வதன் மூலம் நன்மைகளைப் பெறும் பாக்கியம் கிடைக்கின்றது.
8. பாவங்களிலிருந்து பாதுகாப்புப்பெற வழி செய்கிறது.
9. ஆன்மாவைப் பாதிக்கின்ற பாவச் செயல்களிலிருந்து பாதுகாப்புப் பெற உதவுகின்றது.
10. பசியின் கொடுமை, வறுமையின் வன்மை உணர்ந்து அடுத்தவர்களது கஷ்டங்களில் பங்கு கொள்ளும் மனப்பாங்கை ஏற்படுத்துகின்றது.
11. உடல் ஆரோக்கியத்திற்கு வழிவகுக்கின்றது.
12. ஏழைகளின்பால் அன்பும், கருணையும் செலுத்துகின்ற பண்பு வளர்கின்றது.
13. சகோதரத்துவம், சமூக உணர்வு, ஒற்றுமை, மனித நேயம், சமத்துவப் பண்பு போன்றன வளர்கின்றன.
14. கட்டுப்பாடான வாழ்க்கைப் பயிற்சியை ஏற்படுத்துகின்றது.
15. சிக்கனம் பேணுவதற்கும், வீண்விரயத்தை தவிர்ப்பதற்கும் வழிவகுக்கின்றது.

# ஹஜ்

## ஹஜ்ஜின் முக்கியத்துவம்

“அல்ஹஜ்” என்ற அரபுப் பதம் தரிசித்தல், நாடுதல் போன்ற மொழிக் கருத்துக்களில் பிரயோகிக்கப்படுகின்றது. ஐம்பெரும் கடமைகளில் இறுதியானதாகவும் தலையாய இறைவணக்கங்களில் ஒன்றாகவும், மனிதனது உள்ளம், உடல், பொருளோடு சம்பந்தப்பட்ட நீண்டதொரு வரலாற்றுப் பாரம்பரியங்களைக் கொண்டதாகவுமுள்ள ஹஜ் கடமையை பின்வருமாறு வரையறுத்து குறிப்பிடலாம்.

"ஒவ்வொரு வருடமும் துல்-ஹஜ் மாதம் பிறை எட்டு முதல் பிறை 13 வரையுள்ள தினங்களில், சில நிபந்தனைகளுக்குட்படுகின்ற முஸ்லிம்கள் ஹஜ்ஜுக்குரிய விதிமுறைகளை அனுஷரித்து, வாழ்க்கையில் ஒரு தடவை புனித மக்கமா நகரின் குறித்த தலங்களுக்குச் சென்று, அல்லாஹ்வுக்காக நிறைவேற்ற வேண்டுமென விதிக்கப்பட்டுள்ள கடமையினை இது குறிக்கின்றது". இது பற்றி அல்-குர்ஆன் பின்வருமாறு கூறுகின்றது. "ஆகவே எவர்கள் அங்கு யாத்திரை செல்ல சக்தியுடையவர்களாக இருக்கின்றார்களோ ; அத்தகைய மனிதர்கள் மீது அல்லாஹ்விற்காக (அங்கு சென்று) அவ்வாலயத்தை ஹஜ்ஜு செய்வது கடமையாகும்." (3:97) நபி (ஸல்) அவர்கள் ; "உரிய முறையில் எவர் ஹஜ்கடமையைச் செய்கின்றாரோ அவர் அன்று பிறந்த பாலகன் போன்று ஆகிவிடுகின்றார்." (புஹாரி) எனக் கூறியுள்ளார்கள். அத்தோடு இஸ்லாத்தின் ஐந்து தூண்களில் ஒன்றாக அதனை சுட்டிக்காட்டி அதனை நிலைநிறுத்த வேண்டியதன் அவசியத்தையும் எடுத்துக் காட்டியுள்ளார்கள்.

இஸ்லாத்தில் விதியாக்கப்பட்டுள்ள வணக்க வழிபாடுகள் அனைத்தும் பல்வேறு அடிப்படைகளில் முக்கியத்துவம் அடைவதையும் சிறப்புப் பெறுவதையும் கண்டுகொள்ள முடிகின்றது. முஸ்லிமினது இலட்சியப் பாதையில் இவை ஒவ்வொன்றும் மைல்கற்களாக நின்று இயக்க சக்தியை வழங்கிக் கொண்டிருக்கின்றது.

ஹஜ்ஜின் முக்கியத்துவத்தை அல்-குர்ஆனும், ஹதீஸும் எடுத்துக் கூறும் விதம் நோக்கத்தக்கதாகும். "நிச்சயமாக மனிதர்களுக்காக அமைக்கப்பட்ட வீடுகளில் முதல் வீடானது பக்கா (மக்கா) விலுள்ள வீடாகும்." (3:96), மற்றொரு இடத்தில் "மக்காவில் நபி இப்ராஹீம் (அலை) அவர்கள் கட்டிய க.்.பா எனும் வீட்டை மனிதர்கள் ஒதுங்கும் தலமாகவும் (அவர்களுக்கு) அபயமளிக்கக் கூடியதாகவும் நாம் ஆக்கிய போது (அதில்) இப்ராஹிம் (அலை) நின்ற இடத்தை நீங்கள் தொழுமிடமாக வைத்துக் கொள்ளுங்கள் (எனக் கட்டளையிட்டோம்)" (2:125)

நபி முஹம்மது (ஸல்) அவர்கள் இது பற்றி பின்வருமாறு கூறினார்கள். "ஹஜ்ஜையும், உம்றாவையும் நிறைவேற்றுங்கள். இரும்பிலுள்ள துருவை கொல்லனின் உலை நீக்குவது போல வறுமையையும், பாவங்களையும் ஹஜ்ஜும், உம்றாவும் நீக்கி விடும்". (நஸாஈ) "அங்கீகரிக்கப்பட்ட ஹஜ்ஜுக்குரிய கூலி சுவர்க்கமே அன்றி வேறில்லை" . (புஹாரி). மேற்படி போதனைகள் பல்வேறு கோணங்களில் ஹஜ்ஜின் முக்கியத்துவத்தையும் சிறப்பையும் விளக்குகின்றன.

மனிதன் அல்லாஹ்வினுடைய பிரதிநிதி என்ற வகையில், அவனது வாழ்வு முழுவதும் இபாதத் ஆக அமைய வேண்டியுள்ளது. இந்த மாபெரும் இபாதத்துக்கு முஸ்லிம்களை இட்டுச் செல்ல, ஹஜ் உதவுகின்றது. ஹஜ்ஜில் பொதிந்துள்ள கிரியைகளை ஆராயும் போது இதனை சிறந்த முறையில் புரிந்து கொள்ளலாம். ஹஜ் மனிதனது உள்ளத்துடனும் உடலுடனும் பொருளுடனும் சம்பந்தப்படுகின்றது. இம்மூன்று விடயங்களிலும் அல்லாஹ்விற்கு எந்த முறையில் அடிபணிய வேண்டும் என்பதை ஹஜ் போதிப்பதால் வாழ்வின் எல்லாக் கட்டங்களிலும் அல்லாஹ்விற்கு மாறு செய்யாமல் இருக்கக் கூடிய தன்மையினை ஏற்படுத்தி விடுகின்றது.

இவ்வுலக வாழ்க்கை தற்காலிகமானது. மறுமை வாழ்க்கை நிரந்தரமானது என்ற இஸ்லாத்தின் அடிப்படைக்கு அமைய, ஒரு முஸ்லிம், உலகில் செயல்படுவதற்கு சில அடிப்படைப்பண்புகளைப் பெற்றுக்கொள்ள உதவும் கடமை என்ற வகையிலும் ஹஜ் முக்கியத்துவம் பெறுகின்றது. முற்றிலும் தூய்மையான முறையில் அல்லாஹ்வுக்கு அடிபணிதல், அல்லாஹ்வுக்காக தன்னை அர்ப்பணித்தல், தியாகத்தின் அடிப்படையில் செயலாற்றுதல் போன்ற முக்கியமான பண்புகளை ஹஜ் வளர்க்கிறது.

இவ்வுலகத்தில் வாழ்கின்ற அனைத்து மனிதர்களும் ஒரே ஆத்மாவிலிருந்து படைக்கப்பட்டவர்கள். அவர்கள் பிரதேச, நிற, குல, கோத்திர, மொழி, இன அடிப்படைகளில் பிரிக்கமுடியாதவர்கள் என்ற அடிப்படைத்தத்துவத்தை இக்கடமை உலகிற்கு வருடாவருடம் பறைசாற்றுகிறது.

ஹஜ்ஜின் கிரியைகளைச் செய்யும் இடங்கள் அனைத்தும் மக்கா நகரைச் சூழ உள்ளன. அல்லாஹ்வின் தூதர்களின் வரலாறு பதிந்த நகரமாக இது உள்ளது. குறிப்பாக ஹஜ்ஜின் கிரியைகளோடு தொடர்புபடுகின்ற அனைத்து நபிமார்களது வரலாற்று தத்துவங்களையும் நிஜமாக நினைவுகூர, அந்த இடங்களிலிருந்து தமது பணிகளை எவ்வாறு அமைத்துக் கொள்ள வேண்டும் என்பதை தீர்மானித்துக் கொள்ள சந்தர்ப்பமளிக்கும் கடமை என்ற வகையில் ஹஜ்கடமை முக்கியத்துவம் பெறுகிறது.

முஸ்லிம்களின் வாழ்வு, சைத்தானுக்கும், மனோ இச்சைக்குமெதிரான போராட்டமுமாகும். ஹஜ்ஜின் கிரியைகளில் இவ்வாறான போராட்டப்பயிற்சி பொதிந்துள்ளதை கண்டுகொள்ள முடிகின்றது. ஜம்ராக்களில் கல்லெறிவது சதாவும் மனித வாழ்க்கையில் சைத்தானியக் குறுக்கீடுகளுக்கு மனிதன் எதிராகத்

தொழிற்பட வேண்டிய பயிற்சியைக் கொடுக்கின்றது. அல்லாஹ்விற்காக மனோஇச்சைகளை கட்டுப்படுத்த வேண்டும் என்ற பயிற்சியையும் ஹஜ் கொடுக்கின்றது.

ஹஜ்ஜுக்காக "நிய்யத்" வைத்தவர்கள் அணியும் இஹ்ராம் ஆடை ஒரே நிறமானது, எளிமையானது. இது ஆடம்பரமற்ற வாழ்க்கையை மேற்கொள்ளத் தூண்டுகின்றது. அத்துடன் மறுமையை நினைவுபடுத்துவதாகவும் அமைகின்றது.

குடும்பத்தை பிரிந்து, உலக இன்பங்களைத் துறந்து ; அல்லாஹ்வின் கட்டளைக்கு பணிந்து ஹஜ்ஜின் கிரியைகளை நிறைவேற்றும்போது உண்மையான தக்வா ஏற்படுகின்றது. இது முழு வாழ்க்கையையும் செப்பனிட உதவுகின்றது. வாழ்க்கையில் தீய காரியங்களில் ஈடுபடாமல் இருக்க ஆதாரமாகின்றது. மனிதனைப் புனிதனாக்குகின்றது.

## ஹஜ்ஜின் நடைமுறை

இஸ்லாத்தின் ஐம்பெரும் கடமைகளில் மிகப் பிரதான இடத்தை வகிக்கின்ற ஹஜ் கடமை ஒரு முஸ்லிமின் வாழ்வில் ஒரு முறை மாத்திரம் விதியாவதால் அதனை நடைமுறைப்படுத்தும் விடயத்தில் கவனமெடுத்தல் வேண்டும். துல் ஹஜ் 8ஆம் நாள் முதல் துல்ஹஜ் 13ஆம் நாள் வரை செயற்பாட்டு ரீதியாக இடம் பெறும் இக்கடமை நிறைவேறப் பின்வரும் விதிகளைப் பேண வேண்டும்.

### ஷர்த்துக்கள்

1. முஸ்லிம்
2. பருவமடைந்தவர்
3. சித்தசுவாதீனமுள்ளவர்
4. சுதந்திரன்
5. உடல் நலமுள்ளவர்
6. பயண வழி பாதுகாப்பானதாக இருத்தல்
7. வசதியுள்ளவர்
8. கால அவகாசமிருத்தல்

### பர்ளுகள்

1. நிய்யத்
2. அறபாவில் தரித்தல்
3. தவாப் செய்தல் (இபாழா)
4. ஸஈசெய்தல்
5. ஹல்க் செய்தல்
6. குறிப்பிட்ட ஒழுங்கில் செய்தல்

## வாஜிபுகள்

1. மீகாத்துகளில் நிய்யத்து வைத்தல்
2. துல்ஹஜ் 10 ஆம் நாள் நடு நிசிக்குப் பின் முஸ்தலிபாவில் தரித்தல்
3. துல்ஹஜ் 10 ஆம் நாள் நடுநிசிக்குப் பின் ஜம்ரதுல் அகபாவில் 7 கற்கள் எறிதல்.
4. அய்யாமுல் தஷ்ரீக் இரவுகளில் மினாவில் தங்குதல்
5. தவாபுல் விதாஉ செய்தல்.
6. அய்யாமுத் தஷ்ரீக் (மூன்று) நாட்களில் மூன்று ஜம்ராக்களிலும் எவ்வேழு கற்களை எறிதல்.

## சுன்னத்துக்கள்

1. சுன்னத்தான குளிப்புகள். உ-ம் :- இஹ்ராம் அணிவதற்கு முன்பு குளித்தல்.
2. நிய்யத்துக்கு முன் மணம் பூசுதல்
3. நிய்யத்தை வாயால் மொழிதல்
4. தல்பியா ஓதல்
5. தவாபுல் குதூம் செய்தல்
6. துல்ஹஜ் 9 ஆம் இரவில் மினாவில் தங்குதல்
7. துஆ அங்கீகரிக்கப்படக்கூடிய இடங்களில் துஆ செய்தல்
8. தவாபுக்குப்பின் மகாமு இப்ராஹீமுக்கு பின்னால் சுன்னத் தொழுதல்
9. ஸம்ஸம் நீர் அருந்துதல்

## இஹ்ராம் அணிந்தவர்கள் தவிர்க்கவேண்டியவை

1. தைத்த ஆடைகளை அணிதல்
2. மணம் பூசுதல்
3. தலைமுடி, தாடி என்பவற்றில் எண்ணெய் தேய்த்தல்
4. உரோமங்களையோ, நகங்களையோ களைதல்
5. திருமணம் செய்தல்
6. பாலியல் சுகம் பெறுதல்
7. உடலுறவு கொள்ளல்
8. ஆண்கள் தலையை, பெண்கள் முகத்தை மறைத்தல்
9. வேட்டையாடுதல்

## ஹஜ்ஜுக்கு நிய்யத் வைக்கும் முறைகள்

1. அல் இப்ராத் : முதலில் ஹஜ்ஜுக்கு நிய்யத்து வைத்து அதனை நிறை வேற்றிய பின்னர் உம்றாவுக்கு நிய்யத் வைத்து அதனை நிறைவேற்றுதல்.

2. அத்தமத்துஉ : முதலில் உம்றாச் செய்து முடிந்தபின், துல்ஹஜ்ஜு 8 ஆம் நாள் ஹஜ்ஜுக்கு நிய்யத்து வைத்து அதனை நிறைவேற்றுதல். இவ்வாறு செய்பவர் அல்ஹத்யு எனப்படும் குர்பான் கொடுக்க வேண்டும்.

3. அல்-கிரான் : ஹஜ் உம்றா இரண்டையும் ஒன்றாக சேர்த்து நிறைவேற்றுதல். இதற்கும் குர்பான் கொடுக்க வேண்டும்.

## மீக்காத்துகள்

மீக்காத் என்பது ஹஜ்ஜுக்குச் செல்வோர் நிய்யத் வைக்க வேண்டிய- இஹ்ராம் கட்ட வேண்டிய எல்லையைக் குறிக்கும். வெவ்வேறு திசைகளிலிருந்து வரும் ஹாஜிகளுக்கு வெவ்வேறு இடங்கள் நிர்ணயிக்கப்பட்டுள்ளன. உ-ம் : இலங்கையில் இருந்து ஹஜ்ஜுக்கு செல்வோர் யலம்லம் எனும் இடத்தில் நிய்யத்து வைத்தல் வேண்டும். ஏனைய இடங்களாவன :

1. துல்ஹுலைபா
2. அல்-ஜுஹ்பா
3. கர்னுல் மணாஸில்
4. யலம்லம்
5. தாத்துல் இராக் அல்லது வாதிஸ் ஸைல்

மேற்குறிப்பிட்ட விதிமுறைகளை அனுசரித்து, ஹஜ் உம்றா கிரியைகள் அதற்குரிய தினங்களில் அல்லது காலங்களில் நிறை வேற்றப்படும். ஹஜ் விதியாகும் ஷர்த்துக்களுக்கு உட்படுகின்றவர்கள், குறைந்தபட்சம் துல்-ஹஜ் 8 ஆம் நாளாவது தமக்குரிய தலங்களைப் போய்ச் சேர்ந்திருக்க வேண்டும். ஹாஜிகள் தமக்குரிய மீக்காத்துக்களுக்கு சென்று நிய்யத் வைக்க முன்னர், மேற்கொள்ள வேண்டிய சுன்னத்தான காரியங்களான குளிப்பு, மணம் பூசுதல் போன்ற காரியங்களை மேற்கொள்வார்கள். இஹ்ராமுக்குரிய ஆடைகளை அணிந்து கொள்வார்கள். தாம் நிய்யத் வைக்கும் முறைக்கிணங்க நிய்யத் வைப்பார்கள். தல்பியாவை ஓதிக்கொள்வார்கள். பின்னர் தவாபுல் குதூம் என்ற சுன்னத்தான தவாபை மேற்கொள்வார்கள்.

துல்ஹஜ் பிறை 8 ஆம் நாள் லுஹருக்கு முன்பு மினாவிற்கு வந்து சேர்வார்கள். இங்கு லுஹர், அஸர், மஃரிப், இஷா, பஜ்ர் தொழுகைகளை

நபி (ஸல்) அவர்கள் செய்து காட்டிய முறையில் நிறைவேற்றுவார்கள். ஹாஜிகள் 9 ஆம் நாள் இரவு மினாவில் தரிப்பது சுன்னத்தானதாகும். துல்-ஹஜ் 9 ஆம் நாள் சூரியன் உதயமானதும் மினாவிலிருந்து அரபாவை நோக்கிப் புறப்பட வேண்டும். ஹஜ்ஜின் பிரதான கிரியைகளில் ஒன்றை நிறைவேற்றச் செல்வதே இதன் நோக்கமாகும். "ஹஜ் என்பது அரபாவில் தரித்தலாகும்." என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். அரபாவில் தரிப்பதற்கு முன்னர் குளித்துக் கொள்வது சுன்னத்தானதாகும். அன்று சூரியன் மறையும் வரை ஹாஜிகள் அரபாவில் தங்கியிருப்பர். சூரியன் உச்சியிலிருந்து நீங்கியதன் பின்னர் இமாம் மக்கள் மத்தியில் பிரசங்கம் நிகழ்த்துவார்.

துல்-ஹஜ் 9ஆம் நாள் சூரியன் மறைந்ததும் ஹாஜிகள் அமைதியாகவும் பணிவாகவும் முஸ்தலிபாவை நோக்கி புறப்பட ஆயத்தமாவார்கள். முஸ்தலிபாவில் தரிப்பதற்காக ஹாஜிகள் குளித்துக் கொள்வதும் சுன்னத்தானதாகும். ஆனால் கொஞ்ச நேரமாவது நடு நிசிக்குப் பின்னர் முஸ்தலிபாவில் தங்குவது வாஜிபானதாகும். இச்சந்தர்ப்பங்களில் ஹாஜிகள் துஆப் பிரார்த்தனையிலும் இதர வணக்கங்களிலும் ஈடுபடுவார்கள்.

துல்ஹஜ் 10ஆம் நாள் நடுநிசிக்குப் பின்னர் ஜம்ரதுல் அகபாவில் கல்லெறிவது வாஜிபாவதால் முஸ்தலிபாவில் அல்லது மினாவில் கற்களை பொறுக்கிக் கொள்வர். பஜ்ர் தொழுகையை நிறைவேற்றியதன் பின்னர் குளித்துக் கொண்டு ஜம்ரதுல் அகபாவை நோக்கி கல்லெறிவதற்குப் புறப்படுவர். தக்பீர் முழக்கத்துடன் 7 சிறிய கற்களையும் ஒவ்வொன்றாக எறிய வேண்டும். சக்தியற்றவர்கள் தமக்குப்பதிலாக இன்னொருவரை கல்லெறிய விடலாம். பின்னர் ஹாஜிகள் குர்பான் கொடுப்பார்கள். தலைமுடிகளை (மழித்தல் (ஹல்கு) அல்லது குறைத்தல்) - சிரைப்பார்கள் குர்பான் கொடுக்கும் போது தமது கரங்களாலேயே அதனை நிறைவேற்றுவதும், அதன் சிறு பகுதியை தாம் சாப்பிடுவதும் சுன்னத்தாகும். அதன் பின்னர் ஹாஜிகள் இஹ்ராம் உடையை மாற்றி சாதாரண உடையை அணிந்து கொள்வார்கள். இதற்குப் பின்னர் ஹஜ்ஜை முறிக்கும் காரியங்களில் உடலுறவு கொள்வது தவிர்ந்த ஏனைய அனைத்தும் அனுமதிக்கப்படுகிறது.

தவாபுல் இபாளாவை பிறை 11, 12 வரை பிற்படுத்தி தவாபுல் விதாவோடு நிறைவேற்ற முடியும். அதாவது பிறை 11, 12 ஆகிய தினங்களில் இரவில் மினாவில் தங்கி, ஒவ்வொரு தினங்களிலும் பொழுது சாய்ந்ததன் பின்னர் 3 ஜம்ராக்களிலும் கல்லெறிவார்கள். அதன் பின்னர் மக்கா வந்து தவாபுல் இபாளா, ஸஈ, தவாபுல் விதா ஆகியவற்றை முடிப்பார்கள். ஹஜருல்அஸ்வத் கல்லை ஆரம்பத் தலமாகக் கொண்டு க.்.பாவை தவாப் செய்வார்கள். தவாபை முடித்துக்கொண்டு மகாமு இப்ராஹீமுக்கு பின்னால் இரண்டு ரக்அத் தொழுவதும் சுன்னத்தாகும். துஆ, தல்பியா, ஸம்ஸம் நீர் அருந்துதல் என்பன ஹாஜிகளுக்கு சுன்னத்தாகும்.

தவாபின் பின்னர் ஹாஜிகள் அடுத்த பர்ளான கிரியையான ஸபா, மர்வாவிற்கிடையிலான ஸஈ எனும் தொங்கோட்டத்தை மேற்கொள்வர். ஸபாவில் ஆரம்பித்து மர்வாவில் முடிப்பர். மொத்தமாக இங்கு 7 தடவைகள் ஓடியிருக்க வேண்டும். ஸஈயின் போது வேகமாக, மெதுவாக ஓடக்கூடிய இடங்களில் அதற்குரிய ஒழுங்குமுறைகளைப் பின்பற்ற வேண்டும். தவாபிற்கோ ஸஈயிற்கோ உதவி தேவைப்படும்போது மற்றவர்களிடம் அதனைப் பெற்றுக் கொள்வதில் தவறில்லை.

ஹஜ்ஜின் பர்ளுகள் எவையேனும் விடுபட்டால் ஹஜ் செல்லுபடியாகமாட்டாது. திரும்பவும் நிறைவேற்றுதல் வேண்டும். ஹஜ்ஜின் வாஜிபுகளில் ஏதாவது ஒன்று விடுபட்டால் அதற்கு குர்பான் கொடுக்க வேண்டும். ஒரு வருடம் பூர்த்தியான செம்மறி ஆடு, ஆடு, இரண்டு வருடம் பூர்த்தியான வெள்ளாடு அல்லது மாடு, ஐந்து வருடம் பூர்த்தியான ஒட்டகம் என்பன குர்பானிக்குரிய கால்நடையாகும். மினாவில் பலியிடுவது சிறப்பானது. குர்பான் கொடுப்பதற்கு மிருகம் கிடைக்காவிட்டால் அல்லது பண வசதி அற்றவராக இருப்பின் அதற்கு ஈடாக மக்காவில் தங்கியிருக்கும் ஹஜ் காலத்தில் மூன்று நோன்பு நோற்பதோடு ஹஜ்ஜுக்குப் பின்னர் நாடு திரும்பிய பின்பு 7 நோன்பு நோற்றுக்கொள்ள வேண்டும். மனைவியுடன் உடல் உறவுகொண்டு ஹஜ்ஜை முறித்துக் கொண்டோர் ஓர் ஒட்டகம் அல்லது ஒரு மாடு அல்லது 7 ஆடுகள் குர்பான் கொடுத்தல் வேண்டும். ஹஜ்ஜை தொடர்ந்து நிறைவேற்றி விட்டு பின்னர் அதனைக் கழாச் செய்ய வேண்டும்.

## ஹஜ்ஜின் வரலாற்றுப் பின்னணியும் அதன் தாத்பரியங்களும்

ஹஜ் கடமை இஸ்லாத்தின் மிகப் பிரதான கடமையாக விளங்குகின்ற அதே நேரத்தில் நீண்ட வரலாற்றுப் பின்னணியைக்கொண்ட கடமையாகவும் உள்ளது. அதில் பொதிந்துள்ள கிரியைகள் ஆழமான தாத்பரியங்களைக் கொண்டனவாகவும் இருப்பதைக் கண்டுகொள்ள முடிகின்றது. விண்ணுலகிலுள்ள பைதுல் ம.்.முருக்கு நேராக பூவுலகில் க.்.பதுல்லாஹ்வை மலக்குகள் நிறுவிய திலிருந்து இதன் வரலாறு ஆரம்பமாகின்றது. இதனை அல்குர்ஆன் (3:96) தெளிவுபடுத்துகின்றது. ஆதம் (அலை) முதல் இறுதித் தூதர் முஹம்மத் (ஸல்) அவர்கள் வரையுள்ள நபிமார்கள் ரசூல்மார்களில் அனேகமானோர் மேற்படி ஆலயத்தின் வரலாற்றோடு தொடர்புபடுகின்றார்கள். க.்.பதுல்லாஹ்வின் வரலாற்றோடு அதிகமாக சம்பந்தப்படுகின்ற நபி இப்ராஹிம் (அலை) அவர்களாவார்கள். இப்ராஹீம் (அலை) அவர்களது குடும்பத்தின் வரலாறு, ஹஜ்ஜின் கிரியைகளுடன் தொடர்புபடுவதிலிருந்து இதனைப் புரிந்த கொள்ள முடிகின்றது.

அல்லாஹ்வின் தூதர் இப்ராஹீம் (அலை) அவர்கள் பிறப்பிலிருந்தே பல்வேறு சோதனைகளுக்கு உட்பட்டு தனது இலட்சியப் பாதையில் வெற்றி பெற்றவராவார். ஆரம்பமாக சிலைவடிக்கும் தனது தந்தையையும், சிலை வணக்கத்தை வளர்த்த

கொடுங்கோலன் நும்ரூத்தையும் எதிர்கொள்ளவேண்டி ஏற்பட்டது. இதற்கெதிரான தனது போராட்டத்தின் போது சோதனைகளுக்கு உட்பட்டபோதிலும் தனது வாழ்வை விட தனது பணிகளையே அவர் பெரிதாக மதித்தார். அடிமைப்படல், அர்ப்பணித்தல், தியாகம் செய்தல் என்பவற்றில் உயர்ந்து விளங்கினார். இதனை அல்குர்ஆன் பின்வருமாறு கூறுகின்றது. "நான் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டேன். அகிலத்தை இரட்சிக்கும் அல்லாஹ்வினுடையவனாக ஆகிவிட்டேன். என்னை நானே அவனிடம் ஒப்படைத்துவிட்டேன்" (2 : 131) ஹஜ்ஜை நிறைவேற்றுவோர் இவ்வாறானதொரு மனப்பாங்கோடுதான் தமது கடமைகளை நிறைவேற்ற முயற்சிப்பார்கள்.

அல்லாஹ்வுடைய கட்டளை எதுவோ அதனை நிறைவேற்ற நபி இப்ராஹீம் (அலை) அவர்கள் சித்தமாக இருந்தார்கள் என்பதை அவரது மனைவி ஹாஜரையும் குழந்தை இஸ்மாயீலையும் மக்காவில் அநாதரவான நிலையில் விட்டுச் சென்ற வரலாறு உறுதிப்படுத்துகின்றது. அல்லாஹ்வுக்குக் கட்டுப்படுகின்ற விடயத்தில் கணவனுக்கு ஒத்துழைக்கும் மனைவியின் முன்மாதிரியும் இங்கு எடுத்துக் காட்டப்படுகின்றது. ஒரு குடும்பம் சோதனைக்கு மத்தியிலும் இறை கட்டளைகளை நடை முறைப்படுத்துவதில் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்பதை இவ்வரலாறு சித்தரித்துக் காட்டுகின்றது. அல்குர்ஆன் நபி இப்ராஹீம் (அலை) அவர்களை ஒரு உம்மத் என அழைக்கின்றது. அதாவது ஒரு சமூகம் செய்யும் போராட்டத்தை அவர் தனித்து நின்று போராடிக் காட்டியது அதற்குக் காரணமாகும்.

அன்னை ஹாஜர் தம்மிடமிருந்த உணவும் நீரும் முடிந்ததன் பின்னர் சளைத்துவிடாமல் நீர் தேடும் முயற்சியில் ஈடுபட்ட வரலாறு மாபெரும் வரலாற்று நினைவொன்றையே தோற்றுவித்து விட்டது. ஸபா மர்வாவிற்கிடையில் ; நீரைத்தேடி ஓடிய அந்தத் தாய் தனது குழந்தை இஸ்மாயீலின் பாதங்களுக்குக் கீழால் வற்றாத ஸம்ஸம் நீர் ஊற்றைப் பெறும் பாக்கியத்தைப் பெற்றுக் கொள்கின்றார். இறுதிநாள் வரை இவ்வற்புத ஊற்று உலகத்தாருக்கு அத்தாட்சியாக இருந்து வருகின்றது. அல்லாஹ்வின் கட்டளைகளுக்கு அடிமைப்படுகின்றவர்கள், சோதனை களின் போது மனந்தளராது இருப்பவர்கள் அல்லாஹ்வினால் கைவிடப்பட மாட்டார்கள் என்பதற்கு இதைவிட சிறந்த எடுத்துக்காட்டு கிடையாது.

துல்ஹஜ் 9 ஆம் நாள் ‘யவ்மு அரபா’ என அழைக்கப்படுகின்றது. இத்தினத்தில் நபி இப்ராஹீம் (அலை) அவர்கள் தான் இன்னொரு சோதனைக்கு உட்படுத்தப்பட்டதை உணர்ந்து கொண்டார். தனது முதிய வயதில் பெற்றெடுத்த குழந்தை இஸ்மாயிலை அறுத்துப் பலியிடுமாறு கனவில் பல தடவைகள் கண்டமை அல்லாஹ்வினது வஹிதான் என்பதை இத்தினத்தில் புரிந்து கொண்டார்கள். எனவேதான் இத்தினம் ‘யவ்மு அரபா’ (அறிந்து கொண்ட நாள்) எனக் குறிக்கப்படுகின்றது. அல்லாஹ்வினுடைய கட்டளையை நிறைவேற்றுவதற்கு தந்தை, தாய், மகன் ஆகிய மூவரும் முன்வந்த வரலாறு அல்லாஹ்விற்குக் கட்டுப்படும் விடயத்தில் குடும்பங்கள் எவ்வாறு செயற்பட வேண்டுமென்பதை நிரூபிக்கின்றது.

இக்குடும்பம் அல்லாஹ்வின் கட்டளையை நிறைவேற்ற முயற்சித்த போது சைத்தானின் குறுக்கீடு ஏற்படவே சைத்தானுக்கு எதிரான போராட்டத்திலும் அக்குடும்பத்தினர் குதித்தார்கள். அதனையே ஹஜ்ஜின் கிரியைகளில் அடங்குகின்ற ஜம்ராக்களில் கல்லெறிதல் எனும் கிரியை எடுத்துக் காட்டுகின்றது. ஒரு முஸ்லிமின் வாழ்க்கை சைத்தானுக்கு எதிரான போராட்ட களமாகும். அதனையே மேற்படி வரலாறு ஹஜ்ஜில் புகட்டுகின்றது.

க.்.பத்துல்லாவின் புனர்நிருமாணத்தில் இப்ராஹீம் (அலை) ; இஸ்மாயில் (அலை) ஆகிய இருவரினதும் பங்கு மிக முக்கியமானதாகும். இதனை நினைவுகூருகின்ற வகையில் “மகாமு இப்ராஹீம்” என்ற அவர்களது பாதம் பதிந்த கல் இன்னும் பாதுகாக்கப்பட்டு வருகின்றது. தவாபை முடிக்கின்ற ஹாஜிகள் அதன் பின்னால் நின்று இரண்டு ரக்அத் சுன்னத்துத் தொழுவது குறிப்பிடத்தக்கதாகும். க.்.பாவின் நிருமாணம் ஒரே இறைவன், ஒரேகொள்கை என்ற இலக்கின் அடிப்படையில் தொழிற்படுகின்றவர்கள் என்ற கருத்தினை புலப்படுத்திக் கொண்டிருக்கின்றது.

தீய உணர்வுகளைக் கட்டுப்படுத்தி அல்லாஹ்வுக்காக எதனையும் நிறைவேற்ற சித்தமாக இருப்பதை ஹாஜிகள் தமது செயற்பாடுகளில் வெளிப்படுத்திக் காட்டுகின்றார்கள். ஹாஜிகளின் உடை, உணர்வுகள், தல்பியா கோஷங்கள் இதனைப் பிரதிபலிக்கின்றன. மறுமையை நினைவுபடுத்துகின்ற ஓர் அடிப்படைக் கடமையாகவும் இது உள்ளது. அத்துடன் நபி (ஸல்) அவர்கள் தனது உம்மத்தினருக்கு ஆற்றிய இறுதி ஹஜ் உபதேசத்தையும் புனித ஹஜ் கடமை நினைவுகூர்வதாக உள்ளது.

## ஹஜ்ஜின் பயன்கள்

### ஆன்மீகப் பயன்கள்

1. தக்வா-இறையச்சம் வளரும்
2. அர்ப்பணிப்பு,அடிமைப்படல்,தியாக உணர்வு என்பன வளரும்
3. பாவமன்னிப்பு கிடைக்கின்றது.
4. அதிக நன்மையும் சுவர்க்கமும் கிடைக்கின்றன.
5. முற்றிலும் அல்லாஹ்விடத்தில் தன்னைப் பாரஞ் சாட்டும் நிலை தோன்றுகின்றது.
6. மறுமை பற்றிய சிந்தனையைத் தோற்றுவிக்கின்றது.
7. இறை சிந்தனையுடன் வாழ வழி செய்கின்றது.
8. பிறருக்காக பிரார்த்திக்கவும் சிபார்சு செய்யவும் வாய்ப்புக் கிடைக்கின்றது.
9. கட்டுப்பாடான வாழ்க்கைக்கு வழிவகுக்கின்றது.

## லௌகீகப் பயன்கள்

1. உலகளாவிய முஸ்லிம் உம்மத்தில் நானும் ஒருவன் என்ற உணர்வை ஏற்படுத்துகின்றது.
2. சகோதரத்துவ உணர்வை வளர்க்கின்றது.
3. முஸ்லிம்களது தனித்துவத்தை வெளிப்படுத்திக் காட்டுகின்றது.
4. கூட்டு வாழ்க்கைக்கான பயிற்சியையும் மனப்பக்குவத்தையும் வழங்குகின்றது.
5. பிரயாண அனுபவம் ; வாழ்க்கையில் சிரமங்களை சகித்துக் கொள்ளும் பக்குவம் என்பன கிடைக்கின்றன.
6. உதவி செய்யும் மனப்பான்மையை வளர்க்கின்றது.
7. வேறுபாடுகளை நீக்கி மனித நேயத்தை வளர்க்கின்றது.
8. சர்வதேச சமாதானத்திற்கான வழி கிடைக்கின்றது.

## உம்ரா :

ஹஜ்ஜைப் போன்று க.்.பாவை தரிசித்து நிறைவேற்றுகின்ற ஓர் அமலே உம்ரா ஆகும். ஹஜ்ஜைப் போன்று இதனை குறிப்பிட்ட காலத்தில் நிறைவேற்ற வேண்டியதில்லை. ஹஜ்ஜின் பர்ளுகளில் அரபாவில் தரிப்பது தவிர்ந்த அனைத்தும் உம்ராவுக்குமுரியதாகும். உம்ராவின் சிறப்புப் பற்றி நபி (ஸல்) அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள். "(ஒருவர் இருமுறை உம்ராச் செய்தால்) அவ்விரண்டுக்குமிடைப்பட்ட குற்றங்களுக்கு இரண்டு உம்ராக்களும் குற்றப் பரிகாரமாகும்." (புஹாரி)

# உணவு, உடை, உறையுள்

அல்லாஹ் எல்லா உயிரினங்களுக்கும் உணவளிப்பது போன்று மனிதனுக்கும் உணவளிக்கின்றான். ஆனால் மனிதன் பகுத்தறிவுடையவனாக இருப்பதால் அவனுக்கு உணவில் ஹலால் ; ஹராம்களை விதித்துள்ளான். ஆதலால் மனிதன் இஸ்லாம் விதித்துள்ள ஒழுங்குமுறையின்படி ஹலாலான முறையில் தனது உணவு முறையை அமைத்துக் கொள்ள வேண்டும்.

மனிதன் தனது உயிருக்கோ, உடலுக்கோ, அறிவுக்கோ, ஆன்மாவுக்கோ தீங்கு விளைவிக்கக்கூடிய எதனையும் உண்ணவோ பருகவோ கூடாது. இஸ்லாம் அனுமதிக்காத ஹராமான பொருள்களின் வட்டம் மிகக் குறுகியதாகவே உள்ளது. இஸ்லாம் அனுமதித்த ஹலாலானவற்றின் வட்டம் மிக விசாலமானதாக உள்ளது. ஆகவே மனிதன் ஹலாலானவற்றை மாத்திரம் உண்பது சிரமமானதல்ல.

ஹலாலானவற்றை உண்பது ஓர் இபாதத் ஆகும். மாறாக ஹராமானவற்றை உண்பது பாவமாகும். ஏனெனில் அல்குர்ஆனும், ஸுன்னாவும் ஹலாலானவற்றை உண்ணுமாறும் ஹராமானவற்றை உண்ணாதிருக்குமாறும் கட்டளையிட்டுள்ளன.

"மனிதர்களே, பூமியிலுள்ளவற்றில் (புசிக்க உங்களுக்கு) அனுமதிக்கப்பட்ட பரிசுத்தமானவற்றையே புசியுங்கள். சைத்தானின் அடிச்சுவட்டைப் பின்பற்றாதீர்கள" (2:168) என்றும், "விசுவாசிகளே நாம் உங்களுக்கு அளித்தவற்றில் பரிசுத்தமானவற்றையே புசியுங்கள்"(2:172) என்றும் அல்குர்ஆன் குறிப்பிடுகின்றது.

"ஹராத்தை உட்கொண்டு வளர்ந்த எந்த உடம்பும் சுவர்க்கம் நுழையாது. ஹராத்தை உண்டு வளர்ந்த உடலனைத்தும் நரகுக்கே தகுதியானவை" (பைஹகி, திர்மிதி) என ஹதீஸ் எச்சரிக்கின்றது.

ஹராமான உணவுகளை நாம் இரண்டு வகையாகப் பிரிக்கலாம். ஒன்று, இயல்பில் ஹராமானவை. இதற்கு செத்தவை, பன்றி போன்றவற்றை உதாரணமாகக் குறிப்பிடலாம். அடுத்தது, பெற்றுக் கொள்ளும் முறையில் ஹராமானவை. வட்டி, சூது போன்ற உழைப்பு மூலம் கிடைக்கப் பெற்றவை இதற்கு உதாரணமாகும்.

இஸ்லாத்தில் இயல்பிலேயே உண்பதற்கு அனுமதிக்கப்படாத ஹராமானவைகளைப் பொதுவாகப் பின்வரும் அட்டவணையில் அடக்கலாம்.

1. தப்ஹு செய்யப்படாமல் செத்தவை – (மீன்,வெட்டுக்கிளி தவிர)
2. இரத்தம்
3. நர மாமிசம்
4. நஜீஸானவை – நாய் ,பன்றி போன்றவை
5. அருவருக்கத்தக்கவை – புழு, சளி, விந்து போன்றவை
6. நகங்களால் பற்றிச் சாப்பிடும் பறவைகள்- பருந்து,கழுகு போன்றவை
7. வீரப்பற்களால் வேட்டையாடும் விலங்குகள் - சிங்கம், பூனை போன்றவை
8. கொல்லுமாறு ஏவப்பட்டவை – பாம்பு, தேள், பல்லி போன்றவை
9. கொல்லக்கூடாதென தடுக்கப்பட்டவை – தேனீ, தவளை போன்றவை
10. ஏறிச் சவாரி செய்யப் பயன்படுத்துபவை – ஒட்டகம், குதிரை தவிர

இவற்றிலடங்காத, ஹலாலான வட்டத்திலடங்கும் ஏனைய உயிர்ப் பிராணிகள், தாவரங்கள்,இவையல்லாத ஏனைய அனைத்தும், உண்ணப்படும் போது அதனைப் பெற்றுக் கொண்ட முறை கவனிக்கப்படல் வேண்டும்.

எமது துஆக்கள் அங்கீகரிக்கப்படவும், எமது செயற்பாடுகள் நல்லதாக அமையவும் காரணமாக அமைகின்ற ஹலாலான உணவையே உட்கொள்வோம். ஹராமானவற்றிலிருந்து விலகிக் கொள்வோம்.

ஹலாலான உணவைத்தேடுவது போன்றே, இஸ்லாம் விதித்த ஒழுங்கு முறையின்படி உணவை உட்கொள்ளவும், பானங்களை அருந்தவும் வேண்டும். ஏற்கனவே உணவு உட்கொள்ளும் முறைகளை நீங்கள் கற்றிருப்பதால் அவை இங்கு விபரிக்கப்படவில்லை.

ஹலாலான உயிர்ப்பிராணிகள் உரிய முறைப்படி தப்ஹு (அறுத்தல்) செய்யப்படுவதற்கு பல விதிகள் இருப்பது போன்றே வேட்டையாடி உண்பதற்கும் விதிகள் உள்ளன.

கூர்மையான ஆயுதம் மூலமோ வேட்டைநாய் மூலம் வேட்டையாடும் போதோ வேட்டையாடப்பட்ட பிராணியின் உயிர் பிரியுமுன் தப்ஹு செய்வது கடமையாகும்.

அல்லாஹ்வின் பெயர் கூறி எறியப்பட்ட ஆயுதத்தின் கூர்முனை தாக்கி, தப்ஹு செய்யுமுன் ஓர் உயிர்ப்பிராணி இறந்துவிட்டால் அதனைச் சாப்பிடுவதில் தவறில்லை. ஆனால், ஆயுதத்தின் கூர்முனையன்றி அதன் மறுபகுதியால் தாக்கப்பட்டு அறுக்கு முன்னரே உயிர்ப்பிராணி இறந்துவிடுமாயின் அதனைச் சாப்பிடுவது ஹராமாகும்.

## உடை தொடர்பான இஸ்லாமிய விதிமுறைகள்

ஒரு முஸ்லிமின் தோற்றமும் ஆடையும் அழகானதாகவும் ஒழுக்கமானதாகவும் கண்ணியமானதாகவும் அமைதல் வேண்டும் என இஸ்லாம் விரும்புகிறது. அல்குர்ஆனின் பார்வையில் ஆடை அணிதலுக்கு இரண்டு நோக்கங்கள் காணப்படுகின்றன. உடலையும் மானத்தையும் மறைத்தல், தோற்றத்தை அழகுப்படுத்தல் என்பனவே அவையாகும். பின்வரும் அல்குர்ஆன் வசனம் அந்நோக்கங்களை கோடிட்டுக்காட்டுகிறது.

"ஆதமுடைய மக்களே! உங்களுடைய மானத்தை மறைக்கக்கூடியதும் (உங்களை அலங்கரிக்கக் கூடியதுமான ஆடைகளை நிச்சயமாக நாம் உங்களுக்கு அருள்புரிகின்றோம்" (7:26)

உடையின் இந்நோக்கங்கள் உதாசீனப்படுத்தப்படக்கூடாது என்ற கருத்தை உறுதிப்படுத்துவதாக பின்வரும் வசனங்கள் அமைந்துள்ளன.

"ஆதமுடைய மக்களே! ஷைத்தான் உங்கள் தாய், தந்தையை (அவர்கள் இன்பமுடன் வசித்து வந்த) சுவனத்திலிருந்து வெளியேற்றி (துன்பத்திற் குள்ளாகியது போல உங்களையும் துன்பத்திற்குள்ளாக்கிவிட வேண்டாம்." (7:27)

ஆதமுடைய மக்களே! தொழும் இடத்திலெல்லாம் (ஆடைகளால்) உங்களை அலங்கரித்து கொள்ளுங்கள்" (7:31)

அலங்காரத்தில், அழகிய தோற்றத்தில் கவனம்செலுத்தும் இஸ்லாம் அவற்றுக்கு அடிப்படையாக அமைகின்ற சுத்தத்தில் கூடுதல் கரிசனை காட்டுகின்றது. இதனை பின்வரும் ஹதீஸ் உறுதிப்படுத்துகின்றது.

"நபி (ஸல்) அவர்கள் அழுக்கடைந்த ஆடைகள் அணிந்திருந்த ஒரு மனிதனைக் கண்டார்கள். தனது ஆடையைக் கழுவிக் கொள்வதற்கு எதுவும் இவருக்கு கிடைக்கவில்லையா? என வினவினார்கள்" (அபூதாவுத்)

மனிதன் அழகிய தோற்றத்தில், சுத்தமான, தனது தரத்திற்கு ஏற்ற ஆடைகளுடன் காட்சியளிப்பதை இஸ்லாம் விரும்புகின்றது என்பதையே இத்தகைய குர்ஆன் வசனங்களும் ஹதீஸ்களும் எமக்கு தெளிவுபடுத்துகின்றன. இக்கருத்தை உறுதிப்படுத்தும் வேறுபல ஹதீஸ்களும் காணப்படுகின்றன. உதாரணத்திற்காக ஒரு ஹதீஸ் இங்கு தரப்படுகின்றது.

"சாதாரண ஆடைகளுடன் ஒரு மனிதர் நபி (ஸல்) அவர்களை சந்திக்க வந்தார். உன்னிடத்தில் செல்வம் உண்டா? என நபி (ஸல்) அவர்கள் அம்மனிதனிடத்தில் வினவினார்கள். அவர் ஆம் என்றார். எவ்வகையான செல்வம்

உன்னிடத்தில் காணப்படுகின்றது? என நபி (ஸல்) அவர்கள் திரும்பவும் வினவிய போது எல்லா வகையான செல்வங்களையும் அல்லாஹ் எனக்கு வழங்கியுள்ளான் என அம்மனிதர் பதிலளித்தார். அப்போது நபி (ஸல்) அவர்கள் அதன் அடையாளம் உன்னில் வெளிப்படுங்காலமெல்லாம் அல்லாஹ் உனக்கு செல்வத்தை வழங்கி உன்னை கண்ணியப்படுத்தி வருவான் என குறிப்பிட்டார்கள்." (நஸாஈ)

இஸ்லாம் ஆடையை பொறுத்த வரையில் ஆண்களுக்கும் பெண்களுக்கும் சில வரையறைகளை ஏற்படுத்தியுள்ளது.

ஆண்களைப் பொறுத்த வரை இருவகையான அலங்காரங்களை இஸ்லாம் அவர்களுக்குத் தடை செய்துள்ளது.

1. தங்க ஆபரணங்களை அணிதல்
2. தூய பட்டினாலான ஆடைகளை அணிதல்

அலி (றழி) அவர்கள் கூறுகின்றார்கள் : "நபி (ஸல்) அவர்கள் பட்டை தனது வலக்கரத்தில் ஏந்திக் கொண்டார்கள். தங்கத்தை தனது இடக்கரத்தில் ஏந்திக் கொண்டார்கள். பின்னர் இவ்விரண்டும் எனது சமூகத்திலுள்ள ஆண்களுக்கு ஹராமாகும் என குறிப்பிட்டார்கள்" (அஹ்மத்)

உமர் (றழி) அவர்கள் கூறுகின்றார்கள் "பட்டை அணியாதீர்கள். யார் உலகில் அதனை அணிகின்றாரோ அவர் மறுமையில் இதனை அணியமாட்டார்" என நபி (ஸல்) அவர்கள் கூற நான் செவியுற்றேன்" (புஹாரி)

> "ஒரு தடவை நபி (ஸல்) அவர்கள், ஒரு மனிதன் தங்கமோதிரம் ஒன்றை அணிந்திருப்பதைக் கண்டார்கள். அதனை அவர்கள் அவனிடமிருந்து களைந்து எறிந்தார்கள். பின்னர் "உங்களில் ஒருவர் நெருப்புத் தணலை நாடிச் சென்று அதனைத் தனது கரத்தில் அணிந்து கொள்வதா?" என வினவினார்கள். நபி (ஸல்) அவர்கள் அவ்விடத்தை விட்டு அகன்ற பின், 'உனது மோதிரத்தை எடுத்து அதிலிருந்து பிரயோசனம் பெற்றுக் கொள்!' என பக்கத்திலிருந்தோர் அம்மனிதனுக்கு கூறினர். அப்போது அம்மனிதன், முடியாது 'அல்லாஹ்வின் மீது சத்தியமாக அல்லாஹ்வின் தூதர் அதனை எறிந்துள்ள நிலையில் நான் அதனை திருப்பி எடுக்க மாட்டேன்" எனக் கூறிவிட்டார்." (முஸ்லிம்)

தங்க மோதிரம் அணிவது ஹராமாக இருப்பது போலவே, தங்கப் பேனா, தங்க கடிகாரம் போன்றவற்றையும் பயன்படுத்துவதும் ஆண்களுக்கு ஹராம் ஆகும்.

ஆண்களுக்கு வெள்ளி மோதிரம் அணிய அனுமதி உண்டு, 'நபி (ஸல்) அவர்கள் வெள்ளியினாலான ஒரு மோதிரத்தை அணிந்தார்கள். அது அவர்களது

கரத்தில் இருந்தது. பின்னர் அது அபூபக்கர் (றழி) அவர்களது கரத்தில் காணப்பட்டது. தொடர்ந்து அது உமர் (றழி) அவர்களது கரத்தில் காணப்பட்டது. அதனையடுத்து 'அரீஸ்' என்ற கிணற்றினுள் அதுவிழும் வரை உஸ்மான் றழி அவர்களது கரத்தில் காணப்பட்டது' (புஹாரி)

பெண்கள் பொதுவாக அழகை விரும்புபவர்கள் என்ற ரீதியில் அவர்களுக்கு தங்கமும் பட்டும் தடைசெய்யப்படவில்லை. ஆனால் தங்க, வெள்ளிப் பாத்திரங்களை பயன்படுத்த ஆண்களுக்குப் போலவே பெண்களுக்கும் அனுமதி வழங்கப்படவில்லை.

பெண்ணின் ஆடையைப் பொறுத்த வரை அது எவ்வாறு அமைய வேண்டும் என்பதற்கான வரையறைகளை இஸ்லாம் விதித்துள்ளது.

1. அல்குர்ஆன் "வெளியே தெரியக் கூடியவை தவிர" என விலக்களித்துள்ள பகுதியைத் தவிர உடம்பின் ஏனைய அனைத்துப் பகுதிகளையும் மறைக்கக் கூடியதாக பெண்களின் ஆடை அமைதல் வேண்டும்.

"நபியே! விசுவாசமுள்ள பெண்களுக்கும் நீர் கூறும், அவர்கள் தங்கள் பார்வையை கீழ் நோக்கியே வைத்து, தங்கள் கற்பையும் இரட்சித்துக் கொள்ளவும். அன்றி தங்கள் தேகத்தில் (பெரும்பாலும்) வெளியில் தெரியக் கூடியவைகளைத் தவிர தங்கள் அழகையும் (ஆடை, ஆபரணம் போன்ற) அலங்காரத்தையும் வெளிக்காட்டாது மறைத்துக் கொள்ளவும். தங்கள் முந்தானைகளால் மார்பையும் மறைத்துக் கொள்ளவும்..." (24:31)

இங்கு வெளியே தெரியக் கூடியவை என்பது தவிர்க்க முடியாது வெளியில் தெரியும் உடற் பகுதியையே குறிக்கும் என்பது இப்னு மஸ்ஊத் (றழி) அவர்களது விளக்கமாகக் காணப்படுகிறது.

"வெளியே தெரியக் கூடியவை" என்பது முகத்தையும் மணிக் கட்டுக்குக்கீழ் இரு கைகளையும் குறிக்கும் என இப்னு உமர் (றழி) விளக்கம் அளித்துள்ளார். இக்கருத்தை சில இஸ்லாமிய அறிஞர்கள் கொண்டுள்ளனர். இக்கருத்தின் படி, பெண்ணின் முகமும் ; மணிக்கட்டுக்குக் கீழ் இரு கைகளும் தவிர அவளது உடம்பின் ஏனைய அனைத்துப் பகுதிகளும் மறைக்கப்பட வேண்டும். எனினும் பெண்ணின் முகம், மணிக்கட்டுக்கை உட்பட உடம்பின் அனைத்துப் பகுதிகளும் அவ்ரத் என்ற கருத்தையுடைய இஸ்லாமிய அறிஞர்களும் உள்ளனர்.

2. ஆடை உள்ளே உள்ளவற்றை வெளிக்காட்டுவதாக அமையக் கூடாது

"இரு சாரார் நரகவாதிகளாவார்; அவர்களுக்கு நான் சாட்சியாக இருக்க மாட்டேன். அவர்களுள் ஒரு சாரார், மாட்டின் வாலைப் போன்ற சாட்டைகளை வைத்திருப்பர். அவற்றைக் கொண்டு மக்களை அவர்கள் அடிப்பர். மறுசாரார் ஆடை அணிந்த நிலையில் நிர்வாணமாக இருக்கும் பெண்களாவர். அவர்கள் தீய வழியில்

செல்வதுடன் பிறரையும் தீய வழியில் செலுத்துவர். அவர்களின் தலைகள் ஆடி அசையும் ஒட்டகைகளின் திமில்களைப் போன்று காணப்படும். இத்தகையவர்கள் சுவனம் நுழையமாட்டார்கள். அதன் வாடையைக் கூட நுகர மாட்டார்கள்'' (முஸ்லிம்)

"ஆடை அணிந்தும் நிர்வாணமாக இருக்கும் பெண்கள் என்று குறிப்பிடக் காரணம் அவர்கள் அணிந்திருக்கும் ஆடைகள் உடலை மறைக்கின்ற பணியை நிறைவேற்றவில்லை. அவ்வுடைகள் மெல்லியவைகளாக காணப்படு வதனால் அவ்வுடைகளினூடாக உடம்பின் அழகு வெளிக்காட்டப்படுகின்றது. இவ்வாறான உடையணிந்த பெண்ணை அவதானித்த ஆயிஷா (றழி) ; நூர் எனும் அத்தியாயத்தை இவள் விசுவாசிக்கவில்லை என குறிப்பிட்டார்கள்" (தப்ஸீர் குர்துபி)

3. அங்கங்களின் பருமனை, கவர்ச்சியை, அழகை பிரதிபலித்துக் காட்டுவதாக ஆடை அமையக் கூடாது. அதாவது ஆடை இறுக்கமானதாக அமையக் கூடாது. மெல்லிய ஆடைகளைப் போலவே இறுக்கமான ஆடைகளும், உணர்ச்சியை தூண்டக் கூடியவை. எனவே இவற்றை அணியும் பெண்களும் ஹதீஸ் குறிப்பிடும். "ஆடை அணிந்தும் நிர்வாணமாக இருக்கும் பெண்கள்" வரிசையில் இடம் பெறுவர்.

4. ஆண்களுக்கே உரிய ஆடையாக பெண்களின் ஆடை இருக்கக்கூடாது. ஏனெனில் பெண்களின் ஆடைகளை அணியும் ஆண்களையும், ஆண்களின் ஆடைகளை அணியும் பெண்களையும் நபி (ஸல்) அவர்கள் சபித்துள்ளார்கள்.

5. "நறுமணம் பூசப்பட்டதாக ஆடை அமையக் கூடாது, ஒரு பெண் வீட்டிலிருக்கும் போது அதாவது மஹ்ரமீக்களுக்கு முன்னால் இருக்கும் போது மணம் பூசிக் கொண்டிருக்க அனுமதி உண்டு. ஆனால் வீட்டைவிட்டு வெளியே செல்லும் போது நறுமணம் பூசிக்கொண்டு செல்ல அவள் அனுமதிக்கப்படவில்லை.

"ஒரு பெண் நறுமணம் பூசி ; அதனை ஒரு கூட்டத்தினர் நுகரும் வகையில் கடந்து செல்வாளாயின் அவள் ஒரு விபச்சாரியாவாள். அவளைப் பார்க்கின்ற ஒவ்வொரு கண்ணும் விபச்சாரம் செய்கின்றது," என நபி (ஸல்) அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள் (நஸாஈ)

6. ஆடை, ஆணவத்தையும் பிரபல்யத்தையும் வெளிக்காட்டக் கூடியதாக அமையக் கூடாது:- உணவு, உடை ஆகியனவற்றுக்கு இஸ்லாம் விதிக்கும் பொதுவான நிபந்தனைகள் இரண்டு உள்ளன. அவை விரயமும் தற்பெருமை யும் தவிர்க்கப்பட வேண்டும் என்பதாகும். எனவே தான் நபி (ஸல்) அவர்கள், ''யார் பிரபல்யமான ஆடையை அணிகின்றாரோ அல்லாஹ் அவருக்கு மறுமையில் இழிவான ஆடையை அணிவிப்பான்" எனகுறிப்பிட்டார்கள். (அஹ்மத்)

மக்கள் ஆடையை வைத்து மனிதர்களின் தரத்தை மட்டிடுவர். எனவே நாம் எம்மைப் பற்றி அடுத்தவர்கள் தவறான எண்ணங்கொள்ள சந்தர்ப்பம் வழங்கக் கூடாது. ‘ஒரு மனிதர் ஒரு ஸஹாபியிடம் ‘நான் ஆடைகளில் எதனை அணிவது என வினவிய போது, "அறிவிலிகள் உன்னைப் பார்த்து பரிகசிக்காத, அறிவுடையோர் உன்னைக் குறை கூறாத ஆடைகளை அணிந்து கொள்" என பதிலளித்தார்.

பெண்ணின் ஆடைக்குப் போலவே ஆண்களின் ஆடைக்கும் நிபந்தனைகள் உள்ளன. அவையாவன:-

1. அவ்ரத்தை மறைக்கக் கூடியதாக இருத்தல்:- ஆணின் தொப்புளுக்கும் முழங்காலுக்கும் இடைப்பட்ட பகுதி அவனது அவ்ரத்தாகும். ஆதலால் அவன் அணியும் ஆடை இப்பகுதியை மறைக்கக் கூடியதாக அமைதல் வேண்டும்.

2. பெண்களுக்கே உரிய ஆடையாக அது இல்லாதிருக்க வேண்டும்.

3. பெருமைக்குரிய ஆடையாக இல்லாதிருக்க வேண்டும்.

ஆடை அணியும் போது கருத்தில் கொள்ள வேண்டிய சில ஒழுங்குகளை நோக்குவோம்.

1. ஆடை அணியும் போது வலப்பக்கத்தை முற்படுத்தல்.

2. செருப்பை அணியும் போது வலதையும் கழற்றும் போது இடதையும் முற்படுத்துதல்

   உங்களில் ஒருவர் செருப்பை அணியும் போது வலப்பக்கத்தில் இருந்து ஆரம்பிக்கட்டும். களையும் போது இடப்பக்கத்தில் இருந்து ஆரம்பிக்கட்டும். வலது காலுக்கானது முதலில் அணிவிக்கப்படுவதாகவும், இறுதியில் களைவதாகவும் இருக்கட்டும் (முஸ்லிம்)

3. ஆடை அணியும் போது ஓத வேண்டிய துஆவை ஓதிக்கொள்ளல்

4. புதிய ஆடையை அணியும் போது அதற்குரிய துஆவை ஓதுதல்.

5. ஒரு முஸ்லிம் புத்தாடை அணிந்திருப்பது கண்டால் அவரை வாழ்த்துதல்.

## வீட்டு வாழ்க்கை தொடர்பான இஸ்லாமிய ஒழுங்குகள்

முஸ்லிம் சமூக அமைப்பின் நிர்மாணத்தில் வீட்டின் பங்கு இன்றியமையாதது என்ற கருத்தை இஸ்லாம் கொண்டுள்ளது. எனவே வீட்டுக்கு அது, தனியான ஓர் அந்தஸ்தை வழங்கியுள்ளது.

> "அல்லாஹ் உங்களுடைய வீடுகளை உங்களுக்கு அமைதியளிக்கும் இடமாக ஆக்கினான்" (16:80)

வீடு நிம்மதி, பாதுகாப்பு, சமாதானம், அன்பு என்பவற்றின் அரணாக, நற்பணிகளின், நற்பண்புகளின் உறைவிடமாக, சமூகத்துக்கு தேவையான கல்விமான்களை, தியாகிகளை உருவாக்கும் நிறுவனமாக அமைய வேண்டுமென இஸ்லாம் எதிர்பார்க்கின்றது.

வீடு மேற்குறிப்பிடப்பட்ட பணிகளை நிறைவேற்ற வேண்டுமாயின் அதன் பௌதிக சூழல், ஆன்மீக சூழல், அதன் உறுப்பினர்களது பொறுப்புக்கள், கடமைகள், உரிமைகள் என்பவற்றில் உரிய கவனம் செலுத்தப்படுவது அவசியமாகும்.

வீட்டின் பௌதிக அமைவிடமும் சூழலும்

1. வீடு தேவைக்கு ஏற்றதாக, விசாலமானதாக இருத்தல்:- "நான்கு விடயங்கள் அதிஷ்டத்தில் அடங்கக் கூடியவை. அவை நல்ல மனைவி, விசாலமான வீடு, நல்ல அயலான், சிறந்த வாகனம் என்பன" (நஸாஈ)

2. வீட்டுச் சுத்தத்தில் கவனம் செலுத்துதல்:- ஒரு நீண்ட ஹதீஸின் இடையே நபி (ஸல்) அவர்கள் ; “உங்களது வீட்டு முற்றங்களை சுத்தமாக வைத்திருங்கள்” (திர்மிதி) என குறிப்பிட்டுள்ளார்கள்.

3. வீட்டின் அழகில், நேர்த்தியில் கவனம் செலுத்துதல்:- "நபியே நீர் கேட்பீராக. அல்லாஹ் தன் அடியார்களுக்காக வெளிப்படுத்தியுள்ள அழகையும், உணவு வகைகளில் தூய்மையனாவற்றையும் தடுத்தது யார்?" (7:32)

4. வீட்டின் உள், வெளிச் சூழலை அழகாக வைத்திருத்தல்:- "ஒரு முஸ்லிம் விவசாயம் செய்கிறார், அல்லது பயிர்களை நடுகிறார், அதிலிருந்து பறவைகளோ அல்லது மனிதர்களோ பிராணிகளோ சாப்பிட்டாலும் அது அந்த மனிதருடைய தர்மமாக கணிக்கப்படுகின்றது" (முஸ்லிம்)

5. வீட்டில் பயன்படுத்தப்படும் தளபாடங்கள், உபகரணங்கள், பாத்திரங்கள், இதரபொருட்கள் ஆகிய யாவும் இஸ்லாமிய வரையறைகளுக்கு உட்பட்டவைகளாக இருத்தல்.

பௌதிக சூழல் என்பன மாத்திரம் ஒரு சிறந்த குடும்பத்தின் உருவாக்கத்துக்கு, ஒரு நல்ல வீட்டின் நிர்மாணத்துக்கு காரணமாக அமையமாட்டா. நல்ல வீட்டின் உருவாக்கத்துக்கு வேறு பல நடவடிக்கைகளும் தேவைப்படுகின்றன.

1. தம்பதிகளைத் தெரியும்போது நற்பண்புகளுக்கும் ஈமானுக்கும் முதலிடம் அளித்தல். 'மார்க்கமுள்ள பெண்ணை அடைந்து கொள்வீராக. இன்றேல் அழிந்து விடுவீர்' (புஹாரி)

2. கணவன்-மனைவி ஒவ்வொருவரும் அடுத்தவர்கள் மீதான கடமைகளை நிறைவேற்றல்.

3. பெற்றோர் - பிள்ளைகள் மீதான தமது கடமைகளை ஒழுங்காக நிறைவேற்றுதல்.

4. பிள்ளைகள், பெற்றோர் மீதான கடமைகளை செவ்வனே நிறைவேற்றுதல்.

5. குடும்ப உறவினர்களுக்கிடையில் சுமுகமான உறவைப் பேணுதல்.

6. அயலவர்களது உரிமைகளை மதித்து நடந்து கொள்ளுதல். 'ஜிப்ரீல் (அலை) அவர்கள், அண்டை வீட்டாருடன் நல்ல முறையில் நடந்து கொள்ளுமாறு தொடர்ந்து வலியுறுத்திய வண்ணமே இருந்தார்கள். எந்த அளவுக்கெனில், அவர் அண்டை வீட்டாரை சொத்தில் வாரிசாக்கி விடுவாரோ என்று நான் நினைக்கலானேன்" (புஹாரி) "அபூதர்! நீர் குழம்பு சமைத்தால் தண்ணீரை அதில் அதிகப்படுத்தி விடும். உன் அண்டை வீட்டாரையும் கவனியும்' (முஸ்லிம்)

7. விருந்தாளிகளது உரிமைகள் மதிக்கப்படல்

   "அல்லாஹ்வின் மீதும் மறுமை நாளின் மீதும் நம்பிக்கை வைத்திருப்போர் தம் விருந்தாளிகளை உபசரிக்கட்டும். முதல் நாள் அன்பளிப்புக்குரிய தினமாகும். (அதில் மிக சிறந்த உணவை விருந்தாளிக்கு வழங்க வேண்டும்.)

   "விருந்துபசாரம் மூன்று நாட்கள் வரையுண்டு. அதற்கு பின் அவர் செய்யும் உபகாரம் அனைத்தும் அவருக்கு தர்மமாகும். விருந்தாளி தனக்கு விருந்தளிப்பவரை நெருக்கடியிலும் கவலையிலும் ஆழ்த்தும் அளவிற்கு அவரிடம் தங்கியிருக்கக் கூடாது" (புஹாரி)

8. வீட்டு விவகாரங்கள் அனைத்திலும் இஸ்லாமிய வழிகாட்டலை பின்பற்றல்.

"விசுவாசிகளே ! உங்கள் அடிமைகளும், உங்களில் பருவம் அடையாத (சிறிய) பிள்ளைகளும் (நீங்கள் திரைக்குள் அந்தரங்கமாக இருக்கும் நேரங்களில்) உங்களிடம் (வருவதாயின், உங்களுடைய) அனுமதியை மூன்று தடவைகள் கோர வேண்டும். அவை பஜ்ரு தொழுகைக்கு முன்னரும் (படுக்கைக்காக உங்கள் மேல் மிச்சமான) ஆடைகளைக் களைந்திருக்கக் கூடிய லுஹர் வேளையிலும் "இஷா" த் தொழுகைக்குப் பின்னருமாகிய (இம்) மூன்று நேரங்களும் நீங்கள் திரைக்குள் அந்தரங்கமாக இருக்கக் கூடிய நேரங்கள். இவற்றைத் தவிர (மற்ற நேரங்களில் உங்கள் அனுமதியின்றியே அவர்கள் உங்களிடம் வருவது) அவர்கள் மீது குற்றமல்ல. உங்கள் மீதும் குற்றமல்ல... "(24:58)

வீட்டை இஸ்லாமிய முறைப்படி வழிநடத்திச் செல்வதற்கு அதன் ஆன்மீக சூழல் தான் பாரிய பங்களிப்பை வழங்கும். ஆகவே அந்த ஆன்மீக சூழலைப் பாதுகாப்பதற்கான நடவடிக்கைகள் கட்டாயமாக எடுக்கப்பட வேண்டும். அதற்காக பின்வரும் நடைமுறைகளை கடைப்பிடிக்கலாம்.

1. ஐவேளைத் தொழுகைகளை ஜமாஅத்தாக நிறைவேற்றுவதில் கவனம் செலுத்துதல்.

‘ஒரு மனிதன் வழமையாக மஸ்ஜிதுடன் தொடர்பை வைத்திருப்பதனை நீங்கள் கண்டால், அவனுக்கு ஈமான் இருக்கிறது என்பதற்கு நீங்கள் சாட்சிகளாக இருங்கள்’ (ஹில்யா)

2. வீட்டில் சுன்னத்துத் தொழுகைகளை நிறைவேற்றுதல்

ஆண்கள் சில சுன்னத்துக்களையாவது வீட்டிலும் தொழ வேண்டும்.

“உங்களது ஸுன்னத்து தொழுகைகளில் சிலவற்றை வீட்டிலும் வைத்துக் கொள்ளுங்கள். அவற்றை புதை குழிகளாக ஆக்கி விடாதீர்கள்’’ (முஸ்லிம்)

"ஒரு மனிதனுக்கு அல்லாஹ் அருள்பாலிக்கட்டும். அவன் இரவில் தூக்கத்திலிருந்து எழுந்து தொழுகிறான். தனது மனைவியை எழுப்புகிறான். அவள் எழும்ப மறுக்கின்ற போது அவளது முகத்திலே நீரைத் தெளிக்கிறான். ஒரு பெண்ணுக்கு அல்லாஹ் அருள்பாலிக்கட்டும். அவள் இரவிலே தூக்கத்திலிருந்து எழுந்து, தொழுகின்றாள். பின்னர் தனது கணவனை எழுப்புகிறாள். அவன் எழும்ப மறுத்தால் அவனது முகத்திலே நீரைத் தெளிக்கின்றாள்". (அபூதாவுத்)

3. வீட்டில் அல்குர்ஆனை வழமையாக ஓதிவருதல்:-

"உங்களது வீடுகளை புதைகுழிகளாக ஆக்கிக்கொள்ளாதீர்கள். "ஸூரா அல்பகரா" ஓதப்படும் வீடுகளில் இருந்து ஷைத்தான் வெருண்டோடுகிறான்" (முஸ்லிம்)

4. இறை சிந்தனையை வளர்த்து விடக்கூடிய நிகழ்ச்சிகளை (திக்ர், தஜ்வீத் வகுப்பு, பயான்) ஏற்பாடு செய்தல். "அல்லாஹ்வை ஞாபகப்படுத்தப்படுகின்ற வீட்டுக்கு உதாரணம் ; உயிருள்ளவனும் அல்லாஹ்வை ஞாபகப்படுத்தாத வீட்டுக்கு உதாரணம் உயிரற்றவனுமாவர்" (முஸ்லிம்)

மேற்குறிப்பிட்ட அனைத்து அம்சங்களிலும் ஒரு முஸ்லிம் கவனம் செலுத்தும் போதே இஸ்லாமிய வீடு உருவாக முடியும்.

# குர்பானிகள்

அல்லாஹ், தனது அருளின் காரணமாக சிலருக்கு செல்வத்தை வழங்குகின்றான். அதே நேரத்தில் அவர்கள் தனது செல்வத்தை பயன்படுத்துவதற்கான சில நடைமுறைகளையும் ஏற்படுத்தி வைத்திருக்கிறான். அதன், மூலம் கொடுப்பவர் நற்கூலியையும், பெறுபவர் நற்பயனையும் பெற வாய்ப்பு ஏற்படுகின்றது. இவ்வாறானவற்றுள் குர்பான், உழ்ஹிய்யா, அகீகா, நத்ர் போன்றன அடங்குகின்றன.

## குர்பான்

“குர்பான்” என்றால் நெருங்குதல் என்பது பொருளாகும். ஓர் அடியான் ஓர் உயிர்ப் பிராணியை உளத்திருப்தியுடன் அல்லாஹ்வுக்காக அறுத்து பகிர்ந்தளிப்பதன் மூலம் அவனை நெருங்குவதை இது குறிக்கின்றது. இது உழ்ஹிய்யாவாகவோ, அகீகாவாகவோ இருக்கலாம்.

உழ்ஹிய்யா, அகீகா என்பவற்றுக்கு ஆடு, மாடு, ஒட்டகம் என்பவற்றைத் தவிர வேறு எதனையும் அறுக்க முடியாது. மேலும் உழ்ஹிய்யா என்பது ஒரு குறித்த காலப்பகுதியிலும், அகீகா என்பது ஒரு குறித்த சந்தர்ப்பத்திலும் நிறை வேற்றப்படும் இபாதத் ஆகும். எனினும், பரந்த கருத்தில் குர்பான் என்பது குறிப்பாக எந்தக் காரணமும் இல்லாத நிலையில் ; எல்லாக் காலங்களிலும் இஸ்லாத்தில் உண்பதற்கு அனுமதிக்கப்பட்ட எந்தப் பிராணியையும் அல்லாஹ்வுக் காக அறுத்து பகிர்வதை குறிக்கின்றது.

உழ்ஹிய்யா, அகீகா என்பனவும் குர்பானியில் அடங்குகின்றன. எனினும் குறிப்பிட்ட காலப்பகுதியிலும், குறித்த காரணத்திற்காகவும் அவை நிறை வேற்றப்படுவதால் தனிப்பட்ட பெயர்களால் அழைக்கப்படுகின்றன.

## <u>உழ்ஹிய்யா</u>

உழ்ஹிய்யாவுக்குரிய காலம் துல்ஹஜ் மாதம் பிறை 10 (ஹஜ்ஜுப் பெருநாளன்று) முதல் பிறை 13 வரையுள்ள காலமாகும். ஹஜ்ஜுப் பெருநாள் தொழுகையும் குத்பாவும் முடிந்த பின்னர் இதனை நிறைவேற்ற வேண்டும். உழ்ஹிய்யா கொடுப்பவரே அதனை அறுப்பது ஸுன்னத்தாகும். வேறு ஒருவரைக் கொண்டு அறுக்கும் போது அறுக்குமிடத்தில் அவர் சமுகமளித்தல் மேலானதாகும். அறுப்பதற்கு ஆரம்பிக்கும் போது "அல்லாஹ்வுக்காக ஸுன்னத்தான உழ்ஹிய்யாவை நிறைவேற்றுகின்றேன்" என்று நிய்யத் வைத்துக் கொள்ள வேண்டும்.

உழ்ஹிய்யாவின் எந்தவொரு பகுதியையும் விற்கவோ, அதை அறுப்பது போன்ற வேலைகளைச் செய்தவர்களுக்குக் கூலியாக கொடுக்கவோ கூடாது. தோல், கொம்பு, போன்றவைகளாயினும் அவற்றை தர்மமாக கொடுத்துவிட வேண்டும். அல்லது தான் உபயோகிப்பதற்காக எடுத்துக்கொள்ள வேண்டும். மாமிசத்தின் ஒரு பகுதியை ஏழைகளுக்கு தர்மம் செய்து விடுவது கடமையாகும். உழ்ஹிய்யா கொடுப்பவர் அதில் சிறு பகுதியை உணவுக்காக எடுத்துக் கொள்ளலாம். அடுத்த பகுதியை நண்பர்கள், உறவினர்களுக்கு அன்பளிப்பாக வழங்கலாம்.

உழ்ஹிய்யா, அகீகா என்பவற்றைக்கொடுக்க நேர்ச்சை வைத்தால் அவற்றை நிறைவேற்றுவது கடமையாகிவிடும். அப்போது அவற்றிலிருந்து சிறு பகுதியையேனும் நேர்ச்சை வைத்தவரோ அவரது பொறுப்பிலுள்ளவர்களோ உண்ணக்கூடாது. அனைத்தையும் தர்மம் செய்துவிட வேண்டும்.

உழ்ஹிய்யாவுக்காக அறுக்கப்படும் பிராணியின் வயதெல்லை பின்வருமாறு :-

1. செம்மறியாடு ஒரு வருடம் பூர்த்தியானது.
2. மாடும், வெள்ளாடும் இரண்டு வருடம் பூர்த்தியானது.
3. ஒட்டகம் ஐந்து வருடம் பூர்த்தியானது.

மேலும் உழ்ஹிய்யா கொடுக்கும் பிராணிகள், குறையுள்ளனவாகவோ, பார்ப்பதற்கு அசிங்கமானவையாகவோ, மெலிந்த, நோய்வாய்ப்பட்டனவாகவோ இருக்கக் கூடாது. அவை ஆரோக்கியமானவையாகவும், தசைப்பிடிப்பானவை யாகவும் இருப்பது மேலானதாகும்.

ஹஜ்ஜுப் பெருநாளன்று செய்யக்கூடிய மிகச்சிறந்த நற்காரியம் உழ்ஹிய்யாக் கொடுப்பதே ஆகும். நபி (ஸல்) அவர்களும், ஸஹாபாக்களும் இதனைச் சிறப்பாகச் செய்துள்ளார்கள். ஆதலால் வசதியுள்ளவர்கள் இதனைச் செய்வதற்கு பின்வாங்கக் கூடாது. மேலும் எமது நாட்டைப் பொறுத்தவரை குர்பான், உழ்ஹிய்யா போன்றவற்றை நிறைவேற்றும் போது பண்பாக நடந்து கொள்ள வேண்டும். பிற சமூகத்தவர்களின் உணர்வுகளை மதித்து நடத்தல் வேண்டும்.

**அகீகா**

அகீகா என்பது குழந்தை கிடைத்ததற்காக, அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்தும் வகையில் ஆட்டை அறுத்து தர்மம் செய்வதைக் குறிக்கும். இதனை மாமிசமாகவோ, சமைத்த உணவாகவோ வழங்கலாம்.

ஆண்பிள்ளையாயின் இரண்டு ஆடுகளையும், பெண்பிள்ளையாயின் ஓர் ஆட்டையும் அகீகா கொடுப்பது தகப்பன் மீது ஸுன்னத் ஆகும். இதற்கான

வசதி இல்லாவிட்டால் அது ஸுன்னத் ஆகாது. இதனைக் குழந்தை பிறந்து ஏழாவது நாளில் கொடுப்பதே சிறப்பானதாகும்.

அகீகாவுக்காக அறுக்கப்படும் ஆடும், உழ்ஹிய்யாவில் கூறப்பட்ட வயதெல்லையையே அடைந்திருக்க வேண்டும். பிராணியை அறுக்கும் போது "எனது பிள்ளையின் அகீகாவை நிறைவேற்றுகின்றேன்'' என நிய்யத் வைத்துக் கொள்ள வேண்டும். அகீகாவை ஏழைகளுக்கும், உறவினர்களுக்கும் பகிர்ந்தளிப்ப துடன், அகீகா கொடுப்பவரும் அவரது குடும்பத்தினரும் அதிலிருந்து சாப்பிடலாம். அகீகாவின் முக்கியத்துவத்தை நபி (ஸல்) அவர்கள் பின்வருமாறு கூறினார்கள்.

"சிறுவன், அவனுடைய அகீகாவைக் கொண்டு பணயம் வைக்கப்பட்டுள்ளான். (பிறந்து) ஏழாவது நாளில் அவனுக்காக அது அறுக்கப்படுகிறது. அன்று அவனுக்கு பெயர் வைக்கப்பட்டு அவனது தலைமுடியும் சிரைக்கப்படும்". (அபூதாவூத்)

## தப்ஹு

தப்ஹு என்றால் அறுத்தல் என்பது பொருளாகும். மீன், வெட்டுக்கிளி ஆகிய இரண்டையும் தவிர ஹலாலான ஏனைய உயிர்ப்பிராணிகளை அறுக்காமல் சாப்பிடுதல் கூடாது. உண்பதற்கு இஸ்லாம் அனுமதித்த உயிர்ப்பிராணிகள் மாத்திரமே அறுப்பதன் மூலம் ஹலாலாகும்.

### அறுக்கும் போது கவனிக்க வேண்டிய முக்கிய அம்சங்கள்

1. அறுப்பவர் முஸ்லிமாயிருத்தல்.
2. அல்லாஹ்வின் பெயரைக் கூறி அறுத்தல்.
3. அறுக்கும் ஆயுதம் (கத்தி) கூர்மையானதாக இருத்தல்.
4. நிறுத்தாமல் ஒரே முறையில் அறுத்தல்.
5. உணவுக்குழாயும், சுவாசக்குழாயும் பூரணமாக அறுபடும் வரை அறுத்தல்.
6. அறுக்கப்படும் பிராணியை சித்திரவதைக்கு உள்ளாக்காதிருத்தல்.

பிராணியின் சுவாசக் குழாயும் உணவுக் குழாயும் அறுபடுமளவு விரைவாக அறுத்துவிட வேண்டும். மேலும் அறுக்கு முன் பிராணிக்கு நீர் புகட்டுவதும், அறுக்குமிடத்துக்கு அதை மெதுவாக இழுத்துச் செல்வதும், பிராணியின் எதிரில் கத்தியை தீட்டாமலிருப்பதும், ஒரு பிராணியின் கண் எதிரில் மற்றொரு பிராணியை அறுக்காதிருப்பதும், கிப்லாவுக்கு நேராக கழுத்தைத் திருப்புவதும், அறுப்பவர் கிப்லாவின் பக்கம் திரும்பி இருப்பதும், முழுமையாக உயிர் பிரிந்த பின்பே தலையைத் துண்டிப்பதும், தோலை உரிப்பதும் உயர்ந்த பண்புகளாகும். இவற்றைக் கவனிக்கும் போது இஸ்லாமிய அடிப்படையில் "தப்ஹு" செய்யப்படுவதன் நோக்கம், பிராணியைக் கொடுமைப்படுத்துவதோ, சித்திரவதை செய்வதோ அல்ல என்பது தெளிவாகும்.

## நத்ர்

“நத்ர்” என்பதற்கு நேர்ச்சை என்பது பொருளாகும். அதாவது பருவமடைந்த, சித்த சுவாதீனமுள்ள ஒரு முஸ்லிம், ஒரு செயலை நேர்ச்சை வைத்துக் கடமையாக்கிக் கொள்வதை இது குறிக்கும். உதாரணமாக, "அல்லாஹ் எனது நோயைச் சுகப்படுத்தினால், பத்து ஏழைகளுக்கு உணவளிக்க நான் நேர்ச்சை வைக்கிறேன்." என்றோ, இந்த ஆபத்திலிருந்து அல்லாஹ் என்னை காப்பாற்றினால் ஓர் ஆட்டை குர்பான் கொடுக்க நேர்ச்சை வைக்கிறேன்" என்றோ வாயால் மொழிந்து அதைத் தனக்குக் கடமையாக்கி (வாஜிபாக்கி)க் கொள்ளுதல். இவ்வாறு நேர்ச்சை வைத்தோர் நோய் சுகமானால் அல்லது ஆபத்து நீங்கினால் மாத்திரமே நேர்ச்சையை நிறைவேற்ற வேண்டும்.

நேர்ச்சையின் போது கவனிக்க வேண்டிய முக்கிய அம்சம் "அல்லாஹ்வுக் காகவே" என்று நேர்ச்சை வைக்க வேண்டும்.

எனவே மேலே குறிப்பிட்ட இஸ்லாமிய நடைமுறைகளைப் பின்பற்றி வாழ முயற்சிப்போம்.

# முஆமலாத்

## உழைப்பின் முக்கியத்துவம்

மனிதன் அல்லாஹ்வின் பிரதிநிதியாக இருப்பதனால் அவனது வாழ்வுக்குத் தேவையான வசதிகளை அல்லாஹ் இப்பிரபஞ்சத்தில் ஏற்படுத்தி வைத்துள்ளான். வாழ்வதற்கு அத்தியாவசியமானவற்றை இலகுவாகப் பெற்றுக்கொள்ளக் கூடிய வகையிலும் வேறு சில வசதிகளை தேடிப் பெற்றுக் கொள்ளும் வகையிலும் வைத்துள்ளான். இவ்வாறு மனிதன் தனக்குரிய வாழ்வாதாரங்களைத் தேடிப் பெறும் முயற்சி உழைப்பு என அழைக்கப்படுகின்றது.

உழைத்து வாழ்வதை அல்குர்ஆனும் சுன்னாவும் தூண்டிக் கொண்டிருக்கின்றன. "அவன்தான் பூமியை விரிப்பாக ஆக்கி வைத்தான். எனவே, அதன் பல கோணங்களுக்கும் சென்று அவன் உங்களுக்கு அளித்திருப்பவற்றைப் புசிப்பீர்களாக" (67 : 15)

"தனது கையால் உழைத்து உண்பதை விட வேறு எந்தச் சிறந்த உணவையும் எவரும் உண்ணுவதில்லை. அல்லாஹ்வின் தூதர் தாவூத் (அலை) அவர்கள் தன் கையினால் உழைத்தே சாப்பிட்டார்கள்." (புஹாரி)

நபி (ஸல்) அவர்கள், யாசகம் கேட்டு வந்த ஒருவரை உழைப்பில் ஈடுபடுத்தியமையும் விவசாயி ஒருவனின் கரடு முரடான கரங்களை முத்தமிட்டமையும் உழைப்பிற்கு அவர் கொடுத்த முக்கியத்துவத்தை எடுத்துக் காட்டுகின்றன. ஆகவே தமது பொறுப்பில் உள்ளவர்களுக்காக ஒரு மனிதன் உழைப்பது இஸ்லாத்தின் பார்வையில் பர்ளாகவுள்ளது. நபி (ஸல்) அவர்கள் உட்பட இறைத்தூதர்கள் அனைவரும் உழைத்தே வாழ்ந்திருக்கின்றார்கள் என்பதை வரலாறு நிரூபிக்கின்றது.

## உழைப்பின் ஒழுக்கங்களும் இலக்குகளும்

வியாபாரம், விவசாயம், கைத்தொழில், சேவைத்தொழில் போன்ற எந்த உழைப்பில் ஈடுபட்டாலும் அவற்றுக்குரிய, இஸ்லாம் காட்டும் ஒழுங்குகளைப் பேணவேண்டும். (ஹலாலான) "நல்ல பொருள்களிலிருந்து உண்ணுங்கள், நற்கிரியைகள் புரியுங்கள்." (23: 51)

"ஹராத்தை உட்கொண்டு வளர்ந்த எந்த உடம்பும் சுவனம் நுழையாது. ஹராத்தை உண்டு வளர்ந்த உடலனைத்தும் நரகுக்கு தகுதியானவை." (திர்மிதி)

உழைப்பு ஹலாலானதாக அமைந்தால் ஈருலக வாழ்விலும் வெற்றி பெறலாம். இஸ்லாத்தின் பார்வையில் இலாபமடைவது மாத்திரம் உழைப்பின் இலக்காகக் கருதப்படுவதில்லை. மாறாக பல்வேறு இலக்குகளை அதனூடாக அடைய முயற்சிக்கின்றது.

1. சன்மார்க்க வரம்புகளைப் பேணி உழைப்பதன் மூலம் ஹலாலானவற்றைத் தேடிக் கொள்ளுதல்
2. தனது பொறுப்பிலுள்ளவர்களைப் பராமரித்தல்.
3. யாசகம் கேட்பதிலிருந்து தவிர்ந்துக் கொள்ளல்.
4. தாம் செய்யும் உழைப்பின் மூலம் அதன் பயனைப் பெறுவோருக்கு கருணையோடு உதவுதல்.

மேற்படி இலக்குகளை அடிப்படையாக வைத்து உழைத்தவர்கள் மறுமையில் அச்சமின்றி அல்லாஹ்வை சந்திக்கலாம்.

## வியாபாரமும் அதன் விதி முறைகளும்.

உழைப்பு முறைகளில் "அல்-பய்உ" என அழைக்கப்படுகின்ற வியாபாரமும் ஒன்றாகும். "வியாபாரியும், நுகர்வோனும் அனுமதிக்கப்பட்ட முறையில் சம்மதத்தின் அடிப்படையில் பிரதியீட்டைப் பெற்றுக் கொண்டு, ஓர் உடைமையை ஒருவர் மற்றவருக்குக் கையளிப்பதைக் குறிக்கும் நடவடிக்கை வியாபாரம்" எனப்படுகின்றது.

"அல்லாஹ் வியாபாரத்தை ஆகுமாக்கி, வட்டியைத் தடை செய்துள்ளான். (2 : 275)

உழைப்பில் சிறந்தது எதுவென நபி (ஸல்) அவர்களிடம் வினவப்பட்டபோது "உழைப்பில் சிறந்தது கைத்தொழிலும் நேர்மையான வியாபாரமும் ஆகும்" என்றார்கள். (அஹ்மத்)

வியாபாரத்திற்கான வசதிகள், வாய்ப்புக்கள் அல்லாஹ்வினால் ஏற்படுத்தி வைக்கப்பட்டுள்ளன. எல்லாப் பாகங்களிலும் பயிர்கள் வெளிப்படுத்தப்படுகின்றன. அவற்றை பூமியில் தரை, கடல், ஆகாய மார்க்கமாக நகர்த்துவதற்கான வசதிகளை மனிதன் பெற்றிருக்கின்றான். பொருட்களை பரிமாறிக் கொள்வதற்கான வசதிகளைப் பயன்படுத்தி நேர்மையான முறையில் வியாபாரம் செய்வது வியாபாரிக்கு நன்மதிப்பையும், உயர்வையும் ஏற்படுத்தித் தரும். "நாணயமும் வாய்மையுமுடைய வியாபாரி மறுமையில் நபிமார்கள், ஸித்தீக்கீன்கள் (உண்மையானவர்கள்) ஷுஹதாக்களுடன் இருப்பார்." (இப்னு மாஜா)

## வியாபார விதிமுறைகள்

வியாபார விதி முறைகளில், அது நிறைவேறுவதற்குரிய ஷர்த்துக்கள் மிக முக்கிய இடத்தை வகிக்கின்றன. முஸ்லிம்கள் எல்லா விவகாரங்களிலும் ஷர்த்துக்களைப் பேணுவது கடமையாதலால் வியாபாரத்திலும் அதனைக் கடைப்பிடிப்பது முக்கியமானதாகும். "விசுவாசிகளே ! ஒப்பந்தங்களை நிறை வேற்றுங்கள். " (5:1)

"முஸ்லிம்கள் அவர்களது ஷர்த்துக்களை நிறைவேற்றுவதற்குக் கடமைப்பாடு உடையவர்கள்" (அஹ்மத்)

## வியாபார நிபந்தனைகள்

(1) வாங்குவோரும், விற்போரும் சித்த சுவாதீனம் அற்றவராகவோ மந்த புத்தியுடையவராகவோ, நிர்ப்பந்திக்கப்பட்டவராகவோ விபரமறியாத சிறுவர்களாகவோ இருத்தல் கூடாது.

(2) வியாபாரப் பொருள்:- விபாபாரப் பொருள்கள் சுத்தமானவையாகவும், பயனுள்ளவையாகவும் இருத்தல் வேண்டும். "தானாகவே செத்ததும், இரத்தமும் பன்றியின் மாமிசமும், அல்லாஹ் அல்லாத பெயர் சொல்லி அறுக்கப்பட்டவையும் ஆகியவைகளைத் தான் (அல்லாஹ்) உங்கள் மீது ஹராமாக்கியிருக்கின்றான்." (2:173)

" நிச்சயமாக அல்லாஹ்வினாலும் அவனுடைய தூதரினாலும் மதுபானம், செத்த பிராணிகள், பன்றி, விக்கிரகங்கள் என்பவற்றை விற்பனை செய்வது தடைசெய்யப்பட்டிருக்கின்றது." (புகாரி)

- வியாபாரப் பொருள், விற்பவருக்குச் சொந்தமானதாகவும், வாங்குபவருக்கு ஒப்படைக்க முடியுமானதாகவும் கையிருப்பில் உள்ளதாகவும் இருத்தல் வேண்டும். "சொந்தமற்றவற்றில் வியாபாரமில்லை"

- பொருளும் விலையும் குறிப்பாக அறியப்படாதவை விற்பனை செய்வதற்குத் தடுக்கப்பட்டுள்ளன. எனினும் கண்ணுக்குப் புலப்படாத பொருட்களின் பண்புகள் அறியப்பட்டிருப்பின் விற்பனை செய்யலாம். (உ-ம்) தகர மீன், கொள்கல எரிவாயு.

(3) ஈஜாப் கபூல் :- ஒரு வியாபாரி தன் வசமுள்ள குறித்த பொருளை விற்று விட்டதாகக் கூறும் கூற்று, ஈஜாப் எனப்படுகின்றது. குறித்த பொருளை தான் வாங்கிக் கொண்டதாகக் கூறும் நுகர்வோனின் கூற்று,

கபூல் எனப்படுகின்றது. எனினும் இன்று நடைமுறையில் பணத்தைக் கொடுத்துப் பொருளை வாங்குகின்றமை ஈஜாப் கபூல் ஆகக் கருதப்படுகிறது.

## வியாபாரக் கொடுக்கல் வாங்கல்களில் தடுக்கப்பட்டவை

பொய்ச்சத்தியம், அளவை நிறுவையில் மோசடி, பதுக்கல், கலப்படம், திருடப்பட்ட அல்லது கொள்ளையிடப்பட்ட பொருளை வாங்குதல், பள்ளிவாசலில் வியாபாரத்தில் ஈடுபடுதல், வட்டி என்பனவெல்லாம் இஸ்லாத்தில் தடுக்கப்பட்டுள்ளன.

## வியாபார முறைகளில் முஷாரகா, முழாரபா

மனித வரலாற்றின் ஆரம்ப கால வியாபார நடவடிக்கைகள் எளிமையாக இருந்தன. இன்று சமூக, பொருளாதார, கலாசார, தொழில்நுட்ப ரீதியாக உலகம் மாற்றங்களுக்குட்பட்டு வருகின்றது. முன்னர் காணப்படாத கொடுக்கல் வாங்கல் முறைகள், வியாபார ஒப்பந்தங்கள் இன்று இடம்பெற்று வருகின்றன. இவற்றுள் சில, இஸ்லாமிய ஷரீஆவினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளன. சில நிராகரிக்கப் பட்டுள்ளன. ஆகவே நவீன வியாபார அமைப்புக்கள் பற்றி அறிந்து கொள்வது அவசியமானதாகும்.

### முழாரபா

நவீன கால இஸ்லாமிய அறிஞர்களில் ஒருவரான அலி ஹபீப் என்பவர் முழாரபாவுக்கு பின்வரும் கருத்தைக் கொடுத்துள்ளார். "ஒரு தரப்பினரின் மூலதனத்தையும், மற்றொரு தரப்பினரின் உழைப்பையும் அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்படும் வர்த்தக முயற்சியின் போது, கிடைக்கப்பெறும் இலாபத்தில் இரு தரப்பினரும் பங்கு கொள்ளுதல் என்ற வகையில், இடம் பெறும் ஒரு வகைக் கூட்டுப் பங்காண்மை உடன்படிக்கையே" முழாரபா ஆகும்.

இஸ்லாம் இதனை அனுமதித்துள்ளது. குர்ஆனும், ஸுன்னாவும் இதனை அங்கீகரித்துள்ளன. இஸ்லாமிய அறிஞர்களும் இது கூடும் என்பதில் ஏகோபித்த கருத்தைக் கொண்டுள்ளார்கள். (2 : 198)

நபி (ஸல்) அவர்கள் நுபுவ்வத்திற்கு முன்னர் கதீஜா (ரலி) அவர்களிடமிருந்து முழாரபா அடிப்படையிலேயே வியாபாரப் பொருட்களை ஷாம் நாட்டுக்கு எடுத்துச் சென்றார்கள்.

ஜாஹிலியாக்காலத்தில் பிரபலமாக இருந்த இந்த வியாபார முறையினை இஸ்லாத்தின் வருகைக்குப் பின்னர் நபி (ஸல்) அவர்கள் அங்கீகரித்தார்கள்.

## முழாரபா செல்லுபடியாவதற்கு இஸ்லாமிய அறிஞர்கள் முன்வைத்துள்ள நிபந்தனைகள்

1. முழாரபா ஒப்பந்தத்திற்கான வார்த்தைப் பிரயோகம்.
2. முழாரபா ஒப்பந்தம் செய்து கொள்வோர் (மூலதன உரிமையாளன், முயற்சியாளன்)
3. மூலதனம் அதனை வழங்குபவனுக்குச் சொந்தமானதாக அல்லது பயன்படுத்தும் உரிமை பெற்றவனாக இருத்தல். பொருளின் தன்மை,தொகை, முதலானவை குறிப்பாக அறியப்பட்டதாக இருத்தல்.
4. இருவரும் நஷ்டத்தில் பங்கேட்க வேண்டும் முயற்சியாளனுக்கு உழைப்பு நஷ்டமாகவும் முதலீட்டாளருக்கு அவரது முதலீடு நஷ்டமாகவும் அமையும். எனினும் முயற்சியாளனின் அசிரத்தையால் ஏற்படும் நஷ்டத்தை அவர் பொறுப்பேற்க வேண்டும்.
5. இலாபப் பகிர்வு : இரு தரப்பினருக்குமுரிய இலாப விகிதாசாரம் தீர்மானிக்கப்பட்டிருத்தல்.
6. உடன்படிக்கை வரையறுக்கப்பட்டதாய் அமைதல் கூடாது. குறித்த ஊரில் குறித்த பொருளில் இடம் பெறவேண்டும் என வரையறுக்க முடியாது.

கீழ்வரும் நிலைகளில் முழாரபா உடன்படிக்கை முறிந்துவிடும்.

(1) மேலே கண்ட நிபந்தனைகளில் ஒன்றை இழத்தல்.
(2) முயற்சியாளர் பொருட்களைப் பாதுகாப்பதில் கவனக் குறைவாய் இருத்தல் அல்லது உடன்படிக்கையின் நோக்கத்திற்கு முரணாக ஒன்றைச் செய்தல்.
(3) முயற்சியாளரோ அல்லது முதலீட்டாளரோ மரணித்தல். மேலும் முயற்சியாளர் முழாரபா மூலம் பெற்றுக் கொண்ட நிதியைக் கொண்டு மற்றொரு முழாரபா உடன்படிக்கையை செய்து கொள்ள முடியாது. அவ்வாறு நடந்து கொள்வது அத்துமீறலாகக் கணிக்கப்படும்.

### முஷாரகா

உலகில் காணப்படுகின்ற உற்பத்தி முயற்சிகள், வியாபார நடவடிக்கை மிகச்சிறிய அளவிலும், பாரிய அளவிலும் மேற்கொள்ளப்பட்டு வருவதை அவதானிக்கின்றோம். பாரிய அளவிலான உற்பத்தி, வியாபார நடவடிக்கைகளில் ஒரு தனிநபர் மாத்திரம் ஈடுபட முடியாத சூழ்நிலை ஏற்படுவதுண்டு. இதனால் தான் பலர் ஒன்றுசேர்ந்து முதலிட்டு இவ்வாறான முயற்சிகளில் ஈடுபடுவதைக் காணமுடிகின்றது. முஷாரகா முறையும் அவ்வாறானதொன்றே.

பலர் ஒன்று சேர்ந்து தத்தமது மூலதனத்தை ஒன்று சேர்த்து ஓர் உற்பத்தி அல்லது தொழில் முயற்சியில் பங்குதாரர்களாக ஈடுபடும் அமைப்பையே இது குறிக்கின்றது.

**முஷாரகா நடவடிக்கைகளுக்கான நிபந்தனைகள்**

1. மூலதனத் தொகை குறிப்பாக அறியப்பட்டிருத்தல்.
2. மூலதனம் கையிருப்பிலுள்ள பணமாக இருத்தல்.
3. இலாப விகிதாசாரம் தீர்மானிக்கப்பட்டிருத்தல்.

முஷாரகாவில் ஏற்படும் நட்டம் பங்குதாரர்களின் பங்குகளுக்கேற்ப ஏற்றுக் கொள்ளப்படும்.

**வக்ப்**

"கைமாறும் நிலையிலிருந்த ஒரு சொத்தை கைமாறாத நிலைக்கு கொண்டு வந்து அல்லாஹ்வுக்காக அதன் பயனை மக்கள் காலா காலம் அனுபவிக்கச் செய்ய இடமளிப்பது" இஸ்லாமியக் கண்ணோட்டத்தில் "வக்பு" என அழைக்கப்படுகின்றது.

"வக்ப்" ஸதககுல் ஜாரியாவைச் சேர்ந்ததாக அமைகின்றது. ஒருமுறை உமர் (ரலி) அவர்கள் தம்முடைய நிலமொன்றை தர்மம் செய்ய விரும்பினார்கள். அப்போது "இந்நிலத்தை விற்கவோ, பராதீனப்படுத்தவோ, சொத்துரிமை கோரவோ கூடாது" என்று கூறி தர்மம் செய்தார்கள். இது வக்புக்கான ஆதாரங்களுள் ஒன்றாகவும், வக்பின்போது பேண வேண்டிய சில ஒழுங்குகளை விபரிப்பதாகவும் உள்ளது. பொதுவாக வக்பின் மூலம் அல்லாஹ்வுக்காக முஸ்லிம்களின் சேமநலன் கருதி, பொதுவான தர்மத்தின் பயன் கருதி ஒருவர் அல்லது பலர் தமக்குரியதை பொது மக்களுக்குரியதாக்குவதால் அது தொடர்பான ஒழுங்கு விதிகள் இருக்க வேண்டியது அவசியமாகின்றது.

1. வக்ப் பகிரங்கப்படுத்தப்படுதல் வேண்டும் : வாய் மொழி மூலமோ எழுத்தாவணம் மூலமோ பகிரங்கப்படுத்தலாம்.
2. வக்பை உறுதிப்படுத்துவதற்கான சாட்சிகளும் இருத்தல் அவசியம்.
3. வக்பு செய்யப்பட்ட ஒன்றை இரத்துச் செய்ய முடியாது.
4. வக்பு செய்தவரின் நிபந்தனைகள், சூழ்நிலைகளுக்கேற்றவாறு பேணப்படுதல் வேண்டும்.
5. வஸியத் மூலமும் ஒன்றை வக்பு செய்யலாம்.
6. வக்பு சொத்துக்களைப் பரிபாலிக்க – முதவல்லிகள் - அதிகாரிகள் நியமிக்கப்படல் வேண்டும்.

வக்பு சொத்துக்களுக்கு மஸ்ஜிதுகள் கட்டுதல், கிணறுகள் அமைத்தல், அனாதை இல்லங்களை அமைத்தல், மருத்துவ மனைகள் அமைத்தல், சிறுவர் பூங்காக்களை அமைத்தல், கல்வி நிலையங்களை அமைத்தல் போன்றவற்றைக் உதாரணமாக குறிப்பிடலாம். சொத்துக்களை வக்பு செய்வதன் மூலம், அதன்பால் தேவையுடையோரின் தேவைகள் பூர்த்தியாகின்றன. அவை, அவர்களால் சுயமாக செய்துகொள்ள முடியாத வசதிகளாகும். எனவேதான் இஸ்லாம் இதனை நிலையான தர்மமாகக் கூறி அதனை முக்கியத்துவப்படுத்துகின்றது. இதற்கு அல்லாஹ்விடத்தில் அபரிமிதமான கூலிகள் கிடைக்கின்றன.

## வராஸத்

ஒரு மனிதன் இறந்ததன் பின்னர் அவர் விட்டுச் செல்லும் அனைத்துச் சொத்துக்களும் யார் யாருக்கு, என்னென்ன ஒழுங்குகளில், அளவுகளில் கொடுக்கப்பட வேண்டும் என்பதை விளக்கும் அம்சமே “வராஸத்” ஆகும்.

“வராஸத்” சொத்துக்களை குடும்பமும் இனபந்துக்களும் நியாயமான முறையில் பெற்றுக் கொள்வதற்கும் ஒரு சிலர் அதனை அபகரிக்காமல் இருப்பதற்கும் சட்ட விதிகள் அவசியப்படுகின்றன. எனவே இஸ்லாம் இதில் முக்கிய கவனம் செலுத்துகின்றது. சொத்துரிமையில் பாகுபாடு காட்டப்படுவதில்லை. குர்ஆனும், ஸுன்னாவும் இது தொடர்பாக சிறந்த போதனைகளை முன்வைத்துள்ளன. " பெற்றோரோ நெருங்கிய உறவினரோ விட்டுச் சென்றதில் ஆண்களுக்கும் பங்குண்டு. பெண்களுக்கும் பங்குண்டு. அது குறைவாக இருந்தாலும் சரி கூடுதலாக இருந்தாலும் சரியே. இது அல்லாஹ்வினால் விதிக்கப்பட்ட பாகமாகும்." (4 : 7)

"நீங்கள் வாரிசுரிமைச் சட்டத்தைக் கற்று அவற்றை பிறருக்கு கற்பிப்பீர்களாக. ஏனெனில், அது அறிவின் ஒரு பாதியாகும். மேலும் இக்கலை மறக்கக்கூடியதாகும். இதுவே எனது சமூகத்திலிருந்து அகற்றப்படும் முதல் அம்சமாகும்." (இப்னு மாஜா)

வராஸத் சொத்துக்களைப் பகிர்வதற்கு முன்னர், அவற்றிலிருந்து நிறைவேற்ற வேண்டிய கடமைகளை முதலில் நிறைவேற்றவேண்டும். பின்வரும் விடயங்கள் இவற்றுள் முக்கிய இடம் பெறுகின்றன.

1. ஜனாஸாவுக்குரிய கடமைகளை நிறைவேற்ற வராஸத் சொத்திலிருந்து எடுத்தல்.
2. மரணித்தவரின் கடன்களை நிவர்த்திக்க எடுத்தல்.
3. வஸிய்யத்தை நிறைவேற்றுதல்.

**வராஸத் சொத்துக்கான நிபந்தனைகள்**

(1) சொத்துக்குரியவர் மரணமடைந்திருத்தல்.

(2) சொத்துக்குரியவர் மரணித்த வேளையில் வாரிசுக்காரன் உயிருடன் இருப்பது உறுதிப்படுத்தப்படல்.

(3) வாரிசுச் சொத்தில் பங்குபெற தடையேதும் இல்லாதிருத்தல் வேண்டும். (வாரிசுக்காரன் சொத்துக்குரியவனை கொலை செய்தல், மதவேறுபாடு, அடிமையாயிருத்தல் என்பன தடைகளாகும்)

**வாரிசுகளின் விபரம் :**

(1) அஸ்ஹாபுல் புரூழ் :- குறித்த ஒரு பங்கிற்கு உரித்துடையவர்கள் என ஷரீஅத்தில் குறிப்பிட்டுள்ளவர்களே இவர்களாவர். அதாவது அப்பிரிவில் பங்குபெறுபவர்கள், பர்ளு அடிப்படையில் பங்கு பெறுபவர்களாகக் கொள்ளப்படுகின்றனர். இதற்கு உதாரணம்; மரணித்தவரின் கணவன், மனைவி, தந்தை, தாய், பாட்டி, பாட்டன், மகள், மகனின் மகள், உடன்பிறந்த சகோதரி, தாய்வழிச் சகோதரி, தந்தை வழிச் சகோதரி, தாய்வழிச் சகோதரன்.

(2) அஸபாக்கள் :- முதல் பிரிவினர் பங்கு பெற்றுக் கொண்டவைபோக மீதமுள்ளவற்றைப் பெறத்தகுதியானவர் அஸபாக்கள் ஆவர். இதற்கு உதாரணமாக மரணித்தவரின் மகன்மார், மகனுடைய மகன், தந்தை, பாட்டன், சகோதரர்கள், சகோதரர்களுடைய ஆண்மக்கள், சிறிய பெரிய தந்தைகள், அவர் களுடைய ஆண் மக்கள்.

(3) அல் அர்ஹாம் :- பொதுவாக தூரத்து உறவினர்களையே இது குறிக்கின்றது. பெரும்பாலும் மரணித்தவருக்கும் தங்களுக்கும் இடையிலான உறவை ஒரு பெண் வழியாகப் பெற்றுக்கொள்வோரே இப்பிரிவில் அடங்குகின்றனர். மகளின் பிள்ளைகள், சகோதரிகளின் குழந்தைகள்.

வாரிசுகள் தமக்குரிய பங்கை குறைவாகப் பெறும் சந்தர்ப்பங்களும், முற்றாக இழக்கும் சந்தர்ப்பங்களும் ஏற்படுவதுண்டு. இதுவே “ஹஜ்ப்” எனப்படுகின்றது. அதாவது வாரிசுகளாகச் சிலர் இருப்பதனால் வேறு சிலருக்கு சொத்தில் பங்கு இல்லாமலோ அல்லது குறைந்தோ வருவதாகும். இவ்வாறு பங்கு பெற தடையாக வருபவர் “அல் ஹாஜிப்” என்றும் தடைசெய்யப்படுபவர் “மஹ்ஜூப்” என்றும் அழைக்கப்படுவர்.

**வஸிய்யத்**

ஒருவர் விட்டுச் செல்கின்ற சொத்துக்களோடு தொடர்புடைய மற்றுமோர் அம்சம் "வஸிய்யத்" ஆகும். ஒருவர் தான் மரணித்தபின் தனது சொத்தில் தான் குறிப்பிடுவோருக்கு வழங்குமாறு பணிப்பதை வஸிய்யத் என்பது குறிக்கின்றது. இவ்வாறு ஒருவர் வஸிய்யத் செய்திருந்தால் அவர் இறந்தபின்னர் அதனை நிறைவேற்றிவிடுவது உயிருள்ளவர்கள் மீது கடமையாகும்.

வாரிசுத் சொத்துக்கள் பகிரப்பட முன்னரே வஸிய்யத் நிறைவேற்றப்பட வேண்டும்.

> "(வாரிசுகளுக்கு பங்கு கிடைப்பது) கடன், வஸிய்யத் ஆகியன கொடுக்கப் பட்டதற்கு பின்னரேயாகும்." (4 : 11)

ஒருவர் சொத்தில் 1/3 பாகத்திற்கு மேல் வஸிய்யத் செய்வதற்கு அனுமதிக்கப்பட மாட்டார். இதனால் வாரிசுகள் பாதிப்படைய நேரிடும். அதே நேரத்தில் ஒருவர் தனது சொத்தில் வாரிசுகளுக்கு வஸிய்யத் செய்ய முடியாது. வஸிய்யத் செய்பவர் அதனைச் சாட்சிகளோடு செய்வதும், எழுத்து மூலம் செய்வதும் சிறந்ததாகும்.

# முனாகஹாத்

## நிகாஹின் முக்கியத்துவம்

உலக இயக்கம், இன விருத்தியில் தங்கியுள்ளது. மனிதன் உட்பட சகல பிராணிகளும் ஆண், பெண் உறவு மூலம் இனவிருத்தி செய்து கொள்கின்றன.

> "ஒவ்வொரு பொருளையும் (ஆண், பெண் கொண்ட) சோடிகளிலிருந்தே நாம் படைத்தோம்". (51:49) என்று குறிப்பிட்ட அல்லாஹ், மனித இனம் பற்றிப் பின்வருமாறு குறிப்பிடுகின்றான்.
>
> மனிதர்களே ! நிச்சயமாக நாம் உங்களை ஓர் ஆணிலிருந்தும் ஒரு பெண்ணிலிருந்தும் படைத்தோம்." (49 : 13)

எல்லாப் படைப்புக்களும் ஆண், பெண் சோடியாக வாழ்ந்து தமது இனத்தை விருத்தி செய்து கொள்கின்றன. அதே நேரம், எல்லாப்படைப்புகளிலும் உயர்வான மனிதன் தனது இன விருத்தியை எவ்வாறு அமைத்துக்கொள்ள வேண்டும் என்பதை இஸ்லாம் தெளிவுபடுத்தியுள்ளது. அதன் மூலம், மனிதன் தனது சுய கௌரவத்தைக் காத்துக் கொள்ளவும் நன்மையைப் பெற்றுக் கொள்ளவும் அல்லாஹ் வழிவகுத்துள்ளான். மனிதன் தனது பாலுணர்வை பிழையான வழியில் நிறைவேற்றிக் கொள்ளக் கூடாதென தடுத்து, முறையாக அதனை நிறைவேற்றிக் கொள்ளுமாறு பணிக்கின்றான். அதனால் தான் அவன் நன்மை பெறுகின்றான் என்று நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள்.

மனிதன் இயற்கைக்கு மாற்றமாக நடப்பதை இஸ்லாம் ஒரு போதும் அங்கீகரிப்பதில்லை. பிரமசாரியத்தையும் ஆதரிக்கவில்லை. உத்தம ஸஹாபாக்களில் மூவர், அன்னை ஆயிஷா (ரழி) அவர்களிடம் வந்து, நபி அவர்களது அன்றாட நிகழ்வுகள் பற்றிக் கேட்டறிய விரும்பினர். நபி (ஸல்) அவர்கள் இரவில் நின்று வணங்குவது உட்பட சகல செயற்பாடுகளையும் அன்னை ஆயிஷா (ரலி), எடுத்துக்கூறினார்கள். "முன்பின் பாவங்கள் மன்னிக்கப்பட்ட நபியின் நிலை இதுவெனில் நாம் எம்மாத்திரம்" என்று கூறிய மூவரும் தமக்குள் ஒவ்வொரு நிலைப்பாட்டை எடுத்துக்கொண்டனர்.

ஒருவர், இரவில் நித்திரை கொள்ளாமல் வணக்க வழிபாடுகளிலிருக்க வேண்டுமென முடிவு செய்தார். அடுத்தவர், தொடர்ந்து நோன்பு பிடிக்க விரும்புவதாகக் கூறினார். மூன்றாமவர், மனைவியை விட்டு ஒதுங்கி வாழ முடிவு செய்தார். இதைச் செவியுற்றுக் கொண்டிருந்த றஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் வீட்டிலிருந்து வெளியே வந்து, நீங்கள் தாமாகவே தீர்மானம் எடுத்திருப்பது தவறென சுட்டிக் காட்டினார்கள்.

"அல்லாஹ் மீது சத்தியமாக ; நான் தான் உங்களில் மிகவும் பயபக்தி யுடையவன். நான் நோன்பு பிடிக்கிறேன். நோன்பை விடவும் செய்கிறேன். தொழுதும் வருகின்றேன். மனைவியோடும் வாழ்கிறேன். எனவே எனது வழிமுறையிலிருந்து விலகி நடந்து கொள்பவன் என்னைச் சேர்ந்தவனல்லன்" என்று கூறினார்கள். (ஆதாரம் : புஹாரி).

ஆதலால் வசதியும் சக்தியும் ஆசையும் உள்ளவன் திருமணம் முடித்துக்கொள்ள வேண்டும். மணம் புரியாது இருப்பது ஒருவனைப் பாவத்திற்கு கொண்டு சேர்க்கலாம்.

## நிகாஹின் சிறப்புக்கள்

1. (நீங்கள் சேர்ந்து வாழக்கூடிய உங்கள்) மனைவிகளை நீங்கள் அவர்களிடம் மன நிம்மதி பெறுவதற்காக உங்களிலிருந்தே அவன் படைத்து உங்களுக்கிடையே அன்பையும் நேசத்தையும் உண்டு பண்ணியிருப்பதும் அவனுடைய அத்தாட்சிகளில் ஒன்றாகும். சிந்தித்து உணரக் கூடிய ஜனங்களுக்கு இதிலும் (ஒன்றல்ல) நிச்சயமாக (பல) அத்தாட்சிகள் இருக்கின்றன. (30 : 21)

2. எவருக்கேனும், அல்லாஹ் நன்னடத்தையுள்ள ஸாலிஹான பெண்ணைப் பெற்றுக் கொள்ளும் வாய்ப்பை அளிக்கின்றானோ அவனுக்கு சன்மார்க்கத்தில் அரைவாசியைக் காத்துக் கொள்ள அல்லாஹ் உதவி செய்து விட்டான்.(தபரானி)

3. இவ்வுலகம் சுகபோகத்துக்குரியதாகும். உலகிலுள்ள சுகபோகப் பொருட் களில் மிகவும் சிறந்தது நன்னடத்தையுள்ள (ஸாலிஹான) பெண்ணாவாள். (முஸ்லிம்)

4. வெட்கப்படுதல், மணம் பூசுதல், திருமணம் புரிதல் என்பன நபிமார் செய்த நல்ல விடயங்களாகும். (திர்மிதி)

## திருமணத்தின் பயன்கள்

திருமணம் புரியும் ஒருவன் பல்வேறு பயன்களை அடைந்து கொள்கிறான். அல்லாஹ்வின் திருப்தியை நாடி மணம்புரியும் அவன் றஸூலுல்லாஹ்வின் வழிமுறையைப் பின்பற்றியவனாகிறான். அதன் மூலம் தூய்மையான வாழ்வைப் பெறுகிறான். மனக் கட்டுப்பாட்டையும் ஒழுக்கக் கட்டுப்பாட்டையும் அடைகிறான். இவை தவிர,

1. திருமணம் செய்யும் ஒருவன் சந்ததி விருத்தியைப் பெறுகிறான்.

2. தனது பால் உணர்வை ஹலாலான முறையில் தீர்த்துக் கொள்ளும் வழியைப் பெறுகிறான்.

3. கற்பைக் காத்துக் கொள்கிறான்.

4. குடும்பங்களுடனான புதிய உறவு ; தொடர்பு என்பவற்றைப் பெறுகிறான்.

5. அல்லாஹ்வின் கட்டளைகளை ஏற்று நடந்தவனாகின்றான்.

6. அல்லாஹ்வின் ரஸூலுடைய வழிமுறையைப் பின்பற்றியவனாகின்றான்.

7. இஸ்லாம் தடுத்த பிரமசாரியத்திலிருந்து விடுபட்டவனாகின்றான்.

8. முறை கேடான தொடர்புகள் மூலம் ஏற்படும் கொடிய நோய்களிலிருந்து தன்னைக் காத்துக் கொள்கின்றான்.

9. அல்லாஹ்வின் அருள்களைப் பெறுகின்றான். “(கற்பைப் பேணி, பார்வையைத் தாழ்த்தி, இரத்த உறவை சேர்த்து வாழவிரும்பி நிகாஹ் செய்தவனுக்கு அல்லாஹ் அருள் புரிவான்.” (தபராணி)

**நிகாஹ் பற்றிய சட்டநோக்கு**

1. வசதியும் ஆசையும் உள்ள ஒருவன், திருமணம் புரியாவிட்டால் விபசாரத்தில் ஈடுபட நேரிடும் என்று பயந்தவன் நிகாஹ் செய்வது கட்டாய மாகும். (வாஜிபாகும்).

2. விருப்பமும் வசதியும் இருப்பதோடு மணம் முடிக்காதிருப்பது பாவத்திற்கு இட்டுச் செல்லாது என்ற உறுதியோடு உள்ளவன் மணமுடிப்பது (முஸ்தஹப்பு) விருப்பத்துகுரியதாகும்.

3. மணம் புரிந்து உடலுறவு கொள்ளவோ, மஹர் உட்பட மனைவிக்குரியவற்றைக் கொடுக்கவோ சக்தி பெறாதவர் மண முடிப்பது ஹராமாகும்.

4. நிகாஹைக் கட்டாயப்படுத்தும் காரணிகளோ ; தடுப்பதற்கான நியாயங்களோ காணப்படாதவிடத்து நிகாஹ் செய்வது முபாஹ் ஆகும்.

**மஹ்ரம், அஜ்னபீ**

நிகாஹில் ஓர் ஆணும் ஒரு பெண்ணும் சம்பந்தப்படுவர். இவ்வாறு சம்பந்தப்படுபவர் நிகாஹ் செய்துகொள்வதற்கு அனுமதிக்கப்பட்டவர்களா இல்லையா என்பது

அவதானிக்கப்படவேண்டும். திருமணம் செய்வதற்கு விலக்கானவர்களான மஹ்ரமிகளை மணமுடித்தால் நிகாஹ் செல்லுபடியாகாது.

மஹ்ரமிகள் இரு பெரும் பிரிவாக பிரியும். அவை:-

1. நிரந்தர மஹ்ரம்
2. தற்காலிக மஹ்ரம்

நிரந்தர மஹ்ரமியாக ஆவதற்கு மூன்று காரணங்களுண்டு.

1. இரத்த உறவு
2. திருமண உறவு
3. பால்குடி உறவு.

(4:23) அல்குர்ஆன் வசனத்தின் படி மஹ்ரமானவர்களை பின்வருமாறு பட்டியல் படுத்தலாம்.

1. உங்கள் தாய்மார்களும்
2. உங்கள் புதல்வியர்களும்
3. உங்கள் சகோதரிகளும்
4. உங்கள் தகப்பனின் சகோதரிகளும் (மாமிமார்)
5. உங்கள் தாயின் சகோதரிகளும் (சாச்சிமார்)
6. உங்கள் சகோதரரின் புதல்விகளும்
7. உங்கள் சகோதரியின் புதல்விகளும்
8. உங்களுக்குப் பாலூட்டிய செவிலித் தாய்மார்களும்
9. உங்களுடன் பால்குடித்த சகோதரிகளும்
10. உங்கள் மனைவியின் தாய்மார்களும்
    உங்களுக்குத் திருமணம் செய்ய விலக்கப்பட்டுள்ளனர்.
11. நீங்கள் ஒரு பெண்ணைத் திருமணம் செய்து உடலுறவு கொண்ட அப்பெண் முந்திய கணவன் மூலம் பெற்றெடுத்த, உங்களிடம் வளர்ந்துவரும் (உங்கள் மனைவியின் மகள்) உங்களுக்கு விலக்கப்பட்டவளாவாள்.
    (நீங்கள் அவளை மணம் புரிந்தும் உடலுறவு கொள்ளாத நிலையில் முந்திய கணவன் மூலம் கிடைத்த பிள்ளையை நீங்கள் மணமுடிப்பது உங்கள் மீது குற்றமில்லை.)
12. மேலும் உங்கள் ஆண் மக்களின் மனைவியரும் ஹராமாகும்.
13. உடன் பிறந்த இரு சகோதரிகளை ஏக காலத்தில் திருமணம் செய்து வாழ்வதும் உங்களுக்கு விலக்கப்பட்டுள்ளது.

## இரத்த உறவு (நஸப்) காரணமாக நிகாஹ் செய்யத் தடுக்கப்பட்டோர்

i. பிறப்பின் காரணமாக தாய் ஹராமாவது போலவே தாயின் தாயும் இவ்வாறு மேலுயர்ந்து செல்லும் உறவினரும் ஹராமாவர்.

ii. பெற்றெடுத்ததன் காரணமாக பிள்ளைகள் ஹராமாவது போலவே அவர்களது பிள்ளைகளும் கீழிறங்கிச் செல்வோரும் ஹராமாவர்.

iii. சொந்தச் சகோதரிகள் உடன் பிறப்புக்கள் என்ற காரணத்தினால் ஹராமாவது போலவே அவர்களது பிள்ளைகளும் அதிலிருந்து கீழிறங்கிச் செல்வோரும் ஹராமாவர்.

iv. தாயின் அல்லது தந்தையின் சகோதரிகள் ஹராமாவர் (ஆனால் அவர்களின் பிள்ளைகள் மஹ்ரமாவதில்லை).

## திருமணத் தொடர்பு (முஸாஹரா) காரணமாக நிகாஹ் செய்யத் தடுக்கப்பட்டோர்

1. மனைவியைப் பெற்றெடுத்தோர். அதே போன்று மனைவியின் தாய், அவ்வாறே மேல்நோக்கிச் செல்லும் உறவு முறையினர்.

2. உடலுறவு கொண்ட தன் மனைவிக்கு அவளது முன்னைய கணவன் மூலம் (கிடைத்த) பிள்ளைகள், மனைவியின் பிள்ளைகளின் பிள்ளைகள், இவ்வாறு கீழிறங்கிச் செல்லும் உறவினர்.

3. மகனின் மனைவி, மகனது மகனின் மனைவி, மகளின் மகனது மனைவி இவ்வாறு கீழிறங்கிச் செல்லும் உறவினர்.

4. தந்தையின் மனைவி (சாச்சி)

## பால்குடி (ரழாஅத்) காரணமாக நிகாஹ் செய்யத் தடுக்கப்பட்டோர்

ஒரு குழந்தை தனது தாயல்லாத ஒரு பெண்ணிடம் பால் குடித்தால், பாலூட்டிய அவளுக்கு செவிலித்தாய் என்று கூறப்படும். அவ்வாறு பாலூட்டப்பட்டதால் பின்வருவோர் திருமண உறவு கொள்ள தடுக்கப்பட்டோராவார்

(1) பால் கொடுத்த பெண்

(2) பால் கொடுத்த பெண்ணின் தாய்.

(3) பால் கொடுத்த பெண்ணின் கணவனின் தாய்

(4) பால் கொடுத்த பெண்ணின் சகோதரி

(5) பால் கொடுத்த பெண்ணின் கணவனின் சகோதரி

(6) பால் கொடுத்த பெண்ணின் பிள்ளைகளும் பிள்ளையின் பிள்ளைகளும்

(7) ஒரு பெண்ணிடத்தில் பால் குடித்த வகையில் உறவாகும் சகோதரி.

## பாலூட்டல் முறையில் திருமண விலக்காவதற்குரிய நிபந்தனைகள்

செவிலித்தாயிடம் பால் குடித்த பிள்ளைகளுக்கு, அவள் தாயாகவும் அவளது பிள்ளைகள் சகோதர சகோதரிகளாகவும் ஆகிவிடுவதோடு, திருமண விலக்கும் ஏற்படுகிறது. அவ்வாறு பால்குடி மூலம் உறவு ஏற்பட பின்வரும் நிபந்தனைகள் கவனிக்கப்படும்.

1. பாலூட்டப்பட்ட குழந்தை இரண்டு வயதுக்குட்பட்டதாயிருத்தல்.
2. மார்பில் வாய் வைத்து ஐந்து மிடர் பசியாறக் குடித்திருத்தல்.

ஐந்து முறையும் விட்டுவிட்டே பால் குடித்திருக்க வேண்டும். ஒரு விடுத்தம் அல்லது இரண்டு விடுத்தங்கள் குடிப்பதோ, குழந்தை தன் வாயை வைத்து விட்டு விடுவது மாத்திரமோ திருமண விலக்கை ஏற்படுத்தாது.

## திருமணம் முடிக்க தற்காலிகமாக தடுக்கப்பட்டோர்

தற்காலிகமாக தடுக்கப்பட்டோர் பின்வருமாறு அமைகிறது.

1. ஒரு மு.ஃ.மின் ; மு.ஃ.மினையே திருமணம் புரிய வேண்டும். முஷ்ரிகைத் திருமணம் செய்வதாகாது. அந்த முஷ்ரிக் (இணைவைப்பவன்) ஈமான் கொண்டால் அந்தத் தடை நீங்கி விடுகிறது.

   "விசுவாசிகளே ! இணைவைத்து வணங்கும் பெண்களை அவர்கள் விசுவாசம் கொள்ளும் வரை நீங்கள் மணந்து கொள்ளாதீர்கள். இணை வைத்து வணங்கும் பெண் உங்களைக் கவர்ந்தாலும் கூட, விசுவாசியான ஒரு அடிமைப் பெண் (விசுவாசியான) உங்களுக்கு மிகவும் சிறந்தவளாவாள். (அதே போல்) இணைவைத்து வணங்கும் ஆண்களுக்கு அவர்கள் விசுவாசம் கொள்ளும் வரை (விசுவாசிகளான உங்கள் பெண்களை) மணமுடித்துக் கொடுக்க வேண்டாம். இணைவைத்து வணங்கும் அவர்கள் உங்களைக் கவர்ந்தாலும் கூட, விசுவாசியான ஓர் ஆண் அடிமை (விசுவாசியான உங்கள் பெண்களுக்கு) மிகச் சிறந்தவனாவான்." (2 : 221)

2. ஒருவர் உடன் பிறந்த சகோதரிகளை ஏக காலத்தில் மண முடிக்கலாகாது.

   "உடன் பிறந்த இரு சகோதரிகளை ஏக காலத்தில் திருமணம் செய்வதும் விலக்கப்பட்டுள்ளது. இதற்கு முன் நீங்கள் அறியாத நிலையில் செய்தவைகளைத் தவிர." ( 4 : 23)

3. ஒரு பெண்ணையும் அவளது தந்தையின் சகோதரியையும் ஏக காலத்தில் மணம் புரியலாகாது. அவ்வாறே ஒரு பெண்ணையும் அவளது தாயின் சகோதரியையும் மணம் புரியலாகாது.

   "ஒரு பெண்ணை அவளது தகப்பனின் சகோதரியுடன் சேர்த்து திருமணம் செய்விக்கப்படலாகாது. மேலும் அப்பெண்ணையும் அவளது தாயின் சகோதரியையும் சேர்த்து திருமணம் செய்விக்கப்படலாகாது." (முத்தபக்குன் அலைஹி)

4. மாற்றானின் மனைவியாக இருக்கும்போது திருமணம் முடிக்க முடியாது. (அவனிடமிருந்து தலாக் செய்யப்பட்டு இத்தாவைக் கழித்தபின் திருமணம் செய்யலாம்)

5. மூன்று தலாக்கும் சொல்லப்பட்ட பெண், அவளது இத்தாவைக் கழித்து ; மற்றொருவருக்கு வாழ்க்கைப்பட்டு பிரிந்து இத்தாவைக் கழித்த பின்னரே முதற் கணவனுக்கு திருமணம் செய்ய ஹலாலாவாள்.

6. இஹ்ராமோடுள்ளவர் அதிலிருந்து நீங்கும் வரை திருமணம் செய்ய முடியாது.

## கணவனை/மனைவியைத் தெரிவு செய்யும் போது கவனிக்கப்பட வேண்டியவை

திருமணத்தின்போது மணவாளன் ; மணப்பெண் ஆகிய இருவரிடமும் நான்கு விடயங்கள் கவனத்திற் கொள்ளப்படுவதுண்டு. "அதில் சன்மார்க்கப் பற்றுக்கே முதலிடம் அளிக்க வேண்டும்" என்பது நபி (ஸல்) அவர்களது போதனையாகும்.

"நான்கு விடயங்களுக்காக ஒரு பெண் மணமுடிக்கப்படுகின்றாள். அவளது சொத்துக்காக, அவளது குலத்துக்காக, அவளது அழகுக்காக, அவளது மார்க்கப்பற்றுக்காக. மார்க்கப்பற்றுள்ளவளைத் தெரிவு செய்துகொள் ; வெற்றி பெறுவாய்" (புகாரி, முஸ்லிம்)



10-CM14793

அவ்வாறே இரக்க சிந்தனையும் அதிக பிள்ளைப் பேறுமுள்ள குடும்பத்தைச் சேர்ந்தவளையும் கவனத்திற் கொள்ளவேண்டும்.

> “அன்பு காட்டுபவளும் அதிகம் பிள்ளைகளைப் பெறுபவளுமான பெண்களை மணம் புரிந்து கொள்ளுங்கள். மறுமையில் நான் எனது சமூகத்தவரின் அதிகரிப்பை வைத்து நபிமாரிடம் பெருமை பாராட்டுவேன்" என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.” (திர்மிதி)

> “உங்கள் பெண் மக்களுக்கு, நற்குணமும் சன்மார்க்கப்பற்றுமுள்ள ஒருவர் திருமணம் பேசி வந்தால் அவருக்கு உங்கள் மகளைத் திருமணம் முடித்துக் கொடுங்கள். இல்லையெனில் புவியில் பெரிய அட்டகாசமும் சோதனைகளும் உண்டாகும்.” (திர்மிதி)

வேறு பல ஹதீஸ்கள் மூலம் சன்மார்க்கப்பற்றும், அழகுமுள்ள கௌரவமான குடும்பத்தில் உள்ள கன்னிப் பெண்ணை மணமுடிப்பது சிறந்ததென கூறப்பட்டுள்ளதாக அறிஞர்கள் கூறுவர். இதே போன்று மணமகனிடம் சன்மார்க்கப்பற்றும் குடும்ப வாழ்க்கைக்குத் தேவையான பொருளாதார வசதியும் இருப்பது சிறந்ததென அறிஞர்கள் கூறுவர். மணமகனிடம் சன்மார்க்கப்பற்று, குடும்ப வாழ்க்கைக்குத் தேவையான பொருளாதார வசதி, சிறந்த அறிவு, அன்பு, மலட்டுத் தன்மையற்றிருத்தல் போன்ற அம்சங்களும் இருப்பது நல்லது என்று கூறுவர். பொதுவாகவே மணமகன் மணப்பெண் ஆகியோரை தெரிவு செய்வதில் மார்க்கப்பற்றுக்கே முதலிடமும் முக்கியத்துவமும் கொடுக்கப்பட வேண்டும்.

> திருமணம் என்பது இரண்டு குடும்பத்தவருடைய முடிவோடு நிறைவேறும் ஒன்றல்ல. மாறாக யாருக்குத் திருமணம் பேசப்படுகின்றதோ அவர், மணப்பெண்ணைப் பார்த்து முடிவு செய்ய வேண்டிய ஒன்றாகும். அதனால் தான் ஒரு சமயம் உத்தமத் தோழர்களில் ஒருவர், தனக்குத் திருமணம் பேசப்பட்ட செய்தியைச் சொன்னபோது நீர் மணப் பெண்ணைப் பார்த்தீரா என நபியவர்கள் வினவினார்கள். ‘இல்லை’ என அம்மனிதன் கூறியபோது, அவளைப்போய் பார்த்து வாரும்;’ என்று கட்டளையிட்டார்கள். (முஸ்லிம்)

திருமணத்தில் சம்பந்தப்படும் இருவரும் ஒருவரையொருவர் பார்த்துக் கொள்ள வேண்டும். அதன் மூலம் விருப்பம் ஏற்படலாம். அல்லது விட்டு விடலாம். திருமணமாகமுன் இருவரும் தொடர்பு கொள்வதோ தனித்திருப்பதோ, பிரயாணம் செய்வதோ கூடாது. பார்க்கும் போது முகம், இரண்டு மணிக்கட்டு வரையிலான கை என்பவற்றை அப்பெண்ணின் பாதுகாவலர் முன்னிலையில் பார்வையிடுவதற்கே அனுமதி உண்டு.

## நிகாஹின் ஷர்த்துக்கள்

1. மணமகன். மணமகள்
2. ஈஜாப் (ஒப்படைத்தல்) ; கபூல் (ஏற்றுக் கொள்ளல்)
3. மணப் பெண்ணின் வலீ
4. சாட்சிகள் இருவர்
5. இருவரில் அல்லது இருவரில் ஒருவரில் திருமணத்துக்குத் தடையாக பால்குடி உறவுமுறை, வித்தியாசமான மார்க்கத்தைப் பின்பற்றுதல் போன்ற காரணங்கள் இல்லாதிருத்தல்.

மேற்கண்ட விடயங்கள் பற்றியும் அதற்கான சிறப்பு விதிகள் பற்றியும் நாம் விரிவாகப் பார்ப்பதே பொருத்தமானதாகும்.

**மணமகன்**

1. முஸ்லிமாயிருத்தல்.
2. மணம் புரிய ஆகுமானவராக இருத்தல்.
3. இஹ்ராம் தரிக்காதவராக இருத்தல்.
4. சம காலத்தில் நான்கு மனைவியரை கொண்டிருக்காதிருத்தல்.

**மணமகள்**

1. முஸ்லிமாக இருத்தல்.
2. இத்தா அனுஷ்டிக்காத நிலையிலிருத்தல்.
3. இஹ்ராம் தரிக்காதவளாயிருத்தல்.
4. மாற்றானின் மனைவியாக இல்லாதிருத்தல்.

**ஈஜாப் : (ஒப்படைத்தல்)**

வலீகாரர் தன் மகளை மணவாளனுக்கு ஒப்படைக்கும்போது ; "எனது மகளை உங்களுக்கு நிகாஹ் செய்து தந்தேன்" என இறந்த காலத்தைக் குறித்துச் சொல்வதைக் குறிக்கும்.

## கபூல் (பொறுப்பேற்றல்)

வலீகாரர் கூறிய வாசகத்துக்குப் பதிலாக தாமதமின்றி ‘ஏற்றுக் கொண்டேன்’ எனக்கூறுவதைக் குறிக்கின்றது.

இந்த இரண்டும் (ஈஜாபும் கபூலும்) விளங்கும் மொழியில் அமைதல் வேண்டும்.

## வலீ

இச்சொல் பாதுகாவலர் அல்லது பொறுப்பாளரைக் குறிக்கிறது. இருப்பினும் “நிகாஹ்” பற்றிப் பேசப்படும் இடங்களில் மணப்பெண்ணின் பாதுகாவலரைக் குறிப்பிடுகிறது. அவ்வாறு ஒரு மணப்பெண்ணுக்கு வலீயாக இருக்கத் தகுதியானோர் வருமாறு:

1. மணமகளின் தந்தை
2. தந்தையின் தந்தை
3. உடன் பிறந்த சகோதரன்
4. தந்தை வழிச் சகோதரன்
5. உடன் பிறந்த சகோதரனின் மகன்.
6. தந்தை வழிச் சகோதரனின் மகன்
7. தந்தையின் உடன் பிறந்த சகோதரன் (பெரியப்பா/சிற்றப்பா)
8. தந்தையின் உடன் பிறந்த சகோதரனின் மக்கள் (பெரியப்பா/சிற்றப்பா மக்கள்)
9. மேற்கண்ட யாருமே இல்லாதபோது காழி அல்லது ஹாகிம்.

## வலிகாரருக்குரிய தகுதிகள்

1. முஸ்லிமாயிருத்தல்.
2. ஆணாயிருத்தல்.
3. சுதந்திர புருஷனாயிருத்தல்.
4. பருவமடைந்திருத்தல்.
5. புத்தி சுயாதீனமுடையவராயிருத்தல்.

6. நெறி தவறாதவனாகவும் பெரும் பாவங்களிலீடுபடாதவனாகவும் இருத்தல். இந்தத் தகுதிகளோடு சாட்சிகள் இருவரிடமும் மேலும் இரண்டு விடயங்கள் கவனிக்கப்பட வேண்டும்.

   1. நிகாஹின் போது செய்யப்படும் ஒப்பந்தத்தின் மொழியைத் தெரிந்தவராக இருத்தல்

   2. பேச்சு, கேள்வி, பார்வை முதலிய புலன்கள் குறை பாடற்றனவாக இருத்தல்.

## மஹர்

தன்னோடிணைந்து இல்லறம் நடாத்த விரும்பி, திருமணம் மூலம் இணைபவளுக்கு, மணவாளன் தனது வசதிக்கேற்ப மஹரைக் கொடுக்கலாம். அவ்வாறு கொடுப்பது வாஜிப் (கட்டாயம்) ஆகும். அதற்கென்று ஒரு மட்டுப்படுத்தப்பட்ட அளவு கிடையாது. இது 'ஸதுகாத்' என்று கூறப்படும்.

> "நீங்கள் திருமணம் செய்யும் போது (திருமணம் செய்யும்) பெண்ணுக்குரிய மஹரை மன நிறைவோடு கொடுத்து விடுங்கள்." (4:4) இவ்வாறு கொடுக்கப்படும் மஹர், மணப் பெண்ணுக்கே உரியதாகும். அதனை விட்டுக் கொடுக்கும் உரிமையும் அவளுக்கிருக்கிறது.
>
> "நீங்கள் கொடுத்த மஹரிலிருந்து எதையேனும் ஒன்றை மன நிறைவோடு (உங்கள் மனைவியர்) உங்களுக்கு விட்டு விட்டால் நீங்கள் அதனை மகிழ்ச்சியோடு புசியுங்கள்" (4:4)

## திருமண வாழ்த்து

திருமணம் என்பது மகிழ்ச்சிகரமான ஒரு நிகழ்வாகும். அதில் கலந்து கொள்ப வர்கள் மணவாளரையும் மணப்பெண்ணையும் வாழ்த்துவது ஸுன்னத்தாகும். ஒவ்வொரு சந்தர்ப்பத்துக்கும் துஆக்களைக் கற்றுக் கொடுத்த ரஸுல் (ஸல்) அவர்கள் மணமக்களைப் பின்வரும் துஆவை ஓதி வாழ்த்தினார்கள்.

بَارَكَ اللهُ لَكَ وَبَارَكَ عَلَيْكَ وَجَمَعَ بَيْنَكُمَا فِيْ خَيْرٍ

"அல்லாஹ் உமக்கு அபிவிருத்தி செய்யட்டும். உன்மீது அபிவிருத்தியை பொழியட்டும். உங்கள் இருவரையும் நல்ல வாழ்க்கையில் இணைத்து விடட்டும்."

## வலீமா

நிகாஹை அடுத்து மணவாளர் நிறைவேற்றும் நல்ல காரியம் "வலீமா" எனும் திருமண விருந்தைக் கொடுப்பதாகும். இந்த விருந்தை நிகாஹை அடுத்து, இரவிலோ பகலிலோ கொடுக்கலாம். உறவினரையும் நண்பர்களையும் அயலவர்களையும், சுற்றத்தாரையும் அழைத்து மணமகன் கொடுக்கும் விருந்தே இது. ஸுன்னத்தான நோன்பொன்றில் உள்ளவர் கூட, இந்த விருந்துக்கு அழைக்கப்பட்டால் நோன்பை முறித்து விட்டுச் செல்ல வேண்டும் என்று இஸ்லாமிய ஷரீஅத் கூறுகிறது. அவ்வாறே பாவகாரியங்கள் நடைபெறும் வலீமா விருந்தில் பங்குகொள்ளலாகாது என்றும் அது தடுத்துள்ளது. "விருந்துகளில் கெட்டது செல்வந்தர் அழைக்கப்பட்டு எளியோர் விடப்படுவதாகும்." (முஸ்லிம்) என்பது நபிமொழியாகும்.

## கணவன் மனைவி உறவு

திருமணத்தின் பின்னரான கணவன் மனைவி உறவுகள் பொறுப்பு வாய்ந்தவை. இருவரது உள்ளமும் எந்தளவு ஒத்துப் போகுமோ அதைப் பொறுத்தே இல்லறம் மகிழ்ச்சியாக அமையும். அத்தகைய மகிழ்வைக் காண விரும்பும் கணவன் மனைவி ஆகிய இருவரும் ஒருவர் மற்றவருக்கு நிறைவேற்ற வேண்டிய கடமைகளை அறிந்து அதனை நிறைவேற்ற வேண்டும்.

> “(ஆண்களுக்கு) முறைப்படி பெண்கள் மீது உள்ள உரிமைகள் போன்றே (ஆண்கள்மீது) பெண்களுக்கும் உண்டு. ஆயினும் ஆண்களுக்குப் பெண்கள் மீது ஓர் உயர் பதவியுண்டு. அல்லாஹ் வல்லோனும் நுண்ணறிவு உடையோனுமாயிருக்கிறான்” (2:228)

கணவன் மனைவி இருவர் மீதுமுள்ள கடமைகள், கணவன் மனைவிக்கு நிறைவேற்ற வேண்டிய கடமைகள், மனைவி கணவனுக்கு நிறைவேற்ற வேண்டிய கடமைகள் என மூன்று வகையான கடப்பாடுகள் உள்ளன. அவற்றை அறிந்து செயற்படும் போதுதான் இல்லறம் சுவனமாக மலர முடியும்.

> “நிச்சயமாக உங்கள் மனைவியருக்கு நீங்கள் நிறைவேற்ற வேண்டிய கடமைகளும் உள்ளன. உங்கள் பெண்கள் உங்களுக்கு நிறைவேற்ற வேண்டிய கடமைகளும் உள்ளன” என்று றஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள். (அஹ்மத்)

> “பெண்களில் சிரேஷ்டமானவர் யாரெனில் நீ அவளைப்பார்த்தால், மகிழ்ச்சி தருவாள். கட்டளையிட்டால் செயற்படுத்துவாள். அவளைவிட்டுப் பிரிந்திருந்தால் தனது கற்பையும் உனது பொருளையும் காத்துக்கொள்வாள்” என நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள். (இப்னு மாஜா)

## இருவருக்கும் பொதுவான கடமைகள்

- புரிந்துணர்வோடு நடந்து கொள்ளல் : அபூதர்தா (ரழி) அவர்கள் திருமணத்தின் போது தனது மனைவியிடம் பின்வருமாறு கூறினார்கள். "நான் கோபப்படுவதைக் கண்டால் பொறுமையோடு என்னைத் திருத்துங்கள். நீ கோபப்படுவதைக் கண்ணுற்றால் நான் பொறுமையோடு உன்னைத் திருத்துவேன். இவ்வாறு நாம் நடந்து கொள்ளாவிட்டால் சேர்ந்து வாழ முடியாத நிலை ஏற்படும்."

- பரஸ்பரம் கவர்ச்சியோடு நடந்து கொள்ள வேண்டும் : எனது மனைவி அலங்காரத்தோடு இருக்க வேண்டுமென நான் விரும்புவது போலவே அவளுக்காக நானும் அலங்கரித்துக் கொள்கிறேன். ஏனெனில் அவளுக்கு உங்கள் மீதுள்ள உரிமை போன்றே உங்கள் மீதும் அவளுக்கு உரிமை இருக்கிறது என்ற குர்ஆன் ஆயத்தை இப்னு அப்பாஸ் (ரழி) ஓதிக் காண்பித்தார்கள்.

- பிள்ளைகளுக்கு முன்னால் சண்டையிடாதிருத்தல்.

## கணவன் மீதுள்ள கடமைகள்

- திருமணத்தின் போது மஹர் கொடுத்தல்.
- மனைவியோடு நற்குணத்தோடு நடந்து கொள்ளல்.

  நீங்கள் உங்கள் மனைவியோடு நன்முறையில் நடந்து கொள்ளுங்கள். (4 : 19)
- மனைவிக்குரிய இல்லறத் தேவைகளை நிறைவேற்றுதல்.
- மனைவிக்கும் பிள்ளைகளுக்கும் தேவையான செலவினங்களைக் கொடுத்தல். “இன்னும் அவர்களுக்கு உணவும், அவர்களுக்கு உடையும் முறைப்படி (வழங்குவது) தகப்பன் மீது கடமையாகும்.” (2:233)

கணவன் மீதுள்ள கடமைகள் பற்றி நபி (ஸல்) அவர்கள் இவ்வாறு கூறினார்கள்.

அல்லாஹ்வின் தூதரே, "ஒருவன், தனது மனைவிக்கு செலுத்த வேண்டிய கடமைகள் யாவை என்று நான் கேட்டேன்." அதற்கு அவர்கள், "நீர் உண்ணும்போது அவளுக்கும் உண்ணக்கொடு. நீ அணியும்போது அவளையும் அணியவை. அவளது முகத்தில் அடிக்காதே. அவளைக் கேவலப்படுத்தாதே. வீட்டுக்குள்ளேயன்றி அவளை வெறுத்து வாழாதே" என்று பதில் கூறினார்கள். (முஸ்னத் அஹ்மத்)

- ஒன்றுக்கு மேற்பட்டோரை மனைவியாக வைத்திருப்பவர் அவர்கள் மத்தியில் நியாயமாக நடந்து கொள்ள வேண்டும்.
- மனைவி மக்களை சன்மார்க்க வழியில் ஒழுகுவதற்குப் பயிற்றுவித்தல் வேண்டும்.

## மனைவி மீதுள்ள கடமைகள்

I. கணவனுக்குக் கட்டுப்படுதல்.

II. கற்பொழுக்கத்தைக் காத்தல். (படுக்கையை மாசுபடுத்தாதிருத்தல்)

III. குழந்தைகளைப் பராமரித்தல்.

மேற்குறித்த மூன்று அடிப்படைக்கடமைகளையும் நிறைவு செய்யப் பின்வருவன துணை நிற்கும் :

- கணவனுக்குரிய பணிகளை நிறைவேற்றல்.
- கணவனது வேலைகளில் அவனுக்கு ஒத்துழைத்தல்.
- கணவனை புன்முறுவலுடன் வரவேற்றல்.
- கணவனோடு இதமாகப் பேசுதல்.
- மனதுக்குப் பாரமான எதனையும் உடனடியாக முன்வைக்காமல் இருத்தல்.
- கணவனுக்காக தன்னை அலங்கரித்துக் கொள்ளல்.
- கணவனின் அனுமதியின்றி ஸுன்னத்தான நோன்புகளை நோற்கா திருத்தல்.
- கணவனின் உத்தரவின்றியும் மஹ்ரமின்றியும் நீண்ட பயணங்களை மேற் கொள்ளாதிருத்தல்.
- கணவனின் அனுமதியின்றி வெளியாரை வீட்டினுள் அனுமதிக்கா திருத்தல்.

## இல்லறமும் குழந்தைச் செல்வமும்

கணவன், மனைவி ஆகிய இருவருக்குமிடையிலான வாழ்க்கையே இல்லறமாகும். இருவரும் புரிந்துணர்வோடு நடத்தும் வாழ்க்கையே இன்பமாக அமையும். ஒருவரையொருவர் பகைத்தும் கோபித்தும் சண்டை சச்சரவுகளுடன் கழியும்

வாழ்வு நல்வாழ்வாக அமையாது. அதனை நரக வாழ்க்கையெனக் கூறல் தகும். மஹர் கொடுத்து மணந்து கொண்ட மனைவியின் மூலம் கிடைக்கும் குழந்தைகளே அவர்களுக்கு கண்குளிர்ச்சி அளிப்பார்கள். அத்தகைய கண்குளிர்ச்சியைத் தருமாறு அல்லாஹ்விடம் கேட்பது மு:.மீன்களின் அருங்குணமென அல்லாஹ் குறிப்பிடுகிறான்.

> "எங்கள் இறைவா ; எங்கள் மனைவிமார்களிலும் சந்ததிகளிலும் எங்களுக்குக் கண்குளிர்ச்சியைத் தருவாயாக" (25 : 74 )

இவ்வாறு பிரார்த்தனை புரிந்து பெற்றெடுக்கும் பிள்ளைகளுக்கு, பெற்றோர் செய்ய வேண்டிய கடமைகள் பல உள்ளன. அவர்களது சீரான வாழ்வு, பெற்றோர் கையிலேயே தங்கி உள்ளது. சிறு பிராயம் முதல் அவர்களை ஒழுக்க சீலமுடையவர்களாகவும் வணக்க வழிபாடுகளில் ஆர்வமுள்ளவர்களாகவும் வளர்க்க வேண்டுமென இஸ்லாம் கூறுகின்றது. முதன்முதல் கலிமாவை மொழியக்கூடியவர்களாக குழந்தைகளை பயிற்றுவிக்குமாறு நபி (ஸல்) அவர்கள் கட்டளையிட்டுள்ளார்கள்.

> "உங்கள் சிறுவர்களுக்கு முதன்முதல் லாஇலாஹ இல்லல்லாஹ் எனும் கலிமாவைக் கற்றுக் கொடுங்கள்." (ஹாகிம்)

அல்குர்ஆனை நேசிப்போராகவும் அதன் வழியைத் தேடிச் செல்வோராகவும் பிள்ளைகளை வளர்ப்பது பெற்றோரின் கடமையாகும்.

"மூன்று காரியங்கள் மீது உங்கள் குழந்தைகளுக்கு நல்லொழுக்கப் பயிற்சியளியுங்கள். உங்கள் நபி மீதும் அவர்களது குடும்பத்தினர் மீதும் அல்குர்ஆனை ஓதுவதன் மீதும் நேசம் கொள்ள பயிற்சியளியுங்கள்" என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

ஒரு பிள்ளைக்குக் கொடுக்கப்படும் சிறந்த பயிற்சியைப் பொறுத்தே அதன் எதிர்காலம் அமைகின்றது. அதனால்தான், குழந்தையின் சுவர்க்கமும் நரகமும் அதன் பெற்றோர் ஆவர் எனக் கூறப்பட்டுள்ளது. இமாம் கஸ்ஸாலி (ரஹ்) அவர்கள், "சிறு பிள்ளைகளுக்கு குர்ஆன் ஓதிக் கொடுப்பது போலவே நல்லோரின் வரலாற்றுச் சம்பவங்கள், தேவையான சன்மார்க்க விளக்கங்கள் போன்றவற்றையும் போதிக்க வேண்டும்" எனக் கூறியுள்ளார்கள்.

பிள்ளைகளை எப்போதும் நல்லவர்களோடு சேர்ந்து பழகப் பயிற்சியளிக்க வேண்டும்.

> "மனிதன் தனது தோழனின் வழியே செல்பவன். எனவே, அவன் யாருடன் தோழமை கொண்டுள்ளான் என்பதைப் பார்த்துக் கொள்வானாக" என்று நபி (ஸல்) கூறியதாக அபூஹுரைறா (ரழி) அவர்கள் தெரிவிக்கின்றார்கள். (அபூ தாவூத்)



11-CM14793

மேலும் " நீர் ஒரு மு.்.மீனுடனன்றி நட்புக் கொள்ளலாகாது. நீ கொடுக்கும் உணவை ஓர் இறை பக்தி உடையோனே சாப்பிடட்டும். (திர்மிதி) என்றும் நபியவர்கள் கூறியுள்ளார்கள்.

இவ்வாறு நல்ல நட்பை வைத்துக் கொள்ள வேண்டுமென்ற நபி (ஸல்) அவர்களின் போதனைகளை நடைமுறைப்படுத்துவது பெற்றோரின் கடமையாகும். பிள்ளை பிறந்ததும் “அதான்” கூறி நற்பெயரிட்டு மகிழ்வது போலவே ; குழந்தையிடம் நற்குணங்களையும் வளர்த்து அதன் மூலம் மகிழ்வடைய வேண்டும். தனக்கு உரிமையில்லாத பொருளை அனுபவிக்கும் பழக்கம் கூடாது என்பதை உணர்த்துவதும் பெற்றோர் கடமையாகும்.

“ஒரு சமயம் நபி (ஸல்) அவர்களின் பேரர் ஹஸன் (ரலி) அவர்கள், நபி (ஸல்) அவர்களோடு இருந்தார்கள். அப்போது சிறுவர் ஹஸன் அங்கு ஸதகாவாக வந்திருந்த ஈத்தம் பழத்திலொன்றை எடுத்து வாயிலிட்டார்கள். இது கண்ட நபி (ஸல்) அவர்கள், சீ, சீ என்று கூறி வாயிலிருந்த பழத்தை துப்பவைத்தார்கள். மேலும் “இத்தகைய ஸதகா எமக்கு உரித்தல்ல" என்பதையும் உணர்த்தினார்கள். (புகாரி முஸ்லிம்)

சன்மார்க்கக் கடமைகளைப் பேணுபவர்களாக பிள்ளைகளை வளர்ப்பதும் பெற்றோரின் கடமையாகும். வயதுக்குத் தக்க பொருத்தமான விடயங்களைக் கற்றுக் கொடுக்கும் பொறுப்பு பெற்றோருக்கிருக்கின்றது. தொழுகையைக் கொண்டு ஏவுவதும் பின்னர் தண்டித்துத் தொழ வைப்பதும் பெற்றோர் கடமையாகும்.

“உங்கள் பிள்ளைகள் ஏழு வயதாக இருக்கும்போது தொழுமாறு அவர்களுக்குக் கட்டளையிடுங்கள். பத்து வயதடைந்தும் (தொழாதிருந்தால்) அடித்துத் தொழ வையுங்கள். மேலும் அவர்களை படுக்கையில் வேறுபடுத்தி வையுங்கள்", என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். (அஹ்மத்)

பெற்றோர் பிள்ளைகளுக்கு ஒழுக்கப் பயிற்சியளிப்பது எந்தளவு கடமையோ அந்தளவு அவர்கள் மத்தியில் நீதியாக நடப்பதும் கடமையாகும். நு.்.மான் இப்னு பசீர் என்ற தோழர், நபி (ஸல்) அவர்களிடம் தனது மக்களில் ஒருவரை அழைத்து வந்து, “அல்லாஹ்வின் தூதரே ! நான் எனது இந்த மகனுக்கு சன்மானமொன்று வழங்கினேன்” என்று கூறினார். அது கேட்ட தூதர், “உனது பிள்ளைகள் அனைவருக்கும் இவ்வாறு வழங்கினீரா” என்று கேட்டார்கள். இல்லையெனப் பதில் சொன்னபோது “நீங்கள் அல்லாஹ்வைப் பயந்து கொள்ளுங்கள். உங்கள் பிள்ளை களுக்கிடையில் நீதமாக நடவுங்கள்.” என்று அறிவுறுத்தினார்கள் (புகாரி). எனவே பெற்றோர் தமது பிள்ளைகளுக்கு நிறைவேற்றவேண்டிய கடமைகளை சரிவரச் செய்து வருவதன் மூலமே கண்குளிர்ச்சி பெறுவர்.

பெற்றோருக்குப் பணிவிடை செய்து அவர்களுக்குத் தேவையான ஒத்தாசை புரிவது பிள்ளைகள் மீதுள்ள கடமையாகும். அவ்வாறு செய்வது புனிதப் போரில் ஈடுபடுவதற்குச் சமமானதாகக் கூறப்பட்டுள்ளது. ஒரு நாள் ஸஹாபாக்களில் ஒருவர் "அல்லாஹ்வின் தூதரிடம் வந்து, நான் புனிதப் போரில் - ஜிஹாதில் - பங்குபற்ற விரும்புகிறேன்" என்று தன் விருப்பத்தைக் கூறினார். அப்போது ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்கள், "உமது பெற்றோர் உயிருடன் இருக்கின்றார்களா?" என வினவினார்கள். "ஆம்" என அம்மனிதர் கூறவே, அப்படியாயின் அவர்களோடிருந்து அவர்களுக்கு பணிவிடை செய். அதுவும் ஜிஹாது தான்" என்று விளக்கினார்கள். (புகாரி, முஸ்லிம்)

ஒருவர், தனது பெற்றோரால் எவ்வளவு துன்புறுத்தப்பட்டாலும் அதற்காகப் பெற்றோருக்கு நோவினையளிக்கவோ துன்புறுத்தவோ கூடாது.

பத்து விடயங்களை ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்கள் உபதேசித்தார்கள் எனக் கூறிய முஆத் (ரலி) அவர்கள், இரண்டு விடயங்களை இவ்வாறு கூறினார்கள். நீர் கொலை செய்யப்பட்டு தீயிலிடப்பட்டாலும் அல்லாஹ்வுக்கு எப்பொருளையும் இணையாக்காதீர். மேலும் உமது பெற்றோர் உன்னுடைய சொத்துக்களையும் குடும்பத்தவர்களையும் விட்டு வெளியேற்றினாலும் அவர்களுக்கு நோவினையளிக்காதீர் என்றார்கள்.

பெற்றோர் முஸ்லிமாக இல்லாவிட்டாலும் கூட, அவர்களோடு நன்றியுள்ள மக்களாக இருக்கவேண்டுமென இஸ்லாம் போதிக்கின்றது. அஸ்மா (ரழி) அவர்களின் தாய் முஷ்ரிக்காக இருக்கும்போது அஸ்மாவைத் சந்திக்க வந்திருந்தார். காபிரான தனது தாயோடு உறவாடலாமா என்பதை அறிவதற்காக ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்களிடம் வந்தார். தனது தாய் இஸ்லாத்தை வெறுத்த நிலையில் இங்கு வந்துள்ளார். நான் அவரோடு சேர்ந்து நடக்கலாமா? என்று கேட்டார். "ஆம் உமது தாயோடு சேர்ந்து நட" என நபி (ஸல்) அவர்கள் பதிலளித்தார்கள். (புகாரி)

பெற்றோர் உயிரோடு இருக்கும் போது மாத்திரமன்றி அவர்களது மரணத்தின் பின்பும் பிள்ளைகள் சில கடமைகளை நிறைவேற்ற வேண்டியவர்களாக உள்ளனர். பனூ ஸலமாக் கோத்திரத்தைச் சேர்ந்த ஒருவர் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்களிடம் வந்து பின்வருமாறு கேட்டார்கள். "அல்லாஹ்வின் தூதரே ! எனது பெற்றோர் காலமாகிவிட்டனர். அவர்களது வபாத்தின் பின்பும் அவர்களுக்காக நாம் செய்ய வேண்டிய நற்கிரியைகள் ஏதுமுண்டா?" அதற்கு ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்கள் ஆம் என்று கூறி இவ்வாறு விபரித்தார்கள். உன் பெற்றோர் காலமானால் அவர்களுக்குரிய ஜனாஸா தொழுகையை நிறைவேற்றுவது, அவர்களது பிழைகளை மன்னிக்குமாறு கேட்பது, அவர்கள் செய்து கொண்ட உடன்படிக்கைகளை நிறைவேற்றி

வைப்பது, அவர்களது நண்பர்களை கண்ணியப்படுத்துவது, அவர்களின் தொடர்பால் உண்டான உறவு முறையினரைச் சேர்ந்து நடப்பது என ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்கள் விபரித்தார்கள். (அபூதாவுத்)

ஒரு பிள்ளை தனது பெற்றோருக்கு எவ்வளவு கொடுத்தாலும் எதனைச் செய்தாலும் அவர் ஒரு போதும் தன்னைப் பெற்றெடுத்தவர்களுக்குக் கைம்மாறு செய்ததாக அமையாது.

ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்களோடு தோழர்களிற் சிலர் அமர்ந்திருந்தார்கள். அவர்களில் ஒருவர் ஒரு மனிதர் தனது தாயைத் தோளில் சுமந்து கொண்டு தவாப் செய்த காட்சியைக் கண்டார். அல்லாஹ்வின் தூதரிடம் இதனைக் கூறி அவ்வாறு தனது தாயை சுமந்து தவாப் செய்பவர் அவரது தாய்க்கு நிறைவேற்ற வேண்டிய கடமையைச் செய்து முடித்தவராகக் கொள்ளலாமா? என வினவினார். இல்லை அவனது தாய் அவனை வயிற்றில் சுமந்திருக்கும் போதும் பெற்றெடுக்கும் போதும் அடைந்த வருத்தத்தில் ஒன்றுக்கேனும் அது பிரதியாக அமையமாட்டாது என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

**பிள்ளைகளின் கடமைகள்**

* பெற்றோரை கனம் பண்ணுவது கடமையாகும்.
* பெற்றோரைத் துன்புறுத்துவது இணைவைத்தலுக்கு அடுத்த பெரும் பாவமாகும்.
* அவர்கள் மனம் நோகாது நடந்து கொள்ள வேண்டும்.
* வயோதிபத்தை அடைந்த பெற்றோரோடு மிகவும் இரக்கமாக நடந்து கொள்ள வேண்டும்.
* “ரப்பி ர்ஹம் ஹுமா கமா ரப்பயானீ ஸகீரா” என்ற துஆவை எப்போதும் ஓதி வர வேண்டும்.
* பெற்றோருக்குப் பணிவிடை செய்வதற்கு ஒருபோதும் பின்நிற்கக் கூடாது.
* பெற்றோர் முஸ்லிமாக இருந்தாலும் இல்லாவிட்டாலும் அவர்களுக்கு நிறைவேற்ற வேண்டிய கடமைகளைப் பிள்ளைகள் நிறைவேற்றியே தீர வேண்டும்.
* நாம் செய்யும் எந்த பணிவிடை மூலமும் பெற்றோருக்கு நாம் செய்ய வேண்டியவற்றை செய்துவிட்டதாக திருப்தி அடையக் கூடாது.

* “பெற்றோரின் திருப்தியிலே அல்லாஹ்வின் திருப்தி தங்கியுள்ளது. பெற்றோரின் கோபத்திலே அல்லாஹ்வின் கோபம் இருக்கிறது என்பதும், பெற்றோர் இருவருமே ஒருவனது சுவர்க்கமும் நரகமும் ஆவர்” என்பதும் ஹதீஸ்களின் அறிவுரையாகும்.

எம்மைப் பெற்றெடுத்து பாலூட்டி சீராட்டி வளர்த்த பெற்றோர்களுக்கு நாம் எந்தக் கைம்மாறும் செய்ய முடியாது ; செய்தாலும் அதற்கு ஈடாகமாட்டாது. இந்த உணர்வு அனைவரது உள்ளத்திலும் ஏற்பட வேண்டும். எத்தனை சிரமங்களைச் சுமந்து பெற்றோர் எம்மைப் பெற்றேடுத்துள்ளார்கள் என்பதனை அடிக்கடி சிந்திப்பது பிள்ளைகள் மீதுள்ள கடமையாகும்.

“மனிதன் தனது பெற்றோருக்கு நன்றியோடு நடந்து கொள்ள வேண்டும் என்று நாம் உபதேசம் செய்துள்ளோம். அவனுடைய தாய் அவளை தன் கர்ப்பத்தில் கஷ்டத்தோடு சுமந்திருந்து கஷ்டத்துடனே பெற்றெடுத்துள்ளாள்.” (46 : 15)

இவ்வாறு சிரமத்தோடு பெற்றெடுத்த பெற்றோரை நிந்தனை செய்வது ; துன்பமிழைப்பது ஆகிய யாவும் பெரும் பாவங்களைச் சேர்ந்ததாகும். ஒரு சமயம் அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் ; உத்தம தோழர்களிடம் பெரும் பாவங்களை நான் உங்களுக்கு அறிவித்துத் தரட்டுமா? என்று கேட்டார்கள். ‘ஆம் அறிவியுங்கள்’ என்று தோழர்கள் பதில் கூறினர். அல்லாஹ்வுக்கு இணைவைத்தலும் பெற்றோரை நிந்தனை செய்தலும் என்று கூறிவிட்டு சிறிது சாய்ந்த அவர்கள், மீண்டும் எழுந்து “அறிந்து கொள்ளுங்கள் ! பொய்ச் சாத்தியம் பகர்வதும் பெரும் பாவங்களைச் சேர்ந்தது” என இரண்டு விடுத்தம் கூறினார்கள். (புகாரி)

எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் பிள்ளைகள் பெற்றோரின் மனம் நோகுமாறு நடந்து கொள்ளக் கூடாது.

“நபியே! உங்களிறைவன் அவனையன்றி வேறு யாரையும் வணங்கக் கூடாதென விதித்திருப்பதோடு ; பெற்றோருக்கு நன்றியோடு நடந்து கொள்ள வேண்டுமெனவும் கடமைப்படுத்தியிருக்கிறான். பெற்றோர் இருவருமோ ; ஒருவரோ முதிர்ந்த வயதை அடைந்துவிட்ட போதிலும் அவர்களை நிந்திக்கும் வண்ணம் “சீ” என்று கூறவோ வெருட்டவோ வேண்டாம். அவர்களுடன் எதைப் பேசினாலும் மிக்க மரியாதையான வார்த்தையைக் கூறுவீராக. அவர்களுக்கு மிக்க அன்புடன் பணிந்து நடப்பீராக. மேலும் என் இறைவனே! நான் சிறியவனாக இருக்கும்போது அவர்கள் என்னை வளர்த்துப் போசித்தது போன்று அவர்கள் மீது கருணையும் புரிவாயாக என்று பிரார்த்தனை புரிவீராக! என அல்லாஹ் கூறியுள்ளான்.” (17 : 22, 23, 24)

## விவாகரத்தும் அது தொடர்பான நடைமுறைகளும்

இல்லற வாழ்வு இன்பகரமான வாழ்வாகும். கணவனும் மனைவியும் புரிந்துணர்வோடு ஒவ்வொருவரும் தத்தமது கடமைகளை நிறைவேற்றிக் கொண்டிருக்கும் வரை, அது சுவன வாழ்வாக அமையும். இதற்கு மாறாக நடந்து கொண்டால் அதன் விளைவு விபரீதமாக அமைந்து விடும்.

பிணக்கும் வெறுப்பும் தாம்பத்திய உறவுக்கான தடைகளும் ஏற்படும் போது, இஸ்லாம் அவற்றுக்குரிய பரிகாரங்களை மேற்கொள்ள வழிகாட்டியுள்ளது. உடனடியாக பிரிவினைக்குரிய வழியைத் தேடாமல் படிமுறையான சில நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு பணிக்கின்றது. கணவனே வீட்டின் தலைவன் ஆவான். “ஆண்கள் பெண்களின் நிர்வாகிகள்” (4:24) என்று அல்லாஹ் குறிப்பிட்டுள்ளான். அவர்களே செலவு செய்து குடும்பத்தைப் பராமரிப்பார்கள்.

எனவே கணவனது பராமரிப்பில் இருந்துவரும் மனைவி, கணவனது தேவைகளை நிறைவேற்றுபவளாக, அவனைக் கவரக்கூடியவளாக, அவனது சுகதுக்கங்களில் பங்கு கொள்பவளாக இருந்து வருவதன்மூலமே இன்பகரமான இல்லறத்தை அடைந்து கொள்ள முடியும். அல்லாஹ்வுக்கு நிறைவேற்ற வேண்டியவற்றையும் கணவனுக்கு நிறைவேற்ற வேண்டியவற்றையும் உரியவாறு செய்துவரும் ஒரு மனைவி சுவன வாழ்வை அடைவாள்.

> "எந்த ஒரு பெண் ஐவேளையும் தொழுது, ஒரு மாத நோன்பையும் நோற்று, தன் கற்பையும் பேணி கணவனுக்குக்கட்டுப்பட்டு நடக்கிறாளோ அவளுக்கு, "நீர் விரும்பிய வாயிலால் சுவனம் நுழை" என்று கூறப்படும்.” (முஸ்னத் அஹ்மத்)

கணவன் மனைவிக்கு மத்தியில் ஏதேனும் பிணக்குகள், புரிந்துணர்வின்மை ஏற்படின் அல்லாஹ் கூறிய வழியிலேயே பரிகாரம் தேட வேண்டும்.

“பெண்களின் நிர்வாகிகளாக ஆண்களே இருக்கின்றனர். ஏனெனில் அவர்களில் ஒருவரைவிட மற்றவரை அல்லாஹ் மேன்மையாக்கி வைத்திருக்கின்றான். (அன்றி ஆண்களாகிய) அவர்கள் தங்கள் பொருள்களை பெண்களுக்காகச் செலவு செய்கின்றனர். ஆகவே, நல்லொழுக்கமுள்ள பெண்கள் (அல்லாஹ்வுக்கும் தங்கள் கணவனுக்கும் பணிந்தே நடப்பார்கள். (தங்கள் கணவன்) மறைவாக உள்ள சமயத்தில், பாதுகாக்க வேண்டுமென அல்லாஹ் விரும்புவனவற்றையும் தங்களையும் கணவனின் மற்றப் பொருட்களையும்) பேணிக் காத்துக் கொள்வார்கள். எவளும் (கணவனுக்கு) மாறு செய்வாளென்று நீங்கள் அஞ்சினால் அவளுக்கு நல்லுபதேசம் செய்யுங்கள். (அவள்) திருந்தாவிடில் படுக்கையிலிருந்து அவளை அப்புறப்படுத்தி வையுங்கள். (அதிலும்) அவள் சீர் திருந்தாவிடில் அவளை இலேசாக அடியுங்கள். அதனால் அவள் உங்களுக்கு வழிப்பட்டு

விட்டால் அவள் மீது குற்றங்களை சுமத்த வேறு வழி முறைகளைத் தேடாதீர்கள். நிச்சயமாக அல்லாஹ் மிக மேன்மையானவனும் மிகப் பெரியவனுமாவான்." (4:34) என்று அல்குர்ஆன் கூறுகின்றது.

ஒருவர், தலாக் கூறிவிடுவதன் மூலம் தன் மனைவியை விவாக விலக்குச் செய்யலாம். தலாக்,

1. அத்தலாக்குல் ஸுன்னீ
2. அத்தலாக்குல் பிதஈ

என இரண்டு வகையாக பிரிகின்றது.

அத்தலாக்குஸ் ஸுன்னீ (முறையான தலாக்) என்பது பின்வரும் முறையில் அமையும்.

1. மனைவி ஹைழ் அல்லாத சுத்தமான நிலையில் (துஹ்ரிலே) இருக்கும் போதே தலாக் சொல்லப்பட வேண்டும்.
2. அக்காலத்தில் அவளோடு உடலுறவில் ஈடுபட்டிருக்கலாகாது.
3. இரண்டாவது தலாக் செல்வதாக இருந்தால் முதலாவது போன்றே மனைவி சுத்தமாகவும் அவளோடு தொடர்பு கொள்ளாத நிலையிலும் நிகழ வேண்டும்.
4. மூன்றாம் தலாக்கும் அவ்வாறான நிலையிலேயே சொல்லப்பட வேண்டும்.

அத்தலாகுல் பிதஈ (முறையற்ற தலாக்)

மேற்சொன்னவாரன்றி பின்வரும் முறையில் அமையும்

1. மனைவி மாதவிடாயிலிருக்கும் போது தலாக் சொல்லல்.
2. மனைவியுடன் உடல் உறவு கொண்ட நிலையில் தலாக் சொல்லல்.

## இத்தா

இத்தா என்பது கணித்தல், எண்ணுதல் என்ற மொழிக்கருத்தைத் தரும். கணவனின் இழப்புக்காக அல்லது பிரிவுக்காக மனைவி குறிப்பிட்ட சில காலத்துக்கு திருமணம் முடிக்காமல் தவிர்ந்திருப்பதை இது குறிக்கும். இத்தா இருக்கும் மரபு ஜாஹிலிய்யாக் காலத்திலும் காணப்பட்டது. இத்தா பல வகைப்படுகின்றது.

1. கணவன் இறந்ததற்காக அனுஷ்டிக்கும் இத்தா. கணவன் இறந்ததற்காக ஒரு பெண் 4 மாதமும் 10 நாட்களும் : இத்தா இருக்க வேண்டும். "உங்களில் தம் கணவனை இழந்த பெண்கள் 4 மாதமும் 10 நாட்கள் காத்து நிற்கட்டும்" (2:234) என்று அல்குர்ஆன் கூறுகிறது.

2. கணவனை இழந்த பெண் கர்ப்பவதியாயின் அவள் பிள்ளை பெறும் வரையிலும் இத்தா இருக்க வேண்டும். "கர்ப்பஸ்திரிகளுக்கு அவர்களின் இத்தாவின் தவணை அவர்கள் பிரசவிக்கும் வரை இருக்கின்றது." (65 : 6)

3. தலாக் சொல்லப்பட்ட பெண் மூன்று குறூஉகள் இத்தா இருக்க வேண்டும். முதலாம் அல்லது இரண்டாம் தலாக் சொல்லப்பட்ட நிலையில் உள்ள ஒரு பெண்ணை கணவன் விரும்பினால் இத்தா தவணைக்குள் மீட்டிக் கொள்ள முடியும். "திருமணம் முடித்து உடலுறவு கொள்ளப்படாத நிலையில் ஒரு பெண்ணை தலாக் சொன்னால் அப்பெண்ணுக்கு இத்தா இல்லை" (33:49)

   கணவனைப் பிரிந்த பெண் ஹைழ் வருவதை விட்டும் நீங்கிய மிகவும் வயது முதிர்ந்த பெண்ணாக இருந்தால் அவள் 3 மாதங்கள் மாத்திரம் இத்தா இருத்தல் போதுமானதாகும். "உங்கள் பெண்களில் எவரேனும் அதிக வயதாகி மாதவிடாயில் நம்பிக்கை இழந்து இத்தாவை கணக்கிட என்ன செய்வதென்று நீங்கள் சந்தேகத்துக்குள்ளாகிவிட்டால் அப்பெண் களுக்கும் இன்னும் எவர்களுக்கு இது வரையில் மாத விடாய் ஏற்பட வில்லையோ அவர்களுக்கும் இத்தாவின் தவணை 3 மாதங்களாகும்." (65:4)

## இத்தாவின் பயன்கள்

1. இறைகட்டளையை ஏற்று நிறைவேற்றுவதன் மூலம் இறைகூலியை பெற்றுக் கொள்ளல்

2. உளத்தாக்கங்களில் இருந்து மீட்சி பெறுவதற்கான வழி

3. முன்னைய கணவன் மூலம் கருவுற்றிருக்கிறாளா என்பதை அவதானிப்பதற்குரிய காலம்

4. தலாக் ரஜஇ ஆயின் மீண்டும் இணைந்து வாழ்வதற்கான சந்தர்ப்பம்

# ஜினாயாத்

## ஜினாயாத் அறிமுகம்

இஸ்லாம் ஓர் உன்னத மார்க்கமாகும். அது கூறும் போதனைகள் மனிதனைப் புனிதனாக வாழ வழிகாட்டுகின்றன. இறை நம்பிக்கை மனிதனைத் தூய்மையான ஒழுக்கமிக்க வாழ்வைக் கடைப்பிடிக்க உதவுகின்றது. பாவச் செயல்களிலிருந்து மனிதனைத் தடுக்கின்றது. அத்தகைய செயல்கள் பாவங்கள், குற்றங்கள் என்று இனங்காட்டப்பட்டுள்ளன. ஒவ்வொருவரும் தான் செய்த பாவங்களுக்காக இறைவனிடம் மன்னிப்புக் கேட்க கடமைப்பட்டுள்ளான். அதே நேரம் குற்றங்களின் தன்மைக் கேற்ப தண்டனைகளுக்கும் ஆளாக வேண்டியவனாக உள்ளான்.

இஸ்லாம் ஒவ்வொன்றுக்கும் வரம்பிட்டுள்ளது. அது மீறப்படும் போது குற்றமாகக் கருதப்படுகின்றது. ஒரு மனிதன் பிறமனிதனின் உயிருக்கு உத்தரவாதமாக இருக்க வேண்டும். மாறாக அம்மனிதனின் உயிரைப் போக்கினால் கொலைக் குற்றத்திற்கு ஆளாகிறான். மனித உயிரைப் போக்குவது பெரும்பாவமாகும். சிறு சிறு காரணங்களுக்காக சச்சரவில் ஈடுபட்டு சண்டையிலிறங்கி ஆளையாள் கொன்று விடுகின்றனர். பச்சிளம் பாலகனின் உயிரைப் போக்கும் பாதகச் செயல் இன்று சர்வ சாதாரணமாகிவிட்டது. குப்பைத் தொட்டிகள் ; நீரோடைகள் என்பவற்றில், தான் பெற்றெடுத்த சிசுவை வீசி விட்டுச் செல்லும் தாய்மாரும் இருக்கவே செய்கின்றனர். பெற்றோர்களைக் கொலை செய்யும் பிள்ளைகளின் செய்திகளும் அன்றாடம் வெளிவருகின்றன.

மனிதனுக்கு கௌரவமாகவும், கண்ணியமாகவும், சுய மரியாதையாகவும் வாழும் உரிமையை இஸ்லாம் வழங்கியுள்ளது. ஆணாக இருந்தாலும் பெண்ணாக இருந்தாலும் அவரவர் தத்தமது சுய மரியாதையைப் பேணிக் கொள்ள வேண்டும் என்பது இஸ்லாத்தின் போதனையாகும். இந்த விடயத்தில் ஒவ்வொருவரும் மற்றவருக்கு உத்தரவாதம் அளிப்பவராக இருக்க வேண்டும். மாறாக மற்றவர்களின் கண்ணியத்தை இழக்கச் செய்யும் விதமாக அவதூறு, கூறுதல் போன்ற குற்றச் செயல்களைப் இழைப்பவனாக இருக்கக் கூடாது.

மனிதன் தனது உடலுழைப்பாலோ, அறிவு முயற்சியாலோ உழைக்கக் கடமைப்பட்டுள்ளான். அவ்வாறு உழைத்துப் பெற்ற செல்வத்தை அனுபவிப்பதற்கு அவனுக்கு உரிமை உண்டு. இவ்வாறு சேகரித்துள்ள ஒருவனின் செல்வத்தை அபகரிப்பது - களவெடுப்பது தண்டனைக்குரிய குற்றமாகும்.

மனிதன் ஒரு சமூகப் பிராணி. அவனும் ஏனைய படைப்புக்கள் போன்று பாலுணர்வை தீர்த்து கொள்ளவும் இனவிருத்தி செய்து கொள்ளவும் வழிகாட்டப் பட்டவன். திருமணத்தின் மூலம் அதனை அடைந்து கொள்ள வேண்டும். தனது பாலுணர்வை முறையாகத் தீர்த்துக் கொள்ள வேண்டும் என்று வழிகாட்டப்பட்டவன்.

அவன் தனக்கென்று இஸ்லாம் வரையறுத்துத்தந்த "நிகாஹ்" எனும் திருமணத்தின் மூலம் தனது தேவையை நிறைவு செய்து கொள்ளாது, தவறான வழியைக் கையாள்வது விபசாரமாகும். ஒழுக்கக் கேட்டுக்குக் காரணமாக அமையும் விபசாரம் தடுக்கப்பட வேண்டியதாகும். ஒருவன் விபசாரத்தில் ஈடுபடுவது தண்டனைக்குரிய குற்றமாகும்.

போதைப் பொருள் மனித வாழ்வையே நாசமாக்கி விடுகிறது. அதனை உற்பத்தி செய்பவனும் ; அதற்குத் துணை நிற்பவனும், உபயோகிக்கின்றவனும் ஒரே விதமான சமூக விரோதச் செயலில் ஈடுபடுபவராவர். போதைப் பொருள் பாவிக்கும் ஒருவன் தண்டனைக்குரிய குற்றத்தைச் செய்தவனாகிறான்.

இவ்வாறான குற்றச் செயல்கள் பல நிகழ்கின்றன. இதற்கான காரணங்கள் கண்டறியப்பட வேண்டும். நடை பெற்றுவரும் குற்றச் செயல்கள் பற்றி ஆய்ந்தோய்ந்து பார்த்தால் பின்வருவனவற்றில் ஏதேனும் ஒரு காரணம் அச்செயலின் பின்னணியில் இருப்பதைக் காணலாம்.

1. வறுமை
2. அறியாமை
3. பாவமென்பதை விளங்காதிருத்தல்.
4. சன்மார்க்கத்துடனான தொடர்பின்மை
5. தகவல் சாதனங்கள்.
6. இணையதளங்கள்
7. குற்றவாளிகள் தண்டனையின்றி விடுவிக்கப்படுதல்.
8. பெற்றோர் அக்கறை செலுத்தாமை
9. கெட்ட தோழமை
10. ஓய்வு நேரமும் வேலையற்றிருப்பதும்
11. அளவுக்கதிகமான பணப்புழக்கம்
12. தீமை பற்றித் தெளிவுபடுத்தாதிருத்தல்.

## குற்றச் செயல்களைக் களைவதற்கான வழிமுறைகள்

ஷரீஅத்தின் பார்வையில் சிறைக்கூடம் செல்பவன் திருந்த வேண்டும் என எதிர் பார்க்கப்படுகின்றான். சில நாடுகளில் சிறைவாசம் அனுபவித்தோர் புது வாழ்வொன்றுக்குத் தம்மை தயார்படுத்திக் கொண்டு வெளி வருகின்றனர். சிலர் அல்குர்ஆனை மனனம் செய்தவர்களாக, வேறு சிலர் தமது கடந்த கால நடவடிக்கையின் விபரீதங்களை உணர்ந்து திருந்தி நடப்பவராக, விடுதலை பெறுகின்றனர். குற்றச் செயல்களிலிருந்து மனிதன் தப்பித்துக் கொள்ள

வேண்டுமாயின் சிறு வயது முதலே பாவச் செயல்கள், குற்றங்கள் பற்றிய அறிவை ஊட்ட வேண்டும். அடிக்கடி சன்மார்க்க போதனைகள் இடம்பெற வேண்டும். இவை எல்லாவற்றுக்கும் மேலாக பெற்றோரின் முன்மாதிரி அவசியமாகும். பின்வரும் வழிகள் குற்றச் செயல்களை தடுக்க உதவலாம்.

1. குற்றம் செய்யாத சூழலை உருவாக்குதல்.
2. சட்ட நடவடிக்கைகளை ஒழுங்காக கடைப்பிடித்தல்
3. குற்றச் செயல்கள் பற்றிய திரைப்படங்கள் போன்றன ஒளி, ஒலி பரப்பப்படாது தடுத்தல்.
4. ஊர் மட்டத்தில் சமூக நலன்புரி இயக்கங்கள் குற்றங்களை களைவதில் தீவிரமாக ஈடுபடல்.
5. சமூக விரோதச் செயல்கள் பரவாதிருக்க கண்காணிப்புக் குழுக்களை ஏற்படுத்தல்.
6. அரசாங்கமும் காவல் துறையினரும் எடுக்கும் நடவடிக்கைகளுக்கு பூரண ஒத்துழைப்பு வழங்கல்.
7. பிற சமூகத்தவரோடு புரிந்துணர்வோடு செயற்படுதல்.

## குற்றங்களும் அவற்றுக்கான தண்டனைகளும்

### விபசாரம்

இது, தனது மனைவி அல்லாத பெண்ணோடு ஆணோ, தனது கணவன் அல்லாத ஆணோடு பெண்ணோ உடலுறவில் ஈடுபடுவதைக் குறிக்கின்றது. இணை வைத்தலுக்கடுத்துள்ள பெரும் பாவங்களில் ஒன்றாக இது குறிக்கப்படுகின்றது.

உலகின் கட்டமைப்பு நல்ல சந்ததியின் வளர்ச்சியிலேயே தங்கியுள்ளது. விபசாரம் அதனைப் பலவீனப்படுத்துகின்றது. அதில் ஈடுபடுவோர் பல்வேறு உள, உடல் நோய்களுக்கும் வறுமைக்கும் ஆளாகின்றனர். முகத்தின் வசீகரத்தை இழக்கின்றனர். மக்களோடு சேர்ந்து பழகும் பண்புகளை இழந்து விடுகின்றனர். எப்போதும் பதற்றத்துடனேயே காணப்படுவர்.

விபசாரத்தில் ஈடுபடுபவன் நோயாளியாக ஆவது மாத்திரமன்றி அவர்களோடு தொடர்புறும் யாவரையும் நோய்க்குள்ளாக்கி விடுகின்றான். அதனால் தான் விபசாரத்தை நெருங்கவும் வேண்டாமென அல்லாஹ் தடை விதித்துள்ளான். "விபசாரத்தை நெருங்கவும் வேண்டாம்; நிச்சயமாக அது ஒரு வெறுக்கத்தக்க கெட்ட விடயமும் பிழையான வழியுமாகும்." (17 : 32)

"ஒரு மனிதன் விபசாரம் செய்யும் போது அவனது ஈமான் அவனிலிருந்து நீங்கி விடுகின்றது. அதிலிருந்து விலகியதும் ஈமான் மீண்டு விடுகின்றது" என நபி (ஸல்) அவர்கள் எச்சரித்துள்ளார்கள்.

"மனிதர்களே! விபசாரத்தை தவிர்ந்து கொள்ளுங்கள். அதில் ஆறு தண்டனைகள் அடங்கி உள்ளன. அவற்றுள் மூன்று இவ்வுலகிலும் ஏனைய மூன்றும் மறு உலகிலும் கிடைக்கும்.

இவ்வுலகில் கிடைக்கும் தண்டனை முகத்திலுள்ள செழிப்பு இல்லாமற் போதல், வறுமை ஏற்படுதல், வாழ்நாள் குறைதல் என்பனவாகும். மறுமையில் அல்லாஹ்வின் கோபம் கிட்டும் ; கொடிய விசாரணை நடக்கும் ; கடுமையான தண்டனை கொடுக்கப்படும்." (அல்ஜாமிஉல் கபீர்)

விபசாரம் சமூகத்தின் மத்தியில் பல்விதமான நோய்கள் பரவுவதற்குக் காரணமாக அமைகின்றது.

எனவே சன்மார்க்கப் போதனைகளைக் கடைப்பிடித்து ஒழுகுவதன் மூலம் இவ்வாறான மா பெரிய நோய்களிலிருந்து நாம் காத்துக் கொள்ள முடிவதோடு மறுமையில் அல்லாஹ்வின் அருளையும் அடைந்து கொள்ளலாம்.

## தண்டனை பற்றிய இஸ்லாமிய கண்ணோட்டம்

அல்லாஹ்வுக்கு வழிப்பட்டு அவனது கட்டளைகளை ஏற்று நடப்பதும் அவன் விலக்கியவற்றை தவிர்ந்து வாழ்வதுமே அடியான் மீதுள்ள கடமையாகும். அல்லாஹ் தனது கட்டளைகளை ஏற்று நடப்போருக்கு சுவர்க்கத்தை வாக்களித்துள்ளான். அவற்றை மீறுவோருக்கு நரகத்தைத் தயார்படுத்தி வைத்துள்ளான்.

பாவத்தை உணர்ந்து அதிலிருந்து விலகி பிழை பொறுக்கத் தேடுபவர்களுக்கு பாவ மன்னிப்பின் வாயிலை அல்லாஹ் திறந்து வைத்துள்ளான்.

எனினும் பாவச் செயல்கள் கட்டுக் கடங்காது போய் எல்லை மீறும்போது அவற்றுக்குரிய பரிகாரம் அவசியமாகின்றது. பிறர் பொருளை முறையின்றி எடுத்துக் கொள்வது, மற்றவனின் மரியாதையைப் போக்குவது போன்றன எல்லை கடந்த குற்றச் செயல்களாகும். அவற்றுக்குரிய கடிவாளம் இடப்பட்டே தீர வேண்டும்.

மனிதனுடைய உயிர், பரம்பரை, மானம் பொருள், அறிவு ஆகிய ஐந்தையும் பாதுகாப்பதற்காகவே தண்டனைகள் விதிக்கப்பட்டுள்ளன எனலாம்.

1. கிஸாஸ் எனப்படும் பழிக்குப்பழி வாங்கும் தண்டனை, மனித உயிர்களுக்கு உத்தரவாதமளிக்கின்றது

2. திருடனின் கை வெட்டப்படும் தண்டனை, பொருட்களுக்கு உத்தரவாத மளிக்கின்றது.

3. விபசாரம், அவதூறு என்பவற்றுக்கு வழங்கப்படும் கசையடித் தண்டனை, மானம் மரியாதையையும் பரம்பரையையும் காக்கின்றது.

4. வழிப்பறி, கொள்ளை முதலியவற்றுக்குரிய தண்டனை உயிர், பொருள் என்பவற்றைப் பாதுகாக்க உத்தரவாதமளிக்கின்றது.

5. மது போதைக்குரிய தண்டனை புத்தியைக் காத்து ஒழுக்கமுள்ள சமூகத்தின் தோற்றத்திற்கு உத்தரவாதமளிக்கின்றது.

குற்றங்களிலிருந்து சமூகத்தைப் பாதுகாக்கும் ஒரு வழியாகவே தண்டனைகள் விதிக்கப்பட்டுள்ளன. இது அகிலத்தை ஆட்சி செய்யும் அல்லாஹ்வின் சட்டம் ; ஆதலால் அது கால ஓட்டத்தில் காலாவதியாவதில்லை. எந்தப் பெரிய மகானும் அதற்கு நிகரான சட்டங்களை தீட்டித்தர முடியாது என்பதை எடுத்துக்காட்டுகின்றது.

### இஸ்லாம் வழங்கும் தண்டனைகள்

| குற்றங்கள் | தண்டனைகள் |
|---|---|
| 1 கொலை | கிஸாஸ்/பழிக்குப்பழி<br>“தியத்/நட்ட ஈடு” |
| 2 உறுப்புகளுக்குச் சேதம் ஏற்படுத்தல் | கிஸாஸ்/தியத் |
| 3 விபசாரம் (திருமணம் புரியாதவர்) | 100 கசையடி |
| 4 விபசாரம் (திருமணம் புரிந்தவர்) | கல்லெறிந்து கொல்லுதல் |
| 5 தன்னினச் சேர்க்கை<br>(ஆண் - லிவாத்)<br>(பெண் - ஸிஹாக்) | ஹத் தண்டனை முதல் த.ஃஸீர் அடிப்படையிலான தண்டனை வரை குற்றச் செயலுக்கு ஏற்ப அமையலாம்) |
| 6 திருட்டு | மணிக்கட்டுவரையில் கையை துண்டித்தல் |
| 7 மதம் மாறுதல் (ரித்தத்) | தவ்பா செய்து மீளாவிட்டால் கொலை |
| 8 போதைப் பொருள் பாவனை | 40 கசையடி |
| 9 அவதூறு | 80 கசையடி |

மேற்குறிப்பிட்ட தண்டனைகள் கொடூரமானவை என்று கூறப்படும் அதே நேரம் இத்தகைய தண்டனைகள் இல்லாத நாடுகளில் இத்தகு குற்றச் செயல்கள் பரவலாக இருப்பதைக் காணலாம். மேலும் குற்றம் செய்யாத சூழலை உருவாக்கிய பின்பு பல்வேறு நிபந்தனைகளை அனுசரித்து, ஆய்ந்தெடுத்த முடிவுகளுக்குப் பின்னரே தண்டனைகளை இஸ்லாம் நடைமுறைப்படுத்துகின்றது.

### அத்த∴ஸீர் (சீர் திருத்தத் தண்டனை)

இஸ்லாமிய சரீஅத் குற்றச் செயல்களை இனங்காட்டித்தந்துள்ளது போலவே அவற்றுக்குரிய தண்டனைகளையும் வரையறுத்துக் கூறியுள்ளது. குற்றச் செயல்கள் அவற்றுக்கு வழங்கும் தண்டனைகளை மையப்படுத்தி மூன்றாக வகைப்படுத்தப் படுகின்றன.

1. நிர்ணயிக்கப்பட்ட தண்டனைகள் கூறப்பட்டுள்ளவை. உ- ம் விபசாரம், களவு, திட்டமிட்ட கொலை, இவற்றுக்கு கப்பாரா எனப்படும் குற்றப் பரிகாரமோ எச்சரிக்கையோ இல்லை.

2. கிஸாஸோ ஹத்தோ கூறப்படாத குற்றச் செயல் உ-ம் நோன்பாளி உடலுறவில் ஈடுபடுதல். இதற்காக கப்பாரா கொடுக்க வேண்டும்.

3. கப்பாராவோ, ஹத்தோ கூறப்படாதது. உ-ம் போதைப் பொருள் விற்பனை.

அல்லாஹ், குற்றச் செயல்களுக்குரிய தண்டனைகளை வரை யறுத்துள்ளான். அதன் மூலம் மனித அறிவு, உயிர், பொருள், மானம், மார்க்கம் என்பன பாதுகாக்கப்படுகின்றன. இவ்வாறு தண்டனைகள் வரையறுக்கப்படாத குற்றச் செயல்களுக்காக எடுக்கப்படும் நடவடிக்கையே "த∴ஸீர்" எனப்படும் தண்டணை யாகும்.

விபசாரமல்லாத அவதூறுகள், பிறர் பொருளை சூறையாடுதல், அநியாயம் செய்தல், நம்பிக்கைச் சொத்துக்களை ஒப்படைக்காதுவிடல், வசதியுடையோர் தாம் பெற்ற கடனை கொடுக்காதிருத்தல் போன்றன த∴ஸீர் தண்டனைக்குரியவை யாகும்.

த∴ஸீர் இரண்டு வகைப்படும்.

1. பெற்றோர் பிள்ளைகளை, கணவன் மனைவியை, எஜமான் பணியாளை தண்டிக்கலாம். இதற்குப் பல நிபந்தனைகள் உண்டு.

2. ஷரீஅத்தில் தண்டனை வரையறுக்கப்படாத ஒன்றுக்கு தேவையையும் குற்றத்தின் தன்மையையும் வைத்து த∴ஸீர் செய்யும் அதிகாரம் இஸ்லாமிய ஆட்சியாளருக்குண்டு. அது உபதேசித்தல், கண்டித்தல்,

எச்சரித்தல், ஒதுக்கி வைத்தல் போன்ற தண்டனை மூலம் நிகழலாம். சிலவேளை சிறையிலிடல், நட்டஈடு மூலமும் செய்யப்படலாம். இவ்வாறு த.்.ஸீர் செய்யும் போது குற்றமிழைத்தவர் வயது, சூழல், பொருளாதார நிலை, சமூக சூழல் என்பன கவனத்திற் கொள்ளப்பட வேண்டும்.

இஸ்லாம் கூறும் ஹுதூத், கிஸாஸ் தண்டனைகளோ த.்.ஸீர் தண்டனைகளோ இஸ்லாம் முழுமையாக அமுலாக்கப்படும் ஒரு சூழலிலேயே சாத்தியமாகும் என்பதைக் கருத்திற் கொள்ள வேண்டும்.

# அல் பிக்ஹுல் இஸ்லாமி

# (இஸ்லாமிய சட்டநெறி)